வெளியீடு 13-1-1994 Issued 13-1-1994

24 மார் 1994

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 26, 1993-தொகுதி 41 எண். 2
Monday, the 26th April 1993 - Volume 41 No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat,
Madras-600 009

V.31'93
93.41.2
166774

Price Rs. 3-00

## உள்ளடக்கம்

**26—4—1993**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. | 559—599 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் ... (25, 26, 27 மற்றும் 28 ஆம் பட்டியல்கள்) | 599—710 |
| **2. உரிமைப் பிரச்சினை—** | |
| கைது செய்யப்பட்ட உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டது பற்றி பேரவைக்கு அளித்த தகவல் குறித்து. | 711—716<br>725—727 |
| **3. விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கை—** | |
| (அ) கிறித்துவராக மாறிய வன்னிய குல சத்திரியர், அவர்தம் உட்பிரிவினருக்கு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான சலுகைகள் வழங்குவது குறித்து முதலமைச்சரின் அறிக்கை. | 716—717 |
| (ஆ) கிராம உதவியாளர்கள் போராட்டம் கைவிடப்பட்டது குறித்தும், அவர்கள் கோரிக்கையைப் பரிசீலிக்கக் குழு அமைக்கப்பட்டுள்ளது குறித்தும் வருவாய்த் துறை அமைச்சரின் அறிக்கை. | 744—748 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| வேடந்தாங்கல் ஏரிக்கரையில் கட்டிடங்கள் கட்டும் பணி தொடங்கியிருப்பதால் பறவையின வருகை மற்றும் வாழ்க்கைப் பாதிப்பு ஏற்படுதல் குறித்து. | 717—720 |
| **5. அறிக்கைகள் அளித்தல்—** | |
| (அ) மதிப்பீட்டுக் குழு — | 720 |
| (ஆ) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 720 |


93—144—1

166774
சென்னை-600 0



பக்கங்கள்

6. மானியக் கோரிக்கைகள், 1993–94, விவாதமும் வாக்கெடுப்பும் — தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 29— சமூக நலன் .. 721—725, 727—744, 748—782

*1. மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி 721, 735, 736, 750—756, 760—782

2. செல்வி கோ. மல்லிகா .. 722—725

3. திரு. எஸ். சண்முகநாதன் .. 727—730

4. டாக்டர் ச. ஆரோக்கியசாமி .. 731—734

5. டாக்டர் மரிக்ஸ் டி. சோசா .. 734—737

*6. திரு. தா. வேடியப்பன் .. 737—741

*7. திரு. எஸ். ஆர். சண்முகம் .. 741—744

8. திரு. ஜி. பழனிசாமி .. 748—758, 760—762

(ஆ) கோரிக்கை எண். 25— கைத்தறியும் துணித் தொழிலும்— 783—843

1. மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் .. 783, 819—842

2. திரு. எஸ்.எம். துரை .. 784—789

3. திருமதி க. பழனியம்மாள் .. 789—795

*4. திரு. க. ப. பட்டாபிராமன் .. 795—798

5. திரு. வெ. பழனிசாமி .. 798—804

6. திரு. வ.மு. சுப்பிரமணியன் .. 804—808

7. திரு. கு. சிவசுப்பிரமணியன் .. 808—813

*8. திரு. காஞ்சி பன்னீர்செல்வம் .. 813—816

9. திரு. என். ஆர். சிவபதி .. 816—818

7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள் 843—845

D
V211, 31
N93-41-2

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 13, ஸ்ரீமுக, திருவள்ளுவர் ஆண்டு, 2024

1993 ஏப்ரல் 26, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள."

காக்கைகள் தமது இரையை மறைத்து வைக்காமல் தம் இனத்தைக் கூவி அழைத்து அவ்வினத்தோடு கூடச் சேர்ந்திருந்து உண்ணும். அப்படிப்பட்ட இயல்பு உடையவர்க்கே ஆக்கம் பலவும் ஏற்படும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள், வினா எண். 461, திருமதி கே. மரியம் உல் ஆசியா, இருக்கையில் இல்லை. திரு. வி.கே. சின்னசாமி கேட்கிறீர்களா ? சரி. மாண்புமிகு நிதி அமைச்சர்.

461—

### மாவட்ட ஆலோசனைக் குழு அமைத்தல்.

*16751—திருமதி கே. மரியம் உல் ஆசியா :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேசிய வங்கிகள் மூலம், கிராமப் பகுதிகளில் புதிய கிளைகள் அமைப்பது பற்றி ஆய்வு செய்ய, மாவட்ட ஆலோசனைக் குழு ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) 1991 ஆம் ஆண்டில் இக்குழு எத்தனை முறை கூடியது ?

(இ) இக்கிளைகள் எந்தெந்த இடங்களில் திறக்கப்பட வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது ?

[1993 ஏப்ரல் 26

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதிஅமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் ஊரகப் பகுதி களில் புதிய கிளைகளைத் திறப்பது குறித்த கருத்துருக்களை ஆய்வு செய்யும் பணியினை மாவட்டந்தோறும் செயல்பட்டு வரும் மாவட்ட ஆலோசனைக் குழு (District Consultative Committee) மேற்கொண்டு வருகிறது.

(ஆ) மாவட்ட ஆலோசனைக் குழு மூன்று மாதத்திற்கு ஒருமுறை என வருடத்திற்கு நான்கு முறை கூடுகிறது. தேவை ஏற்படின் சிறப்பு மாவட்ட ஆலோசனைக் குழுக் கூட்டமும் மாவட்ட ஆலோசனைக் குழுத் தலைவரால் கூட்டப்படுகிறது.

(இ) 1990-95-ஆம் ஆண்டுக்கான வங்கிக்கிளைகள் விரிவாக்கத் திட்டத்தை இந்திய ரிசர்வு வங்கி அறிவித்ததின் பேரில் தமிழ் நாட்டில் சென்னையைத் தவிர பிற மாவட்ட ஆலோசனைக் குழுக்களால் பரிந்துரை செய்யப்பட்ட 79 மொத்த இடங்களை அரசு பரிசீலனைக்குப்பின் தேவையான உரிமம் வழங்கக்கோரி இந்திய ரிசர்வு வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் மாவட்டந்தோறும் வருடத்திற்கு நான்கு முறை ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி, இந்த வங்கிகளினுடைய கிளைகளைத் திறப்பது சம்பந்தமாக ஆலோசனைகள் ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரி விக்கின்றார்கள். அப்படிக் கடந்த 1992-93 ஆம் ஆண்டில் எத்தனை பரிந்துரைகள் தமிழக அரசின் சார்பாக ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டன? அப்படி அனுப்பப்பட்டதில் எந்தெந்த இடங்களில் கிளைகள் திறக்கப்பட்டன என்பதை மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் அறிவிப்பார்களா? அதோடு இன்றைக்கு வளர்ந்து வருகின்ற கிராமங்கள் நகரங்களாக வளர்ந்து வருகின்றன. ஜனத்தொகை அதிகம் பெருகி வருகிறது. ஐ.ஆர்.டி.பி. கடன், தாட்கோ போன்ற பல்வேறு கடன்கள் மத்திய, மாநில அரசுகள் வழங்குகின்ற நேரத்தில், அவற்றைக் கொடுப்பதற்குக் கிராமப் புறங்களில் இருக்கின்ற தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகளினுடைய கிளைகள் மறுக்கிறார்கள். ஆனால், அதே நேரத்தில் நம்முடைய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கிற மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கிளை கள் அதைக் கொடுப்பதற்கு முன்வருகிறார்கள். ஆகவே, இவ்வளவு சதவீதம் இந்தந்த வங்கிகள் என்று மாவட்ட ஆட்சியர் ஒதுக்குகின்ற அந்த அளவை அந்தந்த வங்கிகள் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் வேறு ஏதேனும் புதிய நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.



1993 ஏப்ரல் 26]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையிலும், 1986 ஆம் ஆண்டில் 3,916 வங்கிக் கிளைகள் இருந்து வந்தன. அதற்குப் பிறகு இப்படிப்பட்ட மாவட்ட வளர்ச்சி மன்றங்களின் மூலமாகவும், அரசின் மூலமாகவும் பல்வேறு தருணங்களிலே கோரிக்கைகள் வைத்ததன் விளைவாக, 1992 முடிய 4,302 வங்கிக் கிளைகள் செயல்படுத்தப்படுகின்ற சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, இந்த 386 கிளைகள் இந்த ஐந்தாண்டுக் காலத்திலே உருவாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்த வங்கிக்கு அதிகாரம் கொடுப்பது ரிசர்வ் வங்கியாகத்தான் இருக்கிறது. எனவே தான் ரிசர்வ் வங்கிக்கு இந்தக் கோரிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இப்பொழுது 79 இடங்களுக்கு உரிமம் வழங்கக் கோரி மத்திய ரிசர்வ் வங்கிக்கு அனுப்பி வைத்து இருக்கிறோம். ஆகவே, வங்கிகள் எல்லாம் எப்படி நடைபெற வேண்டும் என்பதையும், அவைகள் எப்படிக் கடன் கொடுக்க வேண்டும் என்பதையும் முடிவு செய்ய வேண்டிய முழுப் பொறுப்பும் ரிசர்வ் வங்கியினிடத்திலே இருக்கிறது. நாம் சில பல முறைகள் வகுக்கப்பட வேண்டுமென்று சொன்னால் ரிசர்வ் வங்கிக்கு எழுதி அவர்கள் ஆலோசித்து, அவர்கள்தான் அதற்குப் பிறகு முடிவு எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு.கே.பி.ராஜு.

முற்பகல் 10-05

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய வங்கிகள் கிராமங்கள் தோறும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்று சொன்னார்கள். தேசிய வங்கிகள் கிராமங் கள் தோறும் ஆரம்பிக்கிறபோது, எந்த அடிப்படையில் அவற்றை ஆரம்பிக்கிறார்கள்? அதாவது, மக்கள் தொகையின் அடிப்படையிலா அல்லது, பெரிய, சிறிய கிராமங்கள் என்ற அடிப்படையிலா அல்லது வருவாயினுடைய அடிப்படையிலா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிக் கிளைகள் தொடங்கு வதற்கு உரிமம் வழங்குகின்ற உரிமை இந்திய ரிசர்வ் வங்கியிடத்தில் தான் இருக்கிறது. வங்கி வசதி இல்லாத பெரும் பாலான கிராமப் பகுதிகளில், வங்கிக் கிளைகள் புதிதாகத் திறப்பதற்கு, நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கி, தனியார் வங்கி, வட்டார கிராம வங்கி ஆகியவற்றின் மூலமாக உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆகவே, ஒரு வங்கி துவக்கப்படுகிற போது, மக்களின் எண்ணிக்கையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப் படுகிறது. அங்கே அந்த வங்கி இயங்குவதனால், மக்கள்

பணத்தைச் செலுத்தவும் பணத்தைப் பெறவும் என்னென்ன வாய்ப்புக் கூறுகள் இருக்கின்றன என்பனவும் பார்க்கப்படுகின்றன. அவர்கள் கோருகிற தொகுதியிலே, வேறு என்னென்ன வங்கிக் கிளைகள், எவ்வளவு தூரத்தில் இருக்கின்றன? அவற்றின் மூலமாக எவ்வளவு பட்டுவாடா, மற்றவைகள் எல்லாம் செய்யப்படுகின்றன என்பதை எல்லாம் கணக்கில் எடுத்து, அந்த வகையிலே நாமும் சிபாரிசு செய்கிறோம். அந்த சிபாரிசை ஒட்டித்தான் ரிசர்வ் வங்கியும் ஆராய்ந்து பார்த்து தக்க முடிவு எடுக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. க. அர்ச்சுனன்.

திரு. க. அர்ச்சுனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில், கிராமப்புறங்களிலே ஐ.ஆர்.டி.பி. லோன் வழங்குகிற போது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு 50 சதவிகிதமும், மற்றவர்களுக்கு மூன்றில் ஒரு பங்கும் சப்சிடி அமௌன்ட்டாக அந்த வங்கிகளில் அரசாங்கம் செலுத்துகிறது. சிறிது காலத்திற்கு, அந்தப் பணத்தை அவர்கள் ''ரொடேட்'' செய்து கொண்டு, அதன் பிறகு, பயன்பெறுபவர்களுக்கு அந்தக் கடனைக் கொடுக்காமல், மீண்டும் அந்த சப்சிடி அமௌன்ட்டை திருப்பிச் செலுத்தக்கூடிய நிலைமை இருப்பதை உணர்ந்து, அந்த வங்கிகள் மீது நடவடிக்கை எடுக்க ஏதாவது வழிவகை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட நிலைமைகளை ரிசர்வ் வங்கியினுடைய கவனத்திற்குத்தான் நாம் கொண்டுவர வேண்டும். அவர்கள் என்ன தக்க கட்டளைகளை இடுகிறார்களோ, அதன்படிதான் அவர்கள் நடக்கக் கடமைப்பட்டு இருக்கிறார்கள். குறைபாடுகள் ஏதாவது இருந்தால், அவர்களுடைய கவனத்திற்கு நாம் கொண்டு வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 462, திரு. வி. கே. லட்சுமணன் இருக்கையில் இலலை; திரு. கே. பி. ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

462—

## கோயம்புத்தூர் மாநகராட்சி செல்வசிந்தாமணி குளத்தில் அரசு மருத்துவமனை கட்டுதல்.

*9022—திரு. வி. கே. லட்சுமணன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—





கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட செல்வ சிந்தாமணி குளத்தில் மேலும் ஓர் அரசு மருத்துவமனை கட்ட அரசிற்கு உத்தேசமுள்ளதா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாநகராட்சி என்கிறபோது, இப்போது இருக்கிற பொது மருத்துவமனை, அங்குள்ள மக்களுக்கு மிகவும் தேவையாக இருக்கிறது. இப்போது, அது மாநகராட்சியாக ஆக்கப்பட்டு, பல்வேறு முனிசிபாலிடிகளை அதோடு சேர்த்து இருக்கிறார்கள். குறிப்பாக, சிங்காநல்லூர் முனிசிபாலிடியையும் கூட அதோடு சேர்த்திருக்கிறார்கள். இன்னும் பல்வேறு ஏரியாக்களை எல்லாம், அந்த மாநகராட்சியோடு இணைத்து இப்போது மக்கள்தொகை கிட்டத்தட்ட 10 லட்சத்திற்கும் குறையாமல், அந்தக் கோவை நகரத்திலே இருந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு ஒரே ஒரு பொது மருத்துவமனைதான் இப்போது இருக்கிறது. அந்த ஒரே ஒரு பொது மருத்துவமனையில் கூட்டம் அலைமோதுகிறது. தினமும் காலையிலிருந்து மாலைவரை, மக்கள் வெள்ளம்தான் இருக்கிறது. ஆகவே, செல்வசிந்தாமணி குளம் என்பது அந்த நகரத்தினுடைய ஒரு பகுதியாக இருக்கிறது; அந்த செல்வசிந்தாமணி குளத்தில், இப்போது தண்ணீர் வருவதும் கிடையாது; ஆக்கிரமிப்பாளர்களும் அதிகரித்துக் கொண்டு வருகிறார்கள். ஆகவே, ஏற்கெனவே நமது புரட்சித் தலைவி அவர்களுடைய அரசிடம், செல்வசிந்தாமணி குளத்திலே ஒரு பொது மருத்துவமனை கட்டினால் நன்றாக இருக்கும், மக்களுக்கும் சௌகரியமாக இருக்கும் என்று சொன்னேன். சென்னையிலேகூட பல்வேறு இடங்களிலே பொது மருத்துவமனைகள் இருக்கின்றன. அதே போல், கோவையில் அது ஒரு மாநகராட்சியாக ஆக்கப்பட்ட பிறகு, 10, 15 ஆண்டுகள் ஆகிவிட்டன........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. கே. பி. ராஜு : அதற்குத்தான் வருகிறேன்.

அது மாநகராட்சியாக்கப்பட்ட பிறகும், அந்த ஒரே ஒரு மருத்துவமனையை வைத்துக் கொண்டு, அங்கு மக்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே, செல்வசிந்தாமணி குளம் என்பது, நகரத்தினுடைய மையப் பகுதியாக இருக்கிற காரணத்தினால், ஆக்கிரமிப்பாளர்களும் அங்கு ஆக்கிரமிப்பு செய்து கொண்டு,

அந்த இடம் 'வேஸ்ட்' ஆகப் போய்க் கொண்டிருப்பதால், அங்கே ஒரு பொது மருத்துவமனையைக் கட்டினால் பொது மக்களுக்கு சௌகரியமாக இருக்கும்; அதைக் கட்டுவதற்கு அரசு முயற்சிக்குமா என்பதை உங்கள் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குளத்திலே மருத்துவமனை கட்டுவதிலே வாய்ப்பு இல்லை என்று ஏற்கெனவே நான் சொல்லிவிட்டேன். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு நேரம் பேசிய காரணத்தினால் அதைப்பற்றி ஆலோசிக்கலாம். வேறு வேறு இடத்திலே மருத்துவமனைகள் தேவையா ; அல்லது அந்த ஒரு மருத்துவமனையே போதுமா என்பதைப் பற்றி ஆலோசிக்கலாமே தவிர, இப்போது ஒரு முடிவை எடுக்க முடியாது. ஏற்கெனவே கூட, நாம் மருத்துவக் கல்லூரி இருக்கிற இடத்திலே சில பிரிவுகளை— சிறப்புப் பிரிவுகளை மட்டும் துவக்கலாமா என்றுகூட ஆலோசித்தோம்.

ஆனால் இன்னும் அதிலே நம்மாலே முடிவு எதுவும் எடுக்க முடியாத அளவுக்கு அது தேவையா இல்லையா என்ற நிலை இருக்கிறது. எனவே, அதற்காக ஒரு தனி கமிட்டி அமைத்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

முற்பகல் 10–10

திரு. கே. பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒரு கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு கேள்விதான் அனுமதிக்கலாம்.

வினா எண் 463, திரு. என். ஆர். சிவபதி, இருக்கையில் இல்லை. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

463—

## ஆரம்ப சுகாதார நிலையங்களில் உயிர்காக்கும் மருந்துகள் வாங்க அதிக நிதி ஒதுக்கீடு.

*9328—திரு. என். ஆர். சிவபதி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் நோயாளிகளுக்கு உயிர்காக்கும் மருந்துகள் வாங்குவதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், இத் திட்டத்திற்கு எவ்வளவு தொகை ஒதுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டில் 30,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1991-92 ஆம் ஆண்டில் 40,000 ரூபாய் என்று உயர்த்தப்பட்டது. 1992-93 இல் 50,000 ரூபாய் ஆக அது உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் நோயாளிகளுக்கு மருந்துகளுக்குப் பதிலாக டாக்டர்கள் சீட்டு எழுதிக் கொடுத்து விடுகிறார்கள். அதனால் ஏழை மக்கள் பணம் கொடுத்து அந்த மருந்துகளை வாங்க சிரமப்படுகிறார்கள். அதனால், ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருந்துகளைக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். நீண்ட நாட்களுக்கு முன்னாலே இருந்த பிரச்சினை பற்றி மாண்புமிகு உறுப்பினர் இப்போது சொல்லுகிறார். இப்போது எல்லா இடங்களிலேயும் தேவையான மருந்துகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு , தமிழக அரசிலே புரட்சித் தலைவி அவர்கள் வந்த பின்புதான் அதற்கு முதலிலே 30,000 ரூபாய் மட்டும் என்று மருந்துக்காக ஒதுக்கப்பட்ட தொகையை உயர்த்திக் கொடுத்து இப்பொழுது 50,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆங்காங்கே தேவையான மருந்துகள் இப்பொழுது கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் நோயாளிகளுக்கு உயிர்காக்கும் மருந்துகள் வழங்குவதற்கு தமிழகத்தினுடைய பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய பிறந்தநாள் போன்ற சிறப்பு நாட்களில் நன்கொடையாக மருந்துகளைத் தருவதற்கு முன்வருபவர்களை ஊக்கப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா என்று கேட்டு, அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் மிகத் திறமையானவர்கள்.

இவர்களை அரசு மருத்துவமனைகளில் மிகச் சுலபமாகப் பார்த்து சிகிச்சை பெறலாம். ஆனால் இதே மருத்துவர்களைத் தனியார் மருத்துவமனைகளில் பார்க்க நிறைய நேரம் காத்திருந்து 'அப்பாயிண்ட்மெண்ட்' பெற்றுத்தான் பார்க்க வேண்டும். எனவே, இப்படிப்பட்ட மருத்துவர்களிடம் சிகிச்சை பெற, Paying Patient OP என்று தனியாக நேரம் வகுத்து, நோயாளிகளுக்கும், வசதி செய்து, அரசுக்கும் வருவாய் வரும் வகையில் திட்டம் ஒன்றைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவசமாக மருந்து வாங்கிக் கொடுப்பதற்கு எப்பொழுது வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் வரலாம். ஆனால், குறிப்பிட்ட ஒரு நேரத்தை ஒதுக்கித் தந்தால், பொதுமக்கள் அந்த நேரத்தைக் கருதி வருவார்கள் என்பதற்காக உறுப்பினர் அவர்கள் சொல்லுகிறார்கள். அதைப்பற்றி ஆலோசிக்கப்படும். எனவே, ஓ.பி.-யைப் பொறுத்தவரை தனியாகப் பணம் செலுத்தி பொது மக்கள் அவர்களிடத்திலே வந்து சிகிச்சை பெற்றுக் கொள்வதற்காக நாம் ஏற்கனவே சில பெரிய மருத்துவமனைகளிலே தனியாக (Paying Ward) என்று வைத்திருக்கிறோம். எனவே, இன்னும் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே அப்படிப்பட்ட ஒரு முடிவு எடுக்கப்படவில்லை. அதுபற்றி பின்னர் ஆலோசிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரிகின்ற மருத்துவர்கள் பெரும்பாலும் இரவு நேரங்களிலே இந்தப் பகுதியிலே தங்குவதில்லை என்ற புகார்கள் அரசுக்கும், சட்ட மன்ற உறுப்பினர்களுக்கும் வந்த வண்ணம் இருக்கின்றன. நாங்கள் கிராமப்புறங்களிலே செல்லுகின்றபோதும் பொது மக்கள் அந்தக் கருத்தை எங்களிடம் சொல்லுகின்றார்கள். எனவே, மருத்துவர்கள் அந்தப் பகுதியிலே தங்கி சிகிச்சை செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மருந்து சம்பந்தப்பட்ட கேள்வி. இருந்தாலும் மருத்துவர்கள் அதிலே சம்பந்தப்படுகிறார்கள் என்ற காரணத்தினால் இதற்கும் பதில் சொல்லுகிறேன். மருத்துவர்கள் கண்டிப்பாக, அந்த மருத்துவ மனையிலே தங்கியிருக்க வேண்டும். அவர்களுக்கு 'குவார்ட்டர்ஸ்' இருந்தால் அவர்கள் நிச்சயமாக அங்கே தங்கியிருக்க வேண்டும். ஒரு வேளை 'குவார்ட்டர்ஸ்' இல்லையென்று சொன்னால் 8 கி.மீ. சுற்றளவில் அங்கே தங்கியிருக்க வேண்டும் என்ற ஒரு முறை வைத்திருக்கிறோம். அப்படித் தங்கி இருக்காவிட்டால் அவர்கள்



பெற்றுக்கொண்டிருக்கிற Rural Allowance-ஐ நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. யார் தங்கவில்லையோ அவர்கள் மீது அரசுத் துறையிலே சட்டப்படி, முறைப்படி நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். சில இடங்களிலே மருத்துவர்களே போகவில்லை என்ற காரணத்தினால் இப்போது புதிய முறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த இடத்திற்கு என்று யார் வருகிறார்களோ அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, நீண்டகாலமாக இப்படிப்பட்ட ஒரு பழக்கத்தை அவர்கள் எற்படுத்திக் கொண்டிருக்கிற காரணத்தால் உடனடியாக செய்ய முடியாமல் படிப்படியாக அந்தப் புதிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு இருக்கிறோம். கடந்த ஆண்டு இருந்ததைவிட இந்த ஆண்டு புகார்கள் கொஞ்சம் குறைந்திருக்கிறது என்பதை நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதன் மூலமாக இந்தப் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 50,000 ரூபாய் மருந்துகள் வாங்குவதற்காக ஒதுக்கப்பட்டதற்கு இந்த அரசுக்கு நன்றியைத் தெரிவிக்கின்ற இந்த நேரத்தில், உயிர் காக்கும் மருந்து என்று கேள்வியிலே கொடுக்கப்பட்டிருக்கிறதே, "உயிர்காக்கும் மருந்து" என்று தனிப்பட்ட மருந்து ஏதும் உண்டா? அந்த மருந்துகளுக்காக மட்டும் இந்த 50,000 ரூபாய் ஒதுக்கப்படுகிறதா? அல்லது எல்லா மருந்துகளுமே உயிர்காக்கும் மருந்துகளா என்பதை அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மருந்துகளுமே, அநேகமாக உயிர் காக்கும் மருந்துகள்தான். ஆனால் சில மருந்துகள் மிக அத்தியாவசிய மருந்துகளாக இருக்கின்றன. எனவே, இந்த 50 ஆயிரம் ரூபாய் என்பது எல்லா மருந்துகளுக்கும் பயனுள்ளதாகத் தான் இருக்கும். ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையானது அத்தனையுமே உயிர் காக்கும் மருந்துகளாகத்தான் கருதப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் உயிர் காக்கும் மருந்துகள் ஆன Anti Snake Venom பாம்பு கடிக்கின்ற போது

அதை மாற்றுவதற்கான மருந்துகளையும், அதைப்போல் Harmono Phosphorus Poisoning என்று சொல்லக் கூடிய பாய்சனை மாற்றுவதற்குரிய Antitobe என்ற மருந்துகளையும் நாம் நிச்சயமாக சேமிக்க வேண்டும். எனவே, மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் இதில் அதிக கவனம் செலுத்தி இப்பேற்பட்ட மருந்துகளை ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும் எப்பொழுதும் எந்த நேரத்திலும் தயாராக இருக்கிறது என்ற நிலையை உருவாக்கித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருந்துகளைப் பொறுத்த வரையில் சில குறிப்பிட்ட இடங்களிலே தான் அதிகமாகத் தேவைப்படுகிறது. பல இடங்களிலே இந்த மருந்துகள் இருந்தாலும் கூட தேவையில்லை என்ற நிலை கூட தொடர்ந்து இருந்து கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியிலே இது கொஞ்சம் அதிகமாகத் தேவைப்படுகிறது. மலைப் பிரதேசம் என்ற காரணத்தால் அங்கே இது தேவைப்படுகிறது. எனவே, அப்படிப்பட்ட இடங்களிலே கண்டிப்பாக, ஒரு பட்டியல் வைத்திருக்கிறார்கள். எங்கெங்கே இந்த மருந்துகள் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்று ஒரு பட்டியல் இருக்கிறது. அங்கே இருக்க வேண்டுமென்ற உத்தரவாதத்தை ஏற்படுத்த வேண்டுமென்று ஏற்கனவே நாங்கள் அறிவுரை சொல்லியிருக்கிறோம். இருந்தாலும் எல்லா மருத்துவமனைகளிலும் இது இருக்க வேண்டுமென்ற நிலை இருக்குமேயானால், திருப்பி, திருப்பி நாம் பெற்றுக் கொண்டிருக்க வேண்டிவரும் பயன் படுத்தாமலேயே. எனவே, எங்கெங்கே அவசியமாக இருக்கிறதோ அங்கு எல்லாம் வைப்பதற்கும், தேவையில்லாத இடத்திலே கூட, ஒரு குறிப்பிட்ட அளவு, குறைந்த அளவிலாவது வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏற்கெனவே நாம் சொல்லி இருக்கிறோம். இந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு மீண்டும் கூட அதிகாரிகளுக்கு வலியுறுத்தலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 464, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**464—**

மன நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க மனநோய் மருத்துவப் பயிற்சி பெற்ற பாரா மெடிக்கல் ஸ்டாப்பை தேர்வாணையம் மூலம் தேர்வு செய்தல்.

* *10114*—டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :



(அ) புரட்சித் தலைவி மருத்துவ நல திட்டத்தின் கீழ் மன நோயாளிகளை கண்டறிந்து தகுந்த சிகிச்சை அளிக்க மனநோய் மருத்துவப் பயிற்சி பெற்ற பாரா மெடிகல் ஸ்டாப்பை (Para Medical Staff) தேர்வாணையம் மூலம் தேர்வு செய்து செயல் படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிடத்திலே செயற் குறிப்பு ஏதும் அப்படியில்லை.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே வேறு எங்கும் ஏற்படுத்தப்படாத மிகப் பெரிய நல்வாழ்வுத் திட்டமான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா மருத்துவத் திட்டத்தின் கீழ், 1992-93ல் 9,226 முகாம்கள் மூலம் 51.6 இலட்சம் தமிழக மக்கள் மருத்துவம் கண்ட மாதர் குல மாணிக்கம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில், அந்த மருத்துவ முகாம்கள் மூலம் நாங்கள் கண்டறிந்த ஒரு கருத்தினை இந்த மன்றத்திற்கு அளிக்க விரும்புகிறேன். மனநோய் கண்டுள்ள மன நோயாளிகளுக்கு Psychothreapy, Psycho Analy is மற்றும் Medical கவுன்சிலிங் செய்ய முகாம்களில் to assist Psychiatrises social worker போதுமான அளவு இல்லை என்பதை அரசு அறியுமா? அதை நிவர்த்திப் படுத்தும் வண்ணம் ஒப்பந்த அடிப்படையிலாவது வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து இந்த முகாம்களுக்காக தேர்வு செய்ய அரசாணை உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முகாம்கள் என்பது ஒரு குறிப்பிட்ட அளவிலே மட்டும் நடத்தப்படுகிற நிகழ்ச்சியாகும். எனவே, அதிலே கண்டுபிடிக்கின்ற நோயாளிகளுக்கு தொடர்ந்து அரசு மருத்துவ மனைகளிலே நாம் சிகிச்சை கொடுக்கிறோம். எனவே, அதன் காரணமாக, அந்த இடத்திற்கு என்று தனியாக ஆட்கள் நியமிக்க வேண்டிய அவசியம் இருக்காது. மனநோயாளிகளைக் கண்டு பிடிப்பதில் ஒரு பெரிய பிரச்சினை இருக்காது. ஓரளவிற்குப் பார்த்த உடனேயே இவர் மனநோயாளியா இல்லையா என்பதை மருத்துவர்கள் கண்டுபிடித்துவிடுவார்கள். எனவே, அவர்கள் கண்டுபிடித்து உரிய மருத்துவமனைக்கு அனுப்புகின்ற போது, நிச்சயமாக அங்கே தேவையான ஆட்கள் அவர்களுக்கு மருத்துவ வசதி செய்வதற்கு இருக்கின்ற காரணத்தால், முகாம்களுக்கு என்று தனியாக நாம் ஆட்களை நியமிக்க முடியாது. காரணம் மிக இக்கட்டான நிதிப் பிரச்சினைக்கு இடையிலே கூட, மிகச்

சிக்கனமாக அதை செய்ய வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால், இதற்கு என்று தனியாக பணியாளர்களை நியமிக்கின்ற ஆலோசனை ஏதும் இப்பொழுது இல்லை.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993–94-ல் இரண்டாம் கட்டமாக சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலம் சிகிச்சை அளிக்க இருக்கும் இந்த வேளையில் நடத்தப்பட்ட முகாம்களில் கணிசமான மன நோயாளிகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. (குறுக்கீடு).

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, கேள்வி நேரத்தில் வேறு எதுவும் கேட்கக் கூடாது.

முற்பகல் 10.20

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன நோயாளிகளை வகைப்படுத்தும்போது anxiety neurosis, depressive psychosis, peptic ulcer with functional overlay போன்ற நோய்கள் அதிகமாக இருப்பதால், மன நோயாளிகளை அவர்களுடைய நோயின் தன்மைகளைக் கண்டறிய சோசியல் ஒர்க்கர்ஸ் அவசியம் என்பதை உணர்ந்த இந்த அரசு இந்தக் கோரிக்கையை மீண்டும் மறு பரிசிலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்னபடி நிதிப் பிரச்சினை தான். எனவே இதிலே தனியாக அதற்காக பணியாளர்களை நியமிப்பது கடினம் என்று சொன்னேன். எனவே மன நோயாளிகள் என்று கருதப்படக் கூடியவர்கள் அத்தனை பேரையும் அந்த குறிப்பிட்ட மருத்துவ மனைக்கு நாம் அனுப்புகிறபோது அவர்களை பகுத்தெடுத்து இவர்கள் எந்தெந்த வகையிலே மன நோயாளிகளாக இருக்கிறார்கள் என்பதை கண்டு பிடித்து அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு அங்கே வாய்ப்பு இருக்கிறது என்ற காரணத்தினால்தான் அந்த முகாம்களிலே தேவையில்லை என்று சொன்னேன். இப்போது மற்ற நோய்களுக்குக் கூட அந்த முகாம்களிலே ட்ரீட்மெண்ட் கொடுத்து விடுவதில்லை. அந்த முகாம் நோயாளிகளைக் கண்டு பிடிப்பதற்காக நடத்தப்படுகிற முகாம். எனவே அவர்கள் கண்டு பிடிக்கப்பட்ட பின்பு குறிப்பிட்ட அந்த மருத்துவ மனைக்கு அனுப்புவதன் மூலமாகத்தான் அங்கே சிகிச்சை அளிக்கப்படுகிறதே ஒழிய, அந்த முகாம்களிலேயே நாம் செய்யவில்லை.



எனவே, இந்த எண்ணிக்கையிலே கூட மிக அதிகமான அளவிலே மன நோயாளிகள் இருப்பதற்கு வாய்ப்பில்லை. குறைந்த எண்ணிக்கையிலே தான் இருப்பார்கள். எனவே அவர்களை சம்பந்தப்பட்ட மருத்துவ மனைக்கு நாம் அனுப்பி அந்த சிகிச்சையளிக்க வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்தினாலேதான் பணியாளர்களை எடுக்க முடியாது என்று நான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட புரட்சித் தலைவி மருத்துவ நல திட்டம் இன்று குறிப்பாக கிராமப் பகுதியில் வெற்றி நடை போட்டு வருகிறது. ஆனால் பல மருத்துவ மனைகளிலே இருக்கும் மருத்துவர்கள் அந்த மருத்துவ முகாம்களுக்குச் சென்று விடுவதால் திடீரென ஏதாவது ஒரு ஆபத்து ஏற்பட்டால் அந்த மருத்துவ மனைகளில் மருத்துவர்கள் இல்லாத குறை ஏற்படுகிறது. இதனை நிவர்த்தி செய்ய நிரந்தரமாக அரசு ஒரு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரத்திலே ஒரு நாள் மட்டும் தான் அந்த முகாம் நடக்கிறது. எனவே இப்படிப்பட்ட கருத்து வருகிறபோது, ஏதோ வாரம் முழுவதும், நாள் முழுவதும் போய் விடுவதாக ஒரு எண்ணம் ஏற்பட்டுவிடும். வாரத்திலே ஒரே ஒரு நாள் நடக்கிறது. அந்த ஒரு நாளிலே கூட ஒரு மருத்துவ மனையில் 2 மருத்துவர்கள் இருந்தால் ஒருவர் தான் போக வேண்டும் என்று இருக்கிறது. மற்றவர் அந்த மருத்துவ மனையிலே இருக்க வேண்டும் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். அதே போன்று, 5, 6 மருத்துவர்கள் இருக்கிற இடத்திலே 2 பேர்கள் போக வேண்டும் என்றும் மற்றவர்கள் அங்கே இருக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்தி வைத்திருக்கிறோம்.

எனவே ஏற்கெனவே இருக்கிற மருத்துவமனைகளிலே முறையாக தினந்தோறும் ருட்டினாக நடக்கிற எந்த சிகிச்சையும் பாதிக்கப்படாத வகையிலே தான் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவேதான் அந்த காரணத்தினால் நிரந்தரமாக இன்றைக்கு அதற்கு மருத்துவர்கள் நியமிக்க வேண்டிய அவசியம் இருக்காது. இதனாலே ஏற்கெனவே நடந்து கொண்டிருக்கின்ற எந்தப் பணியும் தடைபடுவதற்கோ, கெட்டுவிடுவதற்கோ வாய்ப்பே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1993 ஏப்ரல் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 465. டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

465—

ஜம்னாமருதூருக்கு சிறிய பேருந்து விடுதல்.

*1136—டாக்டர் பெ. வீரபாண்டியன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, ஐவ்வாது மலைப் பகுதியில் மேல்பட்டு, புலியூர் வழியாக ஜம்னாமருதூருக்கு தார் சாலை அமைத்து மினி பஸ் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐவ்வாது மலை 11 பஞ்சாயத்துக்களைக் கொண்டது. செங்கம் தொகுதிக்கு மட்டும் 6 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட இந்த 6 பஞ்சாயத்துக்களில் 15 ஆயிரம் மலைவாழ் மக்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கு வெளி மக்களிடம் தொடர்பு என்பதே சுத்தமாக கிடையாது. ஒரு வேளை அவர்கள் கீழே செங்கத்திற்கு வரவேண்டும். வாரத்திற்கு ஒரு முறை சந்தை பரமனந்தல் வரவேண்டுமென்றால் முட்புதர்கள் நிறைந்த ஒற்றையடிப் பாதையின் வழியாகத்தான் இவ்வளவு காலமாக வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே தான் பரமனந்தல் கிராமத்திலிருந்து மேல்பட்டு, புலியூர், விளாம்பூச்சி, கூட்டாத்தூர், கல்யாணமந்தை, பலாமருதூர், ஜம்னாமருதூர் வரை 30 கிலோ மீட்டர் தான் வருகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுகூர்ந்து ஐவ்வாது மலைக்கு தார்ச் சாலை போட பரிசீலனை செய்வாரா என்பதைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.



1993 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை மனதிலே கொண்டு 1980-வது ஆண்டு வனப் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையிலே புதிதாக தார்ச் சாலைகள் வனத்துறையில் அமைக்கப்பட வேண்டும் என்று சொன்னால் மத்திய அரசினுடைய பரிந்துரையைப் பெற்றாக வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அத்தியாவசிய தேவையை மனதிலே கொண்டு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படும்.

டாக்டர் பெ. வீரபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்வேன் என்று சொன்னதற்கு என்னுடைய நன்றியறிதலை ஐவ்வாது மலைவாழ் மக்கள் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன். வன வளங்கள் நெல்லிக்கனி, விளாம்பழம், மருத்துவ முக்கியத்துவம் பெற்ற டான்ட்ரிக்காய், புங்கன், கடுக்காய் மற்றும் மூலிகைகள் இதையும் மிஞ்சும் அளவுக்கு, தங்களுக்கே தெரியும், சந்தனம் அதிக அளவில் ஐவ்வாது மலையில் விளைகிறது. அது தான் அரசுக்கு பொருள் ஈட்டிக் கொடுக்கிறது, தமிழகத்தின் பொருளாதார நிலையையும் சீர்படுத்துவதும் எங்களது ஐவ்வாது மலைதான்.

நிதிப் பிரச்சினை இருப்பதை நானும் அறிவேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்வேன் என்று சொன்னதற்கு நான் நன்றியைத் தெரிவித்திருக்கிறேன். ஏற்கனவே பலாமருதூரிலிருந்து அத்திப்பட்டு வரை தார்சாலை இருக்கிறது. அத்திப்பட்டிலிருந்து கல்யாண மந்தை வரை இப்போது அகலமாக எர்த் ஒர்க் செய்திருக்கிறார்கள். இப்பொழுது தார்ச் சாலை இல்லையென்றாலும் 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு, ஜல்லி சாலையாவது போட்டுக் கொடுக்க அன்புள்ளம் கொண்ட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா, பரிசீலிப்பாரா என்று கேட்க விழைகின்றேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனுடைய மொத்த மதிப்பீடு 150 லட்சம். அதிலே சுமாராக பயன்படுகிற கிராமம் 35 கிராமங்கள் மலைப் பகுதியாக இருக்கிறது. அதனுடைய தூரம் 35 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இதனை மனதிலே, கருத்திலே கொண்டுதான் தார்ச் சாலைகளாக மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசினுடைய அனுமதி பெற்றாக வேண்டும். சுற்றுப்புற சூழல் கெட்டு விடுமோ என்று இங்கே இருக்கின்ற வனத் துறையைச் சார்ந்தவர்கள் அதிலே பரிந்துரை செய்திருக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல, ஐவ்வாது மலையிலேதான் இந்திய நாட்டிலே

இல்லாத அளவிற்கு உயர்ந்த சந்தன மரங்கள் இருக்கின்ற காரணத்தினாலே, இதனாலே திருட்டுப் போகின்ற வாய்ப்பும், ஏற்படும் என்று விரைந்து வருகின்ற தார்ச் சாலைகளை அமைத்தால், விரைந்து வாகனங்களை வைத்துக்கொண்டு சந்தனக் கட்டைகளைக் கடத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற நிலையும் இந்தத் துறையின் சார்பாக பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் மத்திய அரசுக்கு இந்த அரசு உடனடியாக பரிந்துரைச் செய்து, மத்திய அரசு அனுமதி தந்தால் அந்தப் பாதைகளை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வினா எண் 466, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

466—

## <u>அரக்கோணம்—செங்கல்பட்டு மின்சார இரயில்.</u>

*<u>16343—திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :</u>
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பார்—

அரக்கோணத்திலிருந்து காஞ்சீபுரம் வழியாக செங்கல்பட்டிற்கு மின்சார இரயில் விடுவதற்கு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரக்கோணத்திலிருந்து காஞ்சீபுரம் வழியாக செங்கல்பட்டிற்கு மின்சார இரயில் விடுவது பற்றி தற்போது எதுவும் பரிசீலனையில் இல்லை எனத் தென்னக இரயில்வே தலைமை திட்ட மேலாளர் தெரிவித்துள்ளார். எனவே, இது குறித்து மத்தியஅரசை வற்புறுத்த அவசியமில்லை எனக் கருதப்படுகிறது.

<u>திரு. காஞ்சி பன்னீர்செல்வம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் எனக்கு இல்லையென்று சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே நான் குறிப்பிட்டதை போல, நான் நாடாளுமன்றத்திலே இருக்கின்ற நேரத்திலே பலமுறை வலியுறுத்தி அதற்கு செய்யலாமா நருவோம் என்று தென்னக ரயில்வே மூலமாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது.





அந்தக் கடிதத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தருகிறேன். மத்திய அரசுக்கு அதைப் பரிந்துரைச் செய்து ஆவன செய்வாரா என மீண்டும் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் அவருக்குக் கடிதம் வந்ததாகச் சொன்னார். இன்றைக்கு அது போன்ற குறிப்புகள் என்னிடத்திலே, மத்திய அரசிடத்திலே இல்லை. இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கடிதத்தை தருவார்களானால் மத்திய அரசிடத்திலே அதை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. செ. து. வரதராஜன்.

<u>திரு. செ. து. வரதராஜன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணத்திலிருந்து செங்கல்பட்டுக்கு ரெயில் கண்டுபிடித்த காலத்திலே போடப்பட்ட அந்த பாதைகள் மிகவும் பழுதடைந்து, மிகவும் பராமரிப்பு இல்லாமல் 40 கிலோ மீட்டர் வேகம் செல்கின்ற அளவிலே அந்தப் பாதைகள் இருக்கின்றன. ஆனால் வடநாட்டிலிருந்து வருகின்ற கூட்ஸ்களும் . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இது சென்ட்ரல் சப்ஜெக்ட். அதில் இருக்கக்கூடிய குறைபாடுகள் பற்றி எல்லாம் இங்கே சொல்ல முடியாது. அதை மின்சார மயமாக்குமாறு மத்திய அரசுக்கு மாநில அரசு பரிந்துரை செய்யுமா என்பது பற்றித்தான் கேள்வி. இங்கே அதிலே உள்ள குறைபாடுகளை எல்லாம் நீங்கள் பேச முடியாது. நாடாளுமன்றத்திலேதான் பேசலாம். பரிந்துரை செய்வது பற்றிய பிரச்சினையில் மட்டும் கேள்வி கேளுங்கள்.

<u>திரு. செ. து. வரதராஜன் :</u> ஆகவே, அரக்கோணத்திற்கு மின்சார ரெயில்கள் செல்கின்ற பாதைகள் இருக்கின்றன, சென்னையிலிருந்து அரக்கோணத்திற்கு செல்கின்ற பாதைகள், அதுபோல தென்னாட்டிற்குச் செல்கின்ற பாதைகள் எல்லாம் மின்சார ரெயில் பாதைகளாக இருக்கின்றன. இந்த செங்கல்பட்டிலிருந்து அரக்கோணத்திற்கு செல்கின்ற பாதையில் மட்டும் டீசல் மற்றும் புகைவண்டி என்ஜின்களாக இருக்கின்றன. ஆனால் லோக்கல் ஷெட், செங்கல்பட்டுக்கு இரண்டு என்ஜின்களுக்கும் மெயின்டெனன்ஸ் செய்ய வேண்டிய நிலைமை அரக்கோணத்திலும் செங்கல்பட்டிலும் இருக்கிறது. ஆகவே, இடைப்பட்ட இந்த இடத்திற்கு மின்சார பாதைகள் போடுவதால் மிகக் கூடுதலான வசதிகள் ஏற்படும் என்பதனை

அறிந்து அதனை கவனத்தில் கொண்டால் மத்திய அரசுக்கும் அது லாபகரமாக அமையும். ஏன் என்றால் இரண்டு லோகல் ஷெட்டை மெயின்டெனன்ஸ் செய்யாத நிலைமை இருக்கின்ற காரணத்தினால் அதைப் பரிந்துரை செய்தால் மத்திய அரசு ஆவன செய்யும். தமிழக அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிறபோது ரெயில் கண்டுபிடித்தபோதே அந்தப் பாதை அமைக்கப்பட்டது, அது பழுது அடைந்திருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இதுபோன்ற சில இடங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினருடைய கருத்தை மனதிலே கொண்டு மின்சார ரெயில் விடுவதற்காக அதை மாற்றியமைப்பதற்கு மத்திய அரசுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 467. திரு. எம். கே. பாலன், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

467—

## சைதாப்பேட்டை ஆற்றின் ஓரத்தில் தடுப்புச் சுவர் அமைத்தல்.

*9511—திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) சைதாப்பேட்டையைச் சுற்றியுள்ள ஆற்றின் ஓரம் தடுப்புச் சுவர் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ரூ. 14.85 கோடி மதிப்பீட்டு செலவில் சென்னை அடையாறு ஆற்றின் கரையோரமாக தடுப்புச்சுவர் கட்டுவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.



முற்பகல் 10–30

திரு. எம். கே. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டை, கோட்டூர்புரம், திடீர் நகர், ஆலந்தூர் போன்ற பகுதிகளில் உள்ள குடியிருப்புவாசிகளில் 40 சதவீதம் பேர் என்னுடைய தொகுதி மக்கள். அவர்கள் ஆற்றோரமாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்களுக்கு மழைக் காலங்களில் மிகப் பெரிய சோதனை ஏற்படுகிறது. மறைந்த புரட்சித் தலைவர் டாக்டர் எம். ஜி. ஆர். அவர்கள் ஆட்சியில் 1985 ஆம் ஆண்டு தடுப்புச் சுவர் சில பகுதிகளில் கட்டி, அது இப்போது நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் அதைத் தொடர அரசு முன் வருமா ? இந்த ஆண்டு அதை நிறைவேற்ற எவ்வளவு பணம் அதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27—2—1986-ல் ஒரு நிபுணர் குழு அமைக்கப்பட்டு அதற்கான பரிசீலனையும் செய்யப்பட்டு, சுமார் 2 கோடி ரூபாய் செலவிலே அன்றைக்கு அந்தப் பணிகள் நடைபெற்றன. அதற்குப் பின்னாலே முழு பணிகளும் நடத்தி முடிக்க வேண்டுமென்று எண்ணி எவ்வளவு மதிப்பீடு என்று பார்த்ததில், அத்தனை பணிகளையும் செய்வதற்கு 14 கோடி ரூபாய்க்கு மேலே தேவையிருக்கிறது என்ற காரணத்தால் அரசிடம் நிதி இல்லாத நிலையில் நம்முடைய சென்னை குடிநீர்த் திட்டத்திலே உலக வங்கி உதவியோடு இத்திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்ற அளவிலே அதற்கான பணம் அனுமதிக்க முடியுமா என்று சென்னை குடிநீர்த் திட்டத்தோடு பேசி முடிவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே அதற்குப் பின்னாலேதான் இந்தத் தொகை ஒதுக்கீடு பற்றி விரிவாகக் கூறமுடியும். அத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 468 திரு. எ. தா. பொன்னுவேல், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

468—

## வரகூர் தொகுதி ஏரிகளை ஆழப்படுத்தும் பணி

*9782—திரு. எ. தா. பொன்னுவேல் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம் வரகூர் தொகுதியில் உள்ள நீர்ப்பாசன ஏரிகளான, எழுமூர் ஏரி, காருகுடி ஏரிகளை நடப்பு நிதியாண்டில் ஆழப்படுத்தும் பணி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

[1993 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. எ. தா. பொன்னுவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சொந்த ஊரான எழுமூரில் பொதுப் பணித் துறையின் பராமரிப்பின் கீழ் வரும் பெரிய ஏரிகள் அது. சுமார் 750-லிருந்து 1,000 ஏக்கர் வரை நிலப்பரப்பு பாசனம் செய்து வருகிறது. கோடைக் காலத்திலும் தண்ணீர் இருக்கும். இருபோகம் சாகுபடியும் செய்யும் அளவுக்கு அது உதவுகிறது. நான் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் அனுமதித்து 'ஆம்' என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றியைக் கூறி, அதை இந்த நிதி ஆண்டிலேயே தொடங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த எழுமூர் ஏரியிலே மண் அரிப்பு ஏற்பட்டு அது தற்காலிகமாகச் சரிசெய்யப்பட் டிருக்கிறது. இப்போது ஏரியில் நீர் இருக்கின்ற காரணத்தால் அதற்கான முழு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. எவ்வளவு செலவாகலாம் என்று மதிப்பீடு வந்ததற்குப் பின்னாலே நடவடிக்கையை விரைந்து எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. தா. பொன்னுவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 469. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

**469—**

## ஆரணி தொகுதி கிராமங்களில் குறைந்த மின்அழுத்த மின்சாரம்.

(*) 10296—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, ஒண்டிக்குடிசை, வெள்ளேரி, சங்கீதவாடி ஆகிய கிராமங்களுக்கு குறைந்த மின் அழுத்த மின்சாரம் உள்ளதால் விவசாய மோட்டார்கள் அடிக்கடி பழுதாகி விடுவதை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1993 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஒண்டிக்குடிசை, வெள்ளேரி, சங்கிதவாடி ஆகிய கிராமங்களுக்கு அளிக்கும் மின் விநியோகத்தை ஆய்வு செய்ததில், இக்கிராமங்களில் மின்னழுத்தம் சீராக உள்ளதென தெரியவந்துள்ளது. எனவே, தற்போதுள்ள சூழ்நிலையில் புதிதாக மின்மாற்றிகள் அமைப் பதற்குச் சாத்தியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினாவை நான் ஏழெட்டு மாதங்களுக்கு முன்பே போட்டிருந்தேன். அப்போது அந்த சூழ்நிலை இருந் தது. குறை என்று சொன்னால் உடனடியாக அதை நிறை வேற்றுகிற அரசு புரட்சித் தலைவி அரசு என்பதை நாம் எல் லோரும் உணர்ந்திருக்கிறோம், குறிப்பாக அதிலும் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே அமைச்சர்களாக இருக்கிற பெரு மக்கள் என் என்றால் எண்ணெய்யாக இருக்கிற அளவுக்கு முழுமையாக திறமையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிற இந்த வேளையிலே இது சம்பந்தமாக நேற்றைக்குக் கூட அந்த அதிகாரிகளை அழைத்து நான் கேட்டேன். அந்தக் குறைகள் உடனடியாக நீக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதற் காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் காணிக்கை யாக்கி மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோன்ற குறைந்த மின் அழுத்தப் பிரச்சினைகள் எதிர் காலத்தில் வராமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கையை அமைச் சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் அழுத்தக் குறைவு சம்பந்தமாக துறைக்குப் புகார்கள் வருகிறபோது காலங்காலமாக இருக்கிற பிரச்சினை என்ற காரணத்தால் அவ்வப்போது அதற்கான ஆணைகள் இடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதைப்போல புதிய மின்மாற்றிகளை அமைப்பதற்கும், எந் தெந்த நேரத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறார்களோ, அதற்கான நட வடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆகவே, எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினையே இல்லாமல் பார்த்துக் கொள்வதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும். அதைப்போலவே அந்தப் பகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருக்கிறது என்று என்னுடைய கவனத்திற்குக்கொண்டு வந்தால் நடவடிக்கை

[1993 ஏப்ரல் 26

உடனடியாக மேற்கொள்ளப்படும். ஆகவே, எதிர்காலத்தில் இந்தப் பிரச்சினைகள் இல்லாமல் பார்த்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 470, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

470—

கீழ்அரசம்பட்டு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்.

*10922—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலூர் தாலுகா, கீழ்அரசம்பட்டு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தர அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் தாலுக்கா, கீழ்அரசம்பட்டு கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைக்கும் திட்டத்தின் அனைத்து பணிகளும் முடிக்கப்பட்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மூலம் இக்கிராமத்திற்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு, இந்த திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய அரசை பொறுத்தவரையில் எல்லா பகுதி மக்களுக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் கொடுக்க வல்ல அரசாக உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல, இன்றைய நிலையில் கிராமப்பகுதி மக்கள் எல்லாம் வேண்டுவது நல்ல சாலை வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி, மின் விளக்கு வசதி போன்றவை தான். இந்தத் திட்டங்களை எல்லாம் நான் ஊராட்சி மன்றத் தலைவராக இருக்கிறபோது பார்த்தேன். இரண்டாண்டு காலத்தில் ஒன்றும் செய்யப்படவில்லை. இந்த கீழ் அரசம்பட்டு கிராமத்தைப் பொறுத்த வரையில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் அப்போது.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி பற்றிய துணைக் கேள்விதான் கேட்கலாம் நீண்ட உரையாக நிகழ்த்தக் கூடாது. கேள்வியாகக் கேளுங்கள்.



திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நேரத்தில் ஹைகோர்ட்டில் ரிட் போட்டு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டாமல் நின்று விட்டது. அதற்காகத்தான் கேள்வி எழுப்பினேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதுணையால் அந்த ஸ்டே எல்லாம் முறியடிக்கப் பட்டு, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் பாது காக்கப்பட்ட நீர் வழங்க மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி ஏறத்தாழ 5,000 மக்கள் தொகை கொண்ட அந்தக்கிராமத்தில் கொடுத்ததற்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன் றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் இந்த மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டும் பணி ஏறத்தாழ 4 ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்டது என்ற காரணத் தாலும், தற்போது மக்கள் தொகை அதிகமாக விரிவடைந்து இருக்கிற காரணத்தாலும், மேலும் அதிகமான பாயிண்டுகள், அதிகமான குழாய் இணைப்புகள் ஏற்படுத்தித் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 471 திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

471—

நரசிங்கபுரம்—பட்டியாக்கவுண்டனூர் சாலையைத் தார்ச்சாலை யாக மாற்றும் திட்டம்.

*11111—திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி வடக்கு ஒன்றியம் நரசிங்கபுரத்திலிருந்து கோடங்கிப்பட்டி வழியாக பட்டியாக்கவுண்டனூர் வரை உள்ள பழுதடைந்த சாலையைத் தார்ச்சாலையாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொள்ளாச்சி வடக்கு ஊராட்சி ஒன்றியம், நரசிங்கபுரம்—கோடங்கிப்பட்டி வழியாக பட்டியாக்கவுண்டனூர் வரை உள்ள சாலையை தார்ச்சாலையாக மேம்பாடு செய்யும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

[1993 ஏப்ரல் 26

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நரசிங்கபுரத்திலிருந்து கோடங்கிப்பட்டி வரையில் செல்கிற அந்தச் சாலையில் சுமார் 1½ கிலோ மீட்டர் கோடங்கிப் பட்டி வரையில் மண் சாலையாகவும், அதற்குப் பிறகு பட்டியாக் கவுண்டனூர் வரையில் மெட்டல் சாலையாகவும் உள்ளது. தென் மேற்கு பருவ மழை, வடகிழக்கு பருவமழை இரண்டும் பெய்கிற அந்தப் பகுதியில், இந்த இரண்டாண்டு காலத்தில் பெய்த மழை யால் சாலைகள் போக்குவரத்துக்கு லாயக்கற்றதாக மாறியிருக் கின்றன. கோடங்கிப்பட்டி கிராமம் மிகவும் தள்ளி உள்ளே இருக்கிற கிராமம். இன்று வரையில் பஸ் வசதி இல்லாத ஒரு கிராமமாக அந்தக் கிராமம் இருந்து வருகிறது. எனவே, அதற்கு தார்ச் சாலை போட்டால், தற்போது ஜே.வி.வி.டி. திட்டத்தின் கீழ் ராமபட்டினத்திலிருந்து காவணம் வரையில் செல்கிற அந்தச் சாலை பட்டியாக் கவுண்டனூர் வரைதொட்டு செல்கிற காரணத் தால் அங்கேயுள்ள மக்களுக்கு உதவியாக, அந்த சுற்று வட்டார கிராமங்கள் அனைத்துக்கும் போக்குவரத்து ஏற்படுத்துவதற்கு பயனுள்ளதாக இருக்கும். சாலை வசதி சரியாக இல்லாத காரணத்தால் இன்றைக்கு புதிய பஸ் விடக்கூடிய வாய்ப்புகூட இல்லாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைத் தார்ச்சாலையாக மாற்றிக் கொடுக்க அடுத்த ஆண்டிலாவது நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993–94 ஆம் ஆண்டில் சுமார் ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இந்தச் சாலை தார்ச்சாலை யாக மாற்றியமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தார்ச்சாலை யாக மாற்றிக் கொடுக்க ஒப்புதல் அளித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி, தார்ச்சாலையாக மாற்றிக் கொடுக்கு மாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 472 திரு. இரா. புதுநயினார் ஆதித்தன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

472—

சேரன்மாதேவி தொகுதி கிராமங்களுக்குத் தாமிரபரணி ஆற் றிலிருந்து குடிநீர் வழங்கல்.

*12858—திரு. இரா. புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1993 ஏப்ரல் 26]

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியம் ரெங்கசமுத்திரம் ஊராட்சி. கபாலிபாறை ஊராட்சி. செங் குளம் கிராமங்களுக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து கூட்டுக் குடி நீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். திட்டம் எப்பொழுது நிறைவேற்றப் படும் ?

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு : உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பற்றிய கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.

திரு, இரா, புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சேரன்மகாதேவி தொகுதி. பாப்பாக்குடி ஒன்றியம். ரெங்கசமுத்திரம் ஊராட்சி, வழுதூர், செங்குளம் கிராமங்களுக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஒன்றைச் செயல் படுத்த, கடனா நிதியிலிருந்து அந்தத் திட்டம் நிறைவேற்றப் பட செயற்குறிப்புகள் எல்லாம் முடிந்த நிலையில் இருக்கின் றன.

ஆனால் அந்தப் பகுதியிலுள்ள மக்கள் எல்லாம் பயன்பெற அரை கிலோ மீட்டர் தூரத்தில் வற்றாத தாமிரபரணி ஆறு ஓடுவதால். அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை கடனா நதி யிலிருந்து தாமிரபரணி அணைக்கு மாற்றி, அதைச் செயல் படுத்தித் தருவார்களா என அமைச்சர் மூலமாக அறிய விரும்பு கிறேன்.

முற்பகல் 10–40,

மாண்புமிகு திரு, அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, அது பற்றி பரிசீலனைச் செய்யப் படும்.

திரு, இரா, புதுநயினார் ஆதித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே பல முறை மாவட்ட ஆட்சித் தலைவரிட மும் "டுவாட்"—இடமும் நானே நேரடியாகச் சென்று சொன்ன போது கூட, இது முடிந்த நிலையில் இருப்பதால், கடனா நதியிலிருந்துதான் நாங்கள் இதை எடுப்போம் என்று உறுதி யாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், அதன் அருகில் அரை கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற வற்றாத ஜீவ நதியான தாமிரபரணி ஆற்றிலிருந்து அந்தத் திட்டத்தை எடுத்தால் அந்தப் பகுதி மக்கள் பயன் பெறுவார்கள், மீண்டும் கோடைக் காலங்களில் அந்தக் கிராம மக்களுக்கு தண்ணீர் கிடைக்காத

நிலை வந்துவிடக் கூடிய காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் போர்க்கால நடவடிக்கையாக எடுத்துச் செய்ய உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை பெறப்பெற்று இது பற்றி இந்த ஆண்டு முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 473, திரு. எஸ். எஸ். ராமசுப்பு, இருக்கையில் இல்லை. பேராசிரியர் க. பொன்னுசாமி, மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

473—

## திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள கிணறுகளை ஆழப்படுத்துதல்.

*11177—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி —கட்டபொம்மன் மாவட்டத்தில் பழைய, புதிய கிணறுகள் ஆழப்படுத்த மற்ற கிணறுகளிலிருந்து 450 அடி தூரம் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையால் அரசின் மானியக் கடன்கள் வாங்குவதில் விவசாயிகள் சிரமப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அடிக் கணக்கை குறைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் வங்கிகள், புதிய கிணறு தோண்டுவதற்கும் பழைய கிணற்றை ஆழப்படுத்தவும் கடன் வழங்கும் போது ஒரு கிணற்றுக்கும் மற்றொரு கிணற்றுக்கும் இடையே இருக்க வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச இடைவெளி தூரம் 150 மீட்டர் (492 அடி) ஆகும். இந்த தூரம் தமிழ்நாடு அரசு நில நீர்த்துறையைக் கலந்து இத் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கும் தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.





(ஆ) இடைவெளி தூரத்தை 150 மீட்டரிலிருந்து குறைப்பது பற்றி நில நீர்த்துறை ஆய்வு நடத்தி வருகின்றது. ஆய்வின் முடிவின் அடிப்படையில் தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி முடிவெடுக்க பரிந்துரை செய்யப்படும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிபந்தனை மானியக் கடன் பெறுபவர்களுக்கு மட்டுமே விதிக்கப்படுகிறது. தனியார்கள் மற்றும் வங்கிகளிலிருந்து கடன் பெற்று கிணறு தோண்டுகிறவர்களுக்கு இந்த நிபந்தனை விதிக்கப்படுவதில்லை. தனியார்கள் இடையிலே கிணறு தோண்டிவிட்டால் கூட, மற்றவர்களுக்கு மானியக் கடன் மறுக்கப்படும் சூழ்நிலை ஏற்படுகிறது. ஏழை எளியவர்கள் தான் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, தனியாருக்கும் இந்த நிபந்தனையை விதிக்க அரசு முன் வருமா? அல்லது ஆய்வின் முடிவில் இந்த நிபந்தனையை அறவே நீக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யார் நிலவள வங்கிகளிலிருந்து கடன் வாங்க விரும்புகிறார்களோ, அவர்களுக்குத்தான் இந்த நிபந்தனையை விதிக்கிறோம். கடன் வாங்காதவர்கள், மாண்புமிகு துணைத் தலைவர் சொன்னதைப் போல, அவர்கள் இஷ்டத்திற்கு கிணற்றை வெட்டிக்கொள்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் சேர்த்து இதை விதிக்க வேண்டும் என்று சொன்னால், இதை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தான் செய்ய வேண்டும். நில நீர்த் துறை தான் இதைச் செய்ய வேண்டும். ஆய்வைப் பொறுத்த வரையில் இப்போது நில நீர்த் துறை ஆய்வு நடத்திக்கொண்டு இருக்கிறது. இந்த இடைவெளியைக் குறைக்க வேண்டும் என்று கோருகின்ற அந்தக் கோரிக்கையை பரிசீலனை செய்வோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 474, திரு. எம். ஆண்டி அம்பலம் இருக்கையில் இல்லை.

வினா எண் 475, திரு. கே. ஏ. மனோகரன் இருக்கையில் இல்லை.

வினா எண் 476, திரு. கா. பூ. முனுசாமி, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

[1993 ஏப்ரல் 26

476—

## பள்ளிக் குழந்தைகளுக்கு தென்னை மரம் வழங்கும் திட்டம்

* 17024—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிக் குழந்தைகளுக்கு தென்னை மரம் வழங்கும் திட்டத்தின் கீழ் எத்தனை தென்னை மரக் கன்றுகள் வழங்கப் பட்டன?

(ஆ) இத் திட்டம் தொடர்ந்து எவ்வளவு ஆண்டுகளுக்கு செயல்படுத்தப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) 96,800 தென்னை மரங்கள், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி பள்ளி மாணவர்கள் தென்னங் கன்றுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு வழங்கப் பட்டது.

(ஆ) இத் திட்டத்தின் செயல்பாட்டினை ஆய்வு செய்தபின் தொடர்ந்து செயல்படுத்துவது குறித்து முடிவெடுக்கப்படும்.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய சீரிய சிந்தனையில் எழுந்த ஒரு சிறப்புத் திட்டம். இதைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்குகின்ற போது, குறிப்பாக 6-வது படிக்கின்ற மாணவர்கள் அத்தனை பேர்களுக்கும் இதை வழங்கினால், அவர்கள் பள்ளி இறுதி ஆண்டு முடிப்பதற்குள்ளாக அதனுடைய பலனை அவர்கள் பெறுவார்கள். எனவே, வரும் நிதி ஆண்டில் அளிக்கப்படுகின்ற போது, 6-வது படித்த மாணவர்கள் அத்தனை பேர்களுக்கும் தென்னங் கன்றுகளைக் கொடுக்க அரசு முன்வருமா? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதி ஆண்டில், 2½ லட்சம் மாணவர்களுக்கு இந்த இலவச தென்னங்கன்றுகள் வழங்கப்படும். இந்தத் திட்டம் மாணவர்கள் விருப்பத்தின் அடிப்படையிலே அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1993 ஏப்ரல் 26]

முற்பகல் 10-45

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வறட்சியின் காரணமாக இப்போது பல இடங்களில் மழை பொய்த்துவிட்டதால் தண்ணீர் தட்டுப்பாடு அதிக இடங்களில் காணப்படுகிறது. அது போன்ற இடங்களில் பள்ளி மாணவர்களுக்குக் கொடுக்கின்ற தென்னங்கன்றுகளை வளர்ப்பதற்கு சிறப்பு திட்டங்கள் ஏதாவது அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதி ஆண்டிலே தென்னந் தோப்புகளிலே உள்ள காய்ந்த மரங்கள் வயது முதிர்ந்து விட்ட காரணத்தினால் விழுந்துவிட்டாலோ அல்லது நோயுற்றுவிட்டதனாலோ. புயலால் விழுந்ததாலோ அவைகள் அப்புறப்படுத்தப்பட்டு புதிய தென்னங்கன்றுகளை நடுவதற்குத்தான் நான் இந்த நிதி நிலை மானியக் கோரிக்கையில் அறிவித்தேன், ஆனால் மாணவர்களுக்கு இலவச தென்னங் கன்றுகள் கொடுக்கின்ற திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு வழங்கப்படும். மாணவர்கள் தங்களுடைய வீட்டிலே வளர்க்கும் தென்னை மரங்களுக்கு தனியாக எங்கேயிருந்தும் நீர் கொண்டுபோக வேண்டிய தேவையில்லை. ஏனென்றுச்சொன்னால் நம்முடைய பண்பாடு மிக்க தமிழர்கள் காலையில் எழுந்தவுடன் நிச்சயமாக பல் துலக்குவார்கள். அப்படி பல் துலக்குகின்றபோது அந்த வாய் கொப்பளிக்கின்ற தண்ணீரை தென்னங்கன்றுகளுக்கு துப்பினால் போதும். நம்முடைய தாய்மார்கள் காலையில் எழுந்தவுடன் பாத்திரம் விளக்குவார்கள். அந்த பாத்திரம் விளக்குகின்ற இடத்தை அந்த தென்னங்கன்றுகள் இருக்கும் இடத்தில் விளக்கினால் அந்தச் சாம்பலும் தண்ணீரும் தென்னங்கன்றுகளுக்கு நீராகவும் உரமாகவும் பயன்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்ற ஆண்டு மாணவர்களுக்கு 98 ஆயிரம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுவிட்டதால் ஏற்கனவே கோவை மாவட்டத்திலே 10 ஆண்டுகளாக கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டு நிறைய தென்னங் கன்றுகள் பட்டுப் போகின்றநிலையில் இருக்கிறபோது, சென்ற ஒரு ஆண்டாக பெய்த மழையினால் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, கிணத்துக்கடவு மற்றும் கோவை மாவட்டங்களில் சுற்றி இருக்கக்கூடிய பல்வேறு பகுதிகளில் உடனடியாக நெட்டை குட்டை தென்னங்கன்றுகள் கிடைக்காமல் சென்ற ஆண்டு தென்னங்கன்றுகளை நட முடியாமல் போயிருக்கிறது.

[1993 ஏப்ரல் 26

இந்த ஆண்டிலாவது அந்த 98 ஆயிரம் போக மீதியை விவசாயிகள் கேட்கின்ற அளவுக்கு தென்னங்கன்றுகளை அளித்து பட்டுப்போன தென்னங்கன்றுகளுக்குப் பதிலாக நடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடக்கிற நிதியாண்டில் மாணவர்களுக்கு இலவச தென்னங்கன்றுகள் வழங்குகிற திட்டத்தின்கீழ் 2½ லட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்படும். அதே நேரத்திலே விவசாயிகள் பட்டுப்போன தென்னங்கன்று களை அகற்றிவிட்டு புதிய வீரிய ரக தென்னங்கன்றுகளை நடுவ தாக இருந்தால் அவர்களுக்கு அரசு தொடர்ந்து மானிய விலை யிலே தென்னங்கன்றுகளை வழங்குகிறது. அந்த இடத்திலே அவர்கள் கிணறு வெட்ட வேண்டும் என்று முன் வருவார்களே யானால அவர்களுக்கு கிணறு வெட்டுவதற்கு அரசு ஆயிரம் ரூபாய் மானியம் தரும். நீரேற்று இயந்திரங்கள் வைக்க முன்வருவார்களேயானால் அதற்கும் ஆயிரம் ரூபாய் அரசு தரும். தென்னந்தோப்புகளின் ஊடே ஊடுபயிர் சாகுபடி செய்ய விவசாயிகள் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு 50 ரூபாய் நிதி உதவியும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி :

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்களுக்கு தென்னங்கன்றுகள் கொடுக் கின்ற திட்டம் அருமையான திட்டம். அதை எப்படி வளர்க்க வேண்டும் என்பதைப்பற்றி நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல் துலக்குகின்ற தண்ணீரை பாத்திரம் தேய்க்கின்ற தண்ணீரை அதில் பாய்ச்சினால் போதும் என்று சொன்னார்கள். கொண்டு செல்லுகிற மாணவர்களும் தங்க ளுடைய வீடுகளிலே அதை எப்படி வளர்க்க வேண்டும் அல்லது வளர்க்கிறார்கள் என்பது எப்படி கண்காணிக்கப்படுகிறது. அதற்கு ஏதாவது வழிமுறை இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை செயல்படுத்த முன் வருகிற மாணவர்களுக்கு ஒரு கையேடு புத்தகம் தரப்படும். அந்தப் புத்தகத்திலே, அந்த மாணவர்களுடைய புகைப்படம் ஒட்டியிருக்கும், அந்த மாணவருடைய முழு முகவரியும் அதிலே எழுதப்பட்டிருக்கும், தலைமை ஆசிரியர் கையெழுத்திட்டிருப் பார்கள், அதற்குக் கீழே அந்தப் பகுதியைச் சேர்ந்த வேளாண்மை அலுவலர் கையெழுத்திட்டிருப்பார். அந்த மாணவர்கள் வளர்க்கின்ற தென்னை மரங்கள் 4 ஆண்டு களுக்கு பின்னாலே



1993 ஏப்ரல் 26]

அந்த மரம் காய்க்கக் கூடிய நிலையிலே இருந்தால் அந்த மாணவர்களுக்கு தமிழக அரசின் வேளாண்மைத் துறை ஒரு நற்சான்றிதழ் தரும். அந்த சான்றிதழைப் பெற்றவர் தான் வருங்காலத்திலே வேளாண்மையைப் பொறுத்த மட்டில் பட்டயப்படிப்பு படிக்க வந்தாலும் அல்லது பல்கலைக் கழக பட்டப்படிப்பு படிக்க வந்தாலும் அதுதான் அடிப்படைத் தகுதியாக இருக்கும் என்பதை தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே ஒரு ஆணை மூலம் மக்களுக்கு அறிவித் துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கிய சாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னங்கன்றுகளை வளர்க்கின்ற குழந்தைகளுக்கு அவ்வப்போது ஏதாவது உதவி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாணவர்களுக்கு தென்னங்கன்றுகளை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் வருகிறது. அவர்கள் அதை வைக்கிறார்கள். எனவே மாண்பு மிகு உறுப்பினர் திரு. ஆரோக்கியசாமி போன்ற அப்பாக்கள் அந்த மாணவர்களுக்கு அனுசரணையாக அனைத்து உதவிகளை யும் செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராதாகிருஷ்ணன்.

முற்பகல் 10.50

திரு. த. க. இராதாகிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, தென்னை மரம் பள்ளிக் குழந்தைகளுக்குக் கொடுப் பது ஒரு சிறப்பான திட்டமாகும். அதே போல பள்ளிக் குழந்தைகளுக்கு தேக்கு மரம் வழங்கும் திட்டம் ஏதாவது இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, தேக்கு மரம் வளர்ப்பதற்கு என்று மாணவர்களுக்கு கொடுக்கக்கூடிய இலவசத் திட்டம் எதுவும் அரசினுடைய பரிசீலனையில் இல்லை. ஆனால் இன்றைக்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தென்னை மரம் சொந்தமாக இருக்க வேண்டும். அந்தக் குடும்பம் ஏழை எளிய மக்களாக இருந்தால் ஒரு ஆண்டுக்கு 100 தேங்காயாவது ஒரு மரத்திலிருந்து கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் மாணவர்களுக்கு வேளாண்மை பற்றிய அறிவும் அந்த பாட தொழில் நுட்பமும் அவர்களுக்கு வரவேண்டும் என்பதற்காகத்தான் இந்தத்

திட்டத்தை தமிழக அரசினுடைய முதலமைச்சர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முனைப்போடு செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்பசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்குழந்தைகளுக்கு இந்த தென்னை மரங்கள் வளர்க்க கற்றுக் கொடுப்பது, அதை அடிப்படையாகக் கொண்டு வேளாண் துறையில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவது எல்லாம் கீழ்ப்பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கு பொருத்தமாக இருக்கும். மலைப்பிரதேசங்களில் உள்ள மாணவர்கள் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களையும் ஊக்குவித்து, அவர்களையும் வேளாண் துறையில், வேளாண் கல்லூரிகளில் முதன்மை இடத்திற்கு வர ஒரு அடிப்படை தகுதி மார்க் கொடுப்பதற்காக மலைப்பிரதேசங்களில் வளரக்கூடிய சுட்டி, தேக்கு, கனி வகைகள் போன்ற மரங்களை மலைப்பிரதேச மாணவர்களுக்கு கொடுத்து அவர்களும் இந்த விவசாய பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு முன்னுரிமை வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணைவித்துக்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே இந்தத் திட்டம் தமிழகத்திலே செயல்பட்டு வருகிறது. மலையிலே மரங்கள் நன்கு வளர்க்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதுபற்றி மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்களிடத்தில் கேள்வி போட்டால் மரம் வளர்க்க வேண்டிய திட்டத்திற்கும் அவர் பதில் அளிப்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பெ. வீரபாண்டியன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாம் வகுப்பு படிக்கும் மாணவ மாணவியருக்கு நாம் தென்னங்கன்றுகளைத் தருகின்றோம். பெரும்பாலும் கிராமத்திலே ஒரு கன்று வைப்பது சென்டிமென்ட்டாக நினைக்கிறார்கள். எனவே இரண்டு தென்னங்கன்றுகளைக் கொடுத்து மாணவ, மாணவிகளை ஊக்குவிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு குடும்ப நலத்தைக் காக்கின்ற வகையிலே ஒரு குடும்பத்திற்கு ஒரு பிள்ளை, வீட்டிற்கு ஒரு மரம் என்ற அடிப்படையிலே சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஒரு குழந்தை பெற்று, அந்தக் குழந்தையை நன்றாகப் படிக்க வைத்து அந்தக் குழந்தையின் திருக்கரத்தால் அந்த தென்னங்கன்றை வளர்த்து அந்தக் குடும்பம் வாழ்வு பெற இந்த அரசு வழிவகைச்செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி. சொக்கலிங்கம்,.

திரு. பி. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச தென்னங்கன்று வழங்குவது போல அந்த பிள்ளைகளுக்கு மாங்கன்றுகளும், பலாக் கன்றுகளும் இலவசமாக வழங்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: பேரவைத் தலைவர் அவர்களே, தோட்டக்கலைத் துறையின் சார்பாக தரிசு நிலங்களையெல்லாம் பூந்தோட்டங்கள், பழத்தோட்டங்கள் உருவாக்குவதற்கு மானிய விலையிலேதான் அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. இது போன்று இலவச பழக் கன்றுகள் தருவதற்கு இந்த அரசிடத்திலே எந்த செயல் திட்டமும் ஆய்வில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 477, திரு. இரா. அப்பு நடேசன், இருக்கையில் இல்லை, திரு கே.பி. ராஜு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

477—

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் வசூலிக்கப்படும் காலிமனை ஒதுக்கீட்டு கட்டணம்.

*14472 திரு. இரா. அப்பு நடேசன்:
மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அங்கீகரிக்கப்படாத வீட்டுமனையில் (Un pproved plots) கட்டிடம் கட்ட அனுமதி (Approval) வழங்கப்படும்போது சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் (M.M.D.A. வசூலிக்கப்படும் காலிமனை ஒதுக்கீட்டு கட்டணம் (OpnSpace reservation charges) எந்த அடிப்படையில் கணக்கிடப்படுகிறது?

(ஆ) இந்தக்கட்டணம் வசூலிப்பதில் ஏதாவது விலக்கு அளிக்கப்படின் அதன் விவரம் என்ன

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) காலிமனை ஒதுக்கீட்டுக் கட்டணம் என்பது, எந்த ஒரு மனைப் பிரிவு முன் அனுமதியின்றி 1975-க்குப் பின்பும், 1989-க்கு முன்பும் செய்யப்பட்டு இருந்தும், அம்மனைகள் உள்ளூராட்சியின் பராமரிப்பில் உள்ள அல்லது உள்ளூராட்சியினால் பொதுப்பாதை என அறிவிக்கப் பட்ட சாலையிலிருந்து அணுகுப் பாதை பெற்றிருந்தாலும், அம்மனைப் பிரிவின் பரப்பளவு 75 சென்ட்களுக்கு அதாவது 3000 சதுர மீட்டருக்கு மேல் அமைந்து இருக்குமாயின் செலுத்த வேண்டிய கட்டணம்தான் காலிமனை ஒதுக் கீட்டுக் கட்டணம் என்று சொல்லப்படுகிறது. இக்காலி மனை ஒதுக்கீட்டுக் கட்டணம் பத்திர உதவிப் பதிவாள ரால் நிர்ணயிக்கப்படும் ஆதாரவிலையில் 10 விழுக்காடுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இக்கட்டணம் செலுத்திய பின்புதான் திட்ட அனுமதி வழங்கப்படுகிறது.

(ஆ) இக்கட்டணம் வசூலிப்பதில், விதிவிலக்களிக்க எந்த வகையும் இல்லை.

திரு. கே. பி. ராஜு: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை எம்.எம்.டி.ஏ. நிறுவனத்தினால் காலியிடங் களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். இப்போது ஒவ்வொரு வீடுகளிலும் சுமார் 1 கிரவுண்ட் இடம், அல்லது இரண்டு கிரவுண்ட் இடம் வீடு கட்டியது போக மீதி காலியாக இருக்கிறது. ஓப்பன் பிளேஸாக இருக்கிறது. வேஸ்ட் பிளேஸாக இருக்கிறது. அது போக பார்க் போன்ற இடங்கள் இருக்கி கின்றன. வீட்டிலேயே ஒரு மினி பார்க் கூட வைத்திருக் கிறார்கள். இப்படி பொது மக்கள் அவர்களுடைய சௌ கரியத்திற்காக வைத்துக்கொள்கின்ற இடங்களுக்காவது அந்த எம்.எம்.டி.ஏ. விலிருந்து அந்த காலி நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 10.55

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி திட்டச் சட்டம் 1971-ன் கீழ் மற்றும் வளர்ச்சி கட்டுப்பாடு விதிகளின் கீழ் மனைப் பரப்பு 3 ஆயிரம் சதுர மீட்டருக்கு அதிகமாக இருக்குமாயின் இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சின்ன, சின்ன வீட்டு மனைகளுக்கு இப்படிப்பட்ட நிலை இல்லை என்பதையும் இப்படி 75 சென்ட் அல்லது 3 ஆயிரம் சதுர மீட்டருக்கு அதிகமாக இருக்கின்ற நிலப்பரப்பிலி ருந்து கிடைக்கப்பெறுகின்ற இந்தக் கட்டணத்தை ஜெனரல் டெவலப்மென்ட் பண்டு என்று சொல்லக்கூடிய சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திலுள்ள பொது வளர்ச்சி நிதியில் இது வைக்கப்படுகிறது. சென்னை பெருநகர பகுதிக்குத் தேவைப்படுகின்ற திட்டங்களுக்கு, வளர்ச்சித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இந்தப் பணத்தை செலவழிக் கிறோம். அதேபோல உள்ளாட்சித் துறையிலும் பூங்காக் கள் அமைத்தல் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், வணிக வளாகங்கள் அமைத்தல் மற்றும் இடுகாடு மேம்பாடு, சாலைகள் மேம்பாடு போன்ற எல்லா வகையான வளர்ச்சி, மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இந்தக் கட்டணம் பயன் படுகின்ற காரணத்தால் விதிவிலக்கு அளிக்க வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 478 டாக்டர் அ. ஸ்ரீதரன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

478—

ஸ்டான்மோர் எஸ்டேட்டிற்குச் சொந்தமான நிலங்கள்

*9699—டாக்டர் அ. ஸ்ரீதரன்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை குன்றுகள் கிராமம், வால்பாறை நகரிய விளையாட்டு மைதானத்திற்கு அருகிலுள்ள ஸ்டான்மோர் எஸ்டேட்டிற்குச் சொந்தமான நிலத்தை கையகப்படுத்தி ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இதுபற்றி அப்பகுதி ஆதிதிராவிடர் மக்களிடமிருந்து மாவட்ட ஆட்சியருக்குக் கோரிக்கை எதுவும் வரப்பெற

வில்லை. இருப்பினும் சட்டமன்ற உறுப்பினரிடமிருந்து விவரங்கள் பெற்று மேல் நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஏழை எளிய மக்களுக்கு, வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய மக்களுக்கு, குறிப்பாக ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்கவேண்டும் என்ற ஒரு சீரிய திட்டத்தை, ஒரு புரட்சிகரமான திட்டத்தை ஏற்படுத்திப் புனித பாதையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நான் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு வால்பாறையைப் பற்றி நன்கு தெரியும். வால்பாறையில் இருக்க கூடிய ஆதி திராவிடர் மக்கள் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கக்கூடிய மக்கள். இலவச மனைப் பட்டா வழங்க வேண்டுமென்று ஒவ்வொரு முறையும் என்னிடத்தில் கோரிக்கை வைக்கிறார்கள். பல்வேறு தொகுதியில் ஆயிரம் வீட்டுமனைப் பட்டா, 500 வீட்டுமனைப் பட்டா என்று அறிவிப்பு வருகிற இந்த நேரத்தில் வால்பாறையில் இதுவரையில் ஒரு வீட்டுமனைப் பட்டா கூட இலவசமாக அங்குள்ள ஆதி திராவிடர் மக்களுக்கு வழங்கப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்கள் கனிவோடு பரிசீலனைச் செய்து காலதாமதமின்றி அங்குள்ள ஆதிதிராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 500 பேருக்கு வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து தகவல் வந்திருக்கிறது. அந்தத் தகவலை இந்த ஆண்டே பரிசீலித்து மனைப்பட்டா வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த சட்டமன்றக் கூட்டத்தின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கோரிக்கையைக் கொடுத்தேன். தமிழக முதலமைச்சர் அவர்கள் அலுவலகத்திலிருந்து சம்பந்தப்பட்ட துறைக்கு இந்தக் கோரிக்கை சம்பந்தமாக தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. நானும் இது தொடர்பாக மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பேசியிருக்கிறேன். நமது அரசுக்குச் சொந்தமான நிலங்கள் வால்பாறையில் இல்லாததால் இந்த





ஸ்டான்மோர் எஸ்டேட்டிற்குச் சொந்தமான நிலத்தைஆக்கிரமிப்புச் செய்து கம்பல்சரி குயூசேஷன் செய்ய ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் அரசுக்குப் பரிந்துரை செய்து இருப்பதாக தகவல் தெரிய வருகிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஆவன செய்து வீட்டுமனைப் பட்டா வழங்க உரிய நடவடிக்கைகளை எடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே அறிவித்திருப்பதைப் போல் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு அந்த 500 பேருக்கு மனைப் பட்டா வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 479, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

479—

பெரியகல்வராயன் மலையில் பழப்பண்ணை அமைத்தல்.

*9453—திரு. வெ. தமிழரசு :
மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியகல்வராயன் மலையில் மலைவாழ் மக்களுக்கு பயன் ஏற்படும் வகையில் பழப்பண்ணை அமைக்கப்படுமா —

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் தொகுதியில் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் ஒரு முறை கூட நமது இயக்கம் வெற்றி பெற இயலவில்லை. ஆனால் நம்முடைய இதய தெய்வத்தின்

அரசியல் வாரிசு, நம்முடைய கழகக் காவல் தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய காலத்தில்தான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் சட்டமன்ற உறுப்பினர் என்ற பாக்கியத்தை (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு இத்தொகுதியில் பெற்றுக் கொடுத்த இதய தெய்வத்தின் பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கை யாக்கி, நம்முடைய ஆனந்தமான, புன்னகை, மன்னனான, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் பரிசீலிப்பாரா எனப் பணிவோடு வேண்டுகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சின்ன கல்வராயன் மலையில் ஒரு மாபெரும் பழப் பண்ணை சீரிய முறையில் இயங்கி மலை வாழ் மக்களுக்கு நல்ல வேலை வாய்ப்பினையும், தொழில் நுட்பங்களையும் வழங்கி வருகிறது. அதேபோன்று, பெரிய கல்வராயன் மலையில், தோட்டக்கலை துறையின் மூலம் ஒரு பெரிய பழப்பண்ணை அமைக்க வேண்டுமானால் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இந்த அளவுக்குப் பெரிய அளவில் கல்வராயன் மலையில் நிலம் கிடைக்காததால், அங்கே ஒரு பழப்பண்ணை அமைக்கும் சாத்தியக் கூறு இல்லை என தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெரிய கல்வராயன் மலையில் பழப் பண்ணை ஏற்படுத்த போதிய சீதோஷ்ணநிலை உள்ளதாலும் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட இடத்தை சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும், ஏற்காடு சட்டமன்ற உறுப்பினரும், நானும் நேரில் சென்று தேர்வு செய்துள்ள அந்த இடத்தில் பழப் பண்ணை ஏற்படுத்த டி.டி.சி.—-இல் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே, இதை மீண்டும் பரிசீலித்து இந்த மலைவாழ் மக்கள் நலன் கருதி இதைச் செய்யவேண்டுமாறு பணிவோடு வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் ஏககர் இடம் கிடைக்கப் பெற்றவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 480. திரு. சி. சுவாமிநாதன், இருக்கையில் இல்லை, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு பிற்பட்டோர் நலம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

480—

வெட்டன்விடுதியில் புதிய பிற்பட்டோர் நலவிடுதி கட்டும் திட்டம்.

*11178—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதியில் உள்ள வெட்டன்விடுதிக்கு புதியதாக பிற்பட்டோர் நல விடுதி கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் நலம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம் வெட்டன்விடுதியில் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதி இல்லாததால் விடுதிக்கு கட்டிடம் கட்டுவது என்பது எழவில்லை.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதியில் உள்ள வெட்டன் விடுதியில் ஆதிதிராவிட நலத்துறையிலே ஒரு மாணவர் விடுதி இயங்கிக் கொண்டு இருக்கிறது. அங்கேயுள்ள உயர்நிலைப் பள்ளியில் 400 மாணவர்கள் படித்துக்கொண்டு இருக்கின்றார்கள். அந்த மாணவர் விடுதியில் 4 பேரைத்தான் பிற்பட்ட வகுப்பிலேயிருந்து சேர்க்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. வருகின்ற நிதி ஆண்டிலிருந்து அந்த மாணவர் விடுதியிலே 19 சதவீதம் சீட்டுகளை அதிகரித்து, பிற்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கித் தர அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடங்களிலே விடுதி கட்டப்பட வேண்டுமென்றால், கட்டிட உரிமையாளரால் வழக்கு தொடுத்து காலி செய்யச் சொன்னாலும், கட்டிட உரிமையாளர் காலி செய்ய வற்புறுத்தினாலும் மட்டுமே அந்த இடங்களிலே விடுதி கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

474—

**தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயப்படி ஊதியம் வழங்கல்.**

*11260—திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நிர்ணயப்படி ஊதியம் தராமல் இருப்பதாகப் புகார்கள் அரசுக்கு வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் அரசு நிர்ணயித்தபடி குறைந்தபட்ச கூலி தரப்படுகிறது. குறைந்தபட்ச கூலி தரப்படவில்லை என்ற புகார் எந்தத் தொழிற்சாலையிலிருந்தும் பெறப்படவில்லை.

(ஆ) எழாது.

475—

**எஸ். முதுகான பள்ளியில் கால்நடை மருந்தகம் கட்டுதல்.**

*16977—திரு. கே. ஏ. மனோகரன்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) ஓசூர் வட்டம் எஸ். முதுகான பள்ளியில் ஓர் கால்நடை மருந்தகம் கட்ட மக்களால் நிலம் வழங்கப்பட்டும் இதுநாள் வரையிலும் செயல்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?



மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒசூர் வட்டம் எஸ். முதுகானபள்ளியில் தற்போது கால்நடை கிளை நிலையம் இயங்கிவருகிறது. இக்கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரால் பரிசீலனை செய்யப்படுகிறது. கால்நடை மருந்தகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட மக்களால் நிலம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது செயல்படும் கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்திய பின்னர், மக்களால் வழங்கப்பட்ட நிலத்தில் நிரந்தரக் கட்டிடம் கட்ட, நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்**
**(இருபத்தைந்தாம் பட்டியல்)**

1—

**வண்ணார்பேட்டை நகராட்சி துவக்கப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.**

வினா எண். 9343—திரு. பே. தர்மலிங்கம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாளையங்கோட்டை நகராட்சி வண்ணாரப்பேட்டை நகராட்சி துவக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

2—

## ஆறகளூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட நடவடிக்கை.

வினா எண். 9483—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதி ஆறகளூர் அரசினர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) வரும் நிதியாண்டில் அரசால் பள்ளிக் கட்டிடங்கள் கட்ட ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீட்டிலிருந்து கட்டிடங்கள் கட்ட வேண்டிய பள்ளிகள் தேர்வு செய்யும் போது ஆறகளூர் அரசினர் மேல்நிலைப்பள்ளியும் நிதி வசதிக்கேற்ப பள்ளி கல்வி இயக்குநரால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

3—

## பைங்கால் உயர்நிலைப்பள்ளிக்கு தளவாடச் சாமான்கள்.

வினா எண். 14203—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் பைங்கால் உயர்நிலைப் பள்ளிக்கு 1992-93ல் தளவாடச் சாமான்கள் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் பைங்கால் உயர்நிலைப்பள்ளிக்கு 1992-93ல் தளவாடச் சாமான்கள் வழங்குவது சார்ந்து செயற்குறிப்பு ஏதுமில்லை. மேலும் புதிய தளவாடங்கள் வாங்குவதற்கு தடை ஆணை வழங்கப்பட்டுள்ளது.



4—

## களத்தூர், நடுவிக்கோட்டை உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தளவாடச் சாமான்கள்

வினா எண் 14206—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர், நடுவிக்கோட்டை உயர்நிலைப் பள்ளிகளுக்கு தளவாடச் சாமான்கள் 199[illegible]-93—ல் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர், நடுவிக்கோட்டை உயர்நிலைப் பள்ளிகளுக்கு தளவாடச் சாமான்கள் 1992-93—ம் ஆண்டிலிருந்து வழங்குவது சார்ந்த செயற்குறிப்பு ஏதுமில்லை. மேலும், புதிய தளவாடங்கள் வாங்குவதற்கு தடை ஆணை விதிக்கப்பட்டுள்ளது.

5—

## குருவிக்கரம்பை மேல்நிலைப் பள்ளிக்கு தளவாடச் சாமான்கள்.

வினா எண் 14208—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், குருவிக்கரம்பை மேல்நிலைப் பள்ளிக்கு தளவாடச் சாமான்கள் 1992-93—ல் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

செயற்குறிப்பு ஏதுமில்லை. கடுமையான நிதி நெருக்கடி காரணமாக புதிய தளவாடங்கள் வாங்க அரசு தடை விதித்துள்ளது.

6—

**வால்பாறையில் மருத்துவ ஆராய்ச்சி மையம்.**

வினா எண் 7824— டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை மருத்துவ ஆராய்ச்சி மையம் ஒன்றை மாநில அரசு மூலமாக அல்லது மைய அரசின் உதவியுடன் ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

மாநில அரசு மருத்துவ ஆராய்ச்சி மையம் புதியதாக தொடங்க எந்தவொரு உத்தேசமும் தற்போது இல்லை.

7—

**சென்னை முதலிய தலைமை மருத்துவமனைகளில் குடிநீர் வசதி.**

வினா எண் 8665— திரு எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை, மதுரை, கோவை, திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை, அரசு தலைமை மருத்துவமனைகளில் போதுமான அளவு குடிநீர் கிடைக்காத நிலை, அடிப்படை சுகாதார வசதிகள் போதுமானதாக இல்லாத நிலை நீடிப்பதைத் தவிர்க்க சிறப்புத் திட்டம் செயல்படுத்த அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

சென்னை பெருநகர் குடிநீர் வாரியத்திலிருந்து கிடைக்கும் தண்ணீர் தற்போது போதுமானதாக இல்லை. ஆகவே, கிணற்று நீரை சுத்தம் செய்தும், மெட்ரோ தண்ணீர் வாரி மூலம் வாங்கியும் சென்னையில் மருத்துவமனைகளில் தேவையான நீர் உபயோகிக்கப்படுகின்றது. வை மாவட்-



டத்திலுள்ள திருப்பூர் அரசு மருத்துவமனையில் ஆழ்துளை கிணறுகள் மூலம் தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மதுரை, திருச்சி மற்றும் புதுக்கோட்டை போன்ற இடங்களில் குடிநீர் பிரச்சனையைச் சமாளிப்பதற்கான சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தஞ்சை மருத்துவமனையில் குடிநீர் பற்றாக்குறை இல்லை. இம் மருத்துவ மனைகளில் அடிப்படை சுகாதார வசதிகள் செய்து தரப்பட்டு உள்ளன. மேலும், சிறப்பு சுகாதார வசதிகள் செய்து தருவது குறித்து அரசின் நிதி நிலைமையை பரிசீலித்து செயல்படுத்த உள்ளது.

8—

**பழைய ஆயக்குடி அரசு மருத்துவமனைக்கு இரவுக் காவலர்.**

வினா எண் 9680—திரு. ஆர். சுப்புரத்தினம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி வட்டம், பழைய ஆயக்குடி அரசு மருத்துவமனைக்கு இரவுக்காவலர் யாரும் தற்சமயம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் இரவுக்காவலர் நியமனம் செய்ய ஆவன செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பழைய ஆயக்குடி மருத்துவமனைக்கு இரவுக்காவலர் பணியிடம் ஒப்பளிக்கப்படவில்லை. இருந்த போதிலும் மருத்துவமனை ஊழியர் ஒருவரை இரவில் காவலர் பணி செய்ய பணிக்கப்பட்டு காவலர் பணி நிறைவேற்றப் படுகிறது.

9—

**திருத்துறைப்பூண்டி அரசுமருத்துவமனையில் படுக்கை வசதி அதிகப்படுத்தல்.**

வினா எண் 14185—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையில் படுக்கை வசதியை அதிகப்படுத்திக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

10—

போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வீட்டுமனை.

வினா எண் 4479—திரு. செ.து. வரதராசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு வீட்டுமனை வழங்கும் திட்டம் அமலில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த போக்குவரத்துக்கழகங்களில் எத்தனைபேர் இந்த நிதியாண்டில் பயன் பெறுவர்?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாட்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் உள்ளிட்ட 16 போக்குவரத்துக் கழகங்களிலும் இதுவரையிலும் குடியிருப்புத் திட்டத்தின் மூலம் பயன் பெற்றோர் எண்ணிக்கை 4,227. தற்பொழுது இந்நிதி ஆண்டில் இதன் மூலம் பயன்பெறப் போவோர் எண்ணிக்கை 1,311. மேலும், போக்குரவத்துக் கழக தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து தர வேண்டுமென்ற அடிப்படையில் சுழல் நிதியொன்றை உருவாக்கி அதன் மூலம் அவர்களுக்கு மனை வழங்கும் திட்டமொன்றுக்கு அனுமதி அளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இது பற்றிய விதி முறைகள் ஆய்வில் உள்ளன.



11—

மாட்டு வண்டிகளில் சிவப்பு விளக்குகள் பொருத்துதல்.

வினா எண். 8050—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு இரவு நேரங்களில் வரும் மாட்டு வண்டிகளுக்கு விபத்துக்கள் நேராவண்ணம் தடுக்க அந்த வண்டிகளில் பின்புறம் சிவப்பு விளக்குகள் (DANGER SIGNAL) கண்டிப்பாகப் பொருத்தப்பட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆணையாளர்கள் மாட்டு வண்டிகளுக்கு விபத்துக்கள் நேராவண்ணம் அவ்வண்டிகளின் பின்புறம் சிவப்பு விளக்குகள் பொருத்த சீரிய முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். கடலூர், விழுப்புரம் ஆகிய பகுதிகளில் தந்தை பெரியார் போக்குவரத்து கழகம், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். கிழக்கு மாவட்டத்தில் யுனைடெட் இந்தியா நிறுவனம், தஞ்சாவூர், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டங்களில் சோழன் போக்குவரத்துக் கழகம், புதுக்கோட்டையில் மருதுபாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரையில் பாண்டியன் போக்குரவத்துக் கழகமும் மற்ற மாவட்டங்களில் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மாட்டு வண்டிகளின் பின்புறம் சிவப்பு விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

12—

நேசமணி போக்குவரத்துக் கழகம் பேருந்து நிறுத்தம், பேருந்து நீட்டிப்பு ஆணை நிறைவேற்றுதல்,

வினா எண். 8417—திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் நேசமணி போக்குவரத்துக்கழகம் பொது மக்கள் நன்மைக்காகப் பேருந்து நிறுத்தங்கள் பேருந்து நீட்டிப்பு என பல உத்தரவுகள் பிறப்பித்தும் அவை நிறைவேற்றப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றை நிறைவேற்ற அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்தில் பொது மக்கள் நலனுக்காக ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட பேருந்து நிறுத்தம் மற்றும் பேருந்து நீட்டிப்பு போன்றவை முழுமையாகச் செயலாக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து ஆய்வாளர்கள் மூலம், செயல்முறைகள் கண்காணிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்டு வருகிறது.

13—

தஞ்சை மண்டலப் போக்குவரத்து அலுவலகத்திற்குக் கட்டிடம்.

வினா எண். 8482—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை நகரில் மண்டலப் போக்குவரத்துத் துணை அலுவலகத்திற்கான சொந்தக் கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டும், இன்னும் கட்டிடம் கட்டும் பணி மேற்கொள்ளப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) தஞ்சாவூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டிடம் கட்ட அனுமதி தரப்பட்டுள்ளது. இதன் பொருட்டு முதல் கட்டமாக ரூ. 7.00 இலட்சம் 1992-93இல் அரசு அனுமதியளித்துள்ளது. இக்கட்டிட வேலையை இந்த நிதியாண்டிலேயே தொடங்குமாறு தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.



14—

மல்லிப்பட்டினத்தை துறைமுகமாக்குதல்.

வினா எண். 12515—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி மல்லிப்பட்டினத்தை துறைமுகமாக மாற்ற மத்திய அரசினை மாநில அரசு வற்புறுத்துமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் போக்குவரத்துத்துறை அமைச்சர்:

இல்லை.

15—

"சுபாபுல்" கூடுதலாகப் பயிரிடுதல்.

வினா எண். 8644—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்வேறு வகையில் பயன்படக்கூடிய "சுபாபுல்" என்ற செடியை காட்டிலாகா மூலம் கூடுதலான அளவு பயிரிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் போக்குவரத்துத்துறை அமைச்சர்:

இதுவரை 4,000 எக்டர் பரப்பில், சுபாபுல் உள்பட இதர தீவனப்புற்கள், சீடா உதவியுடன் செயல்படுத்தப்படும் சமூகக் காடுகள் திட்டத்தின் கீழ் வளர்க்கப்பட்டுள்ளன. சுபாபுல் உட்பட இதர மர வகைகளும் உலக வங்கியுடன் செயல்படுத்தப்படும் வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இந்த நிதியாண்டில் சுமார் 700 எக்டேர் அளவில் வளர்க்கப்படுகிறது.

16—

செட்டி குளத்தை மராமத்து செய்தல்.

வினா எண். 2789—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் மழவேனிற்காட்டில் உள்ள செட்டிகுளத்தை புல்டோசர் வைத்து மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

ஐரோப்பிய நிதி உதவியுடன் தற்போது நவீனப்படுத்தப் படும் ஏரிகளின் பயன்கள் குறித்து திட்டம் மற்றும் வளர்ச் சித்துறையின் பரிசீலனையில் உள்ளது. இப்பரிசீலனைக்குப் பின் அத்துறையில் பரிந்துரையின்படி காவிரி மேம்பாட்டுத் திட்ட ஏரிகளை நவீனப்படுத்த தயாரித்த மதிப்பீடு மறு பரிசீலனை செய்யப்படும். அதற்குப்பின் மேற்படி குளம் மராமத்து செய்யப்படும்.

17—

ராஜாமடம் ஊராட்சி குளங்களை மராமத்து செய்தல்.

வினா எண் 2864—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை-யளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் ராஜாமடம் ஊராட்சியை சேர்ந்த கீழத் தோட்டம், கீழப் புறாக்குளம், மேலப்புறாக்குளம், புளியங்குட்டை ஆகிய குளங்களை புல்டோசர் வைத்து மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

காவிரி டெல்டாவிலுள்ள பாசன அமைப்புகளை ஒருங் கிணைந்த வகையில் மேம்பாடு செய்வதற்காக காவிரி கழிமுக பாசன ஆணைக்குழு ( CADRA ) ஒன்று ஏற்படுத்தலா மென தமிழ்நாடு அரசு கருதுகிறது. காவிரி நீரை சிறந்த முறையில் பயன்படுத்தும் இத்திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததால் இத்திட்டத்தை ஒரு மத்திய அரசு திட்டமாக செயலாக்கலாமெனவும் அரசு கருதி ரூபாய் 952 கோடி அளவுக்கு தேசிய நீர் மேலாண்மைத் திட்டம். பண்ணை மேம்பாட்டுத் திட்டம் முதலியவை தொடர்பான செயற் குறிப்புகளை மத்திய அரசின் எட்டாவது திட்டத்தில் சேர்ப் பது பற்றி பரிசீலிப்பதற்கு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப் படுகிறது.

18—

பருப்பட்டினம் ஊராட்சி குளத்தை பராமரித்தல்.

வினா எண் 6621—திரு. ஆர். சிங்காரம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

ஐரோப்பிய நிதி உதவியுடன் தற்போது நவீனப் படுத்தப் படும் ஏரிகளின் பயனகள குறித்து தட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் பரிசீலனையில் உள்ளது. இப்பரிசீலனைக்குப்பின் அத் துறையின் பரிந்துரையின்படி காவிரி மேம்பாட்டுத்திட்ட ஏரி களை நவீனப்படுத்தத் தயாரித்த மதிப்பீடு மறுபரிசீலனை செய் யப்படும். அப்போது மேற்காணும் குளம் செப்பனிடப்படும்.

[1993 ஏப்ரல் 26

19—

வலையன்வயல் ஏரியை பராமரித்தல்.

வினா எண். 6632— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம்; சேதுபாவாசத்திரம் ஒன்றியம் பெருமகளூர் நகரம். வலையன்வயலில் உள்ள கீழ ஏரியையும் மேல ஏரியையும் மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.

20—

பெரியகத்திக்கோட்டை ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 6727— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் மதுக்கூர் ஊராட்சி பெரியகத்திக்கோட்டையில் உள்ள பெரிய ஏரியைத் தூர்வாரி மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.



1993 ஏப்ரல் 26]

21—

பாப்பாங்கன்னி ஆற்றின் குறுக்கே சிறு அணை.

வினா எண் 6791— திரு ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் இரண்டாம் புலிக்காட்டில் உள்ள பாப்பாங்கன்னி ஆற்றின் குறுக்கே சிறு அணைக்கட்டி மல்லிப்பட்டினம்; இரண்டாம் புலிக்காடு மற்றும் கடலோரப்பகுதி விவசாயிகளுக்கு பாசன வசதி செய்து கொடுக்க எடுக்கப்பட்ட அரசு நடவடிக்கைகளைத் துரிதப் படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இரண்டாம் புலிக்காட்டில் உள்ள பாப்பாங்கன்னி ஆற்றின் குறுக்கே சிறு அணை கட்டும் திட்டத்திற்காக ரூ. 38.65 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒத்திசைவு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

22—

மருதங்கா ஏரியைப் பராமரித்தல்.

வினா எண். 6974— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஆண்டிக்காடு ஊராட்சியைச் சேர்ந்த மருதங்காவயலில் சர்வே. 252 மருதங்காவயல் ஏரியை புல்டோசர் வைத்து மராமத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

[1993 ஏப்ரல் 26

23—

## ஆண்டிகுளம் சட்டரஸ் உயர்த்திக் கட்டுதல்.

வினா எண் 6990—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஆண்டிவயலில் சர்வே எண். 1-ல் 6, ஆண்டிகுளத்தில் 7 மடையில் 1 மடைதான் வேலை செய்வதால் சட்டரஸ் 2 அடி உயர்த்தி கட்டி மற்ற 6 மடைகளை இயங்கவைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

24—

## வலையன் குளம் ஏரியைப் பராமரித்தல்.

வினா எண் 6991—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சின்ன ஆவிடையார்கோவில் வலையன்குளம் ஏரியை புல்டோசர் வைத்து தூர் எடுத்தும், மதகுகளை புதியதாக மாற்றியும், புலியடி வாய்க்காலை தூர் எடுக்கவும் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.



1993 ஏப்ரல் 26]

25—

## ஆனைகுளம் ஏரியை பராமரித்தல்.

வினா எண் 7022—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கொன்றைக் காட்டில் உள்ள ஆனைகுளத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி, மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

இல்லை.

26—

## கழனிவாசல் ஏரியை பராமரித்தல்.

வினா எண் 7066—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனி வாசல் ஏரியை ஆழப்படுத்தி, மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

இல்லை.

27—

## மேட்டூர் அணைக்கும் கல்லணைக்கும் இடையே ஓர் அணை.

வினா எண் 8426—திரு. ஆர். பி. பரமசிவம்:—மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

[1993 ஏப்ரல் 26

(அ) மேட்டூர் அணை மழைக்காலங்களில் நிரம்பும்போது உபரி நீரை தேக்கி வைக்க மேட்டூர் அணைக்கும் கல்லணைக்கும் இடையே ஒரு அணை ஏற்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

இல்லை, மேட்டூர் அணைக்கும், கல்லணைக்கும் இடையே காவிரி ஆற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைத்தால் பாசன நிலங்கள் மற்றும் சுற்றியுள்ள கிராமங்கள் பெரும் அளவில் பாதிக்கக் கூடிய அளவில் நில அமைப்பு உள்ளது.

28 —

குருக்கள் குளத்தைப் பராமரித்தல்.

வினா எண் 13735—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் குருக்கள் குளத்தை மராமத்து செய்து மதகுகளை செப்பனிட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏரியில் உள்ள இரண்டு மதகுகளும் நல்ல நிலையில் உள்ளன. வரும் அடைப்புக் காலத்தில் நிதி நிலைக்கேற்ப ஏரியில் மராமத்து பணி செய்யப்படும்.

29 —

ஆண்டிக்குளத்தைப் பராமரித்தல்.

வினா எண் 13737—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—



1993 ஏப்ரல் 26]

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சேதுபாவாசத்திரம் ஆண்டிகுளத்தை மராமத்து செய்து மதகுகளை செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏரியில் உள்ள இரண்டு மதகுகளும் நல்ல நிலையில் உள்ளன. 1992 நவம்பரில் பெருமழையால் கரைக்கு ஏற்பட்ட சேதம் வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 5000 மதிப்பீட்டில் சீரமைக்கப்பட்டுள்ளது. ஏரி பொதுவாக நல்ல நிலையில் உள்ளது.

30—

துறையூர் காலனி வீடுகளைப் புதுப்பித்தல்.

வினா எண் 3029— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், துறையூர் ஆதி திராவிடர் தெருவில் இடிந்துபோன, பழுதுபட்ட காலனி வீடுகளை புதுப்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மரக்காவலசை ஊராட்சியைச் சேர்ந்த துறையூர் ஆதி திராவிடர் தெருவில் 1986—87 ஆம் ஆண்டில் 20 ஆதிதிராவிடர்களுக்கு ஓட்டு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளாக பயனாளிகள் வீடுகளை முறையாக பராமரிப்பு செய்யாததால் கடந்த மாதங்களில் பெய்த மழையின் காரணமாக, வீடுகள் பழுதடைந்துள்ளன. பழுதடைந்த வீடுகளை பழுது பார்க்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

31—

## தச்சக்காட்டில் தொகுப்பு வீடுகள்.

வினா எண் 4109— செல்வி கோ. மல்லிகா: :மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தச்சக்காடு காலனி மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தச்சக்காடு ஊராட்சியில் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 1986–87 ஆம் ஆண்டு 30 வீடுகள் கட்டப்பட்டுள்ளது. மேலும் வீடுகளே கட்டப்படாத கிராமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்பதால் தச்சக்காடு கிராமத்திற்கு தொகுப்பு வீடுகள் கட்ட 1992–93 ஆம் ஆண்டில் வாய்ப்பு இல்லை.

32—

## நகரியங்களில் அலுவலர் உறுப்பினர் புதிதாக நியமித்தல்.

வினா எண் 4602—திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு உள்ளாட்சித் து-ற அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நகரியங்களில் அரசினால் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசுக்கு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், புதிய உறுப்பினர்கள் எப்போது தேர்வு செய்யப்படுவார்கள் ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

14–12–1992 தேதியிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை எண்கள், 314, 315, 316, 317, 318, 319 மற்றும் 320-ல் முறையே கொடைக்கானல், ஆவடி, குற்றாலம், மாதாவரம், மேட்டூர், பவானிசாகர் மற்றும் கத்திவாக்கம் நகரியங்களில் அலுவலர் உறுப்பினர்கள் மற்றும் அலுவல் சார்பற்ற உறுப்பினர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

33—

## புதுப்பட்டி குளத்தை ஆழப்படுத்துதல்.

வினா எண் 6358—திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கந்தர்வக்கோட்டை ஒன்றியத்தில், புதுப்பட்டி கிராமத்தின் குளத்தை ஆழப்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள புதுப்பட்டி என்ற கிராமத்தில் சிறுபாசன குளம் ஏதும் இல்லை. புதுப்பட்டியைச் சேர்ந்த மல்லியநத்தம் என்ற குக்கிராமத்தில் கரம்பை ஏரி என்ற குளம் 15.15 (ஆயக்கட்டு) ஏக்கரில் உள்ளது.

இதேபோன்று புதுப்பட்டியை சேர்ந்த வேம்பன்பட்டியில் உடையார்குளம் உள்ளது. இதன் ஆயக்கட்டு 32.20 ஏக்கர் ஆகும்.

மேற்படி இரண்டு குளங்களும் 1992–93 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு கிடைப்பதை பொறுத்து சிறுபாசனத்திட்ட சுழல் முறையில் மராமத்து செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 26

34—

## இரண்டாம் புலிக்காட்டில் வீடுகள் கட்டுதல்.

வினா எண் 6792 - திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், இரண்டாம் புலிக்காடு ஆதி திராவிடர்களுக்கு மேலும் 20 வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இரண்டாம் புலிக்காடு கிராமத்தில் 63 ஆதிதிராவிடர் குடும்பங்கள் உள்ளன. இதில் 50 குடும்பங்களுக்கு தாட்கோ திட்டத்தில் ஏற்கெனவே வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 13 குடும்பங்களுக்கு சொந்த வீட்டு மனைப் பட்டா இல்லை. வேறு புறம்போக்கு நிலங்களும் கிடையாது. சொந்த வீட்டுமனை இல்லாதவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசால் இயலாது.

35—

## ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் மோட்டார்.

வினா எண் 7035—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கிழக்கு ஆதி திராவிடர்களின் ஜீவன்தாரா கிணறுகளுக்கு கடனில் மின் மோட்டாரும், மின் இணைப்பும் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1987–88ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வரும். இத்திட்டத்தின் கீழ் ஆதி திராவிடர்களுக்கு கடனில் மின் மோட்டாரும், மின் இணைப்பும் கொடுக்கப்பட்டு வருகின்றன. வங்கிகளில் கடன் வழங்கிய நபர்களுக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட வங்கிகள் மின் மோட்டார் வாங்கவும், மின் இணைப்பு கொடுக்கவும் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு கடன் வழங்கி வருகிறது. இதர நபர்களுக்கு கடன் வழங்க செயற்குறிப்பு ஏதுமில்லை.



1993 ஏப்ரல் 26]

36—

## வாடிக்காடு காலனி வீடுகளை மராமத்து செய்தல்.

வினா எண் 7250—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனல்வாசல் ஊராட்சி வாடிக்காடு ஆதி திராவிடர்களின் காலனி வீடுகளை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

1986—87-ல் ''தாட்கோ'' மூலம் 12 வீடுகள் கட்ட ஆரம்பித்து முழுமை பெறாமல் உள்ளன. இது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் வீடுகட்டும் பணி பாதியில் தடைப்பட்டுள்ளது. இவ்வீடுகளை முழுமையாக கட்டி முடிக்க வழக்கு முடிவு தெரிந்த பின்னர் ''தாட்கோ'' அலுவலகம் மூலமாக செயல்படுத்த இயலும்.

37—

## கழனிவாசலில் தொகுப்பு வீடுகள்.

வினா எண் 7415—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழனிவாசல் ஆதி திராவிடர்களுக்கு மேலும் 10 தொகுப்பு வீடுகளை கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கழனிவாசல் ஆதி திராவிடர்களுக்கு இதுவரை 20 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மேலும் 10 வீடுகள் கட்டிக் கொடுக்க தற்போது செயற் குறிப்பு ஏதுமில்லை.

38—

## நம்பிவயலில் தொகுப்பு வீடுகள்.

வினா எண் 11491— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், நம்பிவயல் ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் 1992— 93-ல் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1990–91 ஆம் ஆண்டில் நம்பிவயல் ஊராட்சி ஆதி திராவிடர்களுக்கு ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் 20 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 1992— 93-ல் தொகுப்பு வீடுகள் கட்ட செயற்குறிப்பு ஏதுமில்லை.

39—

## கழுகுப்புலிக்காட்டில் தொகுப்பு வீடுகள்.

வினா எண் 12047— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், கழுகுப்புலிக்காடு ஆதி திராவிடர்களுக்கு 1992-93-ல் மேலும் 20 காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கழுகுப்புலிக்காடு ஊராட்சியில் 1987— 88 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின் கீழ் 20 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நடப்பு நிதியாண்டில் மேலும் தொகுப்பு வீடுகள் கட்ட செயற்குறிப்பு ஏதுமில்லை.



40—

## அணைக்காட்டில் தொகுப்பு வீடுகள்

வினா எண் 12372— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம் அணைக்காடு ஆதி திராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

அணைக்காடு ஆதி திராவிடர்களுக்கு இதுவரை 1986–87-ல் 20 வீடுகளும் 1991–92-ல் 10 வீடுகளும், ஆக மொத்தம் 30 வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன. 1991— 92-ல் வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதால், 1992–93 ஆம் ஆண்டில் மேலும் வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

41—

## சொக்கநாதபுரத்தில் வீடு கட்டுதல்.

வினா எண். 12609— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சொக்கநாதபுரம் வீடற்ற ஆதி திராவிட மக்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992–93 ஆம் ஆண்டில் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சொக்கநாதபுரம் கிராமத்தில் 1992–93 நிதியாண்டில் வீடுகள் கட்டிக் கொடுக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

[1993 ஏப்ரல் 26

42—

## எல்லைக்குடியில் தொகுப்பு வீடுகள்.

வினா எண் 12760— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஊராட்சி ஒன்றியம், எல்லைக்குடி ஆதி திராவிடர் காலனிக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

மேல்புவனகிரி ஊராட்சி ஒன்றியம், எல்லைக்குடி ஆதி திராவிடர் காலனிக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர 1992–93 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தில் சேர்க்கப் பட்டுள்ளது.

43—

## காயாவூரை பேராவூரணி ஒன்றியத்தில் இணைத்தல்.

வினா எண் 14035— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம், காயாவூர் ஊராட்சியைப் பிரித்து பேராவூரணி ஒன்றியத்தில் இணைக்க 1992–93ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியத்திலுள்ள, காயாவூர் ஊராட்சியைப் பிரித்து பேராவூரணி ஒன்றியத்தில் இணைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் தற்போது இல்லை.



1993 ஏப்ரல் 26]

44—

## கூட்டுறவுச் சங்கத் தேர்தல்களில் வாக்களிக்கும் உரிமை.

வினா எண் 11537— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமக் கூட்டுறவுச் சங்கங்களில் தவணை கடந்து கட்டாதவர்களுக்கும், கிராமக் கூட்டுறவு பால் வழங்கும் சங்கங்களில் உள்ளவர்களுக்கும் நிலுவைகள் இருந்தாலும் அவர்களுக்கும் தேர்தலில் வாக்களிக்கும் உரிமை அளிக்கபபடுவார்களா ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

1988 ஆம் வருட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் விதி எண் 38-ன்படி, ஒரு கூட்டுறவுச் சங்க உறுப்பினர் வாக்குப்பதிவுக்கு முந்தைய முப்பதாவது நாளில், ஏதாவது ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு தவணை கடந்து கடன் அல்லது முன்பணம் கட்டவேண்டிய பாக்கிதாரராக இருந்து அந்த தவணையின் கெடுநாள் ( Due Days ) முடிந்து 3 மாதங்களுக்கு மேற்பட்டிருந்தால் வாக்களிக்க தகுதியற்றவர் ஆவார். மேலும் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள ஒரு உறுப்பினர் தேர்தலில் நிற்க அல்லது ஓட்டளிக்க தகுதி பெற மேற்கண்ட கூட்டுறவு சங்க விதிகளில் விதி 51ஏ-யினை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கென மாற்றி செயல்படுத்த அரசு ஆணையிட்டபடி தேர்தலுக்கு 30 நாட்களுக்குமுன் உள்ள ஓராண்டு காலத்தில் கூட்டுறவு சங்கத்திற்கு 120 நாட்கள் பால் வழங்கியிருக்க வேண்டும் அல்லது 300 லிட்டர் பால் வழங்கியிருக்க வேண்டும். இந்த விதிமுறைகளை மாற்றும் எண்ணம் இல்லை.

45—

## பழனி வட்டத்தின் மக்கள் தொகை.

வினா எண் 13850—திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1991 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி பழனி வட்டத்தின் மக்கள் தொகை எவ்வளவு ?

(ஆ) இதில் ஆதிதிராவிடர் இனத்தவர் எவவளவு பேர்கள் ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

(அ) 1991 ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி பழனி வட்டத்தின் மக்கள் தொகை 4,17,195 பேர்கள்.

(ஆ) இதில் ஆதிதிராவிட இனத்தவர் (ஷெட்யூல்ட் வகுப்பினர்) 96,084 பேர்.

46—

அத்திமூரில் கால்நடை மருந்தகம்.

வினா எண் 6177—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் அத்திமூரில் ஒரு கால்நடை மருந்தகம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பரிசீலிக்கப்படும்.?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர் பஞ்சாயத்து ஒன்றியத்தில் அத்திமூர் கிராமத்தில் 1991-92 ஆம் ஆண்டில் ஒரு கால்நடை மருந்தகம் திறக்க 31—3—1992 அன்று அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

47—

புதிய உயரின ஆடு இனத்தை உருவாக்குதல்.

வினா எண் 7870—திரு. ஆர். பி. பரமசிவம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சின்னசேலம் ஆட்டுப்பண்ணையில் ஏற்கனவே உள்ள தரமான ஆட்டு இனங்களை வைத்து புதியதாக ஒரு உயர்ந்த இனத்தை உருவாக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?



விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

48—

மாவட்டங்களில் ஆதரவற்றோர் இல்லம் ஏற்படுத்துதல்.

வினா எண் 11437—டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதரவற்றோர் இல்லம் ஏற்படுத்தி முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்ய அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூகநலத்துறை அமைச்சர் :

அரசு தன்னார்வு நிறுவனங்களின் மூலம் ஐந்து முதியோர் இல்லங்களைத் துவக்கி பராமரித்து வருகின்றது. இதன் மூலம் 200 முதியோர் பயன் பெறுகின்றனர். 1993-1994-ல் மேலும் ஐந்து இல்லங்கள் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலமும் முதியோர் இல்லங்கள் நடத்தப்படுகின்றன. கூடுதலாக முதியோர் இல்லங்கள் துவக்கப்பட, தன்னார்வு நிறுவனங்களுக்கு மைய அரசும், மாநில அரசும் ஊக்கமும் ஆதரவும் அளிக்கின்றன. புரட்சித் தலைவியின் ஆட்சியில் முதியோர் ஓய்வூதியத் திட்டத்தில் உள்ள குறைகளை நிவர்த்தி செய்யவும் மற்ற பொது மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யவும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஒரு துணை ஆட்சியர் பதவி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்படுத்தப் பட்டுள்ளது. எனினும் முதியோர் உதவித் தொகை திட்டத்தில் குறைகள் ஏதுவும் குறிப்பாகச் சுட்டிக் காட்டப் பட்டால் அவைகளை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

49—

## கல்பகனூர் ஆதிதிராவிடர் காலனி.

வினா எண் 1364—திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, கல்பகனூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் காலனி கட்டும் திட்டம் தொடர்பாக காலனி ஒதுக்கீடு செய்தது குறித்து நீதிமன்ற வழக்கில் உள்ளதால் அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. மு. ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

நீதிமன்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதால் நிலம் சுவாதீனம் எடுக்கப்பட்டு, இலவச வீட்டுமனைப்பட்டா வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

50—

## ஆதிதிராவிடர் காலனிக்குப் பாதை

வினா எண் 10475—டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரி தொகுதி, தேவூர் கிராமம், வெட்டப்பரப்பான் காடு, ஆதிதிராவிடர் காலனிக்குப் பாதை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

ஆம். தேவையான நிலத்தைக் கையகம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



## இருபத்தாறாம் பட்டியல்

1—

## Technician (Vocational) Apprentice திட்டத்தின் கீழ் பயிற்சிக்காக அனுப்பப்பட்டோர்

வினா எண் 10007—திரு. இரா. அப்பு நடேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1987 முதல் மத்திய அரசு செயல்படுத்தி வருகின்ற Technician (Vocational) Apprentice என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலிருந்து இதுவரை பயிற்சிக்காக அனுப்பப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை என்ன ?

(ஆ) மாவட்ட வாரியாக அனுப்பப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) ஒவ்வொரு பாட பிரிவிலும் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

(அ) 1987 முதல் மத்திய அரசு செயல்படுத்தி வருகின்ற [Technician (Vocational) Apprentice] என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிலிருந்து இதுவரை அதாவது 31—5—1992 வரை 1338 மாணவர்கள் பயிற்சிக்காக அனுப்பப்பட்டுள்ளனர்.

(ஆ) பயிற்சி பெறும் மாணவர்கள் விவரம் மாநில வாரியாக மட்டுமே நிர்வகிக்கப்படுகிறது.

(இ) ஒவ்வொரு பாட பிரிவிலும் தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையின் விவரங்கள் கீழ் வருமாறு :—

| Sl. No | Fields. | 1988-89 Boys | 1988-89 Girls | 1989-90 Boys | 1989-90 Girls |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | | (4) | |
| 1. | Accountancy & Auditing .. | 2 | 15 | 11 | 32 |
| 2 | Banking .. .. .. | .. | 1 | 10 | 12 |
| 3. | Marketing and Salesmanship. | .. | .. | .. | .. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | Office Secretaryship/Stenography | 3 | 12 | 19 | 51 |
| 5 | Dairying .. .. .. | 3 | .. | .. | .. |
| 6 | Medical Laboratory Technology Assistants | 2 | .. | 2 | — |
| 7 | Nursing .. .. .. | .. | 34 | .. | 13 |
| 8 | Child care and Nutrition .. | .. | .. | .. | 3 |
| 9 | Crop Cultivation/Production .. | .. | .. | 2 | .. |
| 10. | Mechanical Servicing .. .. | .. | .. | .. | .. |
| | **Total** .. | 10 | 62 | 44 | 111 |

| Sl. No. | Fields. | 1990-91. | | 1991-92. (31—5—1992) | |
|---|---|---|---|---|---|
| | | *Boys* | *Girls* | *Boys* | *Girls* |
| (1) | (2) | (7) | (8) | (9) | (10) |
| 1 | Accountancy and Auditing .. | 85 | 86 | 95 | 160 |
| 2 | Banking .. .. .. | 16 | 27 | 17 | 40 |
| 3. | Marketing and Salesmanship.. | 1 | .. | .. | 1 |
| 4 | Office Secretaryship/Stenography | 51 | 96 | 52 | 129 |
| 5 | Dairying .. .. .. | .. | .. | 1 | .. |
| 6 | Medical Laboratory Technology Assistants | 7 | 6 | 14 | 17 |
| 7. | Nursing. .. .. .. | .. | 71 | .. | 130 |
| 8. | Child Care and Nutrition. .. | .. | 2 | .. | 3 |
| 9. | Crop Cultivation/Production. | .. | .. | 2 | . |
| 10. | Mechanical Servicing. .. | 2 | .. | .. | .. |
| | Total. .. | 162 | 288 | 181 | 480 |



2—

## கிளை நூலகங்கள் தொடங்குதல்

வினா எண் 13953—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி. ஆவணம். அம்மையாண்டி, களத்தூர், செருவாவிடுதி வடக்கு, மற்றும் தெற்கு, சித்துக்காடு ஆகிய இடங்களில் கிளை நூலகங்கள் 1992-93-ல் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை,

3—

## கிளை நூலகங்கள் தொடங்குதல்

வினா எண் 13959—திரு. ஆர், சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, குறிச்சி. நுறவிக்காடு. பூவலூர், வாட்டாத்திக்கோட்டை, சொக்கநாதபுரம், புக்கரம்பை ஆகிய இடங்களில் 1992-93-ல் கிளை நூலகங்கள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை,

4—

## கிளை நூலகங்கள் தொடங்குதல்.

வினா எண் 13975—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

[1993 ஏப்ரல் 26

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஊமத்தநாடு, வீரியங்கோட்டை, கழனிவாசல், பெருந்தலைக்காடு, விளங்குளம், செந்தலைப்பட்டினம் ஆகிய இடங்களில் 1992-93-ல் கிளை நூலகங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

5—

கிளை நூலகங்கள் தொடங்குதல்.

வினா எண் 13982—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், திருவத்தேவன், மணக்காடு, முதுகாடு, ரெட்டவயல், ஆண்டிக்காடு ஆகிய இடங்களில் 1992-93-ல் கிளை நூலகங்கள் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

அரசிடம் செயற்குறிப்பு எதுவுமில்லை.

6—

கீழ்க்கலங்கல் கிராம நூலகத்திற்கு கட்டிடம் கட்டும் திட்டம்

வினா எண் 14194—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள கீழ்க்கலங்கல் கிராமத்திலுள்ள கிளை நூலகத்திற்கு கட்டிடம் கட்டிக் கொடுக்க 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1993 ஏப்ரல் 26]

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியத்திலுள்ள கீழ்க்கலங்கல் கிராமத்தில் கிளை நூலகம் செயல்படவில்லை, பகுதிநேர நூலகம் மட்டுமே செயல்படுகிறது. பகுதி நேர நூலகங்களுக்கு நூலக ஆணைக்குழுவில் கட்டிடம் கட்டும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

7—

தனியார் மருத்துவக்கல்லூரிகளில் நன்கொடை வசூலிப்பதைத் தடுக்க நடவடிக்கை.

வினா எண் 3740-ஏ—திரு. கே. செல்வராஜ்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது நிறைய நன்கொடை வசூலிக்கப்படுவதைத் தடுத்து ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

தனியார் கல்லூரிகளில் நன்கொடை வசூலிப்பது சம்பந்தமாக உச்ச நீதிமன்றம் அண்மையில் வழங்கியுள்ள தீர்ப்பை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

8—

காரைக்குடி தொகுதியில் ஒரு மருத்துவக் கல்லூரி.

வினா எண் 4663—திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காரைக்குடி தொகுதியில் ஒரு மருத்துவக் கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

9—

**மருத்துவத் துறையிலிருந்து வருவாய் வருவதற்கு அரசு திட்டம்.**

வினா எண் 4979— டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) வருமானம் இல்லாத மருத்துவத் துறையில் இருந்து வருவாய் வருவதற்கு அரசு திட்டமிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ;

(அ) ஆம்.

(ஆ) அரசு மருத்துவமனைகளில் வசூலிக்கப்படும் நோயாளி வார்டில் தங்கும் செலவு, உணவுக் கட்டணம், அறுவை சிகிச்சைக் கட்டணம், ஆய்வக பரிசோதனைகள், ஊடுகதிர் படம் எடுப்பது ஆகியவற்றிற்கான கட்டணங்களை தற்போதுள்ள விலைவாசிக்கு ஏற்ப மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

10—

**ரெட்டியார்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்.**

வினா எண் 9337— திரு. பெ. தர்மலிங்கம் : மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —





(அ) பாளையங்கோட்டை தாலுக்கா, ரெட்டியார்பட்டியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அரசு நிலம் ஒதுக்கியும் இன்னும் கட்டிடம் கட்டப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) பாளையங்கோட்டை தாலுக்கா ரெட்டியார்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் தற்போது பஞ்சாயத்து யூனியனைச் சார்ந்த கட்டிடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்ட நிலம் மற்றும் நன்கொடை ரூ. 10,000/- இதுவரையில் செலுத்தப்படவில்லை. தற்போதுள்ள நிலம் கட்டிடம் கட்ட போதாது என்ற காரணத்தினால் 5 ஏக்கர் புறம்போக்கு நிலம் கையகப்படுத்த மாவட்ட ஆட்சியருக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. புறம்போக்கு நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னர் அரசின் நிதிநிலைக்கேற்ப கட்டிடம் கட்டும் செயற்குறிப்புகள் பரிசீலிக்கப்படும்.

11—

**பைங்காலில் சோழன் போக்குவரத்து நகர பேருந்து நிறுத்தம்.**

வினா எண் 12431— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் பைங்காலில் சோழன் நகரப் பேருந்து நிற்கவும் 1992-93ல் பேருந்து நிறுத்தம் ஏற்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

பேராவூரணி ஒன்றியம் பைங்காலில் சோழன் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் பயணிகளை ஏற்றி இறக்கிச் செல்கின்றன.

12—

**தஞ்சாவூரிலிருந்து பட்டுக்கோட்டை வழியாக பேராவூரணிக்கு நேரடி பேருந்து வசதி.**

வினா எண் 12436—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூரிலிருந்து பட்டுக்கோட்டை வழியாக பேராவூரணிக்கு நேரடி பேருந்து வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

தஞ்சாவூர்-பேராவூரணி வழி பட்டுக்கோட்டை தடத்தில் சோழன் போக்குவரத்துக் கழகப் பேருந்து ஒன்று நான்கு நடைகள் இயக்கப்படுகின்றன. தனியார் பேருந்துகள் 10 நடைகள் இயங்குகின்றன. தற்போது இயக்கப்படும் பேருந்துகளே போதுமானதாக உள்ளதால், கூடுதலாக தஞ்சாவூர்-பேராவூரணிப் பேருந்து இயக்க செயற்குறிப்பு ஏதும் இல்லை.

13—

**புதுக்கோட்டை-பெருமகளூர் வழி கிரமங்கலம் வழி தடத்தில் மீண்டும் பேருந்து இயக்குதல்.**

வினா எண் 13624—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

புதுக்கோட்டையிலிருந்து கிரமங்கலம் வழியாக பெருமகளூர் வரை சென்று கொண்டிருந்த பேருந்தை மீண்டும் இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர் :

புதுக்கோட்டை—பெருமகளூர் வழிகிரமங்கலம் வழி தடத்தின் நீளம் 73,3 கி.மீ.



புதுக்கோட்டை-பெருமகளூர் வழி கிரமங்கலம் வழித் தடத்தில் இயங்கிய பேருந்தில் பயணம் செய்த பயணிகள் விகிதாச்சாரம் குறைவாக இருந்ததால் நிறுத்தப்பட்டது. மேற்படி வழித்தடத்தில் மீண்டும் பேருந்து இயக்கிட தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

14—

**புதுக்கோட்டை பேராவூரணி (வழி) ஆவனம் வழித்தடத்தில் பேருந்து இயக்குதல்**

வினா எண் 13626—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

புதுக்கோட்டையிலிருந்து ஆவனம் வழியாகவும் கிரமங்கலம் வழியாகவும் பேராவூரணிக்கு பேருந்து இயக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் :

புதுக்கோட்டை-பேராவூரணி (வழி) ஆவனம் வழித் தடத்தின் நீளம் 49.4 கி.மீ. புதுக்கோட்டை-பேராவூரணி (வழி) கிரமங்கலம் வழித் தடத்தின் நீளம் 52.7 கி.மீ.

தற்போதுள்ள இவ்வழித்தடத்தில் 6 தனியார் பேருந்துகள் மொத்தம் 32 நடைகள் இயங்கி வருகின்றன.

புதுக்கோட்டை-பேராவூரணி வழி கிரமங்கலம் வழித் தடத்தில் நேரடிப் பேருந்து இல்லை. இவ்வழித்தடத்தில் பகுதி பகுதியாக இயங்கும் பேருந்து வசதி பின்வருமாறு உள்ளது.

| உரிமையாளரது பெயர். | வழித் தடம். | சப்செக்டார். | பேருந்து எண்ணிக்கை. | நடைகளின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| மருது பாண்டியன் போக்கு வரத்துக் கழகம் (நகரம்) | புதுக்கோட்டை—கொத்தமங்கலம் | புதுக்கோட்டை கொத்தமங்கலம் | 1 | 14 |
| தனியார் (நகரம்) | ,, | ,, | 1 | 14 |
| மருது பாண்டியர் போக்கு வரத்துக் கழகம் (நகரம்) | ஆலங்குடி—முனக்காடு/ மேற்பனைக்காடு | கொத்தமங்கலம் கீரமங்கலம் | 1 | 12 |
| சோழன் போக்குவரத்துக் கழகம் (நகரம்) | பேராவூரணி—கொத்தமங்கலம் | கீரமங்கலம் பேராவூரணி | 1 | 12 |

எனவே இரண்டு வழித்தடங்களிலும் பேருந்து வசதி இருப்பதால் மேலும் பேருந்துகள் இயக்கிட செயற்குறிப்பு ஏதும் இல்லை.



15—

**வானூர் தொகுதியில் சில சாலைகளை தார் சாலையாக மாற்ற நடவடிக்கை.**

வினா எண் 3757—திரு. எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

வானூர் தொகுதியில் வானூர் வட்டத்தில் இரும்பை, ஆப்பிரம்பட்டு, நெசல் சாலை, உப்புவேலூர் தலைகானி குப்பம் சாலை, பொம்பூர்-கோவைகேணி சாலை, உப்புவேலூர்-கிளப்பாக்கம் சாலை, கொண்டலாங்குப்பம் செங்கமேடு திருவக்கரை சாலை, ரெங்கநாதபுரம் (வழி) விநாயகபுரம், சட்டாரம் பாக்கம் சாலை ஆகிய சாலைகளை தார் சாலைகளாக மாற்ற அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

தற்போது திட்டம் ஏதும் இல்லை.

16—

**காவிரி ஆற்றில் தடுப்புச் சுவர் கட்டுதல்.**

வினா எண் 4195—திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதியைச் சேர்ந்த அரையபுரம், சேத்திரபாலபுரம், கடலங்குடி, வானதி ராஜபுரம் ஆகிய ஊர்கள் பயன்பெறும் வகையில் காவேரி ஆற்றில் தடுப்புச் சுவர் ( Bed Dam ) கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை —

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

17—

**'மெட்ராஸ் பிரஸ் கிளப்பிற்கு' 'டொமஸ்டிக் ரேட்' படி மின் கட்டணம் வசூலித்தல்.**

வினா எண் 8639 திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு நிலத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகளின் இடைப்பட்ட நேரத்தில் ஓய்வு எடுக்கவும் தங்களுக்குள் கலந்துரையாடவுமாக பத்திரிகையாளர் அமைத்துள்ள 'மெட்ராஸ் பிரஸ் கிளப்'-பிற்கு 'டொமஸ்டிக் ரேட்' படி மின் கட்டணம் வசூலிக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ் கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

'மெட்ராஸ் பிரஸ் கிளப்பிற்கு' 'டொமஸ்டிக் ரேட்' படி மின் கட்டணம் வசூலிக்கும் திட்டம் ஏதும் இல்லை.

18—

**மகாராஜா சமுத்திரம் காட்டாற்றில் நீரேற்று நிலையம் அமைத்தல்.**

வினா எண் 11943—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், சேண்டா கோட்டை அருகில் ஓடுகின்ற மகாராஜா சமுத்திரம் காட்டாற்றில் 1992-93-ல் நீரேற்று நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.



19—

**மாதந்தோறும் மின் கட்டணம் வசூலித்தல்.**

வினா எண் 12168—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தற்பொழுது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மின்சாரக் கட்டணம் வசூலிப்பதை மாற்றி மாதம் ஒரு முறை வசூலிக்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இருமாதத்திற்கு ஒரு முறை மின் கட்டணம் வசூலிக்கும் முறை 1—10—1987 முதல் மின் வாரியத்தில் நடைமுறையில் உள்ளது. இந்தத் திட்டம் செவ்வனே நடைபெற்று வருகிறது. ஆதலால் மாதந்தோறும் மின் கட்டணம் வசூலிக்கும் திட்டம் தற்பொழுது அரசின் செயற்குறிப்பில் இல்லை.

20—

**சென்னை அனல் மின் நிலையம்.**

வினா எண் 12169—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

சென்னை அனல் மின் நிலையம் எப்போது செயல்படுத்தப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

வட சென்னை அனல் மின் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் 1989 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டன. முதல் கட்டமாக ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறனுடைய 3 பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன. இத் திட்டத்தின் முதல் பிரிவு செப்டம்பர் 1993-லும், இரண்டாம் பிரிவு மார்ச் 1994-லும் மூன்றாம் பிரிவு செப்டம்பர் 1994-லும் இயக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 26

21—

நொய்யாலாற்று விவசாயிகளுக்கு விவசாய மின் இணைப்பு வழங்க நடவடிக்கை.

வினா எண் 12251— திருமதி கவிநிலவு தர்மராஜ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பரா —

நொய்யலாற்று பாசன விவசாயிகளுக்கு விவசாயம் செய்வதற்கு மின்சார இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

பெரியார் மாவட்டம், நொய்யலாற்றுப் பாசன விவசாயிகளுக்கு இயல்பான முன்னுரிமை அடிப்படையில் 30—9—1984 ஆம் தேதி வரை பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு அம் மாவட்ட இலக்கீட்டுக்கு ஏற்ப தற்பொழுது மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த ஆண்டு செயலிலுள்ள சிறப்பு முன்னுரிமை/நேரடி மற்றும் ஒரு கம்ப இணைப்பு அடிப்படையில் 30—6—1989 ஆம் தேதிவரை விண்ணப்பித்துள்ள தகுதியான விவசாயிகளுக்கும் தயார் நிலை வரிசைப்படி மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. இவை தவிர சுயநிதி திட்டத்தின் கீழ் ரூ. 25,000 அல்லது விஸ்தரிப்புப் பணிகளுக்கு ஆகும் செலவோ, இவற்றில் எது அதிகமோ அத்தொகையைச் செலுத்தும் விவசாய விண்ணப்பதாரர்களுக்கும் உடனடியாக மின் இணைப்பு வழங்கும் திட்டமும் இந்தப் பகுதியில் செயலில் உள்ளது.

ஆகவே, நொய்யலாற்றுப் பாசன விவசாயிகளுக்கு விவசாய மின் இணைப்பு வழங்கும் பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

22—

இடையாத்தி குளக்கரையை பலப்படுத்தி தூர்வாரி ஆழப்படுத்துதல்.

வினா எண் 12285— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —



1993 ஏப்ரல் 26]

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி குளக்கரையை 1992-93-ல் பலப்படுத்தி தூர் அள்ளி ஆழப்படுத்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

காவிரி டெல்டாவிலுள்ள பாசன அமைப்புகளை ஒருங்கிணைந்த வகையில் மேம்பாடு செய்வதற்காக காவிரி கழிமுக பாசன மேம்பாட்டு ஆணைக்குழு (CADRA) ஒன்று அமைக்கலாமென தமிழக அரசு கருதுகிறது. காவிரி நீரை நன்முறையில் பயன்படுத்த வகை செய்யும் இத்திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததால் இவ்வரசு இதனை ஒரு மத்திய அரசு திட்டமாக செயலாக்கலாமெனக் கருதி ரூ,952 கோடி அளவுக்கு தேசிய நீர் மேலாண்மை திட்டம், பண்ணை மேம்பாட்டுத் திட்டம் முதலியன தொடர்பான செயற் குறிப்புகளை மத்திய அரசின் எட்டாவது திட்டத்தில் சேர்ப்பது பற்றி பரிசீலிப்பதற்கு அவ்வரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

23—

பழனித் தொகுதியில் சாலைகள் சீரமைப்பு.

வினா எண். 12504— திரு. ஆ. சுப்புரத்தினம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பழனித் தொகுதியில் 1992—93 ஆம் நிதியாண்டில் சாலைகள் சீரமைப்பிற்காக அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) எந்தெந்த சாலைகளுக்கு எவ்வளவு அனுமதிக்கப்பட்டுள்ளது ?

(இ) தற்போது நடைபெற்று முடிந்துள்ள பணிகளின் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ரூ. 47.50 லட்சம்.

(ஆ) ரூ. 47.50 லட்சம் (21 சாலை வேலைகள்).

(இ) ரூ. 16,47,680 (12 பணிகள்).

24—

**நம்புவயலிலுள்ள ட்ரான்ஸ்பார்மரை மாற்றி புதிதாக அமைத்தல்.**

வினா எண். 13005— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருவோணம் ஒன்றியம் கா. உஞ்சிய விடுதிக்கு வழங்கப்படும் மின்சாரம் பற்றாக்குறையாக இருப்பதால் நம்பிவயலிலுள்ள ட்ரான்ஸ்பார்மரை மாற்றி புதிதாக அமைத்துத் தர 1992-93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

திருவோணம் ஒன்றியம், கா. உஞ்சிய விடுதிக்கு வழங்கப்படும் மின் அழுத்தம் சீராக அமையும் வகையில் நம்பிவயல்-V பகிர்மான மின் மாற்றியிலிருந்து புதிதாக மாற்று மின் பாதை அமைத்து மின்சாரம் வழங்குவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு மின் கம்பங்கள் நடப்பட்டு விட்டன. தொடர்ந்து பிற பணிகள் நடைபெற்று வருகின்றன. பணிகள் முடிவுற்றபின் இங்கு மின் அழுத்தம் சீராக இருக்கும்.

25—

**ஆவுடையானிக் கோட்டை பெரிய ஏரியை மராமத்து செய்தல்.**

வினா எண். 13282— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :



பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முதுகாடு ஊராட்சி ஆவுடையானிக்கோட்டை பெரிய ஏரியை 1992-93-ல் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித்துறை அமைச்சர் :

இல்லை.

26—

**மாயமான் குறிச்சியில் கால்வாயின் குறுக்கே பாலம் கட்டுதல்.**

வினா எண். 13672— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மாயமான் குறிச்சியில் கால்வாயின் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் 600 மீட்டர் நீளமுள்ள மாயமான் குறிச்சி ஊராட்சி சாலையில் கி.மீ. 0/1-ல் மானூரான் கால்வாயின் குறுக்கே கட்டப்படவேண்டும். இவ்விடத்தில் பாலம் கட்ட சுமார் ரூ. 20·00 லட்சம் தேவைப்படுகிறது. இந்த சாலை மாயமான் குறிச்சி ஊராட்சிக்குச் சொந்தமான தெருவாகும். 8 வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊராட்சி/ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பிலுள்ள சாலை மற்றும் பாலப்பணிகளை நெடுஞ்சாலைத் துறையில் பகுதி 2 திட்டத்தின் மூலம் மேம்பாடு செய்ய வழிவகை செய்யப்படவில்லை. எனவே இந்தப் பாலப் பணியினை நெடுஞ்சாலைத் துறையால் பகுதி 2 திட்டத்தில் எடுத்துச் செய்ய இயலாது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 20,00 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்ய இயலாது.

27—

**நஞ்சாக்குளம் சாலையின் குறுக்கே பாலம் கட்டுதல்.**

வினா எண். 13678—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் வட்டாரத்தில் நாஞ்சான் குளம் என்ற ஊருக்கு வருகின்ற சாலையின் குறுக்கே ஒரு பாலம் கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இச்சாலையில் கி.மீ. 3/8-ல் உள்ள தாம்போதிக்கு பதிலாக ஓர் உயர்மட்ட பாலம் கட்ட வேண்டுமெனில் சுமார் 5.00 லட்சம் தேவைப்படுகிறது. இப்பாலப் பணி அரசு அனுமதி வழங்கப்பட்டுள்ள எந்த திட்டத்திலும் இடம் பெறவில்லை. திட்டப் பணிகளுக்கு ஆண்டுதோறும் மிகக் குறைந்த நிதியே ஒதுக்கப்படுவதால் இப்பாலப் பணியை அண்மை ஆண்டுகளில் பகுதி 2 திட்டத்தில் எடுத்துச் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை. இதனால் கி.மீ. 3/8-ல் உள்ள தாம்போகி சமீபத்தில் ரூ. 1.00 லட்சம் மதிப்பீட்டில் சீரமைப்பு செய்யப்பட்டு போக்குவரத்துக்கு குந்தகம் இல்லாமல் நடைபெற்று வருகின்றது.

28—

**தென்கலம் சாலையை தார்சாலையாக மாற்றுதல்.**

வினா எண். 13680—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்லிவேலி மாவட்டம், மானூர் ஒன்றியத்தில் உள்ள தென்கலம் சாலையானது தார் போடாமல் பழுதடைந்துள்ளதை பராமரிப்பது குறித்து அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலை கி.மீ. 0/0—2/0 துரை சாலையை புதுப்பிக்கவும் இச்சாலை கி.மீ. 4/2-ல் கிழவி ஓடையின் குறுக்கே மூழ்குபாலம் அமைக்கவும், 1992-93 ஆம் ஆண்டு தொழிற்சாலைப் பகுதிகளில் அமைந்துள்ள மோசமான அரசு சாலைப் பகுதிகளை சீர் செய்தல் திட்டத்தின் கீழ் ரூ. 10.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கீகரிக்கப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது. கி.மீ. 2/0—4/0 வரையுள்ள சாலைப் பகுதி பராமரிப்பு நிதியில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

29—

**விவசாய மின் மோட்டார்களுக்கு தற்போது வழங்கப்படும் முன்னுரிமை முறையை தளர்த்துதல்.**

வினா எண் 16288—திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாய மின் மோட்டார்களுக்கு தற்போது வழங்கப்படும் முன்னுரிமை முறையை தளர்த்தி 1989 வரை விண்ணப்பித்தவர்களுக்கு மோட்டாருக்கு மின் இணைப்பு கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

இல்லை.

30—

**புகையிலைப் பட்டியில் துலுக்ககுளத்திற்கு மதகு அமைத்து பராமரித்தல்.**

வினா எண். 6349—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, சானார்பட்டி ஒன்றியம். பழூர் ஊராட்சி புகையிலைப் பட்டியில் துலுக்ககுளம் என்ற தவிட்டுக் காரன் குளத்தில் நீர் வீணாவதை தடுக்க அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஊராட்சி ஒன்றியம், மடூர் ஊராட்சி புகையிலைப்பட்டியில் நுலுக்ககுளம் எ தலிட்டுக்காரன் குளத்தில் மதகு அமைக்க அரசுக்கு பரிந்துரை ஏதும் செய்யப்படவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

31—

மேலவிளாக்குடி மற்றும் கீழவிளாக்குடி கிராமங்களிலுள்ள ஆதிதிராவிடர்களுக்கு கூட்டுக்குடியிருப்பு கட்டிக்கொடுக்கும் திட்டம்.

வினா எண் 6382—திரு. சி. சுவாமிநாதன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை தொகுதி, கவிநாடு கிழக்கு பகுதிக்குட்பட்ட கீழவிளாக்குடி, மேலவிளாக்குடி போன்ற இடங்களில் ஆதி திராவிடர்களுக்குக் கூட்டுக்குடியிருப்பு கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) மேலவிளாக்குடி மற்றும் கீழவிளாக்குடி கிராமங்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கு 1985 ஆம் ஆண்டு வட்டாட்சியரால் அவரவர்கள் வசித்துவரும் வீடுகளுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, பட்டாக்கள் வரிசைக் கிரமமாக இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக அமைந்துள்ளது. தனி வட்டாட்சியரால் (ஆதி திராவிடர் நலம்) ஆர்ஜிதம் செய்யப்பட்ட இலவச மனைப்பட்டாக்கள் வழங்கினால் தொகுப்பு வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.



32—

வாடியக்காடு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 7345—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், புனல்வாசல் ஊராட்சி வாடியக்காடு ஆதி திராவிடர்களுக்கு காலனி வீடு மீதி ஆதிதிராவிடர்களுக்கு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

புனல்வாசல் ஊராட்சி வாடியக்காடு ஆதிதிராவிடர்களுக்கு தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் 20 வீடுகளும் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலம் 20 வீடுகளும் இதுவரை கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. தாட்கோ மூலம் கட்டப்பட்ட 4 வீட்டுமனை மீதான வழக்கு தொடர்பாக வீடு கட்டிக்கொடுப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக் இந்தக் கிராமத்தில் தற்போது தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க சாத்தியக் கூறு இல்லை.

33—

நவக்கொல்லைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 7275—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம் நவக்கொல்லைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கிடைக்காதவர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக்கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஒட்டன்காடு ஊராட்சியைச் சேர்ந்த நவக்கொல்லைக்காடு ஆதிதிராவிடர்களுக்கு 1988–89-ல் ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தில் 34 வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. மீதி உள்ளவர்களில் பட்டா உள்ளவர்களுக்கு நடப்பு நிதியாண்டில் வீடுகள் கட்டிக் கொடுக்க (ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில்) திட்ட அலுவலரின் பரிசீலனையில் உள்ளது.

34—

களத்தூர் ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 7289— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர்களுக்கு 100 காலனி வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

களத்தூர் ஊராட்சி, களத்தூர் கிழக்கு ஆதிதிராவிடர்களுக்கு காலனி தெற்கு 86, வடக்கு 44 வீடுகள் கொண்டது. 1987–88-ல் வடக்கில் 20 வீடுகளும் 1989–90-ல் தெற்கில் 20 வீடுகளும் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. பாக்கியுள்ள ஆதி திராவிடர்களில் பட்டாக்கள் உள்ளவர்களில் மேலும் 20 வீடுகள் நடப்பு நிதியாண்டில் கட்டிக் கொடுக்க பரிசீலனையில் உள்ளது. 100 வீடுகள் கட்டிக் கொடுக்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

35—

செருவாவிடுதி தெற்கு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்.

வினா எண் 7310— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செருவாவிடுதி தெற்கு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடு கட்டிக் கொடுப்பதற்கு அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

செருவாவிடுதி தெற்கு ஆதி திராவிடர் காலனிக்கு 1986–87-ல் 32 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மீதி உள்ள 33 நபர்களில் தகுதி உள்ளதும் தனிப்பட்டா உள்ளவர்களுக்கு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் நடப்பு நிதியாண்டில் காலனி வீடுகள் கட்டித் தர பரிசீலனையில் உள்ளது.

36—

நாடாக்காடு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள்

வினா எண் 7360— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், மாவுடுக்குறிச்சி ஊராட்சி, நாடாக்காடு ஆதிதிராவிடர்களுக்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

நாடாக்காடு ஆதிதிராவிடர்களுக்கு 1987–88-ல் என். ஆர்.இ.பி. திட்டத்தில் 20 வீடுகள் கட்டிக் கொடுக்கப் பட்டுள்ளன. மேலும் தொகுப்பு வீடுகள் கட்ட தகுதியுள்ள பயனாளிகள் ஒருவரும் தற்போதைய நிலையில் இல்லை.

37—

புவனகிரி ஒன்றிய ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்.

வினா எண் 10767— செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

1992-93-ம் ஆண்டில் புவனகிரி தொகுதி ஆதிதிராவிடர் குடும்பங்கள் 50-க்கு தொகுப்பு வீடுகள் கட்ட நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு உள்ளது. சுழல் முறையில் புவனகிரி தொகுதி ஆதி திராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்பட்டு உள்ளது.

38—

பொள்ளாட்சி வடக்கு ஒன்றிய ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீடுகள்.

வினா எண் 11072— திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

பொள்ளாட்சி வடக்கு ஒன்றியம் ஆர். பொன்னாபுரம் களத்துபுதூர் சி. அர்த்தநாரிபாளையம், கருமாண்டகவுண்டனூர் ஏ. நாகூர், போடிபாளையம், பொன்மலையூர் ஆர். கோபாலபுரம், தேவம்பாடி வலசு கிராமங்களில் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பொள்ளாட்சி வடக்கு ஊராட்சி ஒன்றியத்தில் 1992-93 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் களத்துப்புதூர் கிராமத்தில் 20 வீடுகளும், கருமாண்டகவுண்டனூர் கிராமத்தில் 23 வீடுகளும் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இதர கிராமங்களுக்கும் வரும் ஆண்டுகளில் நிதி நிலைமைக்கு ஏற்ப தொகுப்பு வீடுகள் கட்டித் தர பரிசீலிக்கப்படும்.



39—

பண்ணைவயல் தெற்கு ஆதிதிராவிடர்களுக்கு தொகுப்பு வீடுகள்.

வினா எண் 11494—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பட்டுக்கோட்டை ஒன்றியம், பண்ணைவயல் தெற்கு ஆதிதிராவிடர்களுக்கு 1992—93-ல் தொகுப்பு வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பண்ணைவயல் ஊராட்சியில் இதுவரை 54 வீடுகள் கீழ்கண்டவாறு கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண். (1) | ஆண்டு. (2) | திட்டம். (3) | வீடுகள் எண்ணிக்கை. (4) |
|---|---|---|---|
| 1 | 1984—85 | ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம். | 30 |
| 2 | 1985—86 | தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். | 4 |
| 3 | 1988—89 | தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம். | 20 |
| | | | 54 |

1992—93-ல் இந்த ஊராட்சியில் மேலும் தொகுப்பு வீடுகள் கட்டித்தர செயற் குறிப்பு ஏதுமில்லை.

40—

கழனிவாசல் சாலைப் பள்ளத்தில் படித்துறை கட்டுதல்.

வினா எண். 11607—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, கழனிவாசல் சாலைப்பள்ளத்தில் 1992-93-ல் ஒரு படித்துறை கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

கழனிவாசல் ஊராட்சியில் நெடுஞ்சாலை அருகில் உள்ளது. இச்சாலைப்பள்ளம் சுமார் 2 செண்ட் பரப்புள்ளது. நெடுஞ்சாலையை சார்ந்தது. இதில் படித்துறை ஏதும் கட்ட இயலாது.

41—

## பிள்ளையார் திடல் காலனி வீடுகளை பழுதுபார்த்தல்.

வினா எண் 12577—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சியைச் சேர்ந்த பிள்ளையார் திடலில் உள்ள பழுதடைந்த காலனி வீடுகளை பழுது பார்த்துத் தர 1992–93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், நாடியம் ஊராட்சி பிள்ளையார் திடலில் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டப்படவில்லை. அங்கு கட்டப்பட்டுள்ளவை மீனவர் காலனி வீடுகளாகும். இவை மீன் வளர்ப்புத் துறையால் கட்டப்பட்டது. எனவே, பழுதடைந்தவைகளை வேறு எந்த திட்டத்திலும் பழுது பார்க்க வழிவகை இல்லை.





42—

## பூவாணம் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடுகள் கட்டித் தருதல்.

வினா எண் 12589—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பூவாணம் வீடற்ற ஆதிதிராவிட மக்களுக்கு புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992–93 ஆம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

1989-90-ல் 19 ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டன. நடப்பு நிதியாண்டில் மேற்படி கிராமத்தில் வீடுகள் கட்டிக் கொடுக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

43—

## பள்ளத்தூர் வீடற்ற ஆதிதிராவிடர்களுக்கு புதிய வீடுகள் கட்டிக் கொடுத்தல்.

வினா எண் 12590—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் வீடற்ற ஆதிதிராவிடர் மக்களுக்குப் புதிய வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் 1992-93-ம் ஆண்டில் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

பள்ளத்தூர் கிராமத்தில் சென்ற ஆண்டுவரை 40 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆதலால் நடப்பு நிதியாண்டில் மேலும் பள்ளத்தூர் கிராமத்தில் வீடுகள் கட்ட செயற்குறிப்பு ஏதுமில்லை.

[1993 ஏப்ரல் 26

44—

## உற்பத்திச் செலவை அடிப்படையாகக் கொண்டு நெல் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்தல்.

வினா எண் 12965—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவை அடிப்படையாகக் கொண்டு நெல் கொள்முதல் விலை நிர்ணயம் செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

ஒவ்வொரு ஆண்டும் விவசாய விளைபொருள் உற்பத்திச் செலவுகள் மற்றும் விலைகள் ஆணைக் குழுவின் பரிந்துரைகள், மாநில அரசுகள் மற்றும் மத்திய அமைச்சகங்களின் கருத்துக்கள் மற்றும் விலைகளை நிர்ணயிப்பதற்குத் தேவையான அனைத்தையும் கருத்தில் கொண்டு மைய அரசு நெல்லுக்கு ஆதரவு விலை நிர்ணயம் செய்கிறது அங்ஙனம் மத்திய அரசு கொள்முதல் விலையை நிர்ணயிக்கும்போது, மாநில அரசும், உடன் கொள்முதல் விலையை அறிவிக்கின்றது. அத்துடன் விவசாயிகளின் நலன் கருதி ஏகபோக கொள்முதல் பகுதிகளில் மாநில அரசு அவர்களுக்கு தற்சமயம் ஒரு குவிண்டால் நெல்லுக்கு ரூ. 35 உற்பத்தி ஊக்கத் தொகையாக வழங்குகிறது. சாதாரணமாக ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர், அக்டோபர் திங்களில் இக்கொள்முதல் விலை அறிவிக்கப்படுகிறது.

45—

## பரமக்குடி நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு சொந்த கிடங்கு.

வினா எண் 15407—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இயங்கிவரும் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு எத்தனை கிடங்குகள் உள்ளன ?

(ஆ) இதில் அரசுக் கட்டிடங்கள் எத்தனை ?

(இ) அரசு சார்பில் கிடங்கு கட்டிடங்கள் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



1993 ஏப்ரல் 26]

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் இயங்கி வரும் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு சொந்தமாக கிடங்குகள் கிடையாது. வாடகை கிடங்குகள் 16 (2210 மெட்ரிக் டன்) மட்டும் உள்ளன.

(ஆ) அரசுக் கட்டிடம் ஏதும் கிடையாது.

(இ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தாலுக்கா குமுதக்குடி கிராமத்தில், 1,500 மெட்ரிக் டன் கொள்ளளவில் ஒரு கிடங்கு கட்ட ரூ. 19.90 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது.

46—

## சேதுபாவாசத்திர ஒன்றிய கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைத்தல்.

வினா எண் 14889—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், விளங்குளம், பெருமகளூர், கே. ஆர். புரம், பெருமகளூர் பட்டங்காடு, பெருமகளூர் தூரங்குடி., பெருமகளூர் தெற்கு, பெருமகளூர் ஆர். கே. நகர், வெள்ளாளங்காடு, பருக்காடு, கரம்பக்காடு ஆகிய கிராமங்களில் நெல் அறுவடை காலங்களில் பயன்படுத்த சமுதாயக்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

47—

## சேதுபாவாசத்திர கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைத்தல்

வினா எண் 14890—திரு ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், தில்லங்காடு, அழகியநாயகிபுரம், கரிசவயல், ருத்திரசிந்தாமணி, ரெட்டவயல், குளக்குடி, முதுகாடு, மணக்காடு, நெல்லியடிக்காடு, ஓமவயல், பாலச்சேரிக்காடு ஆகிய கிராமங்களில் நெல் அறுவடை காலங்களில் பயன்படுத்த சமுதாயக் களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை :—

மாண்புமிகு திரு கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக் களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

48—

தாயார் தோப்பிற்கு சத்துணவுக் கட்டிடம்

வினா எண் 9613— திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்திலுள்ள தாயார் தோப்பு கிராமத்தில் சத்துணவு கட்டிடம் இல்லாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி, சமூக நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், கீழப்பாவூர் ஒன்றியத்தில் உள்ள தாயார் தோப்பு கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் சமையல் கூடம் கட்டும் வேலை ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட்டு ரூ 6,977 செலவினத்தில் 23—12—1992-ல் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

49—

மஞ்சூரில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி

வினா எண் 1219— டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியம், மஞ்சூரில் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி ஆரம்பிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) அதன் விவரம் என்ன ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை

50—

சத்திரக்குடியில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி

வினா எண் 1684— டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, சத்திரக்குடியில் ஆதிதிராவிட மாணவியர் விடுதி தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி, சத்திரக்குடியில் மாணவியர் விடுதி தொடங்க செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது. நிதிநிலைமைக்கேற்பவும் இடவசதியைப் பொறுத்தும் முடிவெடுக்கப்படும்.

இருபத்தேழாம் பட்டியல்,

1—

உதகை வட்டத்தை இரண்டாகப் பிரித்தல்,

வினா எண், 11412—திருமதி கே, மரியம் உல் ஆசியா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகை தாலுக்காவை இரண்டாகப் பிரித்து உதக மண்டலம் மற்றும் குந்தா தாலுக்காக்கள் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): தற்போதைக்கு இல்லை.

2—

மனுநீதி நாட்களில் அளிக்கப்படும் மனுக்கள்.

வினா எண். 14124—திரு. வி. கே. லட்சுமணன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் மனுநீதி நாட்களில் கொடுக்கப்படும் மனுக்களுக்கு ஒரு வார காலத்திற்குள் மனுதாரர்கட்கு தக்க பதில்கள் அனுப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

மனுநீதி திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கொடுக்கப்படும் மனுக்களுக்கு மனுநீதி திட்ட நாள் அன்று மாலைக்குள்ளேயே மாவட்ட ஆட்சித் தலைவர் முன்னிலையில் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களால் மனுதாரர்களுக்கு எழுதது மூலமான பதில் தரப்படுகிறது. ஏதாவது ஒரு காரணத்தால் அன்று முடிவான பதில் தர முடியாத நேர்வுகளில் மட்டுமே மனுதாரர்களுக்கு இடைக்கால பதில் தரப்படுகிறது. பின்னர் ஒரு மாத காலத்திற்குள் அம்மனுதாரர்களுக்கு முடிவான பதில் கொடுக்கப்படும்

3—

திருச்சிற்றம்பலத்தை தனிவட்டமாக்குதல்

வினா எண். 13416—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, திருச்சிற்றம்பலத்தை 1992-93-ல் தனித் தாலுக்காவாக மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம். வருவாய்த்துறை அமைச்சர்:

இல்லை,

4—

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர் சேமநிதிக் கணக்கு.

வினா எண் 12118—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் சேமநல நிதிக் கணக்கின் நிதிக் கட்டுப்பாட்டை உதவிக் கல்வி அலுவலர் பொறுப்பில் மாற்ற செயல் திட்டம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம். கல்வி அமைச்சர்:

இல்லை

5—

பெரிய அலந்தவாடி உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம்.

வினா எண் 12567—திரு. ஆர். தங்கராசு: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம், பெரிய அலந்தவாடி உயர்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா—

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

6—

திருவோணம் ஒன்றியத்தில் கிளை நூலகங்கள்.

வினா எண் 13987—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி. திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டை (தெ) முதல் சேரி, மகிழங்கோட்டை, ராஜாமடம், தொக்காலிக்காடு, மாளியக்காடு, பள்ளிக்கொண்டான், சேண்டாகோட்டை ஆகிய இடங்களில் 1992-93-ல் கிளை நூலகங்கள் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

இல்லை.

7—

பள்ளத்தூர் மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்

வினா எண் 14204—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், பள்ளத்தூர் மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டித்தர 1992-93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் :

அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

8—

திருச்சிற்றம்பலம் மேல்நிலைப்பள்ளிக்குக் கட்டிடம்

வினா எண் 14215—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—



பேராவூரணி தொகுதி. திருச்சிற்றம்பலத்தில் மேல்நிலைப் பள்ளிக்கு இடம் பொது மக்களால் வழங்கப்பட்டும் கட்டிடம் கட்டப்படவில்லையாதலால் 1992-93-ம் ஆண்டில் கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம். கல்வி அமைச்சர் :

அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

9—

சித்தையன் கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம்

வினா எண். 3995—திரு. எஸ். எம். துரை—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) திண்டுக்கல் அண்ணா மாவட்டம். ஆத்தூர் தொகுதி சித்தையன் கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் எப்போது தொடங்கப்படும்.

(ஆ) இந்த நிதி ஆண்டில் சேர்க்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் :

(அ) சித்தையன் கோட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் 1,6,1987 முதல் செயல்பட்டு வருகிறது,

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை,

10—

கிருட்டினகிரி அரசு மருத்துவமனையில் கூடுதல் வசதி.

வினா எண் 4790—திரு. டி. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கிருட்டிணகிரி அரசு மருத்துவமனை கிருட்டிணகிரி தொகுதி வாழ் பர்கூர். காவேரிப்பட்டினம் ஆகிய மூன்று தொகுதி வாழ் மக்களுக்கான ஒரே பொது மருத்துவமனையாதலால் இப

போது இருக்கும் கட்டிடம். அறுவை சிகிச்சைக்கூடம் படுக்கைகள் ஆகிய வசதிகளை அதிகப்படுத்தித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

11—

பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடம்.

வினா எண் 8271—டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேரணாம்பட்டு அரசு மருத்துவமனையில் கூடுதல் உள் நோயாளிகள் பிரிவிற்கு கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இல்லை.

12—

வால்பாறை அரசு மருத்துவமனைக்குச் சுற்றுச்சுவர்.

வினா எண் 10736—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இல்லை.

13—

மருத்துவமனை வாகனங்கள் காப்பீட்டு செய்யப்படாமை.

வினா எண் 11246—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்குக் விடையளிப்பாரா—

(அ) மோட்டார் வாகனச் சட்டத்தின்படி காப்பீட்டுச் சர்டிபிகேட் வாகனங்கள் இன்றி பதிவு செய்வதோ பதிவு புதுப்பித்தலோ செய்யக்கூடாது என்றிருந்தும், மருத்துவமனைகள் பலவற்றிக்கான வாகனங்கள் (ஆம்புலன்ஸ் வேன்) உட்பட இன்ஷூர் செய்யாமலே பதிவு செய்யப்பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

14—

திருவலம், செம்புராஜபுரம் ஏரிக்கால்வாய் தூர் எடுத்தல்.

வினா எண் 4002—திருமதி கே. எம். கலைச்செல்வி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி திருவலம் செம்புராஜபுரம் ஏரிக்கு வரும் வெள்ளக் கால்வாய் தூர்ந்து உள்ளதை அரசு அறியுமா?

[1993 ஏப்ரல் 26

(ஆ) ஆம் எனில், தூர் எடுக்க அரசு ஆவனசெய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

(அ) ஆம்.

(ஆ) நிதி பற்றாக்குறையின் காரணமாக 1991—92 நிதியாண்டில் இப்பணியை செய்ய இயலவில்லை.

15—

காவிரியைச் சீரமைத்தல்.

வினா எண் 5119—திரு. ப. கல்யபெருமாள்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உலக வங்கி உதவியுடன் காவிரியைச் சீரமைக்க இதுவரையில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு உள்ளன?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

காவிரி டெல்டா பகுதி முழுவதிலும் 9.34 லட்சம் ஏக்கர் பாசன நிலங்களை நவீனப்படுத்துவதற்காக ரூ. 875 கோடிக்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டம் மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. முதல் கட்டமாக மொத்தமுள்ள 36 ஆறுகளில் 1.73 லட்சம் ஏக்கர் பாசன நிலங்களைக் கொண்ட 10 ஆறுகள் பகுதியை நவீனப்படுத்த ரூ. 78.80 கோடிக்கு கருத்துரு 1985ல் உலக வங்கி நிதி உதவிபெற மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. காவிரி நீர்ப்பங்கீடு தாவா முடிவு பெறாததால் இத்திட்டத்திற்கு மத்திய அரசின் நீர் ஆதாரப் பிரிவில் ஒப்புதல் வழங்கப்படாமல் உள்ளது.

இந்நிலையை தவிப்பதற்காக காவிரி படுகை புனரமைப்பு ஆணைக்குழு (CADRA) உருவாக்கி தேசிய நீர்ப்பாசன மேலாண்மை திட்டத்தின்கீழ் பாசனக் கால்வாய்களைச் சீர்படுத்தவும் மதகுகள் மற்றும் ரெகுலேட்டர்கள் கட்டவும் ரூ. 254 கோடிக்கும்; தேசிய நீர்ப்பாசன மேலாண்மை திட்டத்தின் கீழ் வராத பணிகளுக்காக ரூபாய் 623 கோடிக்கும்



1993 ஏப்ரல் 26]

திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, எட்டாவது திட்டத்தில் சேர்ப்பது பற்றி பரிசீலிப்பதற்கு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பண்ணை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சுழல் நீர் வழங்கு திட்டத்திற்காகவும் ரூபாய் 15 கோடிக்கு திட்டம் தீட்டப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

16—

தெற்கு பெருமகளூர் பெரிய ஏரிக்கு சிமெண்ட் அணை.

வினா எண் 6467—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், முதுகாடு அருகிலுள்ள ஆவுடையாணிக் கோட்டைக்கு மேற்கே உள்ள வாரியில் மண் அணை போட்டு தண்ணீரை தேக்கி பெருமகளூர் பெரிய ஏரிக்கு தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. உடைப்பு ஏற்படாமல் இருக்க மண் அணை கட்ட அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

17—

கொரட்டூர் பெரிய ஏரியைச் சீரமைத்தல்.

வினா எண் 7072—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கொரட்டூர் பெரிய ஏரியை புல்சேடாசர் வைத்து மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

———

18—

சோனார் குளம் ஏரியை ஆழப்படுத்துதல்.

வினா எண் 7097—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், கழநிவாசல் ஊராட்சி சோழக்வார் வயலிலுள்ள சோனார் குளம் ஏரியிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி ஆழப்படுத்தி புல்டோசர் வைத்து சீரமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

19—

ஆலந்தூரணி குளத்தை ஆழப்படுத்துதல்.

வினா எண் 7199—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், ஒளிராமன் காட்டில் ஆலந்தூரணி ஆழப்படுத்தி வடிகாலில் கல்வெட்டு அமைத்துதர அரசிடம் செயற் குறிப்புஉள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

20—

மொச்சி குளத்தைப் பராமரித்தல்.

வினா எண் 7200—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—



தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம், புக்கரம்பையிலுள்ள மொச்சி குளத்தை பராமரித்து ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி செப்பனிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

21—

கோபால் குளத்தைப் பராமரித்தல்.

வினா எண் 7294—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், நாட்டாங்காடு கோபால் குளத்தை பராமரித்து அகலப்படுத்தி ஆழப்படுத்த மடையை உயர்த்திக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப் பணித் துறை அமைச்சர் :

இல்லை.

22—

மகாராஜ சமுத்திர ஆற்றில் பம்பிங் ஸ்கீம்.

வினா எண் 7382—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கொட்டை சப்டிவிசன் திருவோணம் ஒன்றியத்தைச் சேர்ந்த அக்கிரவட்டத்திற்கு அருகில் ஓடுகின்ற மகாராஜ சமுத்திர ஆற்றில் பம்பிங் ஸ்கீம் அமைத்து அக்கரவட்டம் ஏரியில் தண்ணீர் கொண்டு வந்து கீழே வாய்க்கால் அமைத்து அரிவலம் சி. எம் பி வாய்க்காலில் தண்ணீர் கொண்டு செல்ல அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

23—

மறச்சி கட்டி குளத்தைப் பராமரித்தல்.

வினா எண் 7407—திரு. ஆ சிங்காரம்: மாண்புமிகு பொது பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், வாத்தலைக்காட்டைச் சேர்ந்த மறிச்சி கட்டி குளத்தை பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

இல்லை.

24—

வெட்டன்விடுதி நெடுஞ்சாலைத்துறை இடத்தில் ஆக்கிரமிப்பு.

வினா எண் 8380—திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆலங்குடி தொகுதியில் ஆலங்குடியிலிருந்து கறம்பக்குடி செல்லும் வழியில் வெட்டன்விடுதியில் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இடத்தில் கடைகள் கட்டி வாடகைக்கு விட்டுள்ளதால் போக்குவரத்துத்துறைக்கு தடங்கல் ஏற்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பை அகற்ற அரசு ஆவன செய்யுமா?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) ஆம்.

(ஆ) ஆக்கிரமிப்புக்கள் அனைத்தும் 24—9—1992 அன்று அகற்றப்பட்டுவிட்டன.

25—

பேர்னாம்பெட்டிற்குப் பாசனக் கால்வாய்

வினா எண் 8447—டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேர்னாம்பெட் தொகுதி மோர்தானா அணைத் திட்டத்தில் இருந்து பேர்ணாம்பெட் பகுதிக்கு பாசன கால்வாய் அமைக்கும் திட்டம் அரசின் குறிப்பில் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

இல்லை.

26—

கட்டளை வாய்க்காலிலிருந்து ஏரிகளுக்குத் தண்ணீர்.

வினா எண் 8575—திரு. ப கலியபெருமாள்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டளை வாய்க்காலில் வருடந்தோறும் காவேரியில் தண்ணீர் வரும்போது முன் கூட்டியே தண்ணீர் திறந்துவிட்டு கட்டளை வாய்க்கால் மூலம் பாயும் ஏரிகளுக்குத் தேவையான தண்ணீர் விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1993 ஏப்ரல் 26

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

27—

கோரையாறு நீர்த்தேக்கத் திட்டம்.

வினா எண் 10245—திரு. ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கோரையாறு நீர்த்தேக்கத் திட்டம் வருகிற நிதியாண்டில் செயல்படுத்தப்படுமா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

பயன்பெறத்தக்க வகையில் நிறைவேற்ற சாத்தியக்கூறு இல்லை.

28—

செல்லிக்குறிச்சி ஏரி மராமத்து.

வினா எண் 12238—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமி பொதுப்பணித்துறை அமைச்சசர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை உள்ளூரில் உள்ள செல்லிக்குறிச்சி ஏரியை மராமத்து செய்ய 92—93-ல் உலகவங்கிக் கடன் திட்டத்தில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

காவிரி டெல்டாவிலுள்ள பாசன அமைப்புகளை ஒருங்கிணைந்த வகையில் மேம்பாடு செய்வதற்காக காவிரி கழிமுக



1993 ஏப்ரல் 26]

பாசன மேம்பாட்டு ஆணைக்குழு (CADRA) ஒன்று ஏற்படுத்தலாமென தமிழக அரசு கருதுகிறது. காவிரி நீரை சிறந்த முறையில் பயன்படுத்த வகை செய்யும் இத்திட்டம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததால் இவ்வரசு இத்திட்டத்தை ஒரு மத்திய அரசு திட்டமாக செயலாக்கலாமெனக் கருதி ரூ. 952 கோடி அளவுக்கு தேசிய நீர் மேலாண்மை திட்டம், பண்ணை மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான செயற்குறிப்புகளை மத்திய அரசின் எட்டாவது திட்டத்தில் சேர்ப்பது பற்றி பரிசீலிப்பதற்கு மத்திய அரசுக்கு அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

29—

மின்துறை அலுவலக் கட்டிடங்கள்.

வினா எண் 12271—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி, குருவிக்கரம்பை, பெருமகளூர், திருச்சிற்றம்பலம் ஆகிய மின்துறை அலுவலகங்களுக்கு 1992—93-ல் சொந்தக் கட்டிடம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் :

இல்லை.

30—

செட்டி ஏரி வாய்க்காலை அகலப்படுத்துதல்.

வினா எண் 13343—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம், மழவேனிற்காடு ஊராட்சி அய்யங்குளத்திலிருந்து செட்டி ஏரி செல்லும் வாய்க்காலை 1992—93-ல் அகலப்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

31—

செல்லியம்மன் கோவில் குளத்தில் ஆக்கிரமிப்பு.

வினா எண் 13597—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம் அதிராம் பட்டினம் செல்லியம்மன் கோவில் குளத்தில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்ற செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பை 1992–93-ல் அகற்ற தனியாக செயற்குறிப்பு இல்லை. எனினும் பொதுவாக ஏரிகளில் உள்ள ஆக்கிரமிப்புகள் முன்னுரிமை அடிப்படையில் மண் தள்ளும் இயந்திரங்கள் மூலம் வருடந்தோறும் அகற்றப்பட்டு வருகிறது. இந்த ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவது குறித்து வரும் அடைப்புடன் காலத்தில் பரிசீலனை செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

32—

ரெட்டகுளம் கரையை உயர்த்துதல்.

வினா எண் 13629—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ரெட்டகுளத்திலுள்ள ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தி கரையை உயர்த்தி பராமரித்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?



விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள ஏரியை மராமத்து செய்யவும் ஆக்கிரமிப்பை அகற்றவும் செயற்குறிப்பு இல்லை. இருப்பினும் நிதி நிலைமைக்கு ஏற்ப தேவையான மராமத்துப் பணிகள் 3 பெரும் அடைப்புக் காலத்தில் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

33—

திருவப்பாடி சி. எம். பி. வாய்க்கால்.

வினா எண் 13658—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி திருவப்பாடி சி. எம். பி. வாய்க்காலில் செல்லப்பிள்ளையார் கோவில் கருப்பட்டிக்காடு வரை தூர் வாரி பராமரிக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கணணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

திருவப்பாடி சி. எம். பி. வாய்க்காலில் செல்லப்பிள்ளையார் கோவில் கருப்பட்டிக்காடு வரை வரும் அடைப்புக்காலத்தில் நிதி நிலைமைக்கேற்ப தேவையான இடங்களில் தூர் வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் தற்போது மேற்படி வாய்க்காலில் தடையின்றி போதுமான அளவு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது.

34—

பின்னவாசலுக்குத் தொலைக்காட்சி பெட்டி அளித்தல்.

வினா எண் 12628—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பின்னவாசல் ஆதிதிராவிடர்களுக்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துத்தர 1992–93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது.

35—

பனஞ்சேரிக்குத் தொலைக்காட்சிப் பெட்டி.

வினா எண் 12629—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணித் தொகுதி, பேராவூரணி ஒன்றியம், வலப்பிரமன்காடு ஊராட்சி பனஞ்சேரிக்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைக்க 1992-93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

ஒரு தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்பட்டுள்ளது.

36—

இடையாத்தி கிழக்குக்கு தொலைக்காட்சிப் பெட்டி.

வினா எண் 12631—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பேராவூரணி ஒன்றியம் இடையாத்தி (கி) பசுக்காரன் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துக் கொடுக்க 1992—93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்புள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.



37—

இடையாத்தி (மே)-க்கு தொலைக்காட்சிப் பெட்டி.

வினா எண் 12632—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி (மே) வெள்ளாளர் தெருவிற்கு தொலைக்காட்சிப் பெட்டி வழங்க 1992—93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்:

இல்லை.

38—

இடையாத்தி (தெற்கு) தொலைக்காட்சிப் பெட்டி.

வினா எண் 12633—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி தெற்கு ஆதிதிராவிடர்களுக்குத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க 1992-93-ம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

இல்லை.

39—

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மழைக்கோட்டு, குடை கம்பளி.

வினா எண் 11581—டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு மழைக்கோட்டு, குடை, கம்பளி ஆகியவை முறையாக கொடுக்கப்படுகின்றனவா?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

ஆம்.

40—

தொழிற்சாலைகளில் தொழிலாளர் சட்டம் அமல்படுத்துதல்.

வினா எண் 13690—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தமிழக தொழிற்சாலைகளில் பேக்டரி சட்டம் முறையாக அமல்படுத்தப்பட்டுள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் :

ஆம். தமிழக தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகள் முறையாக அமல்படுத்தப்படுகிறது.

41—

வேதாரண்யம் கால்நடை மருத்துவமனையைச் சீரமைத்தல்.

வினா எண் 5416—திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

வேதாரண்யம் அரசு கால்நடை மருத்துவமனை பழுதடைந்துள்ளதை சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா ?



விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

அக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

42—

விவசாயத்தை தொழிலாக அங்கீகரித்தல்.

வினா எண். 11861—டாக்டர் அ. ஸ்ரீதரன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

விவசாயத்தை தொழிலாக அங்கீகரிக்க அரசிடம் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

இது குறித்து செயற்குறிப்பு எதுவும் அரசு வேளாண்மைத் துறையில் இல்லை.

43—

இடையாத்தியில் விவசாயக் கிடங்கு.

வினா எண். 12956—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி இடையாத்தியில் பெரிய அளவில் விவசாயக் கிடங்கு அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

இல்லை.

53—144—16

44—

களத்தூரில் துணை வேளாண்மைக் கிடங்கு.

வினா எண். 12958— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி தொகுதி களத்தூரில் துணை வேளாண்மைக் கிடங்கு அமைத்துக் கொடுக்க 1992–93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

இல்லை.

45—

புதுக்கோட்டை உளூரில் கால்நடை மருந்தகம்.

வினா எண். 13776— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

பட்டுக்கோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை உளூரில் 1992–93ல் கால்நடை மருந்தகம் தொடங்க செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர் :

பட்டுக்கோட்டை ஒன்றியம் புதுக்கோட்டை உளூரில் 1992–93-ல் கால்நடை மருந்தகம் தொடங்க அரசிடம் செயற்குறிப்பு இல்லை.





46—

பட்டுப்போன தென்னைமர உரிமையாளர்களுக்கு நிவாரணம்.

வினா எண். 14170— திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

ராதாபுரம் தொகுதியில், வறட்சியின் காரணமாக பட்டுப்போன தென்னை மரங்கள் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்க அரசு முன்வருமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

வறட்சியின் காரணமாக பட்டுப்போன தென்னை மரங்கள் உரிமையாளர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.

47—

பட்டுக்கோட்டை ஒன்றியத்தில் சமுதாயக்களங்கள்.

வினா எண் 14891— திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பட்டுக்கோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை, உளூர், கோட்டாகுடி, கார்க்காவயல், பழஞ்சூர், பொன்னவராயன் கோட்டை, ஏனாதி, கரம்பையம் மேற்கு, அனைக்காடு, அதிராம்பட்டினம், தம்பிக்கோட்டை, துவறங்குறிச்சி ஆகிய கிராமங்களில் நெல் அறுவடைக் காலங்களில் பயன்படுத்த சமுதாயக்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

மேற்கண்ட கிராமங்களில் சமுதாயக்களங்கள் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

48—

ராதாகிருஷ்ணன் சாலையில் கடைகள் இடிக்கப்படுதல்.

வினா எண். 8356— திரு. எம். சுந்தரதாஸ் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1991—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் பல கடைகள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் இடிக்கப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் :

(அ) 1991—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் எந்தக் கடைகளும் இடிக்கப்படவில்லை. ஆனால் மைலாப்பூர் பகுதி ராதாகிருஷ்ணன் சாலை 6—வது சந்து கதவு இலக்கம் 56, ஜெ.பி. அவின்யூவில், ஒரு கட்டி டம் இடிக்கப்பட்டது. இடிக்கப்பட்ட இக்கட்டிடம் கடை அல்ல. ஒப்புதல அளிக்கப்பட்டபடி வாகனம் நிறுத்துவதற் கார்க பயன்படுத்தப்பட வேண்டிய இந்த இடம், அலுவலகத் திற்காக மாற்றி உபயோகப்படுத்தப்பட்டு வந்தது.

ஜெ.பி. அவின்யூ பலமாடிக்கட்டிட உரிமையாளர்கள் சங்கம் கொடுத்த ஆட்சேபனை மனுவின் மீது, அனுமதி யின்றி வாகனம் நிறுத்தும் இடத்தை அலுவலக உபயோகத் திற்காக மாற்றியமைத்ததற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கை எடுத்தது. கட்டிட சொந்தக் காரர்களும் கட்டிடத்தில் உள்ளவர்களும் அலுவலகமாக உபயோகிப்பதை உடனே நிறுத்தி, வாகனம் நிறுத்தும் இட மாக உபயோகிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். ஆனால் ட்டிட சொந்தக்காரர்களிடம் இருந்தும், கட்டிடத்தில் உள்ள ர்களிடம் இருந்தும் இதற்கு எந்தவிதமான பதிலும் வர ல்லை. எனவே, அனுமதியில்லாத தரை தளத்தில் உள்ள அலு கப்குதியை இடிக்கும் பணி 30—11—1991 அன்று ன்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் நிறைவேற் ட்டது.





(ஆ) இவ்வினா எழவில்லை.

49—

திருத்துறைப்பூண்டி மகளிர் விடுதிக் கட்டிடம்.

வினா எண் 3813—திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப் பூண்டி ஆதி திராவிடர் மகளிர் விடுதிக்கு நிரந்தர கட்டிடம் கட்டி கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) அத்தகைய திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

50—

பார்த்திபனூரில் பிற்பட்டோர் மாணவர் விடுதி.

வினா எண் 10211— டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தொகுதி பார்த்திபனூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீன்வளத்துறை அமைச்சர் :

தற்சமயம் அத்தகைய செயற்குறிப்பு ஏதுமில்லை.

[1993 ஏப்ரல் 26

## இருபத்தெட்டாம் பட்டியல்.

1—

### தமிழகத்தில் மாநில அரசு வழங்கும் ஓய்வூதியம் மற்றும் சலுகைகள்.

வினா எண் 15414—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் எத்தனை பேர்?

(ஆ) ஓய்வூதியம் தவிர அவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் யாவை?

(இ) இதனால் அரசுக்கு ஏற்படும் செலவு எவ்வளவு?

விடை—

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்:

(அ) 2,66,520.

(ஆ) ஓய்வு பெறும்போது ஓய்வுகாலப் பணிக்கொடை' கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்கு பதிலாக ரொக்கம் வழங்கப் படுகிறது. ஓய்வு பெற்ற பின்னர், ஓய்வூதியத்துடன் அகவிலைப்படி, மருத்துவப்படி வழங்கப்படுகிறது. மேலும் தங்களுடைய சொந்த ஊருக்கு அல்லது தாம் சென்று வசிக்க விழையும் ஊருக்கு செல்வதற்கு பயணப்படி, வருடா வருடம் பண்டிகை முன்பணம் மற்றும் பொங்கல் பரிசு போன்ற சலுகைகள் வழங்கப்படுகின்றன.

(இ) சுமார் ரூபாய் 471 கோடி.

2—

### வால்பாறை தாலுக்காவிற்குட்பட்ட தனியார் தேயிலைத் தோட்டத்தின் மூலம் வருவாய்

வினா எண் 10724—டாக்டர் அ. ஸ்ரீதரன்:—மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா?—



1993 ஏப்ரல் 26]

வால்பாறை தாலுக்காவிற்குட்பட்ட தனியார் தேயிலைத் தோட்டத்தின் மூலம் ஆண்டு ஒன்றுக்கு எவ்வளவு வருவாய் (நிலவரி) அரசுக்கு கிடைக்கிறது?

விடை—

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்:

கோவை மாவட்டம், வால்பாறை வருவாய் வட்ட ஆளுகைக்குட்பட்ட தனியார் தேயிலைத் தோட்டத்தின் மூலம் பசலி 1401ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவாறு அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது.

| | | ரூ. |
|---|---|---|
| 1. | நிலவரி .. | 1,23,650.47 |
| 2. | தண்ணீர் தீர்வை | 88,008.95 |
| 3. | முறையற்ற பாசனம் காரணமாக தண்டத்தீர்வை. | 95,331.55 |
| 4. | தலவரி | 95,246.30 |
| 5. | தலமேல்வரி .. | 5,29,146.22 |
| | | 9,31,382.59 |

3—

### தனியார் பாலிடெக்னிக் இன்ஜினியரிங் கல்லூரிகளில் மாணவர்களிடம் நன்கொடை வசூலிப்பதை தடுத்தல்.

வினா எண். 3740—திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தனியார் பாலிடெக்னிக் இன்ஜினியரிங் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது நிறைய நன்கொடை வசூலிப்பதைத் தடுத்து ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: கல்வி அமைச்சர்.

தமிழ்நாட்டில் தனியார் பாலிடெக்னிக், இன்ஜினியரிங் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும்போது நன்கொடைகள் வசூலிக்கப்படுவதைத் தடை செய்ய, 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு கல்வி நிலையங்கள் (கட்டாய நன்கொடை வசூலிப்பதைத் தடை செய்தல்) சட்டம் இயற்றப்பட்டுள்ளது. மேலும் தொழில் நுட்பக் கல்லூரிகளில் நன்கொடை வசூல் செய்வதைத் தடை செய்வது பற்றி ஆராய ஏற்படுத்தப்பட்டுள்ள அனந்தகிருஷ்ணன் தலைமையிலான குழு பற்றி ஓர் தனி அறிக்கை கீழ்வருமாறு:

டாக்டர் அனந்தகிருஷ்ணன் தலைமையிலான குழு பற்றி தனி அறிக்கை.

கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில் நுட்பக் கல்லூரிகளில், நன்கொடை என்ற பெயரில் வசூல் செய்யப்படுவது பற்றி பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் இதனை தடை செய்வதற்காகவும் விதிமுறைகளை ஏற்படுத்தவும், அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் அனந்தகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், மருத்துவத்துறை இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், கல்வித்துறை கூடுதல் செயலர், சட்டத்துறை இணைச் செயலர் மற்றும் தொழில்நுட்ப கல்வி இயக்குநர் ஆகியோர் இக்குழுவின் உறுப்பினர் ஆவர். இக்குழு, மேற்படி வசூலிக்கப்படும் தொகையை நிர்ணயம் செய்வது பற்றியும் விதிமுறைகளை ஏற்படுத்துவது பற்றியும், ஆய்வு செய்து தன்னுடைய பரிந்துரையினை அரசுக்கு சுமார் மூன்று மாத காலத்திற்குள் அளிக்கும். அரசு இவ்வறிக்கையைப் பரிசீலித்துத் தக்க ஆணையை வழங்கும்.

வடக்கு எல்லைப் போராட்ட தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்குதல்.

வினா எண். 8034 திரு. ஆர்.சிங்காரம்—மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

வடக்கு எல்லைப் போராட்ட தியாகிகளுக்கு ஓய்வூதியம் வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

இது ஏற்கனவே செயல்முறையிலுள்ளது.



5—

மாணவர்களுக்கு இலவச பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்.

வினா எண். 8696—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒன்று முதல் 8-ம் வகுப்பு வரையில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின்படி 1988-89 முதல் நடப்பு கல்வியாண்டு வரை எவ்வளவு மாணவர்கள் (ஆண்டு வாரியாக) பயன் பெற்றுள்ளனர்?

(ஆ) இத்திட்டத்தை ''பிளஸ் டு'' வகுப்பு வரை நீட்டிக்க ஏதேனும் திட்டமிடப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

| (அ) வருடம் | பயன்பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1988-89 | 60.3 லட்சம் |
| 1989-90 | 61.6 லட்சம் |
| 1990-91 | 62.6 லட்சம் |
| 1991-92 | 64.0 லட்சம் |

(ஆ) மற்றும் (இ) தற்போது இல்லை.

6—

குளத்தூரில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்.

வினா எண் 11317—டாக்டர் ச. சுந்தரராஜ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுர மாவட்டம் பரமக்குடி தொகுதியில் குளத்தூரில் உள்ள ஊராட்சி ஒன்றியம் நடுநிலைப் பள்ளியை (நயினார் கோவில் ஒன்றியம்) உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்

(அ) மற்றும் (ஆ) பரமக்குடி தொகுதி நயினார் கோவில் ஒன்றியம் களத்தூரில் அரசு உயர்நிலைப்பள்ளியொன்று நடப்பு கல்வியாண்டு முதல் செயல்பட ஆணையிடப்பட்டுள்ளது.

7—

மல்ல சமுத்திரம் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் போதிய ஆசிரியர்கள் நியமனம்.

வினா எண். 13309—டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) மல்ல சமுத்திரம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆங்கிலம், தாவரவியல் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களுக்குரிய போதிய ஆசிரியர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நியமிக்கப்படுவர்?

விடை—

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மல்ல சமுத்திரம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி 1991-92 ல் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தப்பட்டபோது கீழ்க்கண்ட 6 முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

1. தமிழ்
2. கணிதம்
3. இயற்பியல்
4. வேதியியல்
5. உயிரியல்
6. பொருளியல்



கூடுதல் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஒதுக்கப்படும்போது மல்ல சமுத்திரம் மேல்நிலைப் பள்ளிக்கும் தேவையான (ஆங்கிலம், தாவரவியல் மற்றும் வரலாறு) பணியிடங்கள் நிதி நிலைமைக்கேற்ப ஒதுக்க பரிசீலிக்கப்படும்.

8—

திருவாரூர் அரசினர் மருத்துவமனைக்கு தில்லையாடி வள்ளியம்மை பெயர் வைத்தல்.

வினா எண். 14173—திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவாரூர் அரசினர் மருத்துவமனைக்கு தில்லையாடி வள்ளியம்மை பெயர் சூட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்,

இல்லை.

வளத்தூரில் உள்ள சித்த மருத்துவமனை படுக்கை வசதி அதிகரித்து அரசு மருத்துவமனையாக மாற்றுதல்

வினா எண். 14175—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வ்வாழ்வுத்துறை மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் வட்டம் வளத்தூரில் உள்ள மருத்துவமனையை படுக்கை வசதியை அதிகரித்து அரசு மருத்துவமனையாக மாற்றி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

குயாத்தம் வட்டம் வளத்தூரில் உள்ள பஞ்சாயத்து யூனியூனி யுனானி நிரந்தர மருந்தகமாகும். அது அரசு சித்த மருத்துவமனை அல்ல. இம்மருந்தகம் 1930 முதல் ஊரக மருந்தகமாக இருந்து 1947 முதல் நிரந்தர மருந்து

தகமாக மாற்றப்பட்டு சிறிய அளவில் பணியாளர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இம்மருந்தகம் பஞ்சாயத்து யூனியனால் கட்டப்பட்டு, மிகவும் பழுதடைந்த நிலையில் பழைய கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மகப்பேறு கால உதவிக்காக வேண்டி இரண்டு படுக்கைகள் மட்டுமே உள்ளது. படுக்கை எண்ணிக்கையினை அதிகப்படுத்த போது மான இடவசதி இம்மருந்தகத்தில் இல்லை. மேலும் படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்த எந்த செயற்குறிப்பும் இல்லை. இம்மருந்தகத்தில் தேவையான யுனானி மருந்துகள் உள்ளன. இதில் அதிக நோயாளிகள் சிகிச்சை பெற்று நல்ல முறையில் மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

10—

**பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அமரர் ராஜீவ் காந்தி பெயர் சூட்டல்.**

வினா எண். 14177—திரு. ஆர். சிங்காரம்— மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுகோட்டை அரசு மருத்துவமனைக்கு அமரர் ராஜீவ் காந்தி பெயர் சூட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இல்லை.

11—

**அதிராம்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அன்னை இந்திரா காந்தி பெயர் சூட்டல்**

வினா எண். 14180—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை ஒன்றியம், அதிராம்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு அன்னை இந்திராகாந்தி பெயர் சூட்டப் பட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:

இக்கருத்து அரசின் பரிசீலனையில் இல்லை.



12—

**திண்டுக்கல் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச போலி பஸ் பாஸ்களை கண்டுபிடித்தல்.**

வினா எண். 8412—திருமதி பி. நிர்மலா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் இராணி மங்கம்மாள் போக்குரவத்துக் கழகத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச பஸ் பாஸ்களில் போலிகள் இருப்பதாக பஸ்ஸின் நடத்துனர்களே பள்ளி மாணவர்களை பேருந்திலிருந்து இறக்கி விடுவதை அரசு அறியுமா?

(ஆ) அத்தகைய போலி பாஸ்களை கண்டுப்பிடித்ள் நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்கு வரத்துத்துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச பயண அடையாள அட்டைகளை சில மாணவ, மாணவிகள் தவறான வழியில் பயன்படுத்தியதால் அவர்களிடமிருந்து அடையாள அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியரிடம் தெரிவிக்கப்பட்டதோடு இது சம்பந் தமாக இராணி மங்கம்மாள் போக்குரவத்துக் கழக நடத்து நர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டது. எனவே, போலி பாஸ்கள் ஏதும் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தால் வழங்கப்படவில்லை.

13—

**தலைவாசலிலிருந்து கோவிந்தம்பாளையம் வரை புதிய நகரப் பேருந்து விடுதல்.**

வினா எண். 8967—திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தலைவாசலிலிருந்து பிள்ளங்குளத்திற்கு அரகலூர் சித்தேரி, கோவிந்தம்பாளையம் வழியாக புதிய நகரப் பேருந்து விடு வதற்கு அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத்துறை அமைச்சர்:

கோவிந்தம்பாளையத்திலிருந்து பிள்ளங்குளம் வரை சுமார் 5.5 கி.மீ. தூரத்திற்கு சாலை வசதியில்லை. மேலும் கோவிந்தம்பாளையத்திலிலிருந்து 1.6. கி.மீ. தூரத்தில் சித்தார் என்ற ஆறு ஓடுகிறது. அதே ஆற்றில் பாதை இல்லை. மேலும் அந்த ஆற்றினை கடந்து பிள்ளங்குளம் வரை வனப்பகுதியாகும். ஆதலால் கேட்கப்பட்ட தடத்தில் பேருந்துகள் இயக்க சாத்தியக்கூறுகள் இல்லை. தலைவாசலிலிருந்து கோவிந்தம்பாளையம் வரை தற்போது நகரப் பேருந்து வசதி உள்ளது.

14—

ஜெயங்கொண்டான் காலனிக்கு தனியாகப் பேருந்து வசதி செய்தல்

வினா எண். 12884—திரு. செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியம் ஜெயங்கொண்டான் காலனிக்கு தனியாகப் பேருந்து வசதி செய்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?'

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்வரத்துத்துறை அமைச்சர்:

சிதம்பரத்திலிருந்து புவனகிரி; ஆலம்பாடி கிருஷ்ணாபுரம் வழியாக குமுடிமுலை நோக்கிச் செல்லும் சாலையில் சிதம்பரத்திலிருந்து 18.6 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது ஜெயங்கொண்டான் காலனி. இது கிருஷ்ணாபுரத்திற்கும் ஜெயங்கொண்டானுக்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ளது. தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் 2 சிதம்பரத்திலிருந்து புவனகிரி, ஆலம்பாடி, கிருஷ்ணா



புரம், ஜெயங்கொண்டான், குமுடிமுலை, கொத்தவாச்சேரி வழியாக குறிஞ்சிப்பாடி வரை இயங்கி வருகின்றன. மற்றொரு நகரப் பேருந்து சிதம்பரத்திலிருந்து புவனகிரி, ஆலம்பாடி, கிருஷ்ணாபுரம், ஜெயங்கொண்டான், குமுடுமூலை வழியாக நத்தமேடு வரை இயங்கி வருகின்றது. மேலும் 2 தடங்களில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் 2 நகரப் பேருந்துகள் பல்திசை வழித்தட இயக்கத்திட்டத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இத்தடங்களில் உள்ள கிருஷ்ணாபுரத்தை அடுத்து பிரிகின்ற மருதூர் சாலையிலிருந்து 200 மீட்டர் தொலைவில்தான் ஜெயங்கொண்டான் காலனி அமைந்துள்ளது. எனவே, இத்தடங்களில் இயங்கி வருகின்ற பேருந்துகள் மூலமாகவும் ஜெயங்கொண்டான் காலனிக்கு போக்குரவத்து வசதிகள் உள்ளன. மேற்கூறப்பட்ட பேருந்து வசதிகள் யாவும் போதுமான அளவில் உள்ளமையால், ஜெயங்கொண்டான் காலனிக்கு மேலும் தனியாக ஒரு பேருந்தை இயக்கிட வேண்டிய அவசியம் எழவில்லை.

15—

சுதந்திர போராட்ட வீரர்கள் ஐ.என்.ஏ. வீரர்களின் விதவை மனைவிகளுக்கு இலவச பஸ் பாஸ்.

வினா எண் 15311—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழக்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா?

சுதந்திர பேராட்ட வீரர்கள் ஐ.என்.ஏ. வீரர்களின் விதவை மனைவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:

தற்பொழுது நடைமுறையில் இருக்கும் அரசாணையின்படி, சுதந்திர போராட்டத்தில் நேரடியாக ஈடுபட்ட மத்திய மாநில ஓய்வூதியம் பெறும் சுதந்திர போராட்ட வீரர்களுக்கு மட்டுமே இலவச பயண பேருந்து சலுகை வழங்கப்பட்டு வருகிறது. அவர்களின் விதவை மனைவிகளுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவது குறித்து நடவடிக்கை ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

16—

**தொக்காளிக்காடு அருகில் ஓடுகின்ற மகாராஜ சமுத்திரம் காட்டாற்றில் நீரேற்றுத் திட்டம்.**

வினா எண் 585—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை ஒன்றியம் தொக்காளிக்காடு அருகில் ஓடுகின்ற மகாராஜ சமுத்திரம் காட்டாற்றில் நீரேற்றுத் திட்டம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

17—

**கழனிவாசல் பெரிய ஏரியை செப்பனிடுதல்**

வினா எண் 618—திரு. ஆர். சிங்காரம் :— மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா?

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கழனிவாசல் பெரிய ஏரியை தூர் எடுத்து ஆழப்படுத்தி கரையை உயர்த்தி செப்பனிட உலக வங்கிக் கடன் திட்டத்தில் சேர்க்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

ஐரோப்பிய நிதி உதவியுடன் தற்போது மற்றும் நவீனப்படுத்தபடும் ஏரிகளின் பயன்கள் குறித்து திட்டம் வளர்ச்சித் துறையின் பரிசீலனையில் உள்ளது. இப்பரிசீலனைக்குப்பின் அத்துறையின் பரிந்துரையின்படி காவிரி மேம்பாட்டுத் திட்ட ஏரிகளை நவீனப்படுத்தத் தயாரித்த மதிப்பீடு மறு பரிசீலனை செய்யப்பட்டபின் மேற்படி கழனிவாசல் பெரிய ஏரி நவீனப்படுத்தப்படும்.



18—

**கீழப்புனல் வாசலிலுள்ள பறையன் குளத்தை தூர் எடுத்து மராமத்து செய்தல்**

வினா எண் 7248—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், கீழப்புனல் வாசலிலுள்ள பறையன் குளத்தை தூர் எடுத்து மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

19—

**துறவிக்காட்டிலுள்ள துறவிக் குளத்தை மராமத்து செய்தல்**

வினா எண் 7290—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், துறவிக்காட்டிலுள்ள துறவிக்குளத்தை மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

இல்லை.

20—

**பு. ஆதனூர் ஏரியை வெட்டி பாசன வசதி செய்து தருதல்.**

வினா எண் 7688—செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புவனகிரி ஒன்றியத்திலுள்ள பு. ஆதனூர் ஏரியை வெட்டி பாசன வசதி செய்து தர அரசு ஆவனசெய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

53—144—18

**விடை—**

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ)

ஆதனூர் ஏரி சீரமைக்கும் பணி தலைமை பொறியாளர் (திட்டம் மற்றும் வடிவமைப்பு) அவர்களால் ஆய்வு செய்து சீரமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீடு தயாரித்து பின் நடைமுறை விதிகளின்படி அரசின் அங்கீகாரம் பெறப்பட்டு திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

21—

அண்ணா மாவட்டத்தில் உள்ள ஆறுகள் மற்றும் ஓடைகளில் பாசனத்திற்காக அணைகள் கட்டுதல்.

வினா எண் 8467—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா மாவட்டத்தில் எந்தெந்த ஆறுகள், ஓடைகளில் எங்கெங்கு பாசனத்திற்காக அணைகள் கட்ட வேண்டுமென கோரிக்கைகள் கடந்த 10 ஆண்டுகளாக அரசுக்கு வந்துள்ளன?

(ஆ) நத்தம் தொகுதியில் இந்த வகையில் அரசுக்கு இதுவரை வந்துள்ள கோரிக்கைகளின் விவரம் என்ன?

(இ) அவற்றின் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ), (ஆ) மற்றும் (இ)

அண்ணா மாவட்டத்தில் உள்ள ஆறுகள் மற்றும் ஓடைகளில் பாசனத்திற்காக அணை கட்ட வேண்டும என்று கடந்த 10 ஆண்டுகளில் அநேக கோரிக்கைகள் வந்துள்ளன. கோரிக்கைகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு; ஆய்வுப் பணிகள் மேற்கொண்டு, பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ரீதியில் சாத்தியக்கூறுகள் இருப்பின் அத் திட்டத்தை நிதிநிலைக்கு ஏற்ப செயலாக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.





22—

டி. வருகப்பட்டி சாலையை சீரமைத்தல்.

வினா எண் 11444—திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி சாணார்பட்டி ஒன்றியம் திம்மண நல்லூர் பஞ்சாயத்திற்குட்பட்ட டி. வருகபட்டி சாலை கிராமச் சாலை திட்டத்தின் கீழ் சீரமைக்கும் பணிகள் துவக்கப்பட்டும் ஒரு பகுதி வேலை முடிந்தும் மற்றொரு பகுதியில் பணி முழுமையாக செய்து முடிக்கப்படாததால் வாகனப் போக்குவரத்துக்கு முறையான சாலை வசதி இல்லாது இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பணி முடிக்கப்படாத அந்தச் சாலையில் மற்றொரு பகுதி எப்போது சீரமைக்கப்படும்?

**விடை—**

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

நத்தம் தொகுதி சாணார்பட்டி ஒன்றியம், திம்மணநல்லூர் பஞ்சாயத்திற்குட்பட்ட டி. வருகப்பட்டி சாலை கிராமச் சாலை திட்டத்தின் கீழ் விடுபட்டுள்ள பகுதியை சீரமைக்க ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளது. விடுபட்டுள்ள பகுதி வேலைகள் விரைவில் செயலாக்கப்படும்.

23—

கழனிவாசல் பெரிய ஏரியில் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

வினா எண் 11924—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவசத்திரம் ஒன்றியம், கழனிவாசல், பெரிய ஏரியில் 1992-93-ல் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

வினாவில் குறிப்பிட்டுள்ள கழனிவாசல் பெரிய ஏரியில் 22.88 ஹெக்டேர் பரப்பளவில் இருந்த ஆக்கிரமிப்புகள் ஏற்கனவே 1990-91 ல் அகற்றப்பட்டுள்ளன.—மேலும் அவ்வப்பொழுது ஏற்படும் ஆக்கிரமிப்புகளை அகற்ற தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

[1993 ஏப்ரல் 26

24—

அருகன்குளம் பெரிய ஏரியை புல்டோசர் வைத்து பராமரித்தல்

வினா எண் 11946 திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஆண்டா கோட்டை அருகன்குளம் பெரிய ஏரியை புல்டோசர் வைத்து பராமரிக்க 1992-93 ஆம் ஆண்டில் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

ஐரோப்பிய நிதி உதவியுடன் தற்போது நவீனப்படுத்தப் படும் ஏரிகளின் பயன்கள் குறித்து திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் பரிசீலனையில் உள்ளது. இப்பரிசீலனைக்குப்பின் அத்துறையின் பரிந்துரையின்படி காவிரி மேம்பாட்டுத்திட்ட ஏரிகளை நவீனப்படுத்தத் தயாரித்த மதிப்பீடு மறுபரிசீலனை செய்யப்பட்ட பின் மேற்படி ஆண்டாகோட்டை அருகன் குளம் பெரிய ஏரி நவீனப்படுத்தப்படும்.

25—

மேற்பனைக்காடு ரயில்நிலையம் வரை செல்லும் நெடுஞ் சாலையை பழுதுபார்த்தல்

வினா எண் 12907—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம் ஆயிங்குடியிலிருந்து மேற்பனை காடு ரயில் நிலையம் வரை செல்லும் நெடுஞ்சாலை பழு தடைந்துள்ளதால் அதை பராமரிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:



1993 ஏப்ரல் 26]

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையின் சரியான பெயர் ஓட்டங்காடு -ஆயிங்குடிசாலை என்பதாகும். இச்சாலை நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள அரசு இதர மாவட்டச் சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 8.00 கி. மீ. (கி.மீ. 27/0-35/0) ஆகும். முழுவதும் தார் தளம் கொண்டது. இச்சாலைக்கு காலமுறை புதுப்பித்தல் தலைப்பின் கீழ் நடப்பு 1992-93 ஆம் ஆண்டில் கி. மீ. 29/0-30/0 மற்றும் 33/0-34/0 பகுதிகளுக்கு மதிப்பீடு ஆங்கீகரிக் கப்பட்டு பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள சாலை கி. மீ. 27/0-29/0-300-33/0 மற்றும் 34/0-35/0 ஆகிய பகுதி களை எதிர்வரும் நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப முன் னுரிமை அடிப்படையில் புதுப்பிக்க நடவடிக்கை மேற்கொள் ளப்படும். மேலும், சாலையில் ஏற்படும் நொடிகள் அவ்வப் பொழுது சாலைப் பணியாளர்களைக் கொண்டு சீர் செய்யப்பட்டு வருகிறது. இவையல்லாமல் வெள்ள நிவாரண நிதியின் கீழ் ஒதுக்கப்பட்ட தொகையின் மூலம் தார் நொடிகள் போடப்பட்டு பேருந்து/வாகனம் போக்கு வரத்திற்கு ஏற்ப நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வரு கிறது.

26—

மானூரான் கால்வாய் குறுக்கே பாலம் அமைத்தல்.

வினா எண் 13673— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ஆலங்குளம் தொகுதி துத்திகுளத் தில் உள்ள மானூரான் கால்வாய் மாறாந்தை கால்வாய் குறுக்கே பாலம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(1) மானூரான் கால்வாய் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(2) மாறாந்தை கால்வாய் குறுக்கே பாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

[1993 ஏப்ரல் 26

27—

திருமலாபுரம் பஞ்சாயத்து ஆதிதிராவிடர் குடிசைகளுக்கு மின் இணைப்பு

வினா எண் 14157—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி ஆ. திருமலாபுரம் பஞ்சாயத்து ஆதிதிராவிடர் குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

திருமலாபுரம் பஞ்சாயத்து ஆதிதிராவிடர் காலனியில் உள்ள 34 குடிசைகளுக்கு மின் இணைப்பு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு குடிசை மின் இணைப்பு கேட்டு விண்ணப்பம் ஏதும் மின் வாரியத்திடம் தற்போது நிலுவையில் இல்லை.

28—

பணக்குடி பஞ்சாயத்து நெருஞ்சி காலனியில் பாலம் பழுது பார்த்தல்.

வினா எண். 14166—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம் தொகுதி, பணக்குடி பஞ்சாயத்து நெருஞ்சி காலனியில் உள்ள பாலம் உடைக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதை பழுது பார்க்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :



1993 ஏப்ரல் 26]

சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள நெருஞ்சி காலனி எனும் குடியிருப்புப் பகுதி பணக்குடி தேசிய நெடுஞ்சாலை எண். 7 புறவழிச்சாலையில் இடது பக்கத்தில் அமைந்துள்ளது. இப்புறவழிச்சாலையில் சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக சாலை உடைப்பு ஏற்பட்டு தேசிய நெடுஞ்சாலை பிரிவினரால் தற்காலிக வெள்ள நிவாரணப் பணிகளின் கீழ் சீர் செய்யப்பட்டுள்ளது.

29—

ஆணைக்குடி பஞ்சாயத்து ஆதிதிராவிடர்களுக்கு மின் இணைப்பு வழங்கல்.

வினா எண். 14653—திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, ஆணைக்குடி பஞ்சாயத்து ஆதிதிராவிடர் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர் :

ஆணைக்குடி பஞ்சாயத்து ஆதிதிராவிடர் குடியிருப்பில் மொத்தம் உள்ள 56 வீடுகளில் 12 வீடுகளுக்கு ஏற்கெனவே மின் இணைப்பு வழங்கப்பட்டு விட்டது. மேலும் ஒரு வீட்டுக்கு மின் அளவு கருவி வைத்து மின் இணைப்பு கோரியுள்ள விண்ணப்பதாரர் காப்புத் தொகை செலுத்தியதும் மின் இணைப்பு வழங்கப்படும்.

மதமுள்ள 43 வீடுகளுக்கு மின் இணைப்பு கோரி விண்ணப்பம் ஏதும் மின் வாரியத்தில் நிலுவையில் இல்லை.

30—

அதம்பை (தெற்கு) பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 1995—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம் திருவோணம் ஒன்றியம் அதம்பை (தெற்கு) பள்ளிக்கு கூடுதல் பள்ளிக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றியம், அதம்பை (தெற்கு) பள்ளிக்கு 1992—93 ஆம் ஆண்டில் ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தில் ரூ. 1,20,000 மதிப்பீட்டில் கூடுதல் கட்டிடம் கட்டித் தொடுக்க திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

31—

## கங்கணாங்கிணர்—மாவிலியூத்து சாலையை செப்பனிடல்

வினா எண். 5112—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியம் கங்கணாங்கிணர்—மாவலியூத்து சாலை செப்பனிடப்படாமலிருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) நெல்லை கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியம் கங்கணாங்கிணர்—மாவிலியூத்து சாலை ரூ. 9,195 செலவில் பழுது பார்த்து முடிக்கப்பட்டுள்ளது.

32—

## சாந்தாம்பேட்டையிலிருந்து தெற்கு பகுதியின் குறுக்கே மெயின் சாலை வரை பராமரித்தல்.

வினா எண். 6736—திரு. ஆர் சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சாந்தாம்பேட்டையிலிருந்து தெற்கு பகுதியின் குறுக்கே மெயின்சாலை வரை செல்லும் சாலையை பராமரித்து கப்பிச் சாலையாக மாற்றித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம், சாந்தாம்பேட்டையிலிருந்து தெற்கு பகுதியின் குறுக்கே மெயின்சாலை வரை செல்லும் சாலையை பராமரித்து கப்பிச் சாலையாக மாற்றித்தர போதிய நிதி வசதி இல்லாததால் தற்போது செயற்குறிப்பேதும் இல்லை.

33—

## கஞ்சசங்காடு ஆதிதிராவிடர்கள் மயானத்திற்கு செல்லும் பாதையை சீரமைத்தல்.

வினா எண். 6773—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் குருவிக்கரம்பை ஊராட்சி கஞ்சசங்காடு ஆதிதிராவிடர்கள் மயானத்திற்கு செல்லும் பாதையை சீரமைத்தும் இடையில் ஓடு பாலம் கட்டியும் மயானத்தில் தகரக்கொட்டகையும் அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் குருவிக்கரம்பை ஊராட்சி கஞ்சன்காடு ஆதிதிராவிடர்கள் மயானத்திற்கு செல்லும் பாதையை சீரமைத்தும் இடையில் ஓடு பாலம் கட்டியும் மயானத்தில் தகரக் கொட்டகையும் அமைத்துக் கொடுக்க போதிய நிதி வசதி இல்லாததால் தற்போது செயற்குறிப்பேதும் இல்லை.

34—

## கரிகவயல் ஆற்றில் பாலம் கட்டுதல்.

வினா எண். 7197—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஒன்றியம் ஒலிராமன்காடு அருகில் கரிகவயல் ஆற்றில் பாலம் கட்டித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் ஒலிராமன்காடு அருகில் கரிகவயல் ஆற்றில் பாலம் கட்டித் தர போதிய நிதி வசதியின்மையினால் தற்போது செயற் குறிப்பேதும் இல்லை.

35—

நத்தமேடு கிராம ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிக்கு பாலம் அமைத்தல்.

வினா எண். 7915—செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

(அ) புவனகிரி தொகுதி நத்தமேடு கிராம ஆதிதிராவிட மக்கள் வசிக்கும் பகுதிக்கு பாலம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) புவனகிரி தொகுதி நத்தமேடு கிராம ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதிக்கு பாலம் அமைப்பதற்கு செயற்குறிப்பேதும் இல்லை.

36—

நெகமம் பேரூராட்சி சாலைகளை செப்பனிடுதல்.

வினா எண். 10147—திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா —

கிணத்துக்கடவு தொகுதி நெகமம் பேரூராட்சி சாலைகளை செப்பனிடும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?





விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

கோவை மாவட்டம், கிணத்துக்கடவு தொகுதி நெகமம் பேரூராட்சி சாலைகளை செப்பனிடுவதற்கு பேரூராட்சியில் நிதிநிலை காரணமாக செயற்குறிப்பு ஏதுமில்லை.

37—

கே. எம். எம். அதிராம்பட்டினம் சாலை—பெய்க்கரம்பைக்காடு சாலையை செம்மண் கப்பிச் சாலையாக மாற்றல்.

வினா எண். 11634—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி பட்டுக்கோட்டை ஒன்றியம் கே. எம். அதிராம்பட்டினம் சாலை—பெய்க்கரம்பைக் காடு சாலையை 1992—93ல் செம்மண் கப்பிச்சாலையாக மாற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் கே. எம். எம். அதிராம்பட்டினம் சாலை—பெய்க்கரம்பை காடு சாலையை 1992—93-ல் செம்மண் கப்பிச்சாலையாக மாற்ற போதிய நிதி வசதியின்மையினால் தற்போது செயற் குறிப்பேதும் இல்லை.

38—

வண்ணான்குளத்தைத் தூர்வாரி ஆழப்படுத்துதல்.

வினா எண். 11927—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி வண்ணான்குளத்தை 1992—93-ல் தூர்வாரி ஆழப் படுத்த அரசிடம் செயற்குறிபுபு உள்ளதா?

[1993 ஏப்ரல் 26

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சை மாவட்டம், திருவோணம் ஒன்றியம், அதம்பை ஊராட்சி வண்ணான்குளத்தை 1992—93ம் ஆண்டில் தூர் அகற்றி ஆழப்படுத்த செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

39—

நடுமனைக் காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீர்மூழ்கி மோட்டார் இணைத்தல்.

வினா எண். 12006—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி நடுமனைக்காட்டிலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலுள்ள மோட்டாரை மாற்றி நீர்மூழ்கி மோட்டார் இணைத்துக் கொடுக்க 1992—93-ல் அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் :

தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணி ஊராட்சி ஒன்றியம் ஒட்டங்காடு ஊராட்சியிலுள்ள நடுமனைக்காட்டில் தற்போது இயங்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து போதுமான தண்ணீர் வசதியுள்ளதால் 1992—93ல் நீர் மூழ்கி மோட்டார் அமைக்க செயற்குறிப்பு ஏதுமில்லை.

40—

செங்கமங்கலம் ஆதிதிராவிடர்களுக்கு தொலைக்காட்சி பெட்டி அமைத்தல்.

வினா எண். 12318—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி, தொகுதி பேராவூரணி ஒன்றியம் செங்கமங்கலம் ஆதிதிராவிடர்களுக்கு 1992—93-ல் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



1993 ஏப்ரல் 26]

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

41—

அம்மையாண்டி ஆதிதிராவிடர் காலனிக்கு தொலைக்காட்சிப் பெட்டி அமைத்தல்.

வினா எண் 12319—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், அம்மையாண்டி ஆதிதிராவிடர் காலனிக்கு 1992–93-ல் தொலைக்காட்சிப் பெட்டி அமைத்துக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை.

42—

சம்பைப்பட்டிணம் கடற்கரை வாய்க்காலை மராமத்து செய்தல்.

வினா எண் 12327—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பைப்பட்டிணம் கடற்கரை வாய்க்காலை 1992–93-ல் மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் ஒன்றியம், சம்பைப்பட்டிணம் கடற்கரை வாய்க்காலை 1992–93-ல் மராமத்து செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

43—

**அனைத்து ஊராட்சிகளுக்கும் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கல்.**

வினா எண் 14024—திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

1992–93-ல் அனைத்து ஊராட்சிகளுக்கும் தொலைக் காட்சிப்பெட்டி வழங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் :

இல்லை, இருப்பினும், சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தில் 1992–93 ஆம் ஆண்டில் 1,112 ஊராட்சிகளுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட உள்ளன.

44—

**Irregularities in the disbursement of loans by the Palugal Agriculture Primary Bank in Kanyakumari District.**

வினா எண் 8311—திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(a) Whether the Government are investigating into irregularities in the disbursement of loans by the Palugal Agriculture Primary Bank in Kanyakumari District; and

(b) the details thereof

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் :

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.



45—

**தருமபுரி மாவட்டத்தில் மா, தக்காளி ஆகியவற்றை சங்கங்கள் மூலம் ஏலம் விடுதல்.**

வினா எண் 14545—திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவுச் சங்கங்களில் பருத்தி, நிலக்கடலை போன்ற வற்றை ஏலம் மூலம் நல்ல விலை கிடைக்கச் செய்வதுபோல, தருமபுரி மாவட்டத்தில் மா, தக்காளி ஆகியவற்றை சங்கங்கள் மூலம் ஏலம் விட்டு விவசாயிகள் பயன்பெற நடவடிக்கை மேற் கொள்ளப்பெறுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ?

விடை—

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன், உணவு மற்றும் கூட்டுற வுத்துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ): மா- தக்காளி ஆகியவற்றை கூட்டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் விற்க ஏற்கெனவே ஏற்பாடு செய்து விவசாயிகள் கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு கொண்டு வரப் பெறாமல் இருந்ததனால், இப்பணி மேற்கொள்ளப்படாமல் உள்ளது. மீண்டும் வரும் பருவ காலங்களில் தருமபுரி மாவட் டத்தில் செயல்படும் 5 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட் டுறவு விற்பனை சங்கங்கள் மூலம் தக்காளியும் குறிப்பாக கிருஷ்ண கிரி கூட்டுறவு விற்பனை சங்கங்களில் ஏலம் மூலம் மா விற்பனை செய்ய சிறப்பான நடவடிக்கை மேற்கொள்ள தருமபுரி மாவட் டத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு அறி வுரை வழங்கப்பட்டுள்ளது.

46—

**கேரள மாநிலத்திற்கு தடையின்றி வைக்கோல் எடுத்துச் செல்லுதல்.**

வினா எண் 9448—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்காசி பகுதிகளிலிருந்து கேரள மாநிலத்திற்கு வைக்கோல் தடையின்றி செல்வதால் வைக்கோல் விலை ஏறுவதை அரசு அறியுமா?

[1993 ஏப்ரல் 26

(ஆ) ஆம் எனில், வைக்கோல் கொண்டு செல்வதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் :

(அ) மற்றும் (ஆ) : தமிழகத்திலிருந்து வெளிமாநிலங்களுக்கு வைக்கோல் கொண்டு செல்வதை அத்தியாவசிய பொருட்கள் சட்டத்தின்கீழ் ஆறு மாதங்களுக்கு தடை செய்வதற்கு அதிகாரம் கோரி மத்திய அரசுக்கு பிரேரணை அனுப்பியதில் மத்திய அரசு தமிழகத்தில் தற்போது வறட்சி நிலை ஏதும் இல்லாததாலும், வைக்கோலினை பிற மாநிலங்களுக்கு எடுத்து செல்வதை தடை செய்வது உகந்ததல்ல என கருத்து தெரிவித்ததால் மேற்கூறிய பிரேரணை கைவிடப்பட்டது.

47—

கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் சானார்பட்டி ஒன்றிய கிராமங்களில் வீடுகட்டும் திட்டம்.

வினா எண் 8052—திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராம வீடு கட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நத்தம் தொகுதி சானார்பட்டி ஒன்றியத்தில் கடந்த 3 ஆண்டுகளில் (1990–91) வரை எத்தனை பேர்களுக்கு வீடுகட்ட கடன் வழங்கப்பட்டது?

(ஆ) நடப்பு நிதி ஆண்டில் கடன் கோரி எத்தனை பேர் விண்ணப்பித்துள்ளனர் ?

(இ) இதுவரை எத்தனை பேர்களுக்கு கடன் வழங்கப்பட்டது?

விடை—

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் :

(அ) 1990–91 ஆண்டு வரை உள்ள கடந்த மூன்று ஆண்டுகளில் நத்தம் தொகுதி சானார்பட்டி ஒன்றியத்தில் கோபால்பட்டி



1993 ஏப்ரல் 26]

மருநூத்து இராஜக்கூர்பட்டி, முளைலக்கிழவம்பட்டி, வலசுபட்டி, ராமராஜபுரம், சானார்பட்டி என்ற ஏழு கிராமங்களுக்கு 85 நபர்களுக்கு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) நடப்பு நிதி ஆண்டு 1991—92ல் கடன் கோரி 38 பேர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

(இ) 39 பேர்களில் 17 பேர்களுக்கும், 1990—91ல் கடன் வழங்கப்பட்ட 85 பேர்களையும் சேர்த்து 102 பேர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

48—

விளாத்திகுளம் ஆதிதிராவிட மக்களுக்கு குடிநீர் வசதி.

வினா எண். 4941—திருமதி என். கனகவல்லி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திகுளம் தொகுதி முழுவதிலும் ஆதிதிராவிடர்கள் அதிகமானோர் குடிநீர் வசதியில்லாமல் சிரமப்படுவதால் இவர்களுக்கு குடிநீர் வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் :

விளாத்திகுளம் நகரப் பேரூராட்சி மற்றும் ஒட்டபிடாரம் விளாத்திகுளம், புதூர் கருங்குளம் மற்றும் கயத்தார் ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 189 கிராமங்களுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர்கள் வாழ்ந்து வரும் 50 கிராமங்கள் பயன் பெற உள்ளன.

49—

பாலாமடை கிராம சீர் மரபினருக்கு இலவச வீடு கட்டும் திட்டம்.

வினா எண் 15280—திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனவளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியப் பாளையங்கோட்டை கிராம சீர்மரபினருக்கு இலவச வீடு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?

விடை —

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர் :

மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்புகளில் நரிக் குறவர்களைத் தவிர பிற பிரிவினருக்கு வீடுகள் கட்டித்தரும் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

50—

## கைவினைஞர்களுக்கு அரசு நிதி உதவி.

வினா எண் 7731— திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) எந்தெந்த தொழில் கைவினைஞர்களுக்கு அரசு நிதி உதவி வழங்கப்படுகிறது ?

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் அரசு நிதி உதவி பெற்றோர் எண்ணிக்கை மாவட்ட வாரியாக எவ்வளவு?

விடை—

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், ஊரகத் தொழில்துறை அமைச்சர் :

(அ) கைவினைஞர்களுக்கு அரசு நிதி உதவி வழங்கப்படும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) கைவினைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் திட்டம் ஏதும் செயற்படுத்தப்படாத காரணத்தால் மாவட்ட வாரியாக கடந்த 3 ஆண்டுகளில் நிதி உதவி பெற்றோர் எண்ணிக்கை குறித்த கேள்வி எழவில்லை.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெறாதது என்பதைக் குறிக்கும்.]



## 2. உரிமைப் பிரச்சினை.

### கைது செய்யப்பட்ட உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டது பற்றி பேரவைக்கு அளித்த தகவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை மீறல் பிரச்சினை மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தான் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டது தொடர்பாக, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் மீது உரிமை மீறல் பிரச்சினை ஒன்றை அவையில் எழுப்ப அனுமதி கோரி அறிவிப்பைக் கொடுத்துள்ளார். இதைப் பேரவையில் எழுப்ப அனுமதி அளிக்கிறேன். இது எவ்வாறு அவை உரிமை மீறல் பிரச்சினையில் அடங்கும் என்பதை மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. பரிதி இளம்வழுதி.

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 219இன்கீழ் கீழ்க்கண்ட உரிமை மீறல் பிரச்சினையை மாண்புமிகு பேரவைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு வாய்ப்பினை வழங்கிய தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த 21—4—1993 அன்று இரவு 10.30 மணி அளவில் நானும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் பி-3, கோட்டை காவல் நிலையப் போலீசாரால் கைது செய்யப் பட்டோம். காவல் நிலையத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு, சொந்த ஜாமீனில் போகும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்கு நாங்கள் மறுத்து விட்டதால், மறுநாள் 22—4—1993 அன்று காலை எங்களை நீதிமன்றத்திற்குக் கொண்டு சென்றார்கள். அங்கு, நீதிமன்றத்தில் ஏ.பி.பி.யிடம் எப்.ஐ.ஆர். புகார், அரஸ்ட் கார்டு, ஜாமீன் பத்திரம் தவிர வேறு ஆவணங்கள் ஏன் தாக்கல் செய்யப்படவில்லை என்று கேட்டதற்கு, ஏ.பி.பி. அவர்கள், நீதிபதியிடம் தன்னிடம் வழக்குக் கோப்பு உள்ளது ; ஆனால், கோப்புகளில் உள்ள குறிப்புகளில் நகல்கள் தாக்கல் செய்யவில்லை என்று ஒப்புக் கொண்டார். மேலும், எங்களை கோர்ட்டில் ஆஜர்படுத்தி, தாக்கல் செய்யப்பட்ட காவல் கேட்பு அறிக்கையில் எங்களை காவலில் வைக்கக் கோரப்படவில்லை. மேலும் நாங்கள் ஜாமீனில் செல்ல மறுத்துவிட்டதால், நீதி மன்றத்தில் தக்க நடவடிக்கை எடுக்க ஆஜர்படுத்தியதாகவும் அரசு தரப்பில் கூறப்பட்டது. எனவே, எங்களை காவலில் வைக்கத் தேவையில்லை என்று கருதி மாண்புமிகு நீதிபதி அவர்கள் எங்களை விடுவித்தார். உண்மை நிலை இவ்வாறு இருக்க, மாண்புமிகு நிதியமைச்சரும் பேரவை முன்னவருமான மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் 23—4—1993 அன்று சட்டப் பேரவையில், நானும், திரு. சி. ஞானசேகரனும், நீதி மன்றத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு, சொந்த ஜாமீனில் வெளியே வந்ததாக, உண்மைக்குப் புறம்பான தகவலைப் பேரவையில் தெரிவித்திருக்கிறார்.

முற்பகல் 11-05

வேண்டுமென்றே எங்களைக் களங்கப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில், உண்மைக்குப் புறம்பான தகவலைப் பேரவையிலே தெரிவித்திருக்கிறார்.

இதில் என்னுடைய உரிமை மீறியது மட்டுமல்ல ; கண்ணியம் மிக்க இந்தப் பேரவையின் உரிமையையும் மீறியிருக்கிறார். எனவே, இந்த உரிமைப் பிரச்சினையை உரிமைக் குழுவிற்கு அனுப்பி, விசாரித்து, மாண்புமிகு அவை முன்னவர் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவையின் உறுப்பினரான பேரவை முன்னவர் பற்றியிருக்கிற காரணத்தால் எழுப்பப்பட்டுள்ள இப்பிரச்சினை குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களுக்கும் விளக்கம் அளிக்க அனுமதி அளிக்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர்.

*மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 23—4—1993 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள், 21—4—1993 அன்று காவலர்களை இந்த சட்டமன்ற வளாகத்தில் அத்துமீறி தாக்கிய சட்டமன்ற உறுப்பினர்களைப் பொறுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும், உள்ள நிலைமை குறித்தும் அறிய விரும்பினார். அதன் பேரில் நான் விளக்கம் தந்தேன்.

காவல் துறையினரிடம் நான் கேட்டறிந்து வைத்திருந்த குறிப்புகளை—குறிப்புகளின்படி தகவல் தந்தேன்.

நான் வேண்டுமென்று எதையும் இட்டுக்கட்டிச் சொல்லவில்லை, சொல்ல வேண்டிய அவசியமும் இல்லை. உள்நோக்கத்தோடோ அல்லது யாரையும் களங்கப்படுத்த வேண்டுமென்றோ நான் எதையும் குறிப்பிடல்லை. உண்மைக்குப் புறம்பாம கூறி வேண்டும் என்பதற்காகவும் நான் எதையும் சொல்லவில்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களின் உரிமையை மீறி எதையும் சொல்லவில்லை. இந்த அவையின் உரிமையை மீறியும் எதையும் நான் குறிப்பிடவில்லை.

இந்த நிலைமைகளையெல்லாம் விளக்கி எடுத்துச் சொல்லியதற்குப் பிறகு அவர்கள் கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்திலே கொண்டு போய் வைக்கப்பட்டு, அவர்கள் P. S. R. என்று சொல்லப்படுகின்ற, *Prisoners Search register-லே

---

*பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



அவர்கள் கைது செய்யப்பட்டதற்குக் கையெழுத்து வாங்கி, பிறகு அவர்கள் காவல் நிலையத்திலேயிருந்து வெளியேறுகின்றபொழுதும் அவர்கள் அதிலிருந்து பொருள்களைத் திரும்பிப் பெற்றுக் கொண்டதற்காக மறுபடியும் கையெழுத்து வாங்கிக் கொண்டு காவல் நிலையத்திலேயிருந்து வெளியே கொண்டு வந்தார்கள். காவல் நிலையத்திலே, சொந்த ஜாமீனில் நீங்கள் போகலாம் என்று சொன்னபொழுது, நாங்கள் ஜாமீனிலே போக விரும்பவில்லை, காவல் துறையிலேயே இருக்கிறோம் ; இங்கேயே இருக்கிறோம், காவலிலேயே என்று சொன்னதற்குப் பிறகு, காவல் துறையினர் வேறு வழியில்லாமல் அவர்களை நீதிமன்றத்திற்குக் கொண்டு போனார்கள், நிலைமை இது. இதற்கேற்ற Appropriate action தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம் என்று அங்கே எடுத்துச் சொல்லி இருக்கின்றார்கள். ஆகவே bailable Section—லே தான் அவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன.

ஆகவே, ஜாமீனிலே வெளியே போகக்கூடிய வழக்கே தவிர, இது ஜாமீனில் விடக்கூடாது என்பது அல்ல ; ஜாமீனில் விடக்கூடாது என்றால்தான் ரிமாண்டில் வைக்க வேண்டுமென்று அரசுத் தரப்பிலே வாதாடுவதும், அதை நீதிபதி கேட்பதும், அதில் நியாயம் இருக்கிறதா இல்லையா என்று கண்டறிந்து தீர்ப்பு வழங்குவதும் இருக்கும்.

ஆனால், நீதிபதி என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று சொன்னால், காவல் துறையினர் எடுத்து வைத்த கருத்துக்களைக் கேட்டறிந்தவர்கள், இரு எம்.எல்.ஏ.வை ஆஜர்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட காவல் கேட்பு அறிக்கையில் அவர்களைக் காவலில் வைக்கக் கோரப்படவில்லை. அவர்கள் ஜாமீனில் செல்ல மறுத்துவிட்டதால் ஆஜர்படுத்தப்பட்டதாகவும், நீதிமன்றத்தில் தக்க நடவடிக்கை எடுக்க ஆஜர்படுத்தப்பட்டதாகவும் அரசுத் தரப்பில் கூறப்பட்டது. எனவே, அவர்களைக் காவலுக்கு அனுப்ப வேண்டுமா என்று தீர்மானிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை எனக் கருதுகிறேன். எனவே அவர்களைக் காவலில் வைக்கத் தேவையில்லை என்று கருதி விடுவிக்கிறேன் என்று தீர்ப்பு அளித்திருக்கின்றார்கள்.

ஆகவே, நீதிமன்றத்தில் காவலர் கொண்டு போய் நிறுத்துகின்றபொழுதே ஜாமீனில் செல்ல மறுத்து விட்டதன் காரணமாக, இங்கே நீதி மன்றத்திலே அவர்கள் சொந்தப் பொறுப்பிலே செல்லலாம் என்று காவலர்கள் சொல்லி, அவர்கள் செல்லாததன் காரணமாக, நீதிமன்றத்திலே கொண்டு வந்து தக்க முடிவு எடுக்க வேண்டும் என்று நிறுத்தியிருக்கிறோம் என்று அவர்கள் சொன்னார்கள்.

ஆகவே, நீதிபதி, சொந்த ஜாமீனிலே அவர்கள் போகலாம் என்று காவலர் சொல்லியதைப் பற்றி எதையும் குறிப்பிடாமல் விப்படி ஜாமீனில் செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும் தீர்ப்பு அளிக்கவில்லை. ஆகவே, இவர்களைக் காவலில் வைக்க வேண்டுமா, வேண்டாமா என்ற பிரச்சினை இருக்கின்றபொழுது, அரசுத் தரப்பிலே காவலில் வைக்க வேண்டாமென்று சொல்லி விட்டதன் காரணமாக, இதில் பிரச்சினை எழவில்லை.

முற்பகல் 11-10

எனவே, அவர்களைக் காவலில் வைக்கத் தேவையில்லை என்று கருதி, விடுவிக்கிறேன் என்று சொன்னதன் காரணமாக, காவல் துறை, காவல் நிலையத்திலிருந்து சொன்ன ''சொந்தப் பொறுப்பிலே போகலாம்'' என்பது அப்படியே இருக்கிறது. அதை ஏற்றுக்கொண்டுதான் நீதிபதி வெளியே விட்டிருக்கிறார் என்ற கருத்துத்தான் கொள்ள வேண்டும். அவர்கள் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள் என்ற கருத்து சில பல ஏடுகளில் வந்திருக்கிறது. வழக்குகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன, அவைகள் எல்லாம் முறைப்படி நடக்கும். ''சம்மன்'' வருகிற போது, அவர்கள் வந்து சேரவேண்டும். அந்த நிலைமைகள் எல்லாம் அப்படியே இருக்கின்றன. ஆக, இந்த நிலைமைகளை யெல்லாம் எடுத்துச் சொன்னேனே தவிர, கிடைத்த தகவலை எடுத்துச் சொன்னேனே தவிர, இங்கே யாரையும் களங்கப்படுத்த வேண்டும் என்றோ, உரிமை பாதிக்கப்பட வேண்டும் என்றோ, எந்த நிலைமையும் இதிலே இல்லை என்பதை மட்டும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இதிலே, உரிமை மீறல் பிரச்சினை இல்லை......(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை, (குறுக்கீடு) கேளுங்கள்; அவர் விளக்கம் அளித்தார் ; நீங்களும் சொல்லி விட்டீர்கள். அடுத்த பொறுப்பு எனக்கு இருக்கிறது, இந்த இரண்டிற்கும் என்ன முடிவு சொல்ல வேண்டும் என்பது பற்றி.. (குறுக்கீடு).

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அளித்த விளக்கத்திலே, நீதிமன்றத்திலே கையெழுத்து போட்டுவிட்டுத்தான் சொந்த ஜாமீனிலே வெளியே வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை. நீதிமன்றத்திலே கையெழுத்து போட்டுவிட்டு சொந்த ஜாமீனில் போனார்கள் என்பதுபோல் அவர் சொல்லவில்லை. அங்கேயிருந்து விடுவிக்கப் பட்டார்கள் என்றுதான் இப்போதும் சொல்கிறார். அங்கு காவலில் வைக்க வேண்டியதில்லை என்று காவல் துறையினரே கேட்டிருக்கிற காரணத்தினால், மேற்கொண்டு உங்களைக் காவலில் வைக்க வேண்டியதில்லை என்பதால் விடுவித்திருக்கி





றோம் என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதைத்தான் சொல்லியிருக்கிறார். இதிலே ஒன்றும் இல்லை; மேற்கொண்டு விவாதம் வேண்டாம். (குறுக்கீடு) இல்லை. நீங்கள் சொன்னீர்கள் ; சொன்னதற்கு நான் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) இல்லை ; இதற்கு மேற்கொண்டு விவாதம் வேண்டாம். நீங்கள் இரண்டு பேரும் விளக்கம் சொன்னதற்கு, நான் இதிலே முடிவு சொல்ல வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்று பேசிய சட்டசபைக் குறிப்புகளை நான் வைத்திருக்கிறேன். அவர்கள் சொன்னது, ஜாமீனிலே வெளியே போக மறுத்து விட்டதன் காரணமாக, உரிய நடவடிக்கைகளை நீதிமன்றம் எடுத்துக் கொள்ளட்டும் என்பதற்காகத்தான் இங்கே கொண்டு வந்திருக்கிறோம் என்பது காவல் தரப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. நீதிபதி, அவர்கள் தங்கள் பொறுப்பிலே வெளியேற அவர்களுக்கு அனுமதி அளித்தார்கள். அதன்பிறகு, அவர்கள் வெளியேறி விட்டார்கள். இதுதான் நடந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். கையெழுத்து போட்டது என்று நான் சொன்னது, பி.எஸ். ஆர்.-லே, ஆக, அவர்கள் கைது செய்யப்படும்போதும் கையெழுத்து போட்டிருக்கிறார்கள், *பிரிசனர்ஸ் செர்ச் ரிஜிஸ்டரிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பிரிசனர்ஸ் செர்ச் ரிஜிஸ்டர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த செர்ச் ரிஜிஸ்டரிலே கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள்; காவல் நிலையத்திலே யிருந்து வெளியேறும்போதும் கையெழுத்துப் போட்டிருக்கிறார் கள் என்பதுதான் நான் சொன்னது, இங்கே போட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. சிலபல பத்திரிகைகளிலே மாறு பட்டு வந்திருக்குமேயானால், அதற்கு நான் பொறுப்பல்ல, (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்னதற்குப் பிறகு, மற்றவர்கள் எல்லாம் பேச வேண்டாம். பரிதி இளம் வழுதி அவர்கள் எழுப்பிய பிரச்சினைக்குப் பேரவை முன்னவர் தெரிவித்த விளக்கத்திற்குப் பிறகு, இதில் உரிமை மீறல் எதுவும் இல்லாத காரணத்தினால், இப்பிரச்சினை இப்போது இந்த அளவில் கைவிடப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு நீங்கள் தெரிவிப்பது எதுவும் அவைக் குறிப்பிலே இருக்காது. உட்காருங்கள். (குறுக்கீடு) உங்களுக்கு நான் அனுமதி அளித்து, அவர்கள் பதிலும் சொன்னதற்குப் பிறகு வேண்டாம் (குறுக்கீடு) அதற்குப் பிறகும் உங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தேன். அதற்கும் பேரவை முன்னவர் பதில் தெரிவித்தார் (குறுக்கீடு) வேண்டாம்;

* பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள் (குறுக்கீடு). அதைத்தான் சொல்கிறார். அவைக் குறிப்பிலே என்ன இருக்கிறது என்பதை நீங்கள் சொன்னதற்கு, பேரவை முன்னவர் இங்கே தெரிவித்ததற்குப் பிறகு, வேறு எந்த விவாதமும் வேண்டாம். நான் தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு, இந்த உரிமைப் பிரச்சினையில் வேறு எந்த விவாதமும் இருப்பது சரியல்ல. தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்குப் பிறகு, நான் தீர்ப்பு அளித்ததற்குப் பிறகு அவர் பேசிய எதுவும் அவைக் குறிப்பில் இடம் பெறாது.

## 3. விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கை.

கிறித்துவராக மாறிய வன்னியகுல சத்திரியர், அவர்தம் உட்பிரிவினருக்கு மிகப் பிற்படுத்தப்பட்டோருக்கான சலுகைகள் வழங்குவது குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 110-இன் கீழ் மிகப் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருள்பற்றிப் பேரவைக்கு அறிக்கை அளிக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த அறிக்கையைப் பேரவைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைப்பார்கள்.

முற்பகல் 11-15

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி, வன்னியகுல சத்திரியரும், அவர்தம் உட்பிரிவுகளும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இடம் பெற்றுள்ளமையால், மிகப் பிற்படுத்தப்பட்டோருக்குரிய கல்விச் சலுகைகளோடு, அரசு வேலை வாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதிலும் 20 சதவிகித ஒதுக்கீட்டின் கீழ் பயன்பெற்று வருகின்றனர். ஆனால் கிறித்துவராக மதம் மாறிய வன்னியகுல சத்திரியரும், அவர்தம் உட்பிரிவுகளும் அரசு வேலைவாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோருக்குரிய ஒதுக்கீட்டின் கீழ் பயன்பெற முடியாமல் பிற்படுத்தப்பட்டோருக்குரிய ஒதுக்கீட்டின்கீழ்தான் பயன்பெற்று வருகின்றனர். 23-4-1993 அன்று வன்னிய சமுதாயத்தின் சார்பில் உள்ள 23 சங்கங்களினுடைய பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து, தங்களது மிக முக்கியக் கோரிக்கையான கிறித்துவ மதத்திற்கு மாறிய வன்னியர்களுக்கும், இந்து மத வன்னியர்களுக்குள்ள சலுகைகள் அனைத்தும் கிடைக்க ஆவன செய்திட வேண்டுகோள் விடுத்தனர், வன்னிய



சமுதாயத்தின் மிக முக்கியமான இந்தக் கோரிக்கையை உடனடியாகப் பரிசீலனை செய்வதாக நானும் உறுதிமொழி அளித்தேன். வன்னிய சமுதாயச் சங்கங்களின் பிரதிநிதிகளிடம் அளித்த உறுதிமொழிக்கேற்ப வன்னிய குல சத்திரியரும் அவர்தம் உட்பிரிவினரும் கிறித்துவராக மதம் மாறினாலும், அவர்களும் மிகப் பிற்படுத்தப்பட்டோராகவே கருதப்பட்டு, உரிய சலுகைகள் அனைத்தும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உத்திரவினால் வன்னிய சமுதாயத்தினரின் மிக முக்கியமான கோரிக்கை நிறைவேற்றப்படுகிறது. இனி, கிறித்துவர்களாக உள்ள வன்னியர்கள் கூட அவர்களும் மிகப் பிற்படுத்தப்பட்டவராகவே கருதப்பட்டு, ஏனையக் கல்விச் சலுகைகளோடு, அரசு வேலைவாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களில் அனுமதி பெறுவதிலும் 20 சதவீகித ஒதுக்கீட்டின் கீழ் பயன்பெறுவர். (மேசையைத் தட்டும் ஒலி.

## 4. கவன ஈர்ப்பு.

வேடந்தாங்கல் ஏரிக்கரையில் கட்டிடங்கள் கட்டும் பணி தொடங்கியிருப்பதால் பறவையின வருகை மற்றும் வாழ்க்கைப் பாதிப்பு ஏற்படுதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. எச். எம். ராஜு இருக்கையில் இல்லை.

அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி கே. மரியம் உல் ஆசியா அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வேடந்தாங்கல் ஏரி அருகில் வர்த்தகக் கட்டிடங்கள் 'கட்டும் பணி தொடங்கியிருப்பது குறித்து'' மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு அருகாமை யிலேயே வர்த்தக நோக்கத்துடன் கட்டிடங்கள் கட்டப்படுவது குறித்து ஏற்கனவே வனத்துறையின் கவனத்திற்குக்கொண்டு வரப்பட்டுள்ளது.

வேடந்தாங்கல் பறவைகள் தங்கிடும் ஏரிக்கு வெகு அருகில் ஒரு மோட்டல் கட்டுவதற்கு தனியாரால் நடவடிக்கை எடுப்பது சென்னை வன உயிரினக் காப்பாளர், சென்னை அவர்கள் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார். மேற்சொன்ன கட்டிடம் கட்டும் பணியை நிறுத்திவைக்க மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு வட்டார வளர்ச்சி அலுவலருக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் எழுதியுள்ளார். வட்டார வளர்ச்சி அலுவலரும் இது தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் செய்து நடவடிக்கை எடுத்து வருகிறார். மேலும், பறவைகளின் சரணாலயத்தைச் சுற்றியுள்ள தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்தி 'பாதுகாக்கப்பட்டப் பகுதி' என அறிவிக்கலாம் என்று மாவட்ட ஆட்சியர் கருத்து தெரிவித்துள்ளார் இது தொடர் பாக கிண்டி தேசிய பூங்காவின் வன சரகரின் அறிக்கைப் பெறப் பட்டு, நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளும் செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அகில இந்திய அளவில் புகழ்பெற்ற வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயத்திற்கு நல்ல பருவத்தில் 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை பறவைகள் வரும். 30 எக்டேர் பரப்பளவில் நீர் நிரம்பிக் காணப்படும் வேடந்தாங்கல் ஏரி பாசன ஏரியாகும். இதில் வளர்ந்துள்ள மரங்கள் பறவை வந்து அமரவும், கூடு கட்டி, முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கவும் ஏற்றதாக இருக்கின்றன. ஏரியில் இருக்கும் மீன்களும், நண்டு களும் நல்ல உணவாக அமைகின்றன. கடற்கரையோரம் சுமார் 100 கி. மீட்டர் தொலைவிற்குள் இருப்பதால் அரிய கடல் பறவைகள் கூட இந்த இடத்தைத் தேடி வருகின்றன. பனிப் பிரதேசமான சைபீரியாவிலிருந்தும் கூடப் பறவைகள் இங்கே வருகின்றன. பறவையாளர்களும், சுற்றுலாப் பயணிகளும், பறவைகளைப் பார்ப்பதற்காக மட்டுமே வேடந்தாங்கலுக்கு வரு கின்றனர். அப்படிப்பட்ட வேடந்தாங்கலில் பறவைகளின் நட மாட்டத்திற்கே ஆபத்து ஏற்படும் வகையில் ஏறிக் கரையருகே பெரிய கட்டிடங்களைக்கட்டும் பணி தொடங்கப்பட்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் தங்க வசதியாக விடுதிகள், ஓட்டல்கள் இல்லை என்பது உண்மையானாலும், அரிதான இந்தப் பறவை களின் வருகைக்கும், வாழ்க்கைக்கும் ஆபத்தாக முடியக்கூடிய கட்டுமானப் பணிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். ஓய்வு இல்லம், விருந்தினர் இல்லம், தங்கும் விடுதி என்று பல பெயர்



களில் ஏரிக் கரைக்கருகில் அடுக்குமாடிக் கட்டிடங்களைக் கட்டி னால் சுற்றுலாப் பயணிகளின் தங்கல் அதிகரிக்கும். அவர்கள் குடும்பத்துடன் வேன்களிலும், கார்களிலும் வந்து செல்வார்கள். வாகனங்களிலிருந்து வரும் கரும்புகைக் காற்றினால் மாசு கெடக் கூடிய சூழ்நிலையும், அடுத்து, வாகனங்களின் இரைச்சலினால், மக்களின் கூச்சலினால், அமைதி குலைந்து, பறவைகள் அச்சப் படும் நிலை ஏற்பட்டு, பறவைகளே வேடந்தாங்கலை விட்டுச் செல்ல வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே, இந்த ஆபத்தைத் தடுக்கின்ற வகையில், உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு 'மோட்டல்' கட்டுவதற்காக அங்கே சில பேர்கள் முயன்றார்கள். உடனடியாக அது கண்டு பிடிக்கப்பட்டு அரசு நடவடிக்கை மேற்கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அதைத் தடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண் டிருக்கிறார்கள். அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு வழக்குப்பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல வேடந்தாங்கல் பறவைகள் சரணால யத்தை உடனடியாக சரணாலயமாக அறிவிப்பதற்கு அரசு நட வடிக்கை மேற்கொள்ள இருக்கிறது. அந்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டவுடன் நீங்கள் சொல்வதைப் போல 20 கி.மீ. சுற்றளவில் எந்தக் கட்டிடம் கட்டப்படுவதையும் அரசு அனுமதிக் காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடந்தாங்கல் ஏரிக்கு ஏற்பட்டுள்ள ஆபத்தைத் தடுத்து நிறுத்தும் வகையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந்தியாவில் புகழ்பெற்ற பறவைகள் நிபுணரும், இந்திய வன விலங்குத் துறையின் வனவிலங்கு பாதுகாப்புக்காக முதல் தேசிய விருதைப் பெற்றவரும், உலக பறவைகள் பாதுகாப்பு அமைப்பில் பணியாற்றியவரும், பறவைகள் ஆராய்ச்சிக்காக உலகில் அனைத்துப் பகுதிகளில் இருந்து ஏராளமான விருதுகளும், பட்டங்களும் பெற்றவரும், முன்னாள் ராஜ்ஜிய சபை உறுப்பினரும், 89 வயதிலும் பறவைகள் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்து தம் வாழ்நாள் முழுவதும் பறவைகள் பற்றிய சிந்தனையோட்டத்தில் மூழ்கி இருந்த இந்தியாவிலும், உலக அரங்கிலும் புகழ்பெற்ற பறவைகள் நிபுணராக விளங்கிய டாக்டர் சலீம் அலி அவர் களின் பெயரை இந்தியாவில் புகழ்பெற்ற பறவைகள் சரணா லயமான, வேடந்தாங்கல் சரணாலயத்திற்கு சூட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பரிசீலினையில் எடுக்கும்.

## 5. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) மதிப்பீட்டுக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல், மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. வி. பி. சந்திரசேகர், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் சார்பாக.

திரு. வி. பி. சந்திரசேகர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினராகிய நான், குழுவின் தலைவர் சார்பாக கீழ்க்கண்ட அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

9-வது அறிக்கை— தமிழ்நாடு பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும், தீர்வைகளும் நிர்வாகம் ;

10-வது அறிக்கை— பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலன்; மற்றும்,

11-வது அறிக்கை— பத்திரப் பதிவுத் துறை. போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தால் மேற்கண்ட அறிக்கைகளை அச்சிட்டு அளிக்க இயலவில்லை. படி எடுத்த நகல்கள் உறுப்பினர்களின் பார்வைக்காக பேரவையின் நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன.

### (ஆ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. என். ஆர். சிவபதி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் சார்பாக.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1992—93-ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 26-வது, 27-வது, 28-வது, 29-வது, 30-வது மற்றும் 31-வது அறிக்கைகளைக் குழுவின் தலைவர் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



## 6. மானியக் கோரிக்கைகள் 1993—94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி..

### (அ) கோரிக்கை எண் 29—சமூக நலன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

மானியக் கோரிக்கை எண். 29—சமூக நலன். மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''மானியக் கோரிக்கை எண். 29—சமூக நலத் துறை மற்றும் சத்துணவுத் திட்டம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 440,46,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு ஒதுக்கித்தர வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப்படவில்லை. மானியக் கோரிக்கைகள் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு அவையின் முன் வைக்கப்பட்டுள்ளன. அதில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை நான் இந்த அவையில் ஆற்றிய உரையாக அவைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான யோசனைகளுக்குப் பின் என்னுடைய பதிலுரையை அளிக்கின்றேன் அதோடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஊட்டச் சத்து என்பது என்ன? அதை எப்படி உபயோகிக்க வேண்டும் ? எப்படிப்பட்ட ஊட்டச் சத்துக்களை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தினந்தோறும் தங்களுடைய இல்லங்களில் உபயோகிக்க வேண்டும் என்பதை எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் தெரிந்துகொள்வது அவர்களுடைய உடல்நிலையை சிறப்பாக கவனித்துக் கொள்வதற்கு நலன் பயக்கும் என்கின்ற அடிப்படையில், இன்று அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கேழ்வரகு. பயத்தம் பருப்பு மாவினால் ஆன ஊட்டச்சத்து உருண்டையும் ஒரு கப்பு சூப்பும், ஒரு முட்டையும் வழங்கப்படுகிறது. இதை சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதை உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்

---

*866—867 ஆம் பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெரும் பகுதியான உறுப்பினர்களுக்கு ரொம்ப ஊட்டம் கூட இருக்கிற மாதிரிதான் தெரிகிறது எனவே. துறையின் மூலம் எந்த அளவிற்கு ஊட்டச் சத்து வழங்கப்படுகின்றது என்பதைத் தெரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக அவர்கள் வழங்கியிருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பெற்று அதைத் தெரிந்துகொள்ளலாம் அதை வழங்கிய மாண்புமிகு அமைச்சருக்குப் பேரவையின் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதுவும் ஜூன் ஒருநாள் மட்டும் தரப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன் (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் தொடங்குகிறது. செல்வி கோ. மல்லிகா.

முற்பகல் 11,25

செல்வி கோ. மல்லிகா : வணக்கத்திற்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. வறட்சியால் வாடுகின்ற தமிழகத்தை வளம் கொழிக்கும் தமிழகமாக மாற்றிக் காட்ட அல்லும் பகலும் அயராது உழைத்து. தமிழ்ச்சமுதாய மக்கள் எல்லா நிலைகளிலும் சிறப்பெய்த வேண்டும் என்று சிறப்பான திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செம்மையாக நிறைவேற்றிட திட்டங்களை உருவாக்கித் தரும் புத்துலகச்சிற்பி புரட்சித்தலைவி அவர்களின் தாள் பணிந்து என் உரையைத் துவக்க விரும்புகிறேன்.

நாட்டின் வளர்ச்சி சீராக இருக்க வேண்டுமென்றால் பெண்கள், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோர் நலன் பேணப்படவேண்டும் என்கிற விழுமிய நோக்கத்தின் அடிப்படையில் அவர்களின் நலன் காக்க பல்வேறு நடவடிக்கைகள் இந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதை இந்த அவையும் அறியும், நாட்டுமக்களும் அறிவர்.

பெண்கள் இந்த நாட்டின் கண்கள் என்று அடுக்குமொழி பேசியே நாட்களை கடத்தி வந்தவர்களின் முகத்திரையைக் கிழித்து. பெண்களுக்கும் நாட்டைக் காக்கவும். நாட்டுக்குத் தேவையான திட்டங்களை சட்டங்களை இயற்றவும் வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும் என்கிற புரட்சியான எண்ணத்தில் எதிரொலியே இங்கே அமர்ந்துள்ள மகளிர் கூட்டம் என்பதை





நான் சுட்டிக்காட்டவிரும்புகிறேன், சினிமாவில் நடித்தவர்கள். அரசியல் வாழ்வில், ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து செயல்படமுடியுமா என்று எக்காளமிட்டவர்களை முக்காடு போட்டுக்கொண்டு, மூலையிலேயே உட்கார்ந்து, முக்கி முக்கி விழுகிற காட்சியை (மேசையைத் தட்டும் ஒலி) நாம் இன்று காண்கிறோம். அரசியல் உலகில் ஒரு அறிவு நிலா, இந்த அறிவு நிலாவின் அன்பு ஒளியில் இன்றைக்கு தமிழகம் தலைநிமிர்ந்து நிற்கிறது.

புரட்சித் தலைவி அவர்களின் திருப்பெயரால் விளங்கும் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் ஒரு புதுமையான திட்டம், புரட்சியான திட்டம். இதுவரை எந்த ஒரு நாட்டிலும் எந்த ஒரு தலைவராலும் சிந்திக்கப்படாத திட்டம். அக்குழந்தையைப் பராமரிப்பதோடு அவர்களை படிக்க வைத்து, பண்பான வகையில் திருமணம் செய்து கொள்ளும் வரையில் உதவி செய்ய அறிவித்துள்ள திட்டம் ஒரு அறிவியல் களஞ்சியத்தின் சமுதாயப் புரட்சித் திட்டம். இதனை நான் மனதார வரவேற்கிறேன். இந்த நாட்டு மக்கள் மனதார வரவேற்கிறார்கள், பாராட்டுகிறார்கள். பன்னாட்டினரும் புகழ்கிறார்கள், இத்தகைய புகழ் பரப்பும் எங்கள் தங்கத் தலைவியின், அன்புத் தெய்வத்தின் காலத்தில் நான் சட்டமன்ற உறுப்பினராகப் பணி ஆற்றும் பேறு பெற்றதை சிறந்த பயனாகவும், பெருமையாகவும் நினைக்கிறேன்.

அம்மா, நீங்கள் உடல் ஊனமுற்றவரை மட்டும் வாழ்விக்க இங்கு வரவில்லை, அரசியலில் ஊனமுற்று கூனி குறுகி இருந்தவர்களுக்கும் முட்டுக் கொடுத்து வளரச் செய்து உங்களுடன் அழைத்து வந்தீர்கள். இதற்கு ஒரு உதாரணத்தை நான் கூற விரும்புகிறேன். நடக்கமுடியாத நிலையில் உள்ள குழந்தைக்கு நிற்கக் கற்றுக் கொடுத்து, தாய் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு நடக்கத் துவங்கியவுடன் அதற்கு நடைவண்டி அளித்து நடக்க வைக்கிறபோது, அது நினைத்ததாம், ஆஹா நாம் இனி தனித்து நடக்கலாம். இந்த தாயின் தயவு தேவையில்லை என்று, அதன் விளைவு, நடைவண்டியின் பிடிப்பை விட்டது. கீழே விழுந்து கை ஒடிந்தது. அந்தக் கதையாகத்தான் இன்று இந்த அவையிலே சிலர் செய்யும் காரியங்கள் எனக்குச் சுட்டிக் காட்டுகின்றன என்பதை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உடல் ஊனமுற்றோர் நலனில் இந்த அரசு கொண்டிருக்கும் அக்கறையைப் பாராட்டுகிறேன். அவர்கள் நல்வாழ்வுக்கென புதியதொரு இயக்கம் தொடங்கியதற்கு என் உளமார்ந்த பாராட்டுக்கள், அவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அரசுத் துறையில் மட்டுமல்ல, தனியார் துறையில் உள்ளவர்களுக்கும் ஊக்கமளிக்கும் வகையில் உடல் ஊனமுற்றோருக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு வழங்கிய தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஒவ்

வொரு குடியரசு தினத்தன்றும் பரிசு வழங்கி மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி விருது என்று ஏற்படுத்தியுள்ளதை நான் வரவேற்கிறேன்.

கைவிடப்பட்ட பெண்கள், ஏழை விதவைகள், ஆதரவற்றோர் ஆகியோர் பாதுகாக்கப்படவேண்டியது சமூகப் பாதுகாப்பில் ஒரு அங்கம் என்பதை உணர்ந்து அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை நான் பாராட்டுகிறேன்.

சின்னஞ்சிறார்கள் நல்ல உணவு உட்கொள்வதன் மூலம், சிறந்த முறையில் முன்னேற்றம் காணமுடியும் என்பதை உணர்ந்து அத்திட்டத்திற்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் எனப் பெயர் சூட்டி, அத்திட்டம் சரியாக செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க உயர்மட்டக் குழு ஒன்றினை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன்.

இவ்வாறான வகையில் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு நல்லபல திட்டங்களை செயல்படுத்தி வருகிற காரணத்தால்தான் ஆயிரக்கணக்கான, லட்சக்கணக்கான தொண்டர்கள் எங்கள் தங்கத் தலைவியின் கரத்தை வலுப்படுத்த தன் இன்னுயிரையே தியாகம் செய்யத் தயாராக இருக்கிறார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வகுத்துத் தந்துள்ள கொள்கைகளுக்கு தோள் கொடுக்க, தன் உயிர் துறக்கக்கூட தமிழ் நாட்டில் ஆயிரம் ஆயிரம் தொண்டர்கள் இருக்கிறார்கள்.

முற்பகல் 11.30

ஒரு நிகழ்ச்சியை இந்த நேரத்தில் குறிப்பிடுவது கடமையெனக் கருதுகிறேன். புவனகிரி தொகுதியில் உள்ள சிதம்பரநாதன்பேட்டை என்கிற இடத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி பேரவையின் சார்பாக நான் கொடியேற்றி வைத்தேன். அந்தக் கொடிக் கம்பத்தை பி.எம்.கே. கட்சியைச் சார்ந்தவர்கள் இடித்து விட்டனர். கொடியைக் கிழித்து விட்டனர். அந்தப் பகுதியில் நம் கழகப் பணிகளை துடிதுடிப்புடன் செயல்படுத்திவரும் தொண்டன் துரைராஜ் ஒரு சபதம் எடுக்கிறார். இந்த இடத்தில் மீண்டும் எங்கள் கழகத்தின் கொடியை, மாண்புமிகு புரட்சித் தலைவி பேரவை சார்பில் ஏற்றுவேன். என் உயிர் போனாலும் பரவாயில்லை என்று சபதமிடுகிறான். இதற்கான முயற்சிகளில் அவன் துடிப்புடன் ஈடுபட்டு வந்துள்ள நேரத்தில் அந்தக் கட்சித் தொண்டனை தமிழ் வருட பிறப்பன்று கத்தியால் குத்தி கொன்று விட்டனர். தமிழ்க் கொடியைக் கட்டிக் காத்த தன் உயிர் நீத்த அந்தத் தொண்டனின் ஏழைக் குடும்பத்திற்கு மாண்புமிகு இதயத் தெய்வம் அவர்கள் உதவி புரிய வேண்டும் என்று கேட்டுக்



கொள்கிறேன். கொடைக்கு கர்ணனை உபமானம் காட்டிய காலம்போய், கொடைக்கு நிகர் எங்கள் புரட்சித் தலைவியே என்று குறிப்பிடும் வகையில் கொடை குணம் கொண்ட தமிழக முதல்வர் அவர்கள் இக்குடும்பத்திற்கு உதவி செய்ய முன்வருவார்கள் என்று நம்புகிறேன்.

இத்தகைய கொள்கை வீரர்கள் இருக்கும் வரையில் - நாள் என் செய்யும் - வினைதான் என் செய்யும் - உண்மைக்குப் புறம்பான பிரச்சாரம் என் செய்யும்- சுவாமிகளின் ஆர்ப்பாட்டங்கள்தான் என் செய்யும் - காங்கிரஸ் கட்சிக்காரர்களின் கண்ணியமற்ற முறையிலான செயல்கள்தான் என் செய்யும் எனக் கூறி மக்கள் சக்தி எங்கள் அரசியின் சக்தியாக இருக்கும்வரையில் எந்த ஒரு சக்தியாலும் எதுவும் செய்ய இயலாது எனக் கூறி, புரட்சித் தலைவி வாழ்க, அவர் தொண்டு வளர்க, எனக் கூறி இந்த சமூக நலன் குறித்த மானியக் கோரிக்கையை வரவேற்று எனது உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

2. உரிமைப் பிரச்சினை—தொடர்ச்சி.

கைது செய்யப்பட்ட உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டது பற்றி பேரவைக்கு அளித்த தகவல் குறித்து.

திரு. இளம்வழுதி :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** திரு. இளம்வழுதி எந்த விதியிலே பேசினீர்கள்? (குறுக்கீடு) சண்முகநாதன் உட்காருங்கள். எந்த விதியிலே இப்போது பேச அனுமதி கேட்கிறீர்கள் ? (குறுக்கீடு) எந்த விதியில் இப்போது பேசுகிறீர்கள் ? எந்த விதியின் கீழ் இப்போது நீங்கள் பேச அனுமதி கேட்கிறீர்கள் என்னிடத்தில் ? (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

திரு. இளம்வழுதி : 219-வது விதியின் கீழ்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : 219-வது விதி என்பது உரிமை மீறல் பிரச்சினை பற்றிய அறிவிப்பை இங்கே எழுப்புவதற்குரிய விதி. அந்த விதி, கேள்வி நேரம் முடிந்தவுடன்தான் எழுப்புவதற்கு அனுமதியை அளிக்கிற ஒரு விதி. எனவே இந்த நேரத்தில் அதை எழுப்புகிற காரணத்தால் அதை அனுமதிக்க இயலாது. (குறுக்கீடு) உட்காரவேண்டும். அது தவிர வேறு எதுவும் அவைக்குறிப்பிலே இருக்காது. (குறுக்கீடு) பாயின்ட் ஆப் ஆர்டர், திரு. கா. ப. பட்டாபிராமன்.

*திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு நீங்கள் அனுமதி அளித்திருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவருடைய கடமையை உணர்ந்து அமரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அவையிலே ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டு, அந்தப் பிரச்சினைக்கு உங்களால் அனுமதி அளிக்கப்பட்டு, அதற்குப் பிறகு அந்த உறுப்பினரும் பேசினார். பிறகு அவை முன்னவர் அவர்கள் தன்னுடைய விளக்கத்தை அளித்துவிட்டார்கள். அதற்குப் பிறகு பேரவைத் தலைவராகிய நீங்கள் அந்தப் பிரச்சினைமீது தீர்ப்பைத் தந்துவிட்டீர்கள். அது முடிந்து, சுமார் 20 நிமிடங்களுக்குப் பின்னாலே இப்படி ஒரு புதிய பிரச்சினையை அந்த சப்ஜெக்டிலேயே உருவாக்கி அதைப் பேசுவது என்பது இந்த அவையினுடைய விதிமுறைகளுக்கு எப்படி ஒவ்வும் என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்ல, விதி 219-ஐ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். 219 என்ன சொல்கிறது? "A member may, with the consent of the Speaker raise a question involving a breach of privilage, either of a Member or of the House or of a Committee thereof." இப்போது கூட 219-லே அவர் நின்றாலும், அந்த விதியின் கீழ் பேசினாலும்கூட, பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதித்தால்தான் அதைப் பற்றியே பேசமுடியும் என்று விளக்கமாக இருக்கிறது.

முடிந்துவிட்ட ஒரு பிரச்சினையைப் பற்றி மீண்டும் மீண்டும் ஒரு உறுப்பினர் எழுப்புகிறார். மானியக் கோரிக்கை இங்கே முன்வைக்கப்பட்டு அதற்குப் பின்னாலே அதிலே உறுப்பினர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இங்கே ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கிறபோதே அந்த உறுப்பினருடைய உரிமை பாதிக்கின்ற அளவிலே ஏற்கெனவே முடிந்துவிட்ட ஒரு சப்ஜெக்டில் ஒரு புதிய பிரச்சினையை எழுப்புவது இந்த



அவையினுடைய மாண்புக்கும் மரபுக்கும் முரணானது. ஆகவே விதி 219-இல் அவர் பேசமுடியாது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நானே சொல்லிவிட்டேன். விதி 219க்குத்தான் அவருக்கு நான் அனுமதியே கொடுத்தேன். எனவே அனுமதி கொடுத்த பிறகு அவர் 219-ல் நான் பேசவேண்டுமென்று கேட்டு 219ல் இப்போது பேசமுடியாது என்று நான் சொன்னது தவிர, அவர் பேசியதும் அதற்கு நான் பதில் சொன்னதும் கூட அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். திரு. சண்முகநாதன். (குறுக்கீடு)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்).

## 6. மானியக் கோரிக்கைகள், 1993-94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 29—சமூக நலன்—தொடர்ச்சி.

திரு. எஸ். சண்முகநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே முன்மொழிந்திருக்கிற சமூக நலன் பற்றிய மானியக் கோரிக்கையிலே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. சார்பிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்திருக்கிற, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொண்டு என்னுடைய மேலான கருத்துக்களை இங்கே எடுத்துரைக்கின்றேன்.

சமூக நலன் என்பது இன்றைய சமுதாயத்திலே மிக முக்கியமான ஒரு அங்கமாகும். நம்முடைய இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தின் ஆட்சிச் செங்கோலை தன்னுடைய தலைமையிலே பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு தமிழகத்திலே இருக்கிற சமூக நலத் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. பெண் சிசுவை அழிக்கின்ற, பெண் குழந்தைகள் பிறப்பதே பாவம் என்று கருதுகிற ஒரு சூழ்நிலை தமிழகத்திலே ஒருசில இடங்களிலே இருக்கின்ற நிலையை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் கவனத்திற்கு வந்தபிறகு, பெண்களின் முன்னேற்றத்திற்கு என்று பல புரட்சிகரமான சிந்தனையை வெளிப்படுத்தி, அகில உலகிலேயே இல்லாத அளவுக்கு பெண்கள் பிறக்கின்றபோதே அவர்களை வளர்க்க முடியா

நிலையும், பராமரிக்க முடியாத நிலையும் ஏற்படுகின்ற சூழ் நிலையில் ஏழைத் தாய்மார்களின் குழந்தைகளை அரசே தத்து எடுத்துக்கொண்டு அவர்களின் வளர்ச்சிக்கு மாபெரும் ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-40

இங்கே சேலம் போன்ற இடங்களில் 4, 5 குழந்தைகள் தொட்டிலில் இடப்பட்டு, அவைகளை வளர்த்து வருகிற ஒரு புரட்சிகரமான திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிற மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களை, தமிழகப் பெண்கள், தமிழக மக்கள் மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். பெண் களுடைய நலனில் அக்கறை காட்டுகிற வகையில், பெண் குழந்தைகள் பிறக்கிறபோது, அவைகளுக்கு 2,000 ரூபாயை குழந்தையின் பெயரில் டெபாசிட் செய்து, அதனுடைய வளர்ச்சிக் கேற்ப பிற்காலத்தில் கல்வியில் சிறநத கல்வியாளர் ஆக்கு வதற்கும், அந்தப் பெண் குழந்தைக்கு பிற்காலத்தில் திருமணம நடக்கிற வகையில் உதவிடவும் ஒரு மிகப் பெரிய புரட்சி கரமான திட்டத்தை அறிவித்து நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றைககு இருக்கிற விலைவாசி உயர்வில், இன்றைய காலக்கட்டத்தில் அந்த 2,000 ரூபாய் என்பது மிகவும் குறைந்த தொகையாக இருக்கிற காரணத்தால் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அதனை ரீ-கன்சிடர் செய்து 5,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் கொண்டு வந்த முதலமைச்சர் சத்துணவுத் திட்டம் இந்தியாவிலும், உலக அரங்கிலும் மிகச் சிறப்பாகப் பாராட்டப்படுகிற அளவுக்கு உள்ளது. நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் சத்துணவுத் திட்டத்திற்கு மிகப்பெரிய முக்கியத் துவம் அளித்து நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள். மாண்பு மிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய பரிணாம வளர்ச்சியாக, அவருடைய வாரிசாக இன்றைக்கு தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிற நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தி, ஊக்கப்படுத்துகிற முறையில் செயல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மையங்களில் இன்றைக்கு பெண்கள் சத்துணவு அமைப்பாளர் களாக அதிக அளவில் வேலை வாய்ப்பைப் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கு உலக அளவில் எல்லோருக்கும் வாரத்தில் ஒருநாள் விடுமுறை எடுத்துக்கொள்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆனால் இந்த சத்துணவு, ஊட்டச் சத்து வழங்கும் பணியில் பணி யாற்றுகிறவர்கள் வாரம் முழுவதும் தொடர்ந்து பணியாற்றுகிற





ஒரு சூழ்நிலை இருப்பதன் காரணத்தால், வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவுப் பணியாளர்களாக பணியாற்றுகிறவர்கள் இன் றைக்கு கல்வியில் சிறந்தவர்களாக இருக்கிறார்கள். அதே கல்வித்தரம் பெற்றவர்கள் மற்ற துறைகளில் பணியாற்றுகிற போது, அவர்களுக்கு அதிக ஊதியமும், சிறப்புகளும் இருக்கிற காரணத்தால், மற்றத் துறைகளில் பணியாற்றுகிறவர்களைப் போன்று இந்த சத்துணவு அமைப்பாளர்களையும், சத்துணவு வழங்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறவர்களையும் அரசு அதிகாரி களாக அங்கீகரித்து, முழு நேரப் பணியாளர்களாக உயர்த்தி, அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே ஊனமுற்றவர்களுக்காக, ஏழையெளிய மக்கள், நலிந்தவர்கள், காது கேளாதோருக்காக இந்த அரசாங்கம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. எங்களுடைய புதுக்கோட்டை மாவட்டத்தில் காதுகேளாதோர்-குருடர் பள்ளி ஒன்று இருக்கிறது. அங்கே 30 மாணவர்களை வருடந்தோறும் சேர்த்துக் கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அங்கே அடிப்படை வசதிகள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய அரசாங்கம் எதிர்வருகிற காலகட்டத்தில் அங்கே காது கேளாதோர்-குருடர்களுக்காக பாடம் கற்பிக்கிறவர்களுடைய அந்த எண்ணிக்கையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் மிக தீர்க்கதரிசனமாக, எதையும் சிந்தித்து செயல் படுகிற ஆற்றல் படைத்தவர், தமிழர்களுடைய நலம் சமூக நலனைப் பாதுகாப்பதில் மிகச் சிறப்பாக இங்கே பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எத்தனை முதலமைச்சர்கள் வந்திருந் தாலும், ஒரு தீர்க்கதரிசனமாக, எதிர்காலத்தில் இன்னின்னது நடக்கும் என்பதை உணர்ந்து செயல்படுகிற, அதை முன்கூட்டியே தெரிந்து கொண்டு, அதற்கேற்ப செயல்படுகிற ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம்.

முற்பகல் 11-45

நமக்கு எல்லாம் தெரியும். மசூதிப் பிரச்சினையைப் பற்றி மாண்புமிகு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் டெல்லியிலே பேசுகின்றபோது மிகச் சிறப்பாக அங்கே எடுத் துரைத்தார்கள். அங்கே பேசுகின்றபோது, உயர்நிதிமன்றத் தினுடைய உத்தரவை ஏற்று நடக்கவேண்டும் என்று அன்றைய தினத்திலே உ.பி.யில் இருந்த பி.ஜே.பி. அரசாங்கத்தினை மிரட்டுகின்ற வகையில் சொல்லுகின்றபோது, தன்னுடைய

(திரு. எஸ். சண்முகநாதன்) [1993 ஏப்ரல் 26

கருத்தைச் சொல்லுகின்றபோது—தமிழகத்தினுடைய நலனைப் புறக்கணிக்காமல், தமிழகத்தினுடைய நலனைப் பேணுகின்ற வகையிலே சிறப்பாக கருத்துக்களை எடுத்துரைத்தார்கள்.

நீங்கள் இன்றைக்குச் சொல்கிறீர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய அந்த உத்தரவை அமுல்படுத்தவேண்டும் என்று நீங்கள் கேட்டுக்கொள்கிறீர்களே, இல்லாவிட்டால், அந்த உ.பி. அரசாங்கத்தைக் கலைக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுகிறீர்களே, அன்றைய தினத்தில் தமிழகத்திற்கு நியாயமாக சேரவேண்டிய காவிரிப் பிரச்சினையில் நியாயமாக சேரவேண்டிய 230 டி.எம்.சி. தண்ணீரை விட மறுத்த அன்றைய தினம் முதலமைச்சராக இருந்த பங்காரப்பாவினுடைய அரசை நீங்கள் கண்டித்தீர்களா, அதைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறீர்களா, நம்முடைய தமிழகத்தினுடைய நலனைப் புறக்கணிக்கின்ற வகையிலேதான் அவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தீர்க்கதரிசி என்று நாங்கள் ஏன் சொல்கிறோம் என்றால், எதிர்காலத்திலே என்ன நடக்கும் என்பதை அவர்கள் அறிந்து வைத்திருக்கிறார்கள்.

அதேபோல், சமீபத்தில் நடந்த ஒரு விழாவிலே நம்முடைய மாண்புமிகு முதல்வர், டாக்டர் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்களுக்கு ஒரு சிங்கக் குட்டியைக் கொடுத்து அதை வளர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, நான் தமிழகக் குழந்தைகளை எல்லாம் புலிக் குட்டிகளாக சிங்கக் குட்டிகளாக மாற்றுகின்ற அந்த நிலையை எடுத்துக் இருக்கின்ற காரணத்தாலே, என்னிடத்திலே மிருகங்களை வளர்க்கின்ற பண்பு, ஆற்றல் இருந்தபோதும், கூட, தமிழகக் குழந்தைகளை ஏழை எளியவர்களுடைய குழந்தைகளை சிங்கக் குட்டிகளாக மாற்றுகின்ற சூழ்நிலையை நான் சந்தித்துக்கொண்டிருக்கின்ற காரணத்தாலே இதை வளர்க்க முடியாது என்று சொல்லி, தமிழகத்தினுடைய ஏழைக் குழந்தைகளின் நலனையும், தமிழகத்தின் நலனையும் காக்கின்ற ஒரு முதலமைச்சராக இன்றைக்கு ஆட்சிசெய்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே இந்த சமூக நலத் துறை பல்வேறு சிறப்புக்களைப் பெற வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

இன்றைய தினம் சமூக நல வாரியத்திலே—இந்த சமூக நலத் துறையிலே இருக்கிற தொண்டர்கள் எல்லாம் பாராட்டுகின்ற வகையில்— எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், சமுதாயத்திற்குத் தொண்டு புரிகின்ற சமூகத் தொண்டர்களை, உறுப்பினர்களாகச் சேர்த்து, அந்த வாரியத்தை மாற்றியமைத்து, மிகச் சிறப்பாக எதிர்காலத்திலே செயல்பட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, முடிக்கிறேன். வணக்கம்.



1993 ஏப்ரல் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மிகுந்த போற்றுதலுக்கும், நல்ல பாராட்டுதலுக்கும் உரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எளிய மனத்தோர் பேறுபெற்றோர்
ஏனெனில் விண்ணரசு அவர்களதே
துயருறுவோர் பேறு பெற்றோர்
ஏனெனில் அவர்கள் ஆறுதல் பெறுவர்
சாந்தமுள்ளோர் பேறு பெற்றோர்
ஏனெனில் மண்ணுலகு அவர்களது உரிமையாகும்
நீதியின்பால் பசிதாகம் உள்ளவர்கள் பேறு பெற்றோர்
ஏனெனில் அவர்கள் நிறைவு பெறுவர்
இரக்கம் உடையோர் பேறு பெற்றோர்
ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்
தூய உள்ளத்தோர் பேறு பெற்றோர்
ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்
சமாதானம் செய்வோர் பேறு பெற்றோர்
ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்களாவர்.
நீதியின் நிமித்தம் துன்பப்படுவோர் பேறு பெற்றோர்
ஏனெனில் விண்ணரசு அவர்களதே

என்ற பைபிள் வாக்குக்கு ஒப்ப செயல்படும் எங்களை வழி நடத்தும், எங்களது இரட்சகர் புரட்சித் தலைவியே, உங்களை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

கெஞ்சுவதில்லை, பிறர்பால் எவர்செய் கேட்டினுக்கும் அஞ்சுவதில்லை, மொழியையும் நாட்டையும் மாளாமல் துஞ்சுவது இல்லை என்ற நல்ல பாடலுக்கு ஒப்ப, ஊனமுற்றோர், பார்வையற்றோர், இளம் பிள்ளை வாதம் உடையோர், காது கேளாதோர், அனாதை மகளிர், ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோர்களின் விழி நீரைத் துடைத்து "யாம் இருக்க பயம் ஏன்" என்று குரல் கொடுத்து, அரவணைத்து ஆற்றுப்படுத்தி தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, நசுக்கப்பட்ட சிறுபான்மை மக்களைக் காத்து வருகின்ற என் அன்பு அன்னையே உங்களை வாழ்த்துகிறேன்.

சமூக நலத்துறையின் சார்பிலே காது கேளாதோர், கடுமையான கைகால் ஊனமுற்றோர், மனவளர்ச்சி குன்றியோர், பார்வையற்றோர், இளம் குற்றவாளிகள், ஒடுக்கப்பட்ட மகளிர், அன்புக்கும் ஆதரவுக்கும் ஏங்கும் சிறுவர் சிறுமியர் ஆகியோரைக் காத்து வருகின்ற இத்துறையின் சார்பில் எடுக்கப்பட்ட முடிவுகள், ஒதுக்கப்பட்ட தொகைகள், நல்ல திட்டங்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

(முற்பகல் 11-50)

எங்களுடைய திருச்சியைப் பொறுத்த வரையிலும், திருச்சி பொன்மலைப்பட்டியில் உள்ள டாலர்ஸ் ஊனம் காது கேளாதோர் பள்ளி இன்றைக்கு நடுநிலைப் பள்ளியாக உள்ளது. ஏறத்தாழ 200 குழந்தைகள் பயிலும், ஏறத்தாழ 20 ஆண்டுக் காலமாக நடைபெற்று வரும் இப்பள்ளியினை உயர்நிலைப் பள்ளியாக மாற்றி உத்திரவிட வேண்டுகிறேன். பல ஆசிரியப் பணி இடங்கள் அனுமதிக்காக காத்து இருக்கின்றன. அவற்றை சாங்ஷன் செய்ய கேட்டுக் கொள்கிறேன். அதேபோல திருச்சிக்கு அருகில் உள்ள ஜெரிகோ உடல் ஊனம் உற்றோர் பார்வையற்ற பிள்ளைகள் கொண்ட பள்ளியினில் ஆசிரியப் பணி இடங்கள் அனுமதிக்காக போஸ்ட் சாங்ஷன் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சுமார் 300 மாணவ மாணவியர் பயிலும் இப்பள்ளியை காத்திட வேண்டுகிறேன். என்னுடைய தொகுதியில் உள்ள சத்துணவுக் கூடங்கள் பல மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளன. அவற்றை சரி செய்து உதவிட வேண்டுகிறேன். சில சத்துணவுக் கட்டிடங்கள் மேற் கூரை இல்லாத நிலையில் உள்ளன. அந்த சத்துணவுக் கூடங்களுக்கு மேற் கூரையிடக் கேட்டுக் கொள்கிறேன்.

கண்ணீரோடு விதைப்பவர்கள் களிப்போடு அறுப்பார்கள் என்கிற பைபிள் வசனத்திற்கு ஒப்ப சத்துணவுக் கூடங்களில் பணி புரிகின்ற சகோதர சகோதரிகளுக்கு நல்ல ஊதியமும், வசதியும் செய்து தரக் கேட்டுக் கொள்கிறேன். சமூக ஊழியத்தில் ஈடுபட்டுள்ள நான்-கவர்ன்மென்டல் வாலண்டரி அசோசியேஷன் என்று சொல்கிற சமூக ஊழியர்களைப் பாராட்டி அவர்களுக்கு உதவி செய்து உயர்த்த வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்த நாட்டிலே 60 விழுக்காடு கிறித்துவ கன்னிமார்கள், சமூகப் பணி செய்கிற குருமார்கள் தங்களை இந்த சமூகத்திற்காக அர்ப்பணித்திருக்கிறார்கள். அவர்களுடைய அர்ப்பண வாழ்வை பாராட்டி இந்த அரசு கனிவோடு உதவி செய்து சிறப்பு செய்ய வேண்டுகிறேன். நல்ல சமூக சேவை செய்பவர்களைப் பாராட்டி புரட்சித் தலைவியின்



பெயரிலேயே விருதும், பரிசும், பாராட்டும் வழங்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். கண்ணீர் சிந்தும், கவலையோடு வாழும் என் சகோதர சகோதரிகளுக்கு செய்யும் உதவி எனக்கே செய்தீர்கள் என்று சொல்லுகிற பைபிள் வசனத்திற்கு ஒப்ப, ஏழைகளை, அநாதைகளை ஆதரித்து மறுவாழ்வு அளிக்கும் நல்ல துறையாக விளங்குகிற சமூக நலத் துறையைப் பாராட்டுகிறேன். பணப் பற்றாக்குறை இருந்தபோதும் மிகவும் சிறப்பாக பணியாற்றும் சமூக நலத் துறை அமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன். திருச்சி மாவட்டத்தை திருச்சி, கரூர், பெரம்பலூர் என்ற 3 மாவட்டங்களாகப் பிரித்து ஒன்றிற்கு கிறிஸ்துவ போதகரான, திருச்சி மாவட்டம் வந்து, திருச்சி மாவட்டத்தில் பணியாற்றிய, தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பணி செய்த வீரமாமுனிவர் பெயரை வைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே சிறுபான்மை கிறித்துவ மக்களின் சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேன். கிறித்துவ வன்னியர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்த எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த நேரத்திலே என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்திலே கிறித்துவ தாழ்த்தப்பட்ட மக்கள் இன்றைக்கு பிற்பட்டோர் பட்டியலில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அதனையும் கவனத்தில்கொண்டு கிறித்துவ தாழ்த்தப்பட்ட மக்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் வைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் மத்திய அரசு கிறித்துவ தாழ்த்தப்பட்ட மக்களை தாழ்த்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க மறுக்கிறது. ஆகவே இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் தாழ்த்தப்பட்ட கிறித்துவர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
கபடு வாராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுப்பிணி இலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும் ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்ய நின்பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்

[டாக்டர் ச. ஆரோக்கியசாமி] [1993 ஏப்ரல் 26

என்ற அபிராமி அந்தாதி பாடலில் வருகின்ற அந்தப் பாடல் வரிகளுக்கு ஒப்ப எங்களை வாழ வைத்துக் கொண்டிருக்கும் எங்கள் தமிழ்த் தாய் டாக்டர் புரட்சித் தலைவியின் பொற் பாதங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, இவ்வாய்ப்பினை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நல்ல பாராட்டுதலுக்கும் உரிய அருமை மிகு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் பீட்ரிக்ஸ் டி. சௌசா.

முற்பகல் 11–55

Dr. BEATRIX D'SOUZA: Hon Speaker, Sir, I would like to express my thanks for being allowed to participate in the discussion on the Demands relating to 'Social Welfare'

According to a 1980 United Nations report on the status of women, women constitute half the world's population, perform nearly two-thirds of the world's work but own less that 1/100th of the world's property. Women, therefore, constitute the largest minority in the world and they could be ranked and considered with other disadvantaged minority groups. The economics of a Government, therefore, should be geared towards women's welfare. The word "economics" is derived from a Greek word which means "care and management of the household. We in Tamil Nadu are fortunate in having a woman Chief Minister who will manage a larger household, *i.e.*, the State. If women who enter politics adopt male structures, processes and values, then, their presence in Government becomes irrelevant. In the Government of the Hon. Dr. Jayalalitha, we see that very clear signals have gone out with regard to the welfare of the community at large and, especially, in three very important areas, viz., women's welfare, welfare of the children and welfare of the handicapped.

Sir, this Government has not paid mere lip-service to women's issues but initiated very effective programmes in these three areas. The Government must be congratulated in one respect. Out of the 52 National Awards instituted for encouraging employment of the disabled, Tamil Nadu has bagged more than 10 awards every year. (Thumping of desks) I would like to congratulate the Government also on the award of the National Technical Award for 1993 for inventions and innovations for the welfare of the handicapped.



[1993 ஏப்ரல் 26 [Dr. Beatrix D'Souza]

Recently, the National Commission for Women has asked the States to set up separate Women's Commissions. Tamil Nadu has already announced the setting up of such a Commission. However, the fear expressed by women's organisations is that this Commission is only an arm of the Social Welfare Department and not a fully autonomous body. If the Commission is to play a watch dog role in protecting womens, rights, it should have teeth. For that matter, it should be autonomous' have a statutory status and be on the lines envisaged by the National Women's Commissions Act of 1990.

Sir, sometimes, the Government itself is the major violator of the Constitutional guarantees and other laws enacted for the benefit of women. The Commission, therefore, should have the rights of a Civil Court and should be consulted by the Government while formulating policies concerning women The Members of the Commission should have a long..........

MR. SPEAKER : Hon. Minister.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் நலக் குழு பெண்களுடைய வரதட்சணைக் கொடுமைகள் போன்றவற்றை ஒழிப்பதற்காக் அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தக் குழு சுதந்திரமாகச் செயல் படும். அது யாருக்கும் அடங்கி செயல்படாது என்பதை பேர வைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரி வித்துக்கொள்கிறேன். அதில் ரிடையர்டு ஜட்ஜ் சேர்மனாக இருப் பார் அந்த குழுவில் சமூக நலத் தொண்டாற்றும் அனை வரும் இடம் பெறுவார்கள். அதைப் போலவே, ஐ.பி.எஸ். அதிகாரிகள், ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அந்தக் குழுவிலே இடம் பெறுவார்கள் முழுக்க முழுக்க அது சுதந்திரமாக செயல்படும் மாவட்டத் தலைநகரங்களிலும் இந்தக் குழுவின் கிளைகள் அமைக்க படும். மாவட்ட தலைநகரகங்ளில் இந்தக் குழு முடிக்க முடி யாத வழக்குகளை மாநிலக் குழு ஆராய்ந்து முடிக்கும். இது னுடைய பணிகளை மட்டுமே சமூக நலத் துறை கண்காணிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

DR. BEATRIX D'SOUZA : I would like to mention that the Members of the Commission, whoever the Government selects, should, have a long record of service in women's issues. For example, if it is a woman-Principal, that woman should be someone familiar with women's studies. We do not want just Government officials without any knowledge or experience in women's affairs or women's issues.

[Dr. Beatrix D'Souza] [1993 ஏப்ரல் 26

Sir, I would like to make another point. I find that the schemes for self-employment is very insufficient for the urban women. Most of the schemes are oriented towards rural women. For example, the Tamil Nadu Corporation for the Development of Women, the Tamil Nadu Women's Development Project, etc., are all oriented towards rural women. The Anglo-Indian community is a...........

MR. SPEAKER : Hon. Minister.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: பேரவைத் தலைவர் அவர்களே, வுமன்ஸ் டெவலப்மெண்ட் கார்ப்பரேஷனுக்கு வருகின்ற நிதி முழுவதும் வெளிநாடுகளிலேயிருந்து வரப்படுகின்ற நிதியாக இருப்பதால் அது முழுக்க முழுக்க கிராமப் பகுதிகளிலே வாழ்கின்ற பெண்களுக்கு மட்டுமே பயன்படுத்தக்கூடிய நிதியாகும். ஆகவே, அதை நகர்ப்புறங்களுக்குப் பயன்படுத்த இயலாது. ஆனால் நகர்ப்புற பெண்களுக்கு உதவ செய்கின்ற வகையில் நம்முடைய உள்ளாட்சித் துறை பல்வேறு கடன்களை ஐ.ஆர்.டி.பி, லோன் போல பல்வேறு கடன்களை அளிக்கின்ற காரணத்தினால் உள்ளாட்சித்துறை அந்தப் பணிகளை கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

DR. BEATRIX D'SOUZA: Hon. Speaker, Sir, I thank the Hon, Minister.

I would like the Government to remember that the Anglo-Indian Community is practically an invisible community. We, the Anglo-Indians, have started a Women's Forum. We will be very grateful if this Forum is taken into consideration whenever benefits like loans, free sewing machines, etc., are distributed. Small loans up to Rs. 50.000 should also be made available to urban women for starting their own small businesses.

Sir, my next point is that the nexus between women, drugs, AIDS and prostitution should be studied. As regards AIDS patients, the attention paid to them and the funds allocated for the purpose are insufficient at present. The idea seems to be that the AIDS patient is, sooner or later, going to die. But the point is that the AIDS patients have to be looked after and given proper facilities. A Unit should be started to protect the women. This is important because Tamil Nadu is supposed to be an area which has a high incidence of AIDS.

Apart from relief measures for women it is necessary to protect the image of women portrayed in films and seen in advertisements and posters, The posters on the Midland Theatre are vulgar, indecent and



1993 ஏப்ரல் 26] [Dr. Beatrix D'Souza]

an eye-sore. They may be removed. Every year we have been speaking about these posters. Certain measures should be taken to curb using women in certain indecent postures. This Government is implementing so many welfare measures for women. They should make a positive approach in this regard.

The policy note quoted the Poet Shelley's Ode to the Skylark. I would like to end by quoting from Shelley's Ode to the West Wind. "If Winter comes can Spring be far behind." I would also like to quote Shakespeare, "the winter of a discontent has long been passed and in the future it will be eternal spring" presumably by your Social Welfare Department in Tamil Nadu.

Thank you.

நண்பகல் 12.00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தா. வேடியப்பன்.

*திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலையில் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொன்னான பாதங் களுக்கு என்னுடைய வணக்கத்தைக் காணிக்கையாக்கி இந்த சமூக நலத்துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொண்டு, ஒரு சில கருத்துக்களைக் கூறக்கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார். ஏறத்தாழ 15 ஆண்டுகளாக சிறப்பான முறையில் செயலாற்றி வரும் இந்த உன்னதத் திட்டத்திற்கு இதனைக் கொண்டு வந்த நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரை, நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்து இருப்பது உண்மையிலேயே பாராட் டுக்குரிய ஒரு நிகழ்ச்சியாகும். ஏனென்றால், ''எந்நன்றி கொன் றார்க்கும் உய்வுண்டாம்'' என்ற குறளின்படி நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய பெயரை இந்தச் சத்துணவுத் திட்டத்திற்குச் சூட்டியிருப்பது உண்மையிலேயே மிகவும் வர வேற்கத்தக்கது என கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைய நிலையில் 15 ஆண்டுகளாக சிறப்பான முறையில் செயலாற்றி வரும் நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஏழையெளிய மக்களெல்லாம் போற்றக்கூடிய ஒரு உன்னதத் திட்டமாக இருக் கிறது. அந்த அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்

[திரு. தா. வேடியப்பன்] [1993 ஏப்ரல் 26

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை).

புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் பெண் சிசு பாதுகாப்புத் திட்டம் என்பதை இன்றைய நிலையில் கொண்டு வந்திருக்கக் கூடிய நம்முடைய தமிழக அரசு, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரில் இத்திட்டம் கொண்டுவரப்பட்டிருப்பது சாலச்சிறந்ததாகும். காரணம் என்னவென்றால் பெண் இனத்திற்கே பெருமை கூட்டக்கூடிய ஒரு மாபெரும் சக்தியாக விளங்கக் கூடிய நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரில், இந்தப் பெண் சிசுக்களை கொலையிலிருந்து காப்பதற்காகக் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தை உண்மையிலேயே வரவேற்று, மகிழ்ச்சியாகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தத் திட்டத்தை, புரட்சித் தலைவர் அவர்கள் எப்படி சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்து 15 ஆண்டுக் காலமாகியும் சிறபபான முறையில் வீறு நடைபோட்டு வெற்றிநடை போட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கக் கூடிய நம்முடைய ஆட்சியில், எப்படி அந்த சத்துணவுத் திட்டத்தைப் பாராட்டுகிறோமோ அதேபோன்று, எதிர்நோக்கு—தொலைப் பார்வையுடன், புரட்சித் தலைவி அவர்கள், வருங்கால, எதிர் காலத்தை நோக்கி, பிற்காலத்தில் பெண் சமுதாயம் பாதிக்கப் படக்கூடாது, அவர்களுக்கெல்லாம் ஒரு புத்துணர்வு அளிக்க வேண்டும் என்ற ஒரு நல்ல நிலையில்தான் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறார் கள். உண்மையிலேயே இந்தத் திட்டத்தை இந்தத் தமிழகம் அல்ல; இந்தியா அல்ல; உலக மக்களே பாராட்டக் கூடிய வாய்ப்பு பெற்று வரும் இத்திட்டத்திற்கு எதிர்காலத்தில்தான் இதனுடைய பிரதிபலன் தெரியும் என்பதனைக் கூற நான் கடமைப்பட்டு இருக்கிறேன். இத்திட்டத்திற்காக, உண்மையி லேயே என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூற கடமைப்பட் டிருக்கிறேன். அதேபோன்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியின் மூலம், சிறப்பான முறையில் சமூக நலத் துறை, பொது நல வாதிகள், தொண்டுள்ளம் படைத்தவர்கள் மூலம் நம்முடைய சத்துணவு அமைச்சர் அவர்கள், சத்துணவுக் கூடங்களையெல்லாம் பராமரிக்கின்றோம் என்று சிறப்பாகக் கூறி யிருக்கிறார்கள். உண்மையிலேயே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இதற்கு நன்றி விசுவாசமாகப் பாராட்டு தலைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்னவென் றால், புரட்சித் தலைவருடைய பெயரைப் பரப்ப வேண்டுமென்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதன் வாயி லாக அந்தச் சத்துணவுக் கூடங்களெல்லாம் இன்று பராமரிக்கப் படுகின்றன. அரசு உதவியினோடும், தொண்டுள்ளங்களோடும் பராமரிக்கப்படுகிறது என்று கூறும் பொழுது உண்மையிலேயே நம்முடைய அமைச்சரவர்களுக்கு நான் உளங்கனிந்த பாராட் டைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1993 ஏப்ரல் 26] [திரு. தா. வேடியப்பன்.]

அதேநேரத்தில் விவசாயிகள் மூலம் சிறப்பான முறையில் பயிரிடக்கூடிய இந்த சோயாபீன்ஸை இந்த ஊட்டச் சத்துத் திட்டத்தில் கலந்திருப்பது விவசாயிகளுடைய சிறப்பு அம்சமாக ஒரு அம்சமாகவும், அதேநேரத்தில் சத்துள்ள அந்தச் சோயா மாவை இந்தச் சத்துணவுத் திட்டத்தில் சேர்த்திருப்பது உண் மையிலேயே நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்பு மிகு அமைச்சரவர்களுக்கும் விவசாயிகளினுடைய பேரின்பத்தைப் பங்கு கொள்ளும் வண்ணம் இருப்பதாகக் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12.05

அதே நேரத்தில் இதுபோன்ற இந்த நிலையில் ஆதரவற்ற குழந்தைகளுக்கெல்லாம் காப்பகங்கள் அமைத்து, அதேபோன்று விதவைகளுக்கெல்லாம் திருமணம் செய்து நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் சிறப்பான திட்டங்களைச் செயல் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் திட்டங்களையெல்லாம் இதற்கு முன்பிருந்த ஆட்சியிலேயெல்லாம் பார்ப்பீர்களேயானால், ஒரு ஒன்றியத்திற்கு 8 பேர், 10 பேர் என்றுதான் இருக்கும். ஆனால் நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர் கள் ஆட்சிப்பொறுப்பேற்றதற்குப் பிறகு, பல ஆயிரக் கணக்கில் ஒவ்வொரு வட்டம் என்று எடுத்துக் கொண்டாலும், ஏறக்குறைய ஒரு 500 பேர், 600 பேர் என்ற அளவிற்கு இன்று மிகப் பெரும் சாதனையாக விரிவுபடுத்தி, எந்தெந்த மக்கள் ஆதரவற்ற மக்க ளாக இருக்கிறார்களோ, யார் யார் விதவைகளாக இருக்கிறார் களோ அவர்களுக்கெல்லாம் ஒரு வார காலத்திற்குள்ளாகவே உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்கள் தரக்கூடிய மனுக்கள் எல்லாம் உடனடியாகப் பரிசீலிக்கப்பட்டு, வட்ட அளவில் உடனுக்குடன் அந்த மனுக்களெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு, சிறப்பான முறையில் இன்று செயல்வடிவம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை இங்கே கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் ஆதரவற்ற குழந்தைகளுக்கெல்லாம், இன்னும் ஒவ் வொரு மாவட்டத்திலும் இருக்கக்கூடிய பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடியவர்களையெல்லாம் நீங்கள் கண்டுபிடித்து அதற்கு ஒரு ஆய்வைக்கூட நடத்தலாம் என்பதை என்னுடைய கோரிக் கையாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த ஆய்வுப் பணியை நடத்தி, எந்தெந்தப் பகுதியிலேயெல்லாம் இப்படிப் பட்ட ஆதரவற்ற குழந்தைகள் அதிகமாக இருக்கிறார்களோ அப்பகுதியிலேயெல்லாம் ஆதரவற்ற அனாதை இல்லங்கள் ஏற் படுத்த வேண்டும். இதற்காக நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் அரசு சார்பில் மாண்புமிகு அமைச்சரவர்கள் உறு துணையாக இருக்க வேண்டுமென்று நான் கூறக் கடமைப்பட் டிருக்கிறேன்.

ஏனென்றால், இந்தப் பிஞ்சு உள்ளங்களையெல்லாம் அடித்தளத்திலேயே பிச்சையெடுக்கக்கூடிய திட்டங்களெல்லாம், ஏழை எளியவர்கள் என்று இல்லாமல், வசதி படைத்தவர்கள்கூட குழந்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். இதையெல்லாம் ஆராய்ந்து பிச்சையெடுக்கின்ற குழந்தைகளையெல்லாம் நீங்கள் கணக்கிட்டு அந்தக் குழந்தைகளையெல்லாம், உண்மையிலேயே அவர்கள் பிச்சையெடுக்கக்கூடிய அளவிற்கு ஏழைகளாக இருக்கிறார்களா அல்லது அந்தக் குழந்தைகளைத் துன்புறுத்துகிறார்களா என்பதை அறிந்து அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். அதற்காக இன்றைய நிலையில் ஊட்டச் சத்து, ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுக் கூடங்கள் எல்லாம் சிறப்பான முறையில் செயல்படுத்தக் கொடுத்திருக்கிறீர்கள்.

அந்த நிலையில் இந்தப் பிஞ்சு உள்ளங்களையெல்லாம் காத்து, அவர்களுக்குக் கல்வியும் போதித்துச் சிறப்பான வழி வகுக்கக் கூடிய அந்த ஊட்டச் சத்தினுடைய ஒருங்கிணைப்பாளர்களுக்கும், சத்துணவு அமைப்பாளர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட ஒரு கருத்து கூற வேண்டுமானால் நம்முடைய புரட்சித் தலைவருடைய ஆட்சியில் அன்றைய நிலையில் இந்த ஒருங்கிணைப்பு அமைப்பாளர்களையெல்லாம் ஏற்படுத்தப்பட்டது. அவர்கள் 10, 12 ஆண்டுகள் நிரந்தரமாகப் பணியாற்றி கூட அவர்களுக்கெல்லாம் நிரந்தரமான ஒரு அமைப்பு இல்லை. எனவே, நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு, புரட்சித் தலைவர் கொண்டு வந்த திட்டங்களையெல்லாம் இன்று நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறோம், அந்த வகையில் புரட்சித் தலைவரால் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சத்துணவுத் திட்டத்தினுடைய ஊழியர்களையெல்லாம் நீங்கள் நிரந்தரமாக அறிவிக்க வேண்டும். ஏனென்றால், நம்முடைய தொழிலாளர் நலத்துறை அமைச்சரவர்கள் கூறினார்கள், 240 நாட்கள் வேலை செய்தாலே அவர்கள் நிரந்தரம் ஆகிறார்கள் என்று கூறுகிறார்கள். அப்படியெல்லாம் இருக்கும்போது 10, 12 ஆண்டுகளாக பணியாற்றும் இந்தச் சத்துணவு அமைப்பாளர்களையும், ஊட்டச் சத்து ஒருங்கிணைப்பாளர்களையும் எல்லாம் நீங்கள் தயவு செய்து நிரந்தரப் பணியாளர்களாக அமைத்து, இந்தப் பிஞ்சு உள்ளங்களைக் காக்கக் கூடிய அந்தத் தன்மைகளுக்கு நீங்கள் எல்லா அமைப்பாளர்களையும் நிரந்தரமாக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. ம.சின்னசாமி தலைமை)

அதே நேரத்திலே, என்னுடைய தொகுதி சார்பாக ஏற்கெனவே சட்டமன்றத்தில் வினா எழுப்பியிருக்கிறேன். காங்கேயனூர் ஊராட்சி, சோழங்குப்பம் என்ற கிராமத்தில் ஒரு சத்துணவுத் திட்டம் புதியதாக ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





பிறபகல் 12-10

மாம்பட்டு ஊராட்சியினுடைய ராமாபுரம் என்ற கிராமத்திலேயும் சத்துணவுத் திட்டம் புதியதாக ஏற்படுத்தி, அங்கே ஒரு சத்துணவுக் கூடத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

களம்பூர் பேரூராட்சியில் நரியம்பேட்டை என்ற கிராமத்திற்கு ஒரு புதிய சத்துணவு திட்டத்தையும் சத்துணவுக் கூடத்தையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிப் பல பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தால் அந்தந்தப் பகுதியில் இருக்கக்கூடிய குழந்தைச் செல்வங்களைக் கணக்கிட்டு, குழந்தைகளை ஒரு வழிவகையாக எடுத்துக்கொண்டு, நம்முடைய புரட்சித் தலைவி அவர்களின் அரசு தேவைக்கேற்ப இன்று உலக வங்கித் திட்டத்தில் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது. நம்முடைய ஆட்சியில் ஊட்டச் சத்து, சத்துணவுத் திட்டம் எல்லாம் ஒரு ஒன்றியத்திலே இருந்துகூட மாறுபட்டு, சத்துணவை தனியாக ஒரு ஸ்கீமையே கொண்டு வந்து நம்முடைய புரட்சித் தலைவியினுடைய அரசு அந்தத் திட்டத்தில் எல்லாப் பகுதிகளிலுமே குழந்தைகளைக் கணக்கிட்டு, அந்தந்தப் பகுதிகளுக்குப் புதிதாக ஏற்படுத்தக்கூடிய திட்டத்தில் சத்துணவுத் திட்டங்களையும் சத்துணவுக் கூடங்களையும், ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துக் கூடங்களையும் அளிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று இப்படிப்பட்ட வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : திரு. எஸ். வி. சண்முகம்.

திரு. எஸ். வி. சண்முகம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கோரியுள்ள மானியக் கோரிக்கையின்மீது கருத்துக் கூறுகிற வாய்ப்பு தந்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகநலத்துறை என்பது சமுதாயத்திலுள்ள பலவீனமானவர்களுக்கு உதவி செய்கிற ஒரு துறையாகும்.

Priority to the weaker section in the society, அவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு இந்த அரசு ஒரு கருணை உள்ளத்தோடு செயல்படுகிறது என்பதை இந்த சமூகநலத்துறைக்கு

ஒரு தாயை அமைச்சராக நியமித்து இருப்பதிலிருந்தே இந்த அரசு பலவீனமானவர்களுடைய தேவைகளை எந்த அளவிற்கு அறிந்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். பலவீனமானவர்களுடைய கஷ்டங்களை மற்ற எவரையும் விட ஒரு தாயாலேதான் நன்கு புரிந்து கொள்ள முடியும். ஏனெனில் தன்னையும் வைத்துக் கொண்டு பிறருக்கு அன்னம் கொடுப்பவர் தாயல்லவா? அதை புரிந்துகொண்டிருக்கிற இந்த அரசு பொறுப்பான பல நல்ல காரியங்களை தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் இந்தியாவிலேயே இந்தத் துறை மிகச் சிறப்பாக செயல்படக் கூடிய துறை நம்முடைய மாநிலத்திலேதான் இருக்கிறது என்பதை 18 தேசிய விருதுகளை இந்தத் துறை பெற்றிருக்கிறது என்பதிலிருந்தே தெரிந்து கொள்ள முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) 18 தேசிய விருதுகளை சமூகநலத்துறை பெற்றிருக்கிறது என்றால் வேறு எந்த மாகாணங்களுக்கும் எந்த விருதும் இல்லையா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது. அந்த அளவிற்கு மிகச் சிறப்பாக இந்தத் துறை செயல்படுவதற்குக் காரணம், இந்த அரசுக்கு இருக்கிற தாயுள்ளம், பிரச்சினைகளைப் புரிந்துகொள்கிற மனப்போக்கு ஒரு முதியவருடைய கஷ்டநஷ்டங்களை எல்லோராலும் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. ஒரு விதவையினுடைய கஷ்டத்தை எல்லோராலும் புரிந்து கொள்ள முடியாது. அதற்கு ஒரு தனியான சிந்தனையும் பார்வையும் வேண்டும். உதாரணமாக உடல் ஊனமுற்றோருக்கு கடந்த ஆட்சிக் காலங்களில் இருந்த உதவிகளை விட, இந்த அரசு மிகச் சிறப்பாக உதவிகளைச் செய்து கொண்டிருக்கிறது. சமீபத்தில் மதுரையிலே உடல் ஊனமுற்றவர்களுக்கு ஒரு பயிற்சி மையத்தை நம்முடைய மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி வைத்து, தொடங்கி வைத்திருக்கிறார்கள். ஒரு பிரிவினருடைய கஷ்டங்களையும், எப்படி அவர்களுடைய துயரையும் துடைப்பது என்பதையெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறார்கள். கடந்த 10 ஆண்டுகளில் இன்னொரு பெரிய சமுதாயப் பிரச்சினையும் நம்முடைய நாட்டிலே உருவாகி இருக்கிறது. அது தான் வரதட்சிணை கொடுமை. வரதட்சிணைக் கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள் கூடிக்கொண்டே இருக்கிறது. சில இடங்களிலே ஸ்டவ் வெடிப்பது போன்ற சம்பவங்களில் தாய்மார்கள் கொல்லப்படுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், சிசுக்கள் ஆரம்பகாலத்திலேயே அழிக்கப்பட்டு விடுகின்றன உங்களுக்கு தெரியும். கடந்த 7, 8 ஆண்டுகளில் இந்தியாவிலேயே பெண் சிசுக்களைக் கொல்வதில் பிரசித்தி பெற்றிருக்கிற ஒரு பகுதியாக இருந்தது எங்களுடைய மதுரை மாவட்டத்திலே இருக்கிற உசிலம்பட்டித் தொகுதி. உசிலம்பட்டிப் பகுதியிலே பெண் சிசுக்கள் கொல்லப்படுவது என்பது, ஐக்கிய நாட்டுச் சபையிலே இருக்கிற உலக மகளிர் பிரிவிலே கூட விவாதிக்கப்பட்ட ஒரு



விஷயமாக இருந்தது. அவ்வளவு ஒரு பூதாகாரமான பிரச்சினையாக இந்தியாவிலே, தமிழகத்திலே பேசப்பட்ட ஒரு பிரச்சினையாக அது இருந்தது. அப்படிப்பட்ட ஒரு பிரச்சினைக்கு என்ன எதிர்காலம், இது எங்கு கொண்டுபோய் விடும் என்ற நிலைமைக்கு இந்த அரசு ஒரு முடிவு கட்டியிருக்கிறது என்பதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடைய முடியும். பெண்கள் பிறக்கும் போதே கொல்லப்படுகிற கொடுமைக்கு இந்த அரசு முடிவு கட்டியிருக்கிறது. எந்தத் தாயும் தான் பெற்ற பிள்ளையை மனத்தோடு கொல்ல மாட்டாள். காப்பாற்ற முடியாதே; அதுவும் பெண்ணாகப் பிறந்துவிட்டால் இந்த உயிருக்கு வரதட்சிணை கொடுத்து வாழ வைக்க முடியாதே; ஏற்கெனவே, 4, 5 பெண்கள் இருக்கின்றனவே; இந்த அளவில் இன்னுமா பெண் குழந்தை என்பதனாலே தான் பெண் குழந்தையை அழித்து விடுகிறார்கள். மனத்தோடு எந்தத் தாயும் தன்னுடைய குழந்தையைக் கொல்ல மாட்டாள்.

பிற்பகல் 12–15

அப்படிக் கொல்லத் தேவையில்லை; உன்னால் காப்பாற்ற முடியாத குழந்தையை இந்த அரசின் தொட்டிலிலே கொண்டு வந்து போட்டால் நாங்கள் பாதுகாத்து, பாலூட்டி, சீராட்டி, அதனை வளர்த்து வாழ்வு அமைப்போம் என்ற பொறுப்பை இந்த அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தியாவிலே இத்தகைய திட்டத்தை எந்த அரசும் செய்ததாக நான் அறியேன். உலக நாடுகளே கூட இந்த மாதிரி தொலை நோக்குத் திட்டங்களை உருவாக்கியதாக நான் அறியேன். ஆகவே, இப்பேர்ப்பட்ட நல்ல திட்டத்தை, இந்தியாவிற்கே வழிகாட்டக் கூடிய ஒரு திட்டத்தை அறிவித்திருக்கின்ற இந்த அரசை நெஞ்ச நிறைவோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இத்தகைய திட்டங்களை நிறைவேற்றும் போது சமுதாயத்திலே இருக்கிற வசதி படைத்தவர்கள், பொருளாதாரத்திலே மேம்பட்டவர்களுடைய உதவியை இந்த அரசு கேட்டுப் பெற வேண்டும். அத்தகைய முயற்சிகளை எல்லாம் இந்த அரசு செய்ததினால் தான் நம்முடைய சத்துணவுக் கூடங்கள் இப்போது சிறப்பாகச் செயல்படுகின்ற நிலைமை இருக்கிறது. அத்தகைய முயற்சிகளை எதிர்காலத்திலேயும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற வேண்டுகோளோடு இன்னொன்றையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்ட இளம் சிறார்களுடைய எண்ணிக்கை நம்முடைய மாநிலத்தில் ஓரளவு இருக்கிறது. சென்னை நகரத்திலே இருக்கக் கூடிய மருத்துவமனையிலே 200 குழந்தைகள் சர்க்கரை வியாதியால் பாதிக்கப்பட்ட அந்தப் பச்சிளம் சிறார்களுக்கு ''இன்சுலின்'' தேவைப்படுகிறது. அதற்கு இப்போது தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. ஒரு குழந்தையை மருத்துவமனையிலே பராமரிப்பதற்கு 1 மாதத்திற்கு ரூபாய்

300 செலவு ஆகும் என்று கணக்கிட்டு சொல்லுகிறார்கள். இப்படி பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய குழந்தைகளில் சிலருக்கு அங்குள்ள மருத்துவர்களே தங்களுக்குத் தாங்களே ''இன்சுலின்'' ஊசியைச் செலுத்திக்கொள்வது என்பது என்ற பயிற்சிகளையெல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். இப்படி மிகவும் பாதிக்கப் பட்டிருக்கக் கூடிய குழந்தைகளில் ஓரளவு எண்ணிக்கையினரை இந்த சமூக நலத் துறை எடுத்து மையத்தை உருவாக்கி அவர் களுக்கும் வாழ்க்கை அளிக்க வேண்டும் என்ற வேண்டுகோளோடு இந்தத் துறையின் மானியக் கோரிக்கையை ஏற்று, இந்தத் துறை சிறப்பாகச் செயல்படுகிறது; இந்தியாவிலே வழி காட்டக் கூடிய துறையாகச் செயல்படுகிறது என்பதில், தமிழன் என்று சொல்லிக் கொள்கிற ஒவ்வொருவரும் பெருமைப்படலாம் என்று கூறி, அமைகிறேன். வணக்கம்.

## 3. விதி 110-ன் கீழ் அமைச்சர்களின் அறிக்கை.—தொடர்ச்சி.

### (ஆ) கிராம உதவியாளர்கள் போராட்டம் கைவிடப்பட்டது குறித்தும், அவர்கள் கோரிக்கையைப் பரிசீலிக்க குழு அமைக்கப் பட்டுள்ளது குறித்தும் வருவாய்த்துறை அமைச்சர் அறிக்கை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் விதி 110-ன் கீழ் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிக்க விரும்புகிறார். அவருக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, கிராம உதவியாளர்கள் தங்களை முழு நேர ஊழியர்களாக ஆக்கி, அடிப்படை ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து, 11—2—1993 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். ஆனால் கிராம உதவியாளர்கள் என்ற பெயர் இன்றைக்கு இருக்கிறது என்றால்—நான் முன்பே பல முறை இந்த அவையில் சொல்லி இருக்கிறேன். கிராம உதவியாளர்களுக்கெல்லாம் முதலிலே வெட்டியான் என்றும், தலையாரி என்றும் தான் பெயர்கள் இருந்தன. அதைப் புரட்சித் தலைவி அவர்கள் ''காவலர்கள்'' என்று மாற்றினார்கள். தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, கிராம உதவியாளர்கள் என்று முன்பே அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இன்றைக்கு, தங்களை அரசு முழு நேர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள். இன்று அல்ல, பல ஆண்டுக் காலமாக ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இருந்தும், தொடர்ந்து இந்த நாடு விடுதலை அடைந்த பிறகு வந்த பல்வேறு கட்சிகளின்





ஆட்சிக் காலத்திலும், அவர்கள் பகுதி நேர அரசுப் பணியாளர்களாக இருந்தார்கள். இதை முன் நிறுத்தி, போராட்டம் நடத்தினார்கள். அவர்களுடைய போராட்டத்தை புரட்சித் தலைவி அவர்கள் மிகக் கருணை உள்ளத்தோடு ஆராய்ந்து பார்த்து, அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி, 'இன்றைக்கு நீங்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறீர்கள். போராட்டத்தை நீங்கள் நிறுத்துங்கள். நல்ல நிலைமையிலே உங்களுடைய கோரிக்கைகளை ஆராய்கிறேன்' என்று சொன்னதன் பேரில், மறியல், உண்ணாவிரதம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த அவர்கள் புரட்சித் தலைவியின் வேண்டுகோளை ஏற்று, அவர்கள் எல்லாம் வேலைக்குத் திரும்பச் சென்றிருக்கிறார்கள். மக்கள் நலன் கருதியும், வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு, பணிக்குத் திரும்ப வேண்டும் என்றும், சுமுகமான சூழ்நிலையில் பேச்சு வார்த்தை நடைபெறும் என்றும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில் வேலை நிறுத்தத்தை நிறுத்தி, போராட்டத்தைக் கைவிட்டு, கடந்த 8-4-1993 அன்று முதல் பணிக்குத் திரும்பினார்கள் என்பதை இதற்கு முன்பே நான் அறிவித்திருக்கிறேன். கிராம உதவியாளர்களின் கோரிக்கையில் அவர்கள் செய்து வரும் பணிகளின் தன்மைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு இன்றைக்கு வழங்கப்பட்டு வரும், வழங்கப்படுகிற ஊதியம் ரூ. 612 ஆக இருந்தது.

பிற்பகல் 12-20

அந்த ரூ. 612-ஐ உயர்த்த வேண்டும் என்பதற்காக ஒரு கோரிக்கையை வைத்தார்கள். 1-7-1992 முதல் 612-ஐ 712 ஆக 100 ரூபாய் உயர்த்திக் கொடுக்கப்படுகிறது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 1-1-1993 இந்த ஆண்டு ஜனவரியிலிருந்து, 1-1-1993 முதல் அதிலும் இன்னும் அதிகமாக ஏற்றி 712-ஐ ரூ. 745 ஆக உயர்த்தப்பட இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டுமல்லாமல் மாற்று அகவிலைப்படியாக அவர்களுக்கு 80 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆக மொத்தம் 712-ல் இருந்து 825 ஆக உயர்த்தி வழங்குவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இவை மூலம் அளிக்க வேண்டிய நிலுவை ஊதியம் அவர்களுக்கு ரொக்கமாக வழங்கப்படவும் உத்திரவிட்டிருக்கிறார்கள். அதுவும் அல்லாமல் 1-7-1993 அன்று அரசு ஊழியர்களுக்கு பின்னர் வருங்காலத்திலே, 1-7-1993 அன்று அரசு ஊழியர்களுக்கு, அகவிலைப்படி உயர்வு வழங்கும் போது, ரூ. 745 அடிப்படை ஊதியம் வைத்து 9 சதவீதம் அளவில் இவர்களின் அகவிலைப்படி உயர்த்தி வழங்கப்படும் எதிர் காலத்தில், என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பகுதி

நேரப் பணியாளர்களை முழு நேரப் பணியாளர்களாக மாற்றி அமைப்பதற்கு பரிசீலனை செய்ய வேண்டும் என்பதுதான் அவர்களுடைய முக்கியமான கோரிக்கைகளில் ஒன்று. அந்தக் கோரிக்கைகளை எப்படி அணுகுவது என்றும், எப்படி முடிவு செய்வது என்பதற்கும் அலுவலர் குழு ஒன்று அமைக்கப்படுவதற்காக புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தக் குழு விரைவிலேயே பரிந்துரை செய்து, அரசுக்குச் சிபாரிசு செய்யும். அந்தச் சிபாரிசின் அடிப்படையில், பணியாளர்கள் எண்ணிக்கை, பணியின் தன்மை, நடைமுறை விதிகள், நிதியாதாரம் ஆகியவைகளை ஆராய்ந்து இவர்கள் ஊதியத்தை மேம்படுத்தி, இவர்களின் பணியை மாற்றியமைக்கும் கருத்தைப் பரிசீலித்து, அந்தப் பரிந்துரையை வழங்க வேண்டுமென்று தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : * *

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : உங்களைப் பேச அழைத்திருக்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : முதலில் இதைக் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : நீங்கள் மானியத்தில் பேசுவதாக இருந்தால் பேசுங்கள். 110-ல் கேட்க முடியாது. (குறுக்கீடு) இதிலே விளக்கம் கேட்க முடியாது, அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் மானியத்தில் பேசுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : விளக்கம் கேட்கவில்லை. அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர வேண்டும் அல்லவா ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : நீங்கள் அமைச்சரிடம் தனியாகக் கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : இங்கே தான் கேட்க வேண்டும். அவையில் அறிவிக்கின்றபோது, அவையிலேதான் கேட்க வேண்டும். தனியாக எப்படிக் கேட்க முடியும் ?

** மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : விதியில் இடம் இல்லை.

திரு. கா. ப. பட்டாபிராமன்: பாயிண்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்கிறார். திரு. பட்டாபிராமன்.

திரு. கா.ப. பட்டாபிராமன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு அறிக்கையை வைத்தார்கள். 110 (2)-ல் அறிக்கையின் மீது அப்பொழுது எந்த விவாதமும் இருத்தல் கூடாது என்று இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் இது சம்பந்தமாக.. (குறுக்கீடு) விவாதம் என்பதே ஒரு பொருள் பற்றி பேச ஆரம்பிக்கின்ற போதே விவாதம் என்றுதான் பொருள். ஆகவே, அதன் மீது எந்தவிதமான விவாதமும் இருக்கக்கூடாது. ஆகவே, அவர்களைப் பேச அனுமதிக்கக் கூடாது என்று நான் பணிவன்போடு மாற்றுத் தலைவரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ம. சின்னசாமி) : இல்லை, உங்களை மானியத்தில் பேசத்தான் கூப்பிட்டேன். (குறுக்கீடு) மானியத்தில் தான் பேச வேண்டும், மற்றபடி நீங்கள் வேறு பேசக்கூடாது பேசினால் அவைக்குறிப்பில் ஏறாது. (பேசுங்கள்.)

திரு. ஜி. பழனிசாமி : **

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-இன் கீழ் வைக்கின்ற அறிக்கை மீது விவாதம் எடுத்துக் கொள்வதில்லை, வைக்கும் நேரத்தில் எடுத்துக் கொள்ளக் கூடாது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: **

பிற்பகல் 12-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கிளப்பியதும் அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதும், இரண்டுமே அவைக் குறிப்பிலே இருக்காது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. ஜி. பழனிசாமி அவர்கள் சமூக நலத் துறையின மீது உங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வையுங்கள்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு).

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : உறுப்பினர் வழக்கமாக சிகப்புத் துண்டு போட்டு வருவார். இன்று கருப்புத் துண்டு போட்டு வந்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கருப்புத் துண்டு பூராசாமி நாள்தோறும் போட்டு வருகிறார். இவர் ஒன்று ஒரு நாள் போட்டு இருக்கிறார்.

திரு. ஜி. பழனிசாமி : கருப்புத் துண்டு பற்றியா. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கருப்புத் துண்டு போட்டிருப்பது தமிழ்நாடு முழுவதும் எங்களுடைய கட்சியின் சார்பில் கருப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்குத் தலைமை தாங்கிவிட்டுத்தான் நான் அந்தக் கருப்புத் துண்டோடு இங்கே வந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாள் தோறும் பூராசாமி அவர்கள் கருப்புத் துண்டு போட்டு வருகிறார்கள். (குறுக்கீடு).

திரு. ஜி. பழனிசாமி : நான் எப்போதுமே சிவப்புத் துண்டு போட்டு வருவேன். இன்று கருப்புத் துண்டு போட்டு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவ்வளவுதான். இதற்கும் போராட்டத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நாள்தோறும் போட்டு வருபவர்கள் போராட்டத்திற்கே நாள் தோறும் வருகிறார்கள் என்று அர்த்தமா ?

திரு. ஜி. பழனிசாமி : அது சட்டமன்றத்தின் நிகழ்ச்சி பற்றிய தமிழ்நாடு பூராவும் போராட்டம் நடக்கிறது. அது தான்.

## 6. மானியக் கோரிக்கைகள், 1993–94, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண் 29—சமூக நலன்

திரு ஜி. பழனிசாமி: மாண்புமிகுபேரவைத்தலைவர் அவர்களே, சமூகநலத்துறையின் மீது என்னுடைய கருத்துக்களை கூற நான் விரும்புகிறேன். இன்றைய தினம் சமூக நலத்துறையின்





மூலமாக சத்துணவு மையங்கள்மூலம் சாதாரண ஏழையெளிய மக்களுக்கு சத்துணவு வழங்குகின்ற திட்டம் இருக்கிறது. அது போல அனாதை குழந்தைகளை பாதுகாப்பது, விதவைகளுடைய வாழ்க்கையில் அவர்களுக்கு வாழ்வளிப்பது, இது போன்றவைகளை பல்வேறு திட்டங்கள் மூலமாக இங்கே அறிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக சத்துணவு மையங்கள் ஏழையெளிய குழந்தைகளுக்கு மதிய உணவாக கொடுத்து அவர்கள் அருந்திக் கொண்டிருந்தபோதிலும் கூட இன்றைக்கு அந்த சத்துணவு மையங்கள், கிராமப் புறங்களில் அவைகள் ஏழை எளிய குழந்தைகளுக்கு அனேகமாக கல்விக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு மாறாக இன்றைக்கு சத்துணவு சாப்பிடுகின்றதற்கு உணவை முக்கியத்துவமாக கொண்டு அமைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் (குறுக்கீடு).

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்தில் எப்போதும் தவறான கருத்துக்களைச் சொல்வது என்பதையே வழக்கமாக வைத்துக் கொண்டு இருக்கிற பழனிசாமி அவர்கள் இப்போதும் தவறான கருத்துக்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னால் அங்கன்வாடி மையங்களிலே குழந்தைகள் நல மையங்களிலே கல்வி போதிக்கப்பட்டு வருகிறது என்பதை தன்னுடைய தொகுதிக்கு அடிக்கடி சென்றிருப்பார்களேயானால் அந்த சத்துணவு மையங்களை, குழந்தைகள் நல மையங்களைப் போய் அவர் பார்க்கிற போது தெரியும். சத்துணவு மையங்கள் என்பது கல்வி கூடங்களில இருப்பது. அங்கே ஏற்கெனவே கல்வியை அந்த மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் கல்விக் கூடங்களிலே சத்துணவு வழங்கப்படுகிறது. கல்விகூடங்களிலே சத்துணவு மையம் என்பது வேறு, குழந்தைகள் நல மையம் என்பது வேறு என்பதைப் புரிந்து பேச வேண்டுக் என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எப்போதுமே இந்த தவறான தகவலை கொடுப்பது...... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்போதாவது.....

திரு. ஜி. பழனிசாமி : எப்போதாவது நான் கேட்பது அல்ல. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது போன்ற சத்துணவு மையங்களிலே நீங்கள் நேரடியாக சென்று பார்க்க வேண்டும் என்பதற்காக, நீங்களே போய் பார்க்க வேண்டும் என்பதற்காகவே உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நான் தொகுதி பகுதிகளுக்குச் செல்லாதவன் அல்ல.

நான் சமீபத்திலே தாங்கள் ஏற்படுத்தியிருக்கின்ற அந்த அங்கன்வாடி அமைப்பாளர்களுடைய கூட்டத்திலே கலந்து கொண்டிருக்கிறேன். அதே போன்று கிராமப்புற பெண்கள் சத்துணவு எப்படி தயார் செய்து, குழந்தைகளுக்கு உண்ணுவதற்காக தயாரிக்கப்பட்டிருக்கிற நிகழ்ச்சியிலே நானே தலைமை ஏற்று நடத்தியிருக்கிறேன். என்னவென்று சொன்னால், நாகை-காயிதேமில்லத் மாவட்டத்திலே இருக்கிற உங்களுடைய பொறுப்பாளர்களைக் கேட்டுப்பாருங்கள். அனேகமாக இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களிலே நான்தான் கலந்து கொண்டிருப்பேன் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, உணவு பற்றி மட்டுமே கவலைப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். நான் சொன்னது கல்வி எப்படி கற்றுக் கொடுக்கிறார்கள் என்பதைப் பார்த்தீர்களா என்று தான் கேட்டேன்.

திரு. ஜி. பழனிசாமி : நான் பல இடங்களிலே போகிற போது, சத்துணவு சாப்பிடுகின்ற நேரத்தில்தான் அந்த அந்த குழந்தைகள் கையிலே தட்டோடு வருகிறார்களே யொழிய, மற்ற நேரங்களிலே அந்தப் பள்ளிகளிலே தங்கிப் படிப்பதில்லை. நான் பல அமைப்பாளர்களை வன்மையாகவே கேட்டேன். நீங்கள் சாப்பாடு போடுவதற்கு மட்டுமே வரக்கூடாது என்று நான் சொல்லியிருக்கிறேன். ஆகவேதான் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். கட்டாயமாக அந்த சின்னஞ்சிறார்களுக்குக் கல்வியைப் புகட்ட வேண்டும். ஆகவே உணவு மட்டும் கொடுப்பதோடு இருக்கக் கூடாது என்பதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப் பட்டிருக்கிறேன். அதே போல இன்றைக்கு சத்துணவு அமைப்பாளர்கள் கடந்த 21 ஆம் தேதி முதல் தொடர்ந்து தங்களை அரசு ஊழியர்களாக்க வேண்டுமென்பதற்காக தமிழகத்திலே போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். காலையில் கைது செய்யப்பட்டு மாலையிலே விடுதலை செய்யப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சத்துணவுப் போராட்டத்தை தலைமை ஏற்று நடத்தக்கூடியவர்கள் சத்துணவுப் பணியாளர்களே இல்லை என்பதை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருக்கு உங்கள் வாயிலாக தெரியப்படுத்துகிறேன்.



ஏறக்குறைய 68 ஆயிரம் மையங்கள் இருக்கின்றன. அவர்களில் போராட்டம் நடத்தக்கூடியவர்கள் 300 பேர்தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அன்றைக்கே விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 300 பேர்தான் போராட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது உண்மை அல்ல. தொடர்ந்து சத்துணவு. . . .

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலேதான், மாவட்டங்களில் எல்லாம் இருந்து வந்து போராட்டம் நடத்துகிறோம் என்று சத்துணவுப் பணிக்கே சம்பந்தம் இல்லாதவர்கள் அந்தப் போராட்டத்தை நடத்தினார்கள். காவல் துறை அதிகாரிகளே அவர்களை அழைத்துச் சென்றார்கள். அவர்கள் பட்டியல்படி 300 பேர்தான், அவர்கள் மாலையிலேயே வெளியிலே விடப்பட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : சத்துணவு மையங்களிலே பணியாற்றாதவர்கள் எப்படி இந்தப் போராட்டத்திலே ஈடுபடுவார்கள், தங்களை நிரந்தரம் ஆக்க வேண்டும். அரசு ஊழியராக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்கள். . . . . .

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி போன்றவர்கள் அதை தூண்டி விட்டு அப்படி நடத்தச் சொன்னால் அப்படி தான் போராடுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஜி. பழனிசாமி : உங்களுடைய அரசியலில் நியாயத்திற்காக போராடினால், குரல் கொடுத்தால், ஆர்ப்பாட்டம் நடத்தினால், தூண்டிவிடுகிறார்கள், என்று சொல்கிறீர்களே தவிர, நியாயமான பிரச்சினைகளைப் பற்றி பரிசீலிப்பதற்கு அரசு . . . . . . . .

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டம் நடத்தாமலேயே, நியாயமான கோரிக்கைகள் என்றால், இந்த நிதிநிலை அறிக்கையிலேயே அதை நிறைவேற்றுகிற ஒரே துணைக் கண்டத்திலேயே

முதலமைச்சர் புரட்சித் தலைவி தான் என்பதை சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியப்படுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. ஜி. பழனிசாமி : அமைச்சர் அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்யுங்கள். அவர்கள் தொடர்ந்து குறைவான சம்பளத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக குறைந்த சம்பளத்தில் அவர்கள் பணியாற்றுகிறபோது அந்த சத்துணவு மையங்களிலே பல்வேறு தவறுகள் ஏற்படுகிற வாய்ப்புகள் ஏற்படுகின்றன. ஆகையால், அவர்கள் செய்யக்கூடிய குற்றங்களை மட்டும் குறை சொல்வதோடு மட்டுமல்லாமல் நீங்கள் அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கி, அரசு ஊழியர்களுக்கான அனைத்து தகுதிகளையும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்றுதான் இன்றைக்கு நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிற நல்ல நடவடிக்கைகளின் காரணமாக பெண் குழந்தைகள் சிசு கொலை தடுக்கப்பட வேண்டும் என்பதற்காக எடுத்திருக்கிற நடவடிக்கையின் காரணமாக சுமார் 60 -க்கு மேற்பட்ட குழந்தைகள் — பெற்றோர்கள் பெண் குழந்தைகளை கொண்டு வந்து சேலம் மாவட்டத்திலே தொட்டிலிலே கொண்டு வந்து போடுகிற ஒரு காட்சியை நாம் பார்க்கிறோம். ஆனால் அந்த குழந்தைகளை கூட சரியான முறையிலே பராமரிக்க முடியாமல் சேலத்திலே ஒரு 10 குழந்தைகளுக்கு மேல் இறந்துள்ளதாகவும் . . . . . . . . . .

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வரலாற்றிலேயே இப்படிப்பட்ட உன்னதமான திட்டத்தைக் கொண்டு வந்தவர் நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதை மாண்புமிகு உறுப்பினர் பாராட்டியிருக்க வேண்டும் என்று நாங்கள் எதிர் பார்த்தோம். உண்மையிலே குழந்தைகளை தொட்டிலிலே கொண்டு வந்து போடப்படுகிறபோது மிகக் குறைவான எடைதான் இருக்கிறது—1.25 கிலோ மட்டுமே இருக்கக்கூடிய அளவிற்கு இப்பொழுது வந்திருக்கிற அனைத்து குழந்தைகளும் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல், பிறந்தவுடன் அந்தக் குழந்தைகளுடைய தொப்புள் கொடி கூட அறுக்கப்படாமல், அதை சரியான முறையில் பராமரிக்கப்படாததால், அந்த தொப்புளை சுற்றி விஷம் பரவிய காரணத்தாலும் சில குழந்தைகள் மூளை வளர்ச்சி குன்றியே பிறந்ததால் அந்த மூளை பாதிக்கப்பட்ட காரணத்தினாலும்; இரண்டு கால்களுமே இல்லாமலும் 3 குழந்தைகள் பிறந்ததனுடைய காரணமாகவும், கண்கள் இல்லாமல் பிறந்ததனுடைய காரணமாகவும் அந்தக் குழந்தைகள் இறந்திருக்கின்றனவேயொழிய, அதுவும் அரசு பொது மருத்துவமனையில் வைத்திருக்கும்பொழுதுதான் இறந்தனவேயொழிய அரசு காப்பகங்களில் எந்தக் குழந்தையும் இறக்கவில்லை. இதுவரை 45 குழந்தைகள் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு உங்கள் வாயிலாக தெரியப்படுத்துகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12-35

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள கொண்டு வந்திருக்கிற திட்டத்தை நான் குறை சொல்லவில்லை. 10 குழந்தைகளுக்கு மேல் இறந்திருக்கிறார்கள். அதைப் பராமரிப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்றுதான் சொன்னேன். (குறுக்கீடு).

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பராமரிக்கப்படாததால் குழந்தைகள் இறந்தன என்றார்கள். பெரிய செல்வந்தர்கள் வீட்டுக் குழந்தைகள் கூட அப்படிப் பராமரிக்கப்படுவதில்லை. அரசு பொது மருத்துவமனையில் அந்த அளவுக்கு அவைகள் பராமரிக்கப்படுகின்றன. அந்தக் குழந்தைகள் பேரில் நிறைய தொண்டு நிறுவனங்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நிதியை அளித்து, அந்த நிதியையும் அந்தக் குழந்தைகள் பெயரில் டெபாசிட் பண்ணப்பட்டிருக்கின்றன. இது உலக வரலாற்றில் எங்கேயும் கிடையாது என்பதைத் திரும்பவும் சொல்ல விரும்புகிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : நன்றி. வரதட்சிணைக் கொடுமை காரணமாகத்தான், தான் ஈன்றெடுத்த குழந்தையைக் கூட இன்றைய தினம் இப்படிப்பட்ட அரசாங்கத்தின் தொட்டில்களில் போடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனக்கு முன்பு கூட இங்கே ஒரு மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். குறிப்பாக பெற்ற குழந்தைகளை ஒரு தாய் தன்னுடைய உயிரே போனாலும் அந்தக் குழந்தையைக் காப்பாற்ற நினைக்கும் நிலை இருக்கும். ஆனால் வரதட்சிணைக் கொடுமையால் தான் பெற்றெடுத்த குழந்தையைக் கூட அரசு அமைத்திருக்கும் தொட்டிலில் கொண்டு போய் போடுகிற ஒரு அபாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால், நாட்டிலே வரதட்சிணை கொடுமை எந்த அளவுக்கு இருக்கிறது என்று தெரியும். பெண் குழந்தைகளைப் பார்த்து அவர்களுக்கு திருமணம் செய்து வைப்பது என்று சொன்னால் இன்றைக்கு பெரிய கொடுமையாக

இருக்கிறது. நாம் தொடர்ச்சியாக பத்திரிகை செய்திகளைப் பார்த்தோமானால், நேற்றுகூட, இரண்டு தினங்களுக்கு முன்னால், நாகை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. ராஜமாணிக்கம் அவர்களுடைய பெண் திருமணம் சமீபத்திலே நடந்தது. அந்தப் பெண்ணுக்கு எதிராக வரதட்சிணைக் கொடுமை நடந்து கேஸ் அடுப்பினால் தீவிபத்து என்று சொல்லி அவர் சேலையில் தீ பிடித்தது என்று சொல்லி ஒரு கொலை கூட நடந்திருக்கிறது. இதைப் போன்ற பல்வேறு சம்பவங்கள் தமிழ்நாட்டில் சொல்ல முடியும். அது போன்ற புகார்கள் வந்தால் (குறுக்கீடு)

<u>மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சொல்ல முடியும் என்று சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறார். ஆண்டாண்டு காலமாக இருக்கிற பிரச்சினை இந்த வரதட்சிணைக் கொடுமை என்பது. இது இந்தியா முழுவதும் இருக்கிற பிரச்சினை. அதற்காகத்தான் மக்கள் மனதிலே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களையெல்லாம் இன்றைக்கு நமது அரசு தீட்டி வருகிறது. அந்த வரதட்சிணைக் கொடுமையை ஒழிப்பதற்காக தேசிய நல பெண்கள் கமிஷன் நம்முடைய மாநிலத்திலேயும் மாநிலக் கமிஷன் அமைக்க நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் முடுக்கிவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியா முழுவதும் இது இருக்கிறது என்று அவர் சொல்ல வேண்டும்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற சம்பவங்கள் நடந்தால் அந்தப் பெற்றோரிடத்திலேயிருந்து மனு வந்தால் உரிய நடவடிக்கையை எடுக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் பல பெண்களை திருமணம் செய்து கொண்டதாக புகார் இருக்கிறது. ஒருவரே கூட இரண்டு மூன்று திருமணங்கள் வரதட்சணைக்காக செய்து கொண்டு அந்தப் பெண்களை இப்படிப்பட்ட கொடுமைகளுக்கு ஆட்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன். அதே போன்றுதான் ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிப்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருக்கிறார்கள். சென்னையில் பார்த்தால் சாக்குப் பையோடு நூற்றுக் கணக்கான குழந்தைகள் பேப்பர் பொறுக்குகிற கொடூரமான காட்சியை நாம் பார்க்க முடியும். கி.பி. இரண்டாயிரமாவது ஆண்டிற்குள் சென்னை நகரத்தை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங் மாற்றப்பெற்றது.





அழகுபடுத்துகிறோம் என்று நாம் சொல்கிறபோது, இன்றைய தினம் தமிழகத்திலே அதுவும் சென்னை நகரத்திலே பார்த்தோம் என்று சொன்னால், ஒட்டக்கூடிய போஸ்டர்களை எல்லாம் கிழிப்பதே இவர்கள்தான். அதுதான் அவர்களுடைய வாழ்க்கை. சாக்குப் பையோடு அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். அப்படிப்பட்ட குழந்தைகளை அரசாங்கத்தின் மூலமாக பாதுகாக்க வேண்டும். நகரத்தில் திரிகிற குழந்தைகள் பல்வேறு கெட்ட பழக்கங்களுக்கு ஆளாகிறார்கள். பேப்பர் பொறுக்குவது அதை விற்பனை செய்வது, போதை மருந்துகளை சாப்பிடுவது, அதன் பிறகு திருட்டுத் தொழிலில் ஈடுபடுவது இப்படி சமூக விரோத காரியங்களில் அவர்கள் ஈடுபடுவதைத் தடுக்க வேண்டும். இப்படி ஆயிரக்கணக்கான குழந்தைகள் அனாதைகளாக இருக்கின்றார்கள். அமைச்சர் அவர்கள் கூட இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அரசாங்கம் உடனடியாக சீர்திருத்தப்பள்ளிகளில் சேர்த்து, பல உப தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு வாழ்வளிக்க முயற்சிகள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாகச் சத்துணவு மையங்கள். என்னுடைய தொகுதியைப் பற்றிச் சொல்கிறேன். வேறு மாவட்டங்களைப் பற்றிச் சொல்ல முடியாது. பல்வேறு இடங்களில் என்னுடைய தொகுதியில் சத்துணவு மையங்கள் இன்றைய தினம் இல்லை. இருந்தாலும், சரியான கீற்றுக் கொட்டகைகள் கூட இல்லை. அதனால் உணவுப் பொருட்களில் பல்லி விழுந்து பல குழந்தைகள் பல முறை மருத்துவமனைகளில் சேருகிற நிகழ்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே சத்துணவுக் கூடங்களில் சரியான கொட்டகைகள் அமைத்து பல்லி விழாமல் பாதுகாக்கக்கூடிய வகையில் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

<u>* மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 68,000 சத்துணவு மையங்கள் ஏறக்குறைய பல ஆண்டுகாலமாக பராமரிக்கப்படாமல் இருந்தன. அதற்கு இதற்கு முன்பிருந்த எந்த அரசும் நிதியொதிக்கீடு செய்யவில்லை. ஆனால் முதன்முதலாக அந்த சத்துணவுக் கூடங்களை பராமரிப்பதற்கு ஒவ்வொரு ஆண்டும் ஒருகோடி ரூபாய் ஒதுக்கியவர் நம்முடைய இதயதெய்வம் டாக்டர்புரட்சித்தலைவி அவர்கள். (மேசையைத்தட்டும் ஒலி) ஆகவே, இந்தப் பணிகளை எடுத்துக் கொண்டு, இன்றையதினம்தான் எல்லா மாவட்டங்களிலும் இந்த மையங்களைச் சீர்படுத்துகிற ஒரு மிகப் பெரிய பணியை சமூக நலத் துறை மேற்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டவுடன் பெரும் செல்வந்தர்கள் முன் வந்து இந்தத் திட்டத்திற்கு 1½ கோடி ரூபாய் அளவுக்கு [illegible] அவர்களே

பராமரித்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டாவதாக, பல்லி விழுந்தது என்று சொன்னார்கள். கடந்த கால ஆட்சியில் எத்தனை இடங்களில் பல்லி விழுந்தது என்ற பட்டியலை அவர் எடுத்துப் பார்க்க வேண்டும். இந்த ஆட்சியில் தான் அவைகள் வெகுவாக குறைக்கப் பட்டு, சத்துணவுத் திட்டம் சீரமைக்கப்பட்டு புதிய வடிவைப் பெற்று, புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் பொலிவுற்று இருக்கின்றன என்பதை உலக வங்கியே பாராட்டி இருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது ** ........................ ஒரு *உண்மைக்குப் புறம்பான தகவலை ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உண்மைக்குப் புறம்பான என்று சொல்லுங்கள்.

திரு. மு. நடேசன் : உண்மைக்குப் புறம்பான தகவலை தந்து கொண்டிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படி சொன்னதை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி : ஆதாரம் தருகிறேன். மகஜர் கொடுத்தும் உரிய நடவடிக்கை இல்லை. .. .. ..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பழனிச்சாமி .. நீங்கள் சொன்னதை சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் மறுக்கிறார்கள். நீங்கள் சொல்வது ** என்பதைப் போல உங்கள் கருத்து இருக்கிறது. அதன் காரணமாகத்தான் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்கள், அது அவ்வாறு கிடையாது, அவர் சொன்ன தகவல் தவறு என்று சொல்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட ஆள் இந்த மாதிரி தவறு செய்து, நடந்திருக்கிறது என்பது வேறு**... என்று சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

** மாண்புமிகுப் பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் யாராவது ஒருவர் இருந்தால் அந்த ஒருவர் இப்படித் திருமணம் செய்து கொண்டார், நடவடிக்கையெடுக்க வேண்டுமென்று ஏதாவது சொன்னால் சரியாக இருக்கும்.** நாளை நீங்கள் கூட சேலம் போக வேண்டியிருக்கும். (சிரிப்பு) ஆகவே, இதையெல்லாம் யோசித்து, இப்படி சொல்லலாமா என்று பார்த்து சொல்லவேண்டும். குறிப்பிட்ட ஒரு ஆள் என்றால் அந்த ஆளைக் குறிப்பிட்டு சொல்வது தான் நியாயமாக இருக்குமே தவிர, இதை ஒரு பெரிய பிரச்சினையாக உருவாக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் குறிப்பிட்ட ஒருவர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் என்று சொல்லி விட்டால் பரவாயில்லை.

திரு. ஜி. பழனிசாமி : ஆதாரம் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சேலம் மாவட்டத்தில் ஒருவர் என்பதில் யாரும் ஆட்சேபிக்கவில்லை, நீங்கள் சொன்னது.** என்றெல்லாம் தகவல் வந்திருக்கிறது என்று சொன்னீர்கள்.

திரு. ஜி. பழனி சாமி : ** . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாருங்கள், இன்னும் அதிகமாகப் போகிறீர்கள். அது இருப்பது சரியல்ல. திரு. துரை. ராமசாமி.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : **

திரு. துரை. ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, .. ** ஆகவே, சட்ட விரோதமாக இரண்டு, மூன்று திருமணங்களைச் செய்து கொள்கிற நபர்களுக்கும் இவருக்கும் தொடர்பு இருக்கிறதா ? அதனால்தான் புள்ளி விவரம் தருகிறேன் என்று சொல்கிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம் பழனிசாமி. சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் (குறுக்கீடு) செய்த தவறை .. ..

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1993 ஏப்ரல் 26

திரு. ஜி. பழனிசாமி : ஆதாரம் நான் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அதைக் கொடுத்துவிட்டுத் தான் பேச வேண்டும். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் செய்த தவறை** என்று சொல்வது அது நன்றாக இருக்காது. அவர்கள் மறுக்கிறார்கள் என்பதற்காக அல்ல.

திரு. ஜி. பழனிசாமி ; தவறான தகவலை உங்களுக்குத் தரவில்லை. காவல்துறை அதிகாரிகளுக்குக் கொடுத்திருக்கிறேன். உங்களிடம் ஆதாரப் பூர்வமாகத் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை மறுக்கவில்லை. (குறுக்கீடு) முதலில் சொன்ன தகவல் * * என்று சொல்லி இருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் இப்போது சொல்வது, அப்படி யாராவது இருந்தால், குறிப்பிட்டு ஒருவர் அல்லது இரண்டு பேர் என்று சொல்ல வேண்டுமே தவிர, **அங்கேயிருக்கிற அத்தனை பேரையும் அது பாதிப்பதாக இருக்கிறது என்ற காரணத்தால் தான் சொல்கிறோம். உங்களுக்கு அதில் அக்கறை இல்லை என்கிற போது அது இருந்துவிட்டுப் போகிறது. காரணம் உங்களுக்கு அங்கே ஒருவரும் இல்லையென்று கருதுகிறேன். அதனால், நீங்கள் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கலாம். எதிர்காலத்திலும் நீங்கள் அங்கே போகவேண்டியதில்லை என்று நீங்கள் கருதுகிற காரணத்தால் சொல்லுகிறீர்கள் என்று கருதுகிறேன். எனவே, இது ஒரு மாவட்டத்தில் இருக்கிற அத்தனைபேருடைய மனதையும் புண்படுத்தும் என்ற காரணத்தால்தான் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள்.

பிற்பகல் 12-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி பழனியம்மாள் சொல்லுங்கள், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த எல்லோரும் பழனிசாமி அவர்களுடைய கருத்தை மறுக்கிறார்கள். திருமதி பழனியம்மாள். (குறுக்கீடு) அந்த மாவட்டத்தைச் சேர்ந்த எல்லோரும் உங்களுடைய கருத்தை மறுக்கிறார்கள்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, சில இடங்களில் ஒருவர் இரண்டு திருமணங்கள் செய்து கொள்வது உலகம் முழுவதுமே இருக்கின்றது. மாண்புமிகு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1993 ஏப்ரல் 26] [திருமதி க. பழனியம்மாள்]

உறுப்பினர் அவர்கள், அது சேலம் மாவட்டத்திலேதான் நடைபெறுவதைப் போல அங்கேயிருக்கின்ற எல்லோருமே என்று அதை ஜெனரலைஸ் பண்ணிச் சொல்வதை நான் ஏற்றுக் கொள்ள முடியாது. ஒருவர் இல்லாவிட்டால், இரண்டு பேர் களை வேண்டுமானால் கூட சொல்லிக் கொள்ளட்டும். அல்லது அவர்கள் வேண்டுமானால் ஒரு பட்டியலைக் காட்டி, இவர்கள் எல்லாம் இரண்டு திருமணங்கள் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லட்டும். ஆனால், ஜெனரலைஸ் பண்ணி, **என்று சொன்னதை அவர்கள் வாபஸ் வாங்கவேண்டும். நீங்கள் அதை அவைக்குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கா.ப. பட்டாபிராமன்.

* திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, இந்திய நாட்டைப் பொறுத்த வரையில், இந் துக்களாக இருந்தால், அல்லது மற்ற மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால் முஸ்லீம்களைத் தவிர— ஒருவர் 2 பெண்களைத் திரு மணம் செய்து கொள்வது, சட்டப்படி குற்றம் என்று இந்து மேரேஜ் ஆக்டிலும், இந்தியன் பீனல் கோடிலும் இருக்கிறது. ஆகவே இந்தியாவைப் பொறுத்தமட்டிலும், "பாலிகமி" ஒருவர் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட திருமணம் செய்து கொள்வது சட்டபூர்வமாக மறுக்கப்படுகிறது. இந்தியாவிலே பல மாநிலங்களிலே இப்படிப்பட்ட வழக்குகள் அதிகமாக நீதிமன்றங் களிலே இருக்கின்றன. ஆகவே, இந்தியாவில் இருக்கின்ற அத் தனை பேர்களும் ஒருவர் பல பெண்களை திருமணம் செய்து கொள்கிறார்கள் என்று பொதுவாக நாம் சொல்லிவிட முடியாது. சேலத்திலே யாரோ ஒருவர் இருக்கிறார் என்றால், ** மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, ஜெனரலைஸ் பண்ணிச் சொல்லக் கூடாது. அதற்கு சட்டமே இருக்கிறது. ஒருவர் இரண்டு பெண்களையோ, அல்லது ஒரு பெண் இரண்டு ஆடவரையோ திருமணம் செய்து கொண்டால், 7 ஆண்டுக் கடுங்காவல் தண்டனை இருக்கிறது. இது ஜெனர லாகவும் இருக்கிறது. இந்தியத் திருமணச் சட்டத்திலும் இருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பழனிசாமி ஒரு முடிவுக்கு வாருங்கள். சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் பல பெண் களைத் திருமணம் செய்து கொண்டதாகப் புகார் இருக்கிறது என்பது அவைக் குறிப்பிலே இருக்கலாம். பொதுவாக நீங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

சொன்னது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக் களும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஜி. பழனிசாமி: அப்படி வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். சேலம் மாவட்டத்திலே ஒருவர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஆகையினாலே, இதுபோன்ற மகஜர் வந்தால், உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். அதைப்போலவே, இந்தப் பெண்களுடைய திருமண வயதை 18-ஆகக் குறையுங்கள். இப்போது 21-ஆக இருக்கிறது. இதை 18-ஆகக் குறைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள் கிறேன். ஏன் என்றால், இப்போது 18 வயதிலேயே திருமணம் ஆகிவிடுகிறது. சட்டம் எல்லாம் போடப்பட்டிருக்கிறது. எனவே, திருமண வயதை 18-ஆகக் குறைக்க வேகண்டும்.

அடுத்து, இன்றைக்கு சத்துணவு அமைப்பாளர்களில் பெரும் பகுதி பெண்கள்தான் பணியாற்றி வருகிறார்கள். இன்றைக்கு மனைவி வீட்டிலே வந்து கணவன் வாழ்க்கை நடத்தக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. தவறு செய்தால், வேறு இடங் களுக்கு மாற்றம் செய்ய முடியவில்லை. எனவே, அவர்கள் தவறு செய்தால், அல்லது இல்லை என்று சொன்னால், திருமணம் ஆவ தற்கு முன்பாக அந்தப் பணியிலே ஈடுபடுகிறார்கள், அவர்களை .........

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, சத்துணவு பணியாளர்களை எந்தெந்த வகையிலேமாற்றலாம் என்பதற்கு அரசு ஆணைகள் வெளியிட்டு இருக்கிறது. அதைச் சரியாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் படிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். திருமணம் செய்துகொண்டு வெளியூருக்குப் போய் விட்டால், அவர்களை நாம் இடம் மாற்றலாம், அதைப்போல, தவறு செய் தால் ,அது கண்டுபிடிக்கப்பட்டால், சிறிய தவறுகளைச் செய் தவர்கள் இடம் மாற்றம் செய்யப்படலாம், ஜாதிக் கலவரங்கள் மதக் கலவரங்கள் ஏற்படுகிறபோது இடம் மாற்றம் செய்யப் படலாம். ஊரார் ஒரு அமைப்பாளரை ஏற்றுக்கொள்ளவில்லை, ஜாதிப் பிரச்சினையில் என்று சொன்னால், அவர்களை இடம் மாற்றம் செய்யலாம் என்று பல்வேறு குறிப்புகளைக் கொண்ட அரசு ஆணையை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர் கள் வெளியிட்டிருக்கிறார்கள். அந்த ஆணையை எங்களிடத்தி லிருந்து பெற்று அதைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவுப் பணியாளர்களுக்கு என்று மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தில் இருக்கிற உதவி யாளர் அவர்களிடத்திலே இதுபோன்ற சத்துணவு அமைப்பாளர் களை மாற்ற வேண்டும் என்று கேட்கிறபோது அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று சொன்னால் வேண்டுமானால் அந்த வேலையை ராஜினாமா செய்துவிடுங்கள், நீங்கள் கணவரோடு போய் வாழுங்கள், அந்த இடத்திலே வேலைவாய்ப்பு இடம் இருந்தால், உங்களுக்கு வேலை கொடுக்கப்படும் என்று சொல் கிறார்கள். ஆகவே, அந்த மாதிரி இருக்கக்கூடாது என்பதற் காக, உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிச் சொன்ன சத்துணவு அதிகாரி யார் என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னால், அவர்கள், மீது, அரசு ஆணை இருக்கிறபோது, அப்படிச் சொன்னால தவறு என்பதைச் சுட்டிக்காட்டி, நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே அப்படிச் சொன்னவர் யார் என்பதை சட்டமன்ற உறுப்பினர் எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்று பல பேர்கள் என்னுடைய நாமக்கல்- காயிதே மில்லத் மாவட்டத்தில், போய் அணுகுகிறபோது, மாற்ற வேண்டும என்று..........

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டதிற்கு என்று நேர்முக அதிகாரி ஒரே ஒருவர்தான் இருக்கிறார். பல பேர்கள், இலலை. ஆகவே, குறிப்பிட்டுச் சொலலி, எழுதிக் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

பிற்பகல் 12–50

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போது நீங்கள் இதுபோன்ற உத்தரவை உடனடி யாக அமல் படுத்தச் சொல்லுங்கள். ஏனென்று சொன்னால் நான் இதை நேரிடையாக கேட்ட காரணத்தால் சொல்கிறேன். இதுபோன்ற ஊர் மாற்றங்கள் எந்த வகையிலேயும் கட்டுப் படுத்தப்படுவதில்லை என்பதற்காகச் சொல்லுகிறேன். அந்த உத்தரவை அமல் படுத்தச் சொல்லுங்கள். அதேபோன்று பெண் களுக்கு திருமணத்திற்காக ரூபாய் 5 ஆயிரம் தரப்படுவது என்பது ஒரு குறிப்பிட்ட நபரோடு நிறுத்திவிடுகிறார்கள். அதற்கு மேலே கேட்டால் அதற்கான பணம் கிடையாது. குறிப்பிட்ட எல்லை வரைதான் எங்களுக்கு தந்திருக்கிறது என்று சொல்லுகிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற அந்தப் பெண்களுக்கு

[திரு. ஜி. பழனிசாமி] [1993 ஏப்ரல் 26

அந்தத் திருமண உதவித் தொகையை— அனேகமாக கொடுக்கப்பட்டிருக்கிற மனுக்கள் அத்தனையும் திருப்பி அனுப்பப்படுகிறது. குறிப்பிட்ட எல்லையோடு மட்டுமே கொடுக்கிறார்கள். அந்த முழுவதுமாக தகுதி உள்ளவர்களுக்கு அந்தத் திருமண உதவித் தொகையை அவர்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

*மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உற்றார் உறவினர் நலன் குறித்து மட்டுமே கவலைப்பட்டுக் கொண்டிருந்தோரிடையே சமூக நலன் குறித்து சிந்தித்து தமிழ் சமுதாயத்தின் விடியலுக்கு வழி வகுத்த நட்சத்திரமே ! வாடிய மக்களைக் கண்டவுடன் வாடிவிடும் உங்கள் முகம். அந்த வாட்டத்தைப் போக்கிட வழி தேடும் உங்கள் அகம். நீங்கள் மேகம்—வானம் பார்த்துத் தவமிருக்கும் வயல்களின் வறட்சி அகல வரம் கொடுக்கிறீர்கள். நீங்கள் ராகம்— வியர்வைப் பெருக்கெடுக்க உழைக்கும் வர்க்கத்தின் சிந்தை குளிர சுரம் தொடுக்கிறீர்கள் ! (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் ஒரு ஜீவ நதி—காட்டாற்றைப் போல் வந்து கரையோர மரங்களை வீழ்த்தி விடாமல் இரு கரைகளுக்கும் செழிப்பூட்டும் செல்வ நதி ! எளிய மக்களின் எண்ணங்களை வாசித்து வேறுபாடின்றி அனைவரையும் நேசித்து நாட்டின் வளத்துக்கும் நலத்துக்கும் உத்திரவாதம் அளித்திருக்கும் எங்கள் தமிழ்க்குலத்தின் தெய்வத் தாயே ! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் ஆராதனைக்குரிய அன்னையே ! மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே ! உங்கள் பாத மலர்களை பணிந்து வணங்கி இந்த மானியக் கோரிக்கையை அவை முன் வைக்கின்றேன்.

'' பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான் கண் படின் ''

என்பது வள்ளுவன் வாக்கு. வார்த்தைக்கு வார்த்தை செயல் வடிவம் தந்து எளியவர் வாழ்வில் ஒளி விளக்காய்த் திகழும் மாசு மருவற்ற மாணிக்கம். அபயக்குரல் எழுப்பி அழைக்கும் சகோதரிகளின் துயரம் நீக்குகின்ற வழித்துணை நாயகி. அரசுக் கட்டிலில் கண்ணயர்ந்தோரிடையே அரசு தொட்டிலை அறிமுகம் செய்த தாய், வாடிக் கிடக்கும் பயிர்கள் உயிர்த்தெழ தேடிச் சென்று பொழியும் வான்மழை. பசிக்கு உணவூட்டி சமுதாய உணர்வூட்டும் எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே ! (மேசையைத் தட்டும் ஒலி).



1993 ஏப்ரல் 26] [திருமதி இரா. இந்திரகுமாரி]

கஷ்டத்திலும் நஷ்டத்திலும் ஆட்சிக் கப்பல் தரை தட்டியிருந்த சமயத்தில்தான் நீங்கள் தானாக முன் வந்து தமிழகத்தைத் தழுவிக் கொண்டீர்கள். பாலைவனமாக தமிழகத்துக்கு வாழ்வளிப்பதாக நீங்கள் வாக்குறுதியளித்ததை தாய்த் தமிழகம் முழுமையாய் நம்பியது. அந்த நம்பிக்கை நாற்றுங்கால் உங்கள் நடவடிக்கைகளால் வேர் பிடித்து, கஷ்டங்களைக் களைந்தெடுக்க வந்திருக்கும் நீங்கள், இருபதாம் நூற்றாண்டின் நடமாடும் கொற்றவை. நாட்டு நலன் தவிர, வேறெதிலும் உங்களுக்கு நாட்டமில்லை.

உங்கள் சிறகுகளைப் பொசுக்க தீக்குச்சிகளோடு உலா வரும் வல்லூறுகளுக்கு மத்தியில் நீங்கள் பறக்க வேண்டியுள்ளது. ஆனாலும், அந்த வானம் உங்கள் வசம். நீங்கள் நடைபயிலும் பாதைகளில் கண்ணி வெடிகளைப் புதைக்கத் தயாராகும் கண்ணியவான்களுக்கு மத்தியில் நடக்கிறீர்கள், ஆனாலும், இந்த பூமி உங்கள் ராஜ்யம். திமிங்கலங்களும் சுறாக்களும் நிரம்பிய அரசியல் சமுத்திரத்தில் நீங்கள் நீந்துகிறீர்கள்— ஆனாலும் அந்த சமுத்திரம் உங்கள் சாம்ராஜ்யம். குறுக்கு வழியிலாவது உங்களுக்கு குழிபறித்து விட்டு ஆட்சிக் கட்டிலில் அமர்ந்து விடலாம் என்ற பகல் கனவு காண்போருக்கு நீங்கள் ஒரு சிம்ம சொப்பனம். (மேசையைத்தட்டும் ஒலி)வேதகாலம் தொடங்கி விண்கல காலம் வரை பெண்ணுக்கு முதலிடம் தானாகக் கிடைத்ததில்லை. ரிஷிகள் யாகம் வளர்த்த போது பத்தினிகள் சோகம் வளர்த்தார்கள். மாற்றாரின் காலில் மண்டியிட மறுத்து கூற்றுவனுடனேயே கை குலுக்கத் துணிந்த ஜான்சிராணியின் வீரத்தை யாராலும் விலை பேச முடியவில்லை. அலங்காரப் பதுமைகளாக இருப்பதற்கே பெண்கள் லாயக்கென்று போதித்த பிரிட்டனில் இரும்புப் பெண்மணியாக இனம்காணப்பட்டார் மாதரசி ?? மார்க்கெரட் தாட்சர் ''. எந்த மண்ணில் தம் கணவர் சுடப்பட்டாரோ அந்த மண்ணைத் தன்னுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார் பிலிப்பைன்ஸின் ?? அகினோ ''.

பிற்பகல் 12-55

வீட்டுச் சிறைக்குள் அடைக்கப்பட்ட பின்னும் நாட்டு விடுதலையில் நாட்டங்கொண்ட ஆங்குயிக்கு நோபல் பரிசு கூட தேடி வந்தது. புற்று நோயென்ற கோரப்பிடியில் பாதிக்கப்பட்டவரை பத்திரப்படுத்த ரேடியக் கதிரோடு விளையாடி விளையாடி வாழ்வையே அர்ப்பணித்தார் மேடம்க்யூரி ஆதரவற்ற,அனாதைகளையும் சோதரரற்ற ஜீவன்களையும் அன்னைபோன்று அரவணைத்துக்கொள்வதால் விண்ணைப்போன்று உயர்ந்து நிற்கிறார் அந்த வெள்ளை உடைச் 'சோதரி' அன்னை தெரசா ', இந்திய வரலாற்றில் வேதம், இதிகாசம், சரித்திரம், இலக்கியம், மதம்இமரபு. பண்பாடு இப்படி எல்லாப் பெயரிலும் பெண்மைக்கு ங்கும். , ந்அத எஃகுத் தளைகளைத் தனது பூங்கரங்களால்

உடைத்தெறிந்து புதிய சரித்திரம் படைத்து வரும் தமிழகத்தின் ஜான்சிராணியாம் (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களே உங்களின் அடிச்சுவட்டில் சமூக நலத்துறை அடியொற்றி நடக்கிறது. நீங்கள் முதல்வராய் பொறுப்பேற்ற ஆண்டுகள் இரண்டு மட்டுமே ஆன போதிலும் படைத்த சாதனைகள் எண்ணிலடங்கா ! உலகத்தில் உன்னத தொட்டிலான தாயின் மடியில் தவழ இயலாமல் கைவிடப்படும் பெண் சிசுக்களை ஆரத்தழுவும் அரசு தொட்டில்கள் ஒப்புயர்வற்ற எங்கள் சரித்திரத் தலைவியின் சாதனை யணத்தில் மற்றுமொரு மைல் கல், அதனால் தான் 'சமூக நலன்' என்ற சொற்றொடருக்கு இலக்கணம் படைத்து இருப்பதால் எங்கள் இமாலயத் தலைவிக்கு இந்திய அரசு புகழ் மகுடத்தைச் சூட்டிப் பார்த்தது. மத்திய அரசின் சமூக நலத்துறை தமிழகத்திற்கு முதலிடம் கொடுத்துப் பாராட்டியது, புகழ்ச்சிச் சொற்களும். பாராட்டுரைகளும், சமூக நலனே தன் நலனாய்க் கருதும் எங்கள் தலைவியின் பயணத்தை நிறுத்திவில்லை, புதிய புதிய இலக்குகள் அமைந்து மேலும் மேலும் பயணம் மேற்கொள்ளும் கனவுகள் வளர்க்கும் எங்கள் காவியத் தலைவியின் வழி நடைப் பயணம் அடித்தள மக்களின் ஆதரவுடன் இதோ இங்கே மேலும் தொடர்கிறது, தாய்மை — மனித மாண்புகளின் மகுடம் மழலையின் நினைவுகளிலேயே தாயின் ஆன்மாலயித்திருப்பலால் ஆலயத்தைக் காட்டிலும் புனிதமானவளாக அவள் போற்றப்படுகிறாள், தன் சித்தத்தைக் குளிர வைக்கும் குழந்தையை தாய் நேசிக்கிறாள். தன் ரத்தத்தைப் பாலர்க்கித் தரும் தாயை குழந்தை பூசிக்கிறது. தாயின் அருகும் தாலாட்டின் பொருளும் சேய்க்கு மட்டுமே புரியும் ரகசியம். அமுதைப் பொழியும் நிலவைக் காட்டி அமுதூட்டும்போது தாய் சொல்லும் கதைகள் அறிவூட்டுவதையே நோக்கமாய்க் கொண்டவை. பெண் குழந்தையைப் பேணி வளர்க்கும் அன்னைக்கு இங்கே இரட்டைப் பொறுப்பு. இன்றைய தாயின் அரவணைப்பில் நாளைய தாய் உருவாகிறாள், ஆம். விதைகளுக்குள்ளே தான் விருட்சங்கள் வளர்கின்றன, தன் வேருக்கு நீருற்றும் தாயின் நினைவில் — அவள் நேசத்தை நெஞ்சில் நிறுத்தும் வகையில் பாசத்துடன் தன் குழந்தையைப் போற்றும் தாயே இந்த மண்ணின் தலையாய தெய்வம் :

மல்லிகையில் மெத்தையிட்டால்
வண்டுவந்து மொய்க்குமென்று
மாணிக்கத்தால் மெத்தையிட்டால்
மேனியெல்லாம் நோகுமென்று
வைரங்களால் மெத்தையிட்டால்
நட்சத்திரம் ஏங்குமென்று



நெஞ்சத்திலே மெத்தையிட்டு
நித்த நித்தம் உறங்க வைத்து
போயஸ் தோட்டத்து ரோஜாவாய்த்
தன் மகளை வளர்த்தெடுத்துத் தமிழகத்தை வாழ்வித்த
அன்னை சந்தியாவின் நினைவுகளில்
(பலத்த மேசையைத் தட்டும் ஒலி)
ஆழ்ந்திருக்கும் ஒரு தெய்வத் திருமகளை
தமிழகம் இன்று தரிசிக்கிறது !
(பலத்த மேசையைத் தட்டும் ஒலி)

ஆறரை கோடித் தமிழ் மக்கள் அன்புத் தாயாக வணங்கும் வண்ணம் தன் திருமகளை உருவாக்கிய, அந்த ஒப்பற்ற தாய்க்கு 'சந்தியா வந்தனம்' செய்வது இன்று சரித்திரக் கட்டாயம் ஆகும். நம்முடைய ஒப்பற்றத் தலைவியை உருவாக்கிய அந்த அன்னைக்கு ஆறரை கோடித் தமிழ் மக்களின் சார்பாக நன்றி செலுத்தும் வகையில் (மேசையைத் தட்டும் ஒலி) விஞ்ஞானம் தொழில் நுட்பம் மூலமாக குழந்தைகளுக்கு விளையாட்டுமட்டுமல்ல, கல்வி அறிவைப் புகட்டக் கூடிய வகையில் ''அன்னை சந்தியா சிறுவர் உலகம்'' சமூக நலத் துறை மூலம் சோலையில் அமைக்கப்படும் என்பதை பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

தாய் இந்த மண்ணில் நடமாடும் தெய்வம். குழந்தையின் உறக்கத்துக்காக அவள் விழித்திருக்கிறாள். இருப்பதை குழந்தைக்குப் பரிமாறிவிட்டு வயிரார அது உண்ணுவதைப் பார்க்கும் பரவசத்தின் மூலம் தன் பசியாற்றிக்கொள்கிறாள். அம்மா என்று சேய் அழைக்கிறபோதெல்லாம் தாய்க்குள் ஊற்றுப் பெருக்கெடுக்கும் உற்சாக வெள்ளம்.

'மழைகூட ஒரு நாளில் தேனாகலாம்
மணல்கூட சில நாளில் பொன்னாகலாம்
ஆனாலும் அவையாவும் நீயாகுமா ?
அம்மா என்றழைக்கின்ற சேயாகுமா ?
(மேசையைத்தட்டும் ஒலி)||

என்றார் கவியரசு கண்ணதாசன்.

[திருமதி இரா. இந்திர குமாரி] [1993 ஏப்ரல் 26

பிற்பகல் 1-00

இன்றோ நிலைமை தலைகீழ் ;

" கனைத்திளம் கற்றெருமை கன்றுக்கிரங்கி
நனைத்தில்லம் சேறாக்கும் "

நிலைமாறிபிறந்த குழந்தை ஆண்பாலா, பெண்பாலா என்பதைப் பொறுத்தே அதற்குத் தாய்ப்பால் ஊட்டுவதா, கள்ளிப்பால் ஊட்டுவதா என்று தீர்மானிக்கும் அவலம். ஜீவ ரகசியத்தின் ஊற்றுக்கண்ணான குழந்தை இறைவனின் செய்தியைச் சுமந்து வருகின்ற குழந்தை, புலர்காலைப் பொழுதைப் போல் அப்பழுக்கற்ற குழந்தை, எதிரி யாரென்பதைக்கூட தெரிந்து வைத்திரா நிலையில் தாயின் கைகளாலேயே கசக்கப்படும் நிலை. நாரில் கட்டும்போது நசுங்கி விடக்கூடாது என்பதற்காக பூக்களுக்கு வலிக்காமல் பூக்கட்டும் பூவையர்கள், கருவறைக்குள்ளிருந்து விடுபட்ட சிசுவை கல்லறைக்கு அனுப்பத்துணியும் கொடுமை வாய்முத்தம் தாராமல், மழலையுரையாடாமல் சேய்கிடக்க தாயே வழிவகுக்கும் இழிநிலையை மாற்றியமைத்தல் மனிதன் போற்றும் மானுட தேவதையாம் எங்கள் புரட்சித் தலைவிக்கே சாத்தியமாயிற்று. (மேசையைத்தட்டும் ஒலி) இது மனித தர்மத்தை மீண்டும் நிலை நாட்டும் ஒரு புனித மலராம் புரட்சி தலைவியின், புரட்சி வேள்வி. பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்காக இந்தத் தாயரசு எடுத்த தனிப்பெரும் முயற்சிகள் உலக அளவில் ஒப்புதல் பெற்றன. மேலை நாடுகளைக் கூட வியக்க வைத்துள்ள ஈடு இணையற்ற அந்தத் திட்டத்தில் இன்னொரு மைல் கல் பதிக்கப்படுகிறது. அரசுத் தொட்டில்களில் போடப்படும் குழந்தைகள் இனிமேல் அரசு இல்லங்களில் ஒப்படைக்கப்படும் வரை பத்திரமாகப் பராமரிக்கப்படுவதற்கு சேலத்தில் வரவேற்பு மையம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) ஆறரை கோடி மக்களுக்கு தாயாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்திரவிட்டிருக்கிறார்கள் என்ற [மேசையைத் தட்டும் ஒலி) செய்தியினை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். உலகிலிருந்தே வெளியேற்றப்பட இருந்த குழந்தைகளை இருகை நீட்டி வரவேற்கும் பொறுப்பை அன்பு பொங்கும் எங்கள் அரசியாம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு (மேசையைத் தட்டும் ஒலி) உற்சாகத்துடன் ஏற்றுக்கொள்கிறது.

மனோதிடமும் ஆயுள் பலமும் அந்த நட்சத்திரத்தின் சிறப்பம்சங்கள். முணுமுணுப்பதைப் போல் மின்னிக்கொண்டிருக்கும் மற்ற நட்சத்திரங்களுக்கிடையே ஒளிகாட்டி வழிகாட்டும் அந்த நட்சத்திரம் மகம். மகத்தில் பிறந்தவர் ஜகத்தை ஆள்வதை (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் நிலம் இன்று தரிசிக்கிறது. ஒரு



1993 ஏப்ரல் 26] (திருமதி இரா. இந்திர குமாரி)

தலைமுறைக்கே வழிகாட்டி நெறிமுறைகளின்படி நிற்கவைக்கும் எங்கள் நம்பிக்கை நட்சத்திரமாம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நட்சத்திரப் பெயர் ஆண்களோடு பெண்களை சரிநிகர் சமானமாக்கும் வழிகளைத் தெளிந்து வகுத்துத் தருகிற மகளிர் மேம்பாட்டுக் கழகத்துக்கு சூட்டப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மகளிருக்கான வாழ்க்கை வழிகளைப் பெருக்கித் தருகிற அந்தக் கழகம் இன்று முதல் ' மகம் ' என்ற சுருக்கப் பெயரால் அழைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

" குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பம் கொல்லும் பிடித்த கல்விப் பெரும்புணைவிடும் ; நாணணிகளையும் ; மாணெழில் சிதைக்கும் பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும் பசிப் பிணி என்னும் பாவி ; அது தீர்த்தோர் இசைச்சொல் அளவைக்கு என் நா நிமிராது " என்றான் மணிமேகலை என்ற காவ்யம் படைத்த சீத்தலைச் சாத்தன். பசிப்பிணி என்ற பாவியால் விளையும் கேடுகளைப் பட்டியல் போட்டதோடு சாத்தன் நின்று விடவில்லை. அந்தப் பசியைத் தணிப்போரே தன்னை வசப்படுத்துவர் என்று வெளிப்படையாகவே சொல்லிவிட்டுப் போனான். இன்று, சொற்கோல ஆட்சிகள் சுவடற்றுப் போய் உங்கள் பொற்கால ஆட்சி நடக்கும் தமிழ்நாட்டில் வற்றிய வயிற்றுடன் உலவுகின்ற சிறாரை சத்துணவுத் திட்டம் பராமரித்து வருகிறது. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடுகின்ற மனோபாவம் உங்களது வாழ்க்கை வரலாற்றின் அழிக்க முடியாத இன்னொரு பக்கம் தாய்மை உணர்வுள்ள தலைவர்களை அபூர்வமாகத்தான் சந்தித்து இருக்கிறது தமிழகம். ஆனால் இப்போதுதான் உங்கள் வடிவில் புரட்சித் தலைவி அவர்களே, தாய்மையை தமிழகம் நேராகத் தரிசித்திருக்கிறது. (மேசையை தட்டும் ஒலி) 'பச்சைக் குழந்தைகளின் பசித் தீ அணைந்தது எப்படி ? என்று அண்டை மாநிலங்களெல்லாம் அக்கறையுடன் வந்து விசாரித்துச் செல்கின்றன. எரியும் பசியை எதிர்க்க முடியாமல் சரிந்து விழுகிற சோமாலிய குழந்தைகளை மட்டுமே சந்தித்த உலகநாடுகளுக்கு தமிழகத்தின் சத்துணவு குழந்தைகள் புத்துணர்வு அளிக்கிற புதிய அம்சங்கள் " தனியொருவனுக்கு உணவில்லையெனில் இந்த ஜெகத்தினை அழித்திடுவோம் " என்ற புதிய விதியைப் பிரகடனம் செய்த பாரதியின் கனவு அவன் வாழ்ந்த நூற்றாண்டிலேயே நம்முடைய தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களாலே வடிவம் பெறுவதைப் பார்க்க முடிகிறது. (மேசையை தட்டும் ஒலி) படிக்க முடியாது போவதற்கு பசிமட்டும் தான் காரணமென்று இனி எந்தக் குழந்தைக்கும் எழுதிவைக்க முடியாது.

பிற்பகல் 1-05

அந்த அளவுக்கு அவற்றின் தலைவிதியை நீங்கள் திருத்தி
எழுதியிருக்கிறீர்கள். உணவு கொடுத்ததன் மூலம் உயர்
கொடுத்திருக்கிறீர்கள். பசித்தழும் குழந்தையை நோகாமல்
அரவணைத்து சிரித்தெழச் செய்தல் மகளிரின் மாண்பு. குழந்தை
யின் கண்ணீர் துடைப்பது மட்டுமே ஒவ்வொரு தாயின் உள்ளத்து
நோன்பு. லட்சக்கணக்கான மழலையருக்கு சத்தமே இல்லாமல்
சத்துணவூட்டி பசிப்பிணி என்னும் கொடிய வேர்களை வெட்டி
வீசிய எங்கள் அன்புத் தாயாம் புரட்சித் தலைவியின் பொற்கால
ஆட்சியைப் போற்றும் வகையில், சத்துணவுக் கூட அமைப்பாளர்
களாக இன்றுமுதல் மகளிர் மட்டுமே நியமிக்கப்படுவார்கள்
(மேசையைத் தட்டும் ஒலி). ஒரு வேளை உணவுக்கே போராடும்
குடும்பத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு உணவூட்டும் கூடம்
போராட்டக்களமாக மாறிவிடாமல் மழலையர் பசியைக் கணித்து
உணவிடும் பக்குவம் பெண்களுக்கே அதிகம் என்பதால் அதனை
இதனால் இவர் முடிப்பர் என்றாய்ந்து அதனை அவர் கண்
ஒப்படைக்கும் — எங்கள் நானிலம் போற்றும் நாயகியாம்
(மேசையைத்தட்டும் ஒலி) மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் இன்றுமுதல் மங்கையர் பொறுப்பில்
மழலையரை ஒப்படைத்து சத்துணவுத் திட்டத்தில் சரித்திரம்
படைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ்
30 ஆயிரம் குழந்தைகள் நல மையங்கள் உள்ளன. பசித்தழும்
குழந்தைகளுக்கு அமுதூட்டும் அந்த மையங்களை நர்சரிப்
பள்ளிகள் போன்று அறிவூட்டும் மையங்களாக உயர்த்துவோ
மென்று சென்ற ஆண்டு அறிவித்திருந்தோம். சொல்லுக்கும் செய
லுக்குமிடையே இடைவெளி ஏதுமின்றி வாக்களித்த நல்லோர்க்கு
கொடுத்த வாக்கை வார்த்தைக்கு வார்த்தை காப்பாற்றி,
சாதிக்கப் பிறந்த எங்கள் சரித்திரத் தலைவியாம் (மேசையைத்
தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் அறிவித்த
படியே நர்சரிப் பாடங்கள் அனைத்து மையங்களிலும் போதிக்
கப்படுகின்றன. இரவில் அந்தக் குழந்தைகள் மையங்கள்
முதியோர் கல்வி, அறிவொளி இயக்கம், மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிற மதுவிலக்குப்
பிரச்சாரம் போன்ற அறிவு பரப்பும் இயக்கங்களால் பயன்படுத்
தப்படவேண்டும். அறியாமை இருட்டிலிருந்து மக்களை மீட்டு
அறிவு வெளிச்சத்திற்கு அழைத்து வருகின்ற அந்த முயற்சிகளை
ஊக்குவிக்கும் பொருட்டு இந்த ஆண்டு ஒவ்வொரு மையத்திற்கும்
ஒவ்வொரு மின் விளக்கு இலவசமாக அமைத்துத் தரப்படும்
மேசையைத் தட்டும் ஒலி) என்று மாண்புமிகு தமிழக முதல்வர்
டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள்
என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.



குழந்தைகளுக்கு உணவூட்டும் பணியை மட்டும் கவனிக்கா
மல் சத்துணவு மையங்களை நர்சரி பள்ளிகளாகவும், கருவுற்ற
தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் சுகாதார பாதுகாப்பு
மையங்களாகவும் நடத்தி வருவதால் இந்தப் பணிகளையெல்லாம்
சிரமேற்கொண்டு செய்கின்ற அங்கனவாடி பணியாளர்களுக்கு
இதுவரை தமிழகத்தின் வரலாற்றில் மைய அரசு பரிந்துரைத்த
ஊதியம் தரப்படவில்லை. முதல்முதலாக நம்முடைய தமிழகத்
தின் மாண்புமிகு ஒப்புயர்வற்ற தலைவி புரட்சித் தலைவி
அவர்கள் இந்த அங்கன்வாடி பணியாளர்களுக்கு, மைய அரசு
பரிந்துரைத்த ஊதியத்தைத் தருவதற்கு நம்முடைய
மாநிலத்தின் புகழ் காக்கும் ஒப்புயர்வற்ற முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆணை
யிட்டிருக்கிறார்கள். அதன்படி இனிமேல் அங்கன்வாடி பணி
யாளர்கள் அனைவருக்கும் உயர்ந்தபட்சம் ரூ. 450 வரை
உயர்த்த ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
என்பதை பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முதன் முறையாக செங்கை எம். ஜி. ஆர். மாவட்டத்தில்
SIDA திட்டத்தின்கீழ், 2,850 மையங்கள் பணிபுரிய ஆரம்
பித்து இருக்கின்றன. பெண்களின் மீது மிகுந்த கருணையும்
அன்பும் கொண்டிருக்கிற எங்கள் தாயாம் டாக்டர் புரட்சித்
தலைவி அவர்கள் இந்த அங்கன்வாடி பணியாளர்கள், குழந்
தைகளுக்கு உணவு அளிப்பதற்கும் மற்ற பணிகளைக் கவனிப்
பதற்கும், கொஞ்சம்கூட காலதாமதம் இன்றி கவனிப்பதற்
கும் ஒவ்வொருவருக்கும் சைக்கிள், ஒவ்வொரு அங்கன்வாடி
பணியாளருக்கும் வழங்கப்பட வேண்டுமென்கிற உத்தரவைப்
பிறப்பித்து இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) என்
பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த
அங்கன்வாடி பணியாளர்களுக்கு இது படிப்படியாக, தமிழகம்
முழுவதும் விரிவுபடுத்தப்படும்.

உலக வங்கி உதவியுடன் பெண்கள், குழந்தைகள் நலனுக்
காக செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்
டம் சென்ற இரண்டு ஆண்டுகளில் 13 மாவட்டங்களில் செயல்
படுத்தப்பட்டது. கருவுற்ற காலத்தில் பெண்களுக்குப்
போதிய ஊட்டச்சத்தும், தடுப்பூசி மருந்து போன்றவற்றைத்
தரவும் இந்தத் திட்டம் வகை செய்கிறது. இந்தத் திட்டம
வகுக்கப்பட்டபோது, 1995 முடிவில்தான் மாநிலம் முழு
மைக்கும் இது விஸ்தரிக்கப்பட உத்தேசிக்கப்பட்டது.
ஆனால், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்களை இதைத் துரிதப்படுத்த வேண்டும்;
அதன் மூலமாக கர்ப்பிணிப் பெண்கள் இதிலே நல்ல வாய்ப்

யைப் பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் விருப்பத்திற்கிணங்க இந்த ஆண்டு திருச்சி, கோவை மாவட்டங்களுக்கு இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

திருமணம் என்பது சமுதாய வாழ்க்கையின் இன்றியமையாத அங்கமாகி விட்டது. ஆனால், சம்பிரதாயங்களை மட்டுமே நம்பியிருக்கும் சமுதாயம் ஏமாற்றங்களையும் சந்திக்க நேர்கிறது. உரிய முறையில் மாற்றங்களைக் கொண்டு வந்தால் தான் அந்த ஏமாற்றங்களைத் தவிர்க்க முடியும். சமூக நலத்துறையின் திருமண உதவித் திட்டங்களின்கீழ் நிதியுதவி பெற்று திருமணம் செய்து கொள்வோர் மனமொத்து வாழ்வதென்ற ஒருமித்த கருத்தோடு கைப்பிடித்தாலும் இனிமேல் தங்கள் திருமணத்தைக் கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். வாழ்க்கை ஒப்பந்தத்துக்கு வலுவூட்ட வேண்டும் என்பதே இந்தக் கட்டாயப் பதிவின் நோக்கமாகும். அரசு அளிக்கும் உதவித் தொகையுடன் தீ வலம் வந்து திருமணம் புரிவோரின் நாளைய வாழ்க்கை நலியாதிருக்க சட்டப் பாதுகாப்பு அவசியம் என்பதால் தாய் உள்ளம் கொண்ட தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சமூக நலத்துறை மூலமாக இனி வழங்கப்படும் திருமண உதவி பெறுவோர் அனைவரும் வருங்காலத்தில் இந்த உதவியைப் பெறுவதற்குத் தங்கள் திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசின் வாரிசாய் அங்கீகரிக்கப்பட்ட அரும்பு மயமான குழந்தைகளை, தாலாட்டி, சீராட்டி வளர்ப்பதன்றி, உரிய வயது எய்தியவுடன் உலகில் வாழ உற்ற துணை தேடித் தந்து வாழ்வதற்கு ஊன்றுகோலாய், தொழிலுதவி பெற்றுத் தந்து வாழ்வளிக்கும் திட்டத்தை வகுத்துத் தந்தார் எங்கள் வள்ளலின் வாரிசாம் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்குத்தான் எத்தனை இரக்க உள்ளம்? இந்தியத் துணைக் கண்டத்தில் இப்படியொரு முதலமைச்சரைப் பார்த்திருக்க முடியுமா என்று அனைவரும் வியக்கக்கூடிய வண்ணம் (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தாய் ஒவ்வொரு சிறிய காரியத்தையும் சிந்தித்து நடவடிக்கை எடுக்கிறார்கள். அதன்படி, ஆதரவற்ற பெண்கள் அரசு இல்லங்களிலே 18 வயது வரை பாதுக்காக்கப்படுகிறார்கள். 18 வயதுக்குப் பின்னால் அரசு இல்லங்களிலே இருந்து அவர்கள் வெளியேற்றப் படுகிறார்கள். எங்களோடு உரையாடிய மாண்புமிகு முதல்வர்



புரட்சித் தலைவி அவர்கள் இதைப்பற்றிக் கேட்டபொழுது 18 வயதுக்குப் பின்னால் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்று கேட்டபொழுது, நாங்கள் திருதிரு என்று முழிக்க, எங்கள் தாயாம் புரட்சித் தலைவி அவர்கள், 18 வயதுக்குப் பின்னால் தான் ஒரு பெண் திருமணத்தோடும், சொந்த வேலை வாய்ப்போடும் பாதுகாக்கப்பட்டு வெளியே அனுப்பப்பட வேண்டும். அதற்குரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுங்கள் என்று உத்தரவிட்டு, அதற்கான நிதியையும் ஒதுக்கித் தந்தார்கள். அதன்படி ஆதரவற்ற பெண்கள் இனி அரசு இல்லங்களில் 18 வயதுக்கு மேலும் 21 வயது முடிகிறவரை பாதுகாக்கப்படுவார்கள் என்கின்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பின்னால் அவர்களுக்குத் திருமணச் செலவுக்கும் உதவி செய்யப்படும். இந்த 18 வயதிலிருந்து 21 வயதுக் காலத்தில் இவர்களுக்கு இல்லங்களில் வாழ்க்கைத் தொழில் பயிற்சி தரப்படும். பத்து மாதம் சுமந்து பெற்ற குழந்தை மீது அதன் தாய்க்குக் கூட ஏற்படாத அன்பும், பரிவும் நம்முடைய தெய்வத் தாயாம் புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த ஆதரவற்ற பெண்கள் மீது ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) 18 வயதில் பருவமடைந்த இந்தப் பிஞ்சு நெஞ்சங்கள் மீது அவர்கள் பொழிந்த அன்புத் தேனே இந்தத் திட்டத்துக்குத் தலையாய காரணமாகும் என்பதைப் பெருமையோடு இந்த மாமன்றத்திலே அறிவிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சமுதாய மேம்பாட்டில் வரம்பு கடந்த அக்கறை காட்டும் சமூக நலத்துறை உதவித் திட்டங்களுக்கென வருமான வரம்பு 6,400 என்று இருக்கிறது. ஆற்றாது அழுவோரின் கண்ணீரைத் துடைப்பதையும், அந்த விஷயத்தில் தடைகளை உடைப்பதையும் நோக்கமாகக் கொண்ட எங்கள் பெண்ணரசியாம், விண்ணரசியாம் புரட்சித் தலைவியின் பெருமைக்குப் பொலிவூட்டும் விதத்தில் இன்று முதல் அந்த வருமான வரம்பு ரூ. 6,400–லேயிருந்து ரூ. 12 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பழனிசாமி அவர்கள் தெருவோரத்திலே வாழ்கிற சிறுவர்களுக்காக ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்தியத் துணைக் கண்டத்திலேயே இந்தச் சிறுவர்களைப் பற்றிக் கவலைப்படக் கூடிய ஒரே முதலமைச்சர் நம்முடைய தெய்வம் புரட்சித் தலைவி தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை அவர்களுக்குத் தெரிவிக்கின்ற வகையில் இந்தத் திட்டத்தை இங்கே அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

''இருளிரவில் ஒரு மூலைத் திண்ணையில் நான் பசித்தே
இளைப்புடனே படுத்திருக்க எனைத் தேடி வந்தே
பொருதுணவு கொடுத்துண்ணச் செய்வித்தே பசியை
போக்கியருள் புரிந்த என்றன் புண்ணிய நல்துணையே''

என்று தன்னைச் சாலையோரச் சிறுவனாகப் பாவித்து இறைவனுக்கு வள்ளலார் நன்றி சொன்னார் அன்று !

பிற்பகல் 1-10

வள்ளலின் வழி நடக்கும் வரலாற்றுத் தலைவி, வள்ளலாரின் நெறியைப் போற்றுகின்றார். இன்று, ஆருயிர் அனைத்துக்கும் அன்பு செய்யும் ஆர்வம், வற்றாத தாய்மையும் தளராத மேன்மையும் உற்றார் உறவினராய் உலகோரை நேசிக்கும் பான்மையும் கொண்ட தாய்வழி வந்த தெய்வத் திருமகளாம் எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் அடிமனத்திலிருந்து பொங்குகிறது இந்த திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி).

சுற்றி இருக்கும் சமுதாயத்தை சுற்றமாய் நட்பாய் ஏற்றுக் கொண்டுள்ள செந்தமிழ்த் தலைவியாம் எங்கள் புரட்சித் தலைவியின் சிந்தனை வழியில் சாலையோரச் சிறுவர்களுக்காக ஒரு பயனுள்ள திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. சாலையோரச் சிறார்களுக்காகவும், பணிபுரியும் மற்றும் சிதை பொருள்கள் சேகரிக்கும் சிறார்களுக்காகவும் 10 புகலிட இல்லங்கள் இந்த ஆண்டு தோற்றுவிக்கப்படும். அவற்றில் சென்னையில் ஏழும், விழுப்புரம், சேலம் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் மூன்றும் அமைக்கப்படும் என்பதைப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையை தட்டும் ஒலி)

மாற்றார் தயவையே நம்பியிராமல், சொந்தக் காலில் சாதனை படைக்கும் ஞானத் தாயின் ஆட்சியில் தனித்து நிற்கும் தைரியத்துடன் பழமையை எதிர்த்து நிற்கும் மகளிருக்காக எவ்வளவோ திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. சிறுமைப்படுத்தப்பட்ட மகளிரின் பெருமையை உலகறியச் செய்த புரட்சித் தலைவியின் ஆட்சி இன்னொரு திட்டத்தை அறிவிக்கிறது. கோவை மாவட்டம் திருப்பூரில் உள்ள பனியன் தொழிற்சாலைகளில் வெளியூர்களிலிருந்து வந்து பணியாற்றும் பெண்களுக்காக பணிபுரியும் ஒரு பெண்கள் தங்கும் விடுதி ஒன்றும், இது போன்று செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் ஒரு தங்கும் விடுதியும் கட்ட சிறந்த தொண்டு நிறுவனத்திற்கு உதவி வழங்க மாண்புமிகு முதல்வராம் நம்முடைய அன்புத் தலைவி புரட்சித்



தலைவி அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள். என்பதை உற்சாகத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு நடத்தும் ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள குழந்தைகளை ஈன்றெடுத்த பிள்ளைகள் போன்று அரவணைக்கும் தமிழக அரசு, அந்தக் குழந்தைகளுக்காக சீருடைப்படியை அதிகரிக்க முடிவெடுத்துள்ளது. 1986 ஆம் ஆண்டு இந்தச் சீருடைப்படிகளுக்கான கட்டணத்தை ஏற்பாடு செய்து, அதற்குப் பின் அதனை எந்த அரசும் உயர்த்தியது இல்லை. 1986 ஆம் ஆண்டு ரூபாய் 60, ரூபாய் 100 என்று நிர்ணயிக்கப்பட்ட சீருடைப்படிகள் இன்றுவரை யாராலும் நிர்ணயிக்கப்படாமல் கேட்பாரற்றுக் கிடந்தது. ஆனால், ஆதரவற்ற குழந்தைகள் மீது அன்பும் அக்கறையும் கொண்டிருக்கிற நம்முடைய தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த 60 ரூபாயை, 100 ரூபாய் என்றும், 100 ரூபாயை 150 ரூபாய் என்றும் உயர்த்தி ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், சேவை இல்லங்களில் பயிலும் மாணவியரின் சீருடைத் தொகையையும் ரூ. 100-லிருந்து ரூ. 150 ஆக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அரசு பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்வதற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியில் வயது வரம்பு 15 என்றிருந்தது. சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காக தன்னையே அர்ப்பணித்துக் கொண்டுள்ள, வறியவர்களின் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெற்றிருக்கிற எங்களுடைய அன்புத் தலைவி 1991 ஆம் ஆண்டு இலவசமாக பயணம் செய்யும் வயது வரம்பை 20 வரை உயர்த்தினார்கள். பார்வையற்றவர்களுக்கும், மன வளர்ச்சி குன்றியவர்களுக்கும் வயது வரம்பின்றி இலவச பஸ் பாஸ் வழங்கப்படுகிறது. ஆனால், இந்த ஆண்டு தாயுள்ளம் கொண்ட எங்கள் அன்புத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 20 வயது வரை பஸ் பாஸ்; 20 வயதுக்கு மேற்பட்ட இதர ஊனமுற்றவர்களுக்கு இனி அரை கட்டண சலுகையில் பஸ் பாஸ் வழங்கவும் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

''கண்ணுடையர் என்பவர் கற்றோர்'' என்ற வள்ளுவன் வாக்கையே வாழ்க்கை நெறியாகக் கொண்டு, உடல் ஊனத்தால் வாழ்க்கை ஊனமாகி விடாதிருக்கும் விதத்தில் ஊனமுற்றோர் பள்ளிகளில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்க முதல் மதிப்பெண் பெறும் சிறப்பான மாணவர்களுக்கு ஆண்டுதோறும் முதல் பரிசாக ரூ. 1,500-ம், இரண்டாம் பரிசாக ரூ. 1,000-ம்,

மூன்றாம் பரிசாக ரூ. 750–ம் வழங்க இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி கட்டளை இட்டுள்ளார்கள் என்பதை இம் மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு மனிதனுக்கு உணவு, உடை, இருப்பிடம் மிக முக்கியமான ஒன்றாகும். இதைப் பெறுவதற்கு நிதி மிகவும் அவசியமாகிறது. இந்தக் காலத்தில் சாதாரண மனிதர்களே நிதி நெருக்கடிக்கு ஆளாகி, தன் வாழ்வை நடத்திட சிரமப்படும்போது, உடல் ஊனமுற்றவர்களின் நிலை என்ன? இப்படிப்பட்ட ஒவ்வொரு சிறிய சிறிய காரணத்தையும் கவனத்தோடு பரிசீலிக்கும் நம்முடைய ஒப்புயர்வற்ற புரட்சித் தலைவி அவர்கள் ஒரு புதிய உத்தரவை அளித்துள்ளார்கள். அதன்படி புரட்சித் தலைவியின் கட்டளைகளை சிரமேற்கொண்டு செய்யும் நகராட்சி, வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்று வாரியங்கள் உருவாக்கும் வர்த்தக மையங்களில் இனி பத்து சதவீத கடைகள் ஊனமுற்றோருக்காக ஒதுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

ஊனமுற்ற வழக்கறிஞர். இன்றைய சமுதாய அமைப்பில் வாழ்க்கைக்கும் தங்களுக்கும் இடையிலான வழக்கில் தமக்குத் தாமே வாதாடி வெல்வோர் ஊனமுற்றோர் மட்டுமே. அவர்களது மன உறுதியைப் போற்றும் விதத்தில் இன்னொரு உதவி அளிக்கப்படுகிறது. சட்டப்படிப்பு முடித்த ஊனமுற்றோர் வழக்கறிஞராகத் தங்களைப் பதிவு செய்வதற்கும், அவர்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்குவதற்கும் ரூ. 3,000 இன்று முதல் உதவித் தொகையாக வழங்கப்படும் என எங்கள் அன்பு அன்னையாம் புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

முதல்வர் பெயரில் விருதுகள். இறக்கை என்பது இருப்பதும் இல்லை. இயலாதென்று முயலாதவர்கள் இறக்கை இருந்தும் பறப்பதும் இல்லை. இல்லை என்கிற எந்தக் குறையையும் உள்ளத்தில் இருந்து ஒதுக்கி வைத்து, உடலில் இருக்கும் ஊனத்தை உள்ளத்தில் இருக்கும் உரத்தால் விரட்டி உயர உயர பறக்க முயலும் ஊனமுற்றோருக்கு உதவுகின்ற எங்களுடைய அரசு, ஊனமுற்றோரின் கண்ணீரை ஒரு கையால் துடைத்து, இன்னொரு கையால் அவரை அரவணைத்து, மழைக்குக் குடையாய், பசிநேரத்துக்கு உணவாய், அவர் வாழ்வுக்கு ஒளியூட்டும் பாவை விளக்காம் எங்கள் புரட்சித் தலைவியின் பெயரால் விருதுகளை வழங்க முடிவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விருதுகள் ஊனமுற்றோரின் நூலேவையை வாய்ப்புத் திட்டங்களில் சிறப்பாகச் செயல்படும் வங்கி மேலாளருக்கும்



மாவட்ட ஆட்சியருக்கும், தொண்டு நிறுவனத்திற்கும் ஆண்டு தோறும் சுதந்திர தினத்தன்று வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஊனமுற்றவர்கள் பணியில் சேர்வதற்கான வயது வரம்பு ஏற்கனவே பத்தாண்டுகள் தளர்த்தப்பட்டுள்ளது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாகத் தன்னுடைய திட்டங்களின் மூலமாகத் தமிழகத்தைப் பெருமைக்குரிய மாநிலமாக ஆக்கித் தந்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், பணியில் சேர்வதற்கு மட்டும் 10 ஆண்டுகள் வயது வரம்பு தளர்த்தப்பட்டிருக்கிறதே. இது கல்வித் துறையிலும், தொழில் பயிற்சித் துறையிலும் இருக்கிறதா என்று கேட்டார்கள். நாங்கள் இல்லை என்று சொன்னவுடன் இனிமேல் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி பெறுவதற்கான உச்ச வரம்பில் மேற்கொண்டு ஐந்து ஆண்டுகள் தளர்த்தப்படும் என்கிற உத்தரவை அறிவித்து இருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கை தாராள மனம் படைத்த இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் ஏராளமானவர்கள் பெறுகிறார்கள். நம் உள்ளத்துக் கோயிலில் தெய்வமாக வைத்து பூசிக்கப்பட வேண்டிய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயன் பெறுபவர்களின் எண்ணிக்கையில் இனிமேல் கண்டிப்பாக 10 சதவீதம் பேர் ஊனமுற்றோராய் இருக்க வேண்டும் என்கிற உத்தரவை அறிவித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

விருப்பத்திற்கு மாறான இடமாற்றம். உடல் ஊனமுற்ற ஒவ்வொருவருக்கும் சுற்றுச் சூழல் மிக மிக முக்கியம். ஒருவகைச் சூழலுக்குத் தகுந்த மாதிரி தங்களைத் தயார் செய்து கொள்ளும் அவர்களை வேறொரு சூழலுக்கு மாற்றும் போது புதிய சூழலை எதிர்கொள்ள அவர்கள் போராட வேண்டியிருக்கிறது. இந்தச் சமுதாயத்தின் எந்தப் பிரிவினரும் வாழ்க்கைச் சூழலில் தடுமாறக் கூடாதென்ற எங்கள் அன்புத் தாயாம் புரட்சித் தலைவியின் தெய்வவாக்குக்கு வார்த்தைக்கு வார்த்தை வடிவம் கொடுக்க விரும்பும் சமூக நலத்துறை, உடல் ஊனமுற்றோரை இனிமேல் அவர்களது விருப்பத்துக்கு மாறாக இடமாற்றம் செய்வது தவிர்க்கப்பட வேண்டுமென்ற புரட்சித் தலைவியின் உத்தரவை அமல்படுத்த விரும்புகிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

உடல் ஊனமுற்றோர் [illegible] மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டு வாழ வழியற்ற நிலையில் வாடித் தவிக்கும் ஏழைக் குடும்பங்களைச் சார்ந்த மன வளர்ச்சி கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள அந்தக் குழந்தைகளை நம்முடைய கருணையே உருவான முதலமைச்சரை விட்டால் வேறு யார் பாதுகாக்க முடியும். அதனால்தான் தமிழகத்தில் கடும் மன வளர்ச்சி குன்றி பாதிக்கப்பட்டுள்ள 50 குழந்தைகளுக்கு மாதம் ரூபாய் 150 வீதம் 10 மாதங்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கவேண்டும் என்று நம்முடைய தர்மத் தாயாம் அன்பு தேவதை புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை மிகுந்த மன நிறைவோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உடல் ஊனமுற்றோர் மற்றும் மனவளர்ச்சி குன்றியோரை தன்னம்பிக்கைதான் தலை நிமிரச் செய்கிறது என்றாலும் அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டி, உயர்த்தி விடுவதில் அரசுக்கும சமபங்கு இருக்கிறது. ஊனமுற்றோர் நலனில் தமிழகத்தின் பங்கேற்பு இதுவரை 'பாஸ்மார்க்' வாங்கும் மாணவனைப் போலவே பல காலமாக இருந்து வருகிறது. வாட்ட சாட்டமாக இருக்கும் குழந்தையே வேலைக்குப் போய் கை நிறையச் சம்பாதிக்கும் என்ற நம்பிக்கையில் குடும்பத்தில் அதற்கு ஏகமரியாதை. ஆனால் தாய் மட்டுமே அதில் தனித்து நிற்பாள்; காலோ கையோ விளங்காது போன இன்னொரு குழந்தை மீதே அவளுக்கு அக்கறை அதிகமாக இருக்கும். இன்று தாயாக தமிழகத்தின் 6 1/2 கோடி மக்களின் தாயாக விளங்கக்கூடிய புரட்சித் தலைவி அவர்களின் அரவணைப்பில் தமிழகம் இருப்பதால் ஊனமுற்றோர் நலனில் தமிழ்நாட்டுக்கு தேசிய அளவில் முதலாவது இடம் புரட்சித் தலைவியின் ஆட்சியில்—மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் பழனிச்சாமிக்கு தெரிவித்துக்கொள்கிறேன் — நூறு மார்க் வாங்கிய மாணவனைப் போல் மற்ற மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி தமிழகத்துக்கு மட்டுமே 18 விருதுகள் கிடைத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு குழந்தையும் தன்னுடைய குழந்தையாய் பாவித்து அள்ளி எடுத்து அணைத்துக் கொள்ளும் தாயின் ஆட்சியில் விருதுகளை அள்ளிக் குவிக்கிறது தமிழகம் அந்தப் பெருமைக்கு மெருகேற்றும் விதத்தில் ஊனமுற்றோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோருக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் இதுவரை இருந்து வந்த 3 சதவீத இட ஒதுக்கீடு இன்று முதல் 5 சதவீதமாக புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டு உயர்த்தப்படுகிறது (மேசையைத் தட்டும் ஒலி) பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர் மற்றும் தாழ்த்தப்பட்டோருக்கான இட ஒதுக்கீட்டுக்கு எந்த விதத்திலும் குந்தகம் ஏற்படாத வண்ணம் இந்த ஒதுக்கீடு வழங்கப்படும். 3 சதவீத ஒதுக்கீட்டையே முழுமையாக வழங்காமல் ஊனமுற்



றோரை ஒதுக்கி வைத்த நிலைமையை மாற்றி என் அன்புத் தாயாம் புரட்சித் தலைவி அரசு அந்த ஒதுக்கீட்டை இப்போது முறைப்படி உயர்த்துகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45.

ஆங்கில இலக்கியத்தின் அரிச்சுவடியாயிருக்கும் Fairy Tales காட்டும் தேவதைகள் அறிவால் முதிர்ந்தவர்கள் என்றாலும் அவர்களது பரிவு என்னவோ எளியோர் மீதுதான். எளியோரை ஏற்றமுறச் செய்வது ஒன்றே அந்தக் கருணைத் தேவதைகளின் தலையாய லட்சியம். அழகு கொஞ்சும் அந்தத் தேவதைகளை ஒவ்வொரு செயலிலும் நினைவுபடுத்துகிற எங்கள் ஈடு இணையற்ற தர்மதேவதையாம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கருணையினால் ஊனமுற்றோருக்கு இதோ இன்னொரு சலுகை. ஊனமுற்ற மற்றும் மனவளர்ச்சி குன்றியோருக்கு தேர்வுகளின்போது மற்ற மாணவர்களுக்கு அளிக்கும் அதே வினாத்தாள் மட்டுமின்றி, அதே அளவு நேரமே அளிக்கப்பட்டு வருகிறது. இனிமேல், முயற்சி ஒன்றையே மூலதனமாகக் கொண்டு பக்க பலமில்லாமல் முன்னேறிச்செல்லும் அந்த நம்பிக்கை நாற்றுகளுக்கு நம்முடைய நம்பிக்கை நட்சத்திரமாம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்வின் போது விடையளிக்க மற்ற மாணவர்களைக் காட்டிலும் கூடுதலாக ஒரு மணிநேரம் அளிக்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் மூலம், தரத்தில் குறையாத அந்தத் தங்கங்கள் ஒளி விட பத்தரைமாற்றுத் தங்கமாக சுடர் விட்டு பிரகாசிக்கும் எங்கள் தேவியாம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சி வழி வகுக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எல்லா இனத்தவர் மீதும், எல்லா பிரிவினர் மீதும் அன்பு காட்டும் புரட்சித் தலைவி அவர்கள் காது கேளாதோர் மீதும் தன் கருணையைக் காட்டத் தவறவில்லை. அதனால்தான் தமிழகத்தில் முதன் முதலாக இதுவரை வரலாற்றிலேயே இல்லாத வகையில், காது கேளாதோருக்காக கல்லூரி ஒன்றை அமைக்க மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள உத்தரவிட்டுள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசின் உதவியுடனோ, சுயநிதி அடிப்படையிலோ, அந்தக் கல்லூரியை ஏற்படுத்த அனுமதி தரப்படும்.

காது கேளாதவர்களை அரசு சார்பு நிறுவனங்களில் தட்டச்சராக நியமிக்கும்போது அவர்கள் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் தேர்ச்சி பெற்றிருந்தால் தான் தட்டச்சராக நியமிக்கப்படுவார்கள் என்பது இன்று வரை நடைமுறையில் இருப்பதாகும். ஆனால் இன்று முதல் புரட்சித் தலைவி அவர்களின் கருணைப் பார்வை

[திருமதி இரா. இந்திர குமாரி] [1993 ஏப்ரல் 26

யினால், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளையும் பழுத்து இருக்க வேண்டும் என்பது மாற்றப்பட்டு, ஏதாவது ஒன்றில் தேர்ச்சி பெற்றிருந்தால் அரசு சார்பு நிறுவனங்களில் வேலைக்கமர்த்தப்படலாம் என புரட்சித் தலைவி அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

உடுக்கவோ ஒரு கந்தைக்கு மேலில்லை, உண்ணவோ உணவுக்கும் வழியில்லை, படுக்கவோ பாழும் பாய்க்கும் கதியில்லை, பாரினில் நல்லவர் பாற்சென்று பிச்சைதான் எடுக்கவோ திடமில்லை, உயிரைத்தான் விடுக்கவோ மனமில்லை, என் செய்குவேன், என்று ஏங்கும் முதியோருக்கு தமிழக மக்களின் இருளகற்றும் எங்கள் பிரிய நாயகியாம். வானமும் புவியும் வாழ்த்துகின்ற எங்கள் மாமணியாம், மாண்புமிகு இதயதெய்வம் முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், புதிய முதியோர் இல்லங்கள் இந்த ஆண்டு ஐந்து அமைக்க உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முதியோர் இல்லங்கள், தர்மபுரி மாவட்டம். வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டம், தென்னாற்காடு மாவட்டம், தஞ்சாவூர், கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நாட்டின்மீது நீங்களும், உங்கள் மீது நாடும் வைத்துள்ள நம்பிக்கை இன்னும் பல யுகங்களுக்கு அழியப் போவதில்லை. சக்தியின் மறு உருவாய், மண்ணை ஆள்கின்ற இந்தத் தாயின் பெருமை சிதையப் போவதில்லை. இந்த நம்பிக்கையுடன் தான் நாடு உங்கள் வழி நடக்கிறது. மாதர்குல விளக்கே; வேதம் புதுமை செய்த ஆதிவேதம் எதையும் நாங்கள் அறிந்திருக்கவில்லை. அதன் சாரம் கூட எங்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. செவிகளில் தேனாய்ப் பொழிகிற உங்கள் வார்த்தைகள் தான் எங்களை வழிநடத்தும் வேதம். உங்கள் காலடிச் சுவடுகளில் மட்டுமே அச்சம் எதுவுமின்றி பதியும் எங்கள் பாதம். ஆழ்வார்களும், நாயன்மார்களும் கடவுளின் மேல் வைத்திருந்த பக்திக்கும் உங்கள் வழிநடக்கும் தொண்டர்களாகிய நாங்கள் உங்கள் மேல் கொண்டுள்ள பக்திக்கும் எள்ளளவும் வித்தியாசம் இல்லை. நீங்கள் காட்டும் இலக்கில் ஈட்டிமுனைபோல் பாய்வதற்கு உங்கள் வீரர் கூட்டம் விழிமூடாமல் காத்திருக்கிறது. திசைகளைத் தேடி அலைகிறவர்களுக்கு நீங்கள் ஒரு கலங்கரை விளக்கம். பக்தி பொங்க உங்களைத் தொழுவோரை எந்த யுகத்திலும் தொடராது கலக்கம். நம்பிக்கை நாற்றை மனதில் பயிரிடும் உங்களை வாழ்த்திக் கொண்டேயிருக்கும் எங்களது முழக்கம். நன்றி, வணக்கம்.



1993 ஏப்ரல் 26]

பிற்பகல் 1.30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தான் புலவர்தான என்பதை நிரூபித்துக் காட்டிவிட்டார்கள். டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிறிஸ்தவ வன்னியர்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தமைக்காக என்னுடைய இதயம் கனிந்த நன்றியைக் கிறிஸ்தவ மக்களின் சார்பிலே நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு தெரிவித்து அதே போல கிறிஸ்தவ தாழ்த்தப்பட்ட மக்களையும் மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்து, திருச்சி பொன்மலைப்பட்டியில் உள்ள டாலர்ஸ் கான்வெண்ட், சர்விக் கான்வெண்ட் நடத்துகின்ற செவிடர் காது கேளாதோர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக ஆக்க அரசு உத்தரவிடுமா ? அங்கே ஆசிரியர் பணியிடங்களை சேங்ஷன் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கேள்வி போதும், நீங்கள் கேட்பது அவர்களுடைய பேச்சிலே வராதது.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாலர்ஸ் காது கேளாதோர் பள்ளி தன்னார்வ இயக்கம் நடத்தும் பள்ளியாகும். நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்த கோரிக்கை பெறப்படின் இத்துறையின் பரிந்துரையை கல்வித்துறை மூலமாகப் பெற்றுத் தரப்பட ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் அந்த உடல் ஊனமுற்ற நபர்கள் இன்னும் சரியான முறையிலே அங்கே அவர்களுக்கு வழங்கப்பட்ட வசதிகளை பெறாமல் இருக்கின்ற தன்மைகளை அரசு அறியுமா ? குறிப்பிட்ட காலத்திற்குள்ளே அந்த தொகையை வழங்க அரசு முன்வருமா என்பதைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு என்று எந்தத் தொகையும் வழங்குவதில்லை. அவர்களுக்கு எல்லா உபகரணங்

களும் வழங்கப்படுகிறது. யாருக்காவது கிடைக்கவில்லை என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக சரிபார்த்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14—11—1991 ஆம் ஆண்டு செங்கற்பட்டு மாவட்டம் சிவானந்தா குருகுல ஆசிரமத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இயற்கையின் சோதனையால் பெற்றோர்களை இழந்திருக்கின்ற ஆதரவற்ற அந்த குழந்தைகளுக்குத் தொண்டு செய்தால் எனக்கு மன நிறைவு ஏற்படுகிறது என்றும், அவர்களுடைய சிரிப்பிலே கடவுளைக் காண்கின்றேன் என்றும் சொன்னார்கள். அந்த கருத்தை மையமாக வைத்து ஆதரவற்ற குழந்தைகளின் சிரிப்பில் ஆண்டவனை காண்கிறேன் என்கின்ற புரட்சித் தலைவியினுடைய பொன்மொழியினை சமூகநலத் துறையின் சார்பில் எல்லா இடங்களிலும் விளம்பரம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சிவானந்தா குருகுலத்தில் புரட்சித் தலைவர் அவர்களைப் பற்றி கூறிய வாசகங்கள், அப்படியே அவர்கள் சொல்லியிருக்கிற அந்த வார்த்தைகளை அப்படியே ஒரு போர்ட் ஆக எழுதி எல்லா இல்லங்களிலேயும் மாட்டுவதற்கு, புரட்சித் தலைவியின் கருத்துக்களையும் சேர்த்து மாட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெ. பரந்தாமன்.

டாக்டர் ஜெ. பரந்தாமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடம் கட்டுதல் பணிகளுக்காக கிராமங்களிலேயிருந்து நகருக்கு பலபேர்கள் வருகிறார்கள். இவர்கள் தினமும் ஊர் திரும்ப முடியாது. இரவில் இவர்கள் தங்குவதற்கு வழியில்லாமல், குழந்தைகளோடு பகலில் வெய்யிலிலும் காய்ந்து, மழையிலும் நனைந்து சிரமப்பட்டுக் கொண்டிருப்பவர்களை அரவணைக்க, ஆதரவற்றவர்களுடைய ரட்சகராக விளங்கிக் கொண்டிருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு சமூக நலத்துறையின் மூலம் அடையாள அட்டை வழங்கி இரவில்



100, 200 பேர் ஒரே இடத்தில் தங்க 'கம்யூனிட்டி ஷெட்' சமுதாயக்கோட்டை அமைத்துக் காப்பாற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை என்பதைத் தெரியப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைக் குழந்தைகளுடைய பசித்த வயிறுக்கு பால் வார்ப்பது போல அவர்களுக்கு சத்துணவு கொடுத்து வளர்த்தவர்கள் நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள். நீலகிரி மாவட்டத்தில் கடும் குளிரும் கடும் மழையும் இருக்கிறது. ஆகவே ஏழைக் குழந்தைகளை பாதுகாக்கும் பொருட்டு ஸ்வெட்டர்கள் வழங்கப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அரசு பரிசீலிக்குமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1.35.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம் குளிர் மாவட்டம் என்கின்ற காரணத்தினால் இந்தத் துறை அதைக் கனிவோடு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு மறுவாழ்வு இல்லங்களில், உடல் ஊன முற்றோர் மறுவாழ்வு இல்லங்களில் தற்சமயம் எண்ணிக்கைக் குறைவானவர்களே இருக்கின்றார்கள். ஆகவே, இரண்டு, மூன்று சென்டர்களை ஒன்றாக இணைத்து, அங்கு ஏற்படுகின்ற காலியிடங்களில் ஐ.டி.ஐ. துவங்குவதற்கான முன் ஏற்பாடு இருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அப்படிப்பட்ட எண்ணம் அரசின் சார்பில் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்கள் இல்லங்களில் இப்பொழுதே முழுமையாகதான் அது பூர்த்தி செய்யப்படுகிறது. இடம் இல்லாமல் திரும்பி செல்லக்கூடிய

1993 ஏப்ரல் 26]   [திருமதி. இரா. இந்திரகுமாரி]

நிலைமைதான் இருக்கிறது. அங்கே தொழில் பயிற்சியும், கல்வி பயிற்சியும் கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவு இடப் பட்டிருக்கிறது. அதை இப்பொழுது செயல்முறை படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது.

இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 29—சமூக நலன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 29—சமூக நலன். வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன் மொழியப்பெறவில்லை.

''சமூக நலன் பற்றிய 29 ஆம் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 440,46,19,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர் மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்)

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடி வுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4.30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1.36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் மாலை 4.30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.



1993 ஏப்ரல் 26]

6. மானியக் கோரிக்கைகள், 1993-94,

விவாதமும், வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 25—கைத்தறியும், துணித்தொழிலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 25 கைத்தறியும் துணித் தொழிலும், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'மானியக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 106,79,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்த உறுப்பினர்கள் எவரும் இருக்கை யில் இல்லாத காரணத்தால் வெட்டுத் தீர்மானங்கள் எதுவும் முன் மொழியப் பெறவில்லை. மானியக் கோரிக்கை பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர் கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய கொள்கைக் குறிப்புகள் * அவை முன் வைக்கப்பட்டுள்ளன. அதில் தமிழில் இருக்கிற கொள்கைக் குறிப்புகளை நான் அவையில் ஆற்றிய உரையாகக் கருதி அவைக் குறிப்பில் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களின் மேலான கருத்துக்களை எடுத்துரைத்த பின் இறுதியாக இந்த அரசின் கருத்துக்களையும் முடிவுகளையும் இந்த அவைக்கு எடுத்துக் கூறுகிறேன என்று கூறி அமர்கிறேன்.

* 868—892 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எம். துரை.

திரு. எஸ். எம். துரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தவறு செய்தவன் யாராக இருந்தாலும், தன் மகனே ஆனாலும், தவறு தவறுதான் என்று பெற்ற மகனையே தேர்க்காலில் இட்டு தண்டித்தான் மனுநீதிச் சோழன். நெற்றிக் கண் திறந்து காட்டி அகிலத்தைப் படைத்த ஆண்டவன் அச்சுறுத்தியபோதும், நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்றார் நக்கீரர். ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன் என்றார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அதைப்போல * வேறு யாராக இருந்தாலும் சரி, எங்களுக்கு தீங்கு செய்யக்கூடிய சக்தியையும், அதிகாரத்தையும் பெற்றிருந்தாலும் சரி, அவர்கள் தவறு செய்தால் அதைக் கேட்காமல் விட மாட்டேன். அதன் விளைவுகள் எதுவாக....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **என்றால் சரியல்லை. கட்சி பிரச்சினை இங்கே வர வேண்டியதில்லை. வேறு யாராக இருந்தாலும் என்று வேண்டுமானாலும் மாற்றிக் கொள்ளுங்கள்.

திரு. எஸ். எம். துரை : அதன் விளைவு எதுவாக இருந்தாலும் அதற்கு அஞ்சமாட்டேன். தவறு தவறு தான். அதை ஒப்புக்கொண்டால் உறவு. இல்லையென்றால் வேண்டாம் என்று நெஞ்சில் உரத்தோடும் நேர்மைத் திறத்தோடும் சூளுரைத்து சுடர் விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கிற மனுநீதிச் சோழன் மறு உருவமே, நக்கீரனின் வழித்தென்றலே, புரட்சித் தலைவரின் வாரிசே, புரட்சித்தலைவியே மாண்புமிகு முதலமைச்சரே, முதற்கண் என் இரு கரம் கூப்பி வணங்குகிறேன்.

கைத்தறித் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு முன்னர், தமிழகத்தின் தலைமகளே, வீரத்தின் விளைநிலமே, விவேகத்தின் உறைவிடமே உங்களுக்காக நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகிறேன். நீங்கள் எவ்வளவு பெரிய ஆளாக இருந்தாலும் அஞ்ச மாட்டேன், நீங்கள் செய்தது தவறு தவறு தான் என்று சுட்டிக்காட்டுகிறீர்களே, அந்தச் சுட்டு விரலுக்கு

* மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க மாற்றப் பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



ஒரு தீங்கு விளையுமானால், அதைத் தடுக்க நான் இருக்கிறேன். நாங்கள் இருக்கிறோம். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் வீரர்கள் இருக்கிறார்கள். ஏன், தமிழ்நாடே இருக்கிறது. இங்கே ஒரு பிரளயமே ஏற்படும். ஆகவே, அஞ்ச வேண்டாம் தாயே, அஞ்ச வேண்டாம். அதர்மத்தை அழியுங்கள். அநியாயத்தை அடித்து நொறுக்குங்கள். நீதியோடும், நேர்மையோடும் இந்தத் தமிழகத்தை நடத்திச் செல்லுங்கள். மானம் இழந்து, மரியாதை இழந்து, கூனிக்குறுகி நாம் வாழ வேண்டுமா ? வேண்டாம். வேண்டவே வேண்டாம்.

நெஞ்சத்தை நிமிர்த்தி, தோள்களை உயர்த்தி வீரநடை போட்டு வெற்றி நடையாக்க வேண்டும் * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தச் சொற்கள் எல்லாம் இங்கே சொல்லக் கூடாது. * * என்ற அந்த வார்த்தைகள் பேரவையில் பயன்படுத்தப்படக்கூடாத வார்த்தைகள். அவை அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. கைத்தறி மானியக் கோரிக்கை பற்றி பேசுங்கள்.

பிற்பகல் 4--35

திரு. எஸ். எம். துரை : பசுவை வணங்கு. ஆனால் அந்த பசுவே உங்களைக் கொல்ல வருமானால், அதைக் கொல்வதில் பாவம் இல்லை என்பதுதான் கீதையின் உபதேசம். ஆகவே, நண்பர்களைப் போல நடித்து, நமக்கே துரோகம் செய்த காங்கிரஸ்காரர்களின் துரோகத்தை சரியான நேரத்தில் கண்டறிந்து, தட்டிக் கேட்டு கண்டித்து, அவர்கள் உறவை வெட்டிவிட்ட உங்களை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். If you allow a thorn to remain in your body, it will cause a dangerous wound என்ற தத்துவத்திற்கு இணங்க. நமது உடம்பில் ஒட்டிக் கொண்டிருந்த, தைத்துக் கொண்டிருந்த காங்கிரஸ் என்ற முள்ளை அகற்றி இந்த ஆட்சியை, அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தைக் காப்பாற்றிய எங்கள் காவல் தெய்வம், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு அனைத்திந்திய அண்ணா தி.மு.க. தொண்டர்களின் சார்பாக இரு கரம் கூப்பி வணங்கி எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, மானியக் கோரிக்கை பற்றிப் பேச விழைகிறேன்.

எங்கள் இனமான தேவாங்க கன்னட சமூகத்தின் குலத் தொழில் கைத்தறியாகும், எங்கள் ஆத்தூர் தொகுதியான சின்னாளப்பட்டியில் 21 கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தன.

** மாண்புமிகு பேரவைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

கடந்த தி.மு.க ஆட்சியில் நசுங்கி தற்போது 8 சங்கங்கள் உள் ளன. அவைகளில் 5 மட்டும்தான் நன்றாகச் செயல்படுகிறது. எனவே, தன்னிறைவுத் திட்டத்தில் அனைத்து சங்கங்களும் உயிர் பெற்று செயல்பட நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித்தலைவி அவர்களை வேண் டிக் கொள்கிறேன்.

மேலும் தமிழ்நாடு அரசு நெசவாளர்களுக்கான அரசு பங்கு முதலீடு. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்குத் தொகை யினை அதிகரித்து, அதன் மூலம் சங்கங்களின் கடன் வாங்கும் திறனை அதிகரிக்கும் பொருட்டு அரசு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ. 1 லட்சம் பங்கு முதலீடு செய்கிறது. இந்த நிதி உதவி நலிந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டால், இந்தச் சங்கங்கள் நல்ல முறையிலே இயங்க வாய்ப்பு ஏற்படும்.

அரசு பங்குத் தொகைக் கடன், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களுக்குத் தந்த பங்குத் தொகையினை அதிகரிக்கும் பொருட்டு, அவர்கள் நெசவு செய்யும் ரகங் களுக்கு ஏற்ப பங்குக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கடன் தொகை நலிவு அடைந்த சங்கங்களுக்கு வழங்கப்பட்டால் அவைகள் நல்லமுறையில் செயல்பட வாய்ப்புள்ளது என் பதை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் அரசு அலுவலகத்தின் பங்கு. மாநிலச் சங்கமான கோ—ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவர் தவிர, வேறு அரசு அலுவலர்கள் எவரும் தற்போது பணியில் இல்லை. ஆனால் அரசின் நிதி உதவிகளைப் பெரும் அளவில், கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம் பெற்று வருவதால் இந்த நிறுவனத்தின் செயல்பாடுகளை உரிய முறையில் மேற்பார்வை செய்யும் பொருட்டு, அரசு அலுவலர்களின் அடிப்படை ஊதியத்தில் பணி அமர்த்தப்பட் டால் நெசவாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு, அவர்களின் நலனுக்கு பெரும் பங்காற்ற முடியும். தற்போது கோ—ஆப்டெக்ஸ் பணியாளர்கள் நெசவாளர்களின் பிரச்சினைகளைப் பற்றி அறிய நேரடியாக தொடர்பு ஏதும் இல்லை என்பதை மாண்புமிகு தமிழக முதல்வர், டாகடர் புரட்சித் தலைவி அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்தலைமை)

கோ—ஆப்டெக்ஸ் பிரதம நெசவாளர்கள் கூட்டுறவுச் சங் கங்களின் மூலா் கொள்முதல் செய்யும் துணிகளுக்கான தொகையை ஒரு மாத காலத்திற்குள் அளித்திட ஆணையிட



மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை வேண்டி கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு செய்தால், சங்கங்கள் வங்கிகளுக்குச் செலுத்தும் வட்டி குறைவதுடன், சங்கங்கள் நன்றாக செயல் பட வாய்ப்பு உள்ளது.

கூட்டுறவு நூற்பாலைகளில் அநேக குறைபாடுகள் இருந்து வருவதாகத் தெரிய வருகிறது. எனவே, அவைகளின் செயல் பாடுகள் குறித்து அறிய ஒரு வல்லுநரை நியமித்து, குறை களைக் கண்டறிந்து கூட்டுறவு நூற்பாலைகள் சிறப்புடன் செயல்பட, மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவாகளை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

நூல் சப்ளை. கூட்டுறவுச் சங்கங்கள் தனக்குத் தேவை யான நூல்களை கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து கொள்முதல் செய்கின்றன. தனியார் மில்களிலிருந்து வரும் நூல்களையும் கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து வரும் நூல்களையும் ஒப் பிட்டுப் பார்த்தால், கூட்டுறவு நூற்பாலைகளில் நூல்கள் மிகவும் தரம் இல்லாததாக உள்ளது. இதனால் உற்பத்தி செய்யப்படும் சரக்குகளில் தெளிவு இல்லாமல் உள்ளது. நூல் விலையும், தனியார் நூல்களை விட அதிகமாக உள்ளது. தனியார் நூல்களை விட கூட்டுறவு நூற்பாலைகளின் நூல், கட்டு ஒன்றுக்கு ரூ. 25 குறைவாக கிடைக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளை அறிவுறுத்த வேண்டும் என்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

பாலியஸ்டர் சேதாரம். நெசவாளர்களின் கூட்டுறவுச் சங்கங்கள், சங்க உற்பத்திக்குத் தேவையான பாலியஸ்டர் நூலை கோ—ஆப்டெக்ஸ் நூல் கிடங்குகளில் இருந்து கொள் முதல் செயகின்றன. கோ—ஆப்டெக்ஸ் நிறுவனம், பெட்ரோ மில்ஸ், பரோடா, குஜராத்தில் உற்பத்தியாகும் கூட்டுறவு நிறுவனம் மூலம் தனக்குத் தேவையான பாலியஸ்டர் நூல் களைக் கொள்முதல் செய்து கொள்கிறது. பரோடாவிலிருந்து வரும் நூல்கள், குளிர்சாதன அறைகளில் வைக்கப்பட்டு கம்ப்யூட்டர் தராசு மூலம் எடை போட்டு, கோ—ஆப்டெக்ஸ் மூலம் சங்கங்களுக்கு வருகிறது. மேற்கண்ட அட்டைப் பெட்டி களிலிருந்து வரும் நூல்களை சங்கங்கள் வைத்து, தராசில் எடை போடும்போது பெட்டி ஒன்றுக்கு சராசரியாக 100 கிராம் முதல் 300 கிராம் வரை குறைகிறது. மாதம் ஒன்றுக்கு சரா சரியாக 40 பெட்டிகளை ஒரு சங்கம் கொள்முதல் செய்தால், சராசரியாக 10 கிலோ வரை குறைகிறது. இவற்றின் மதிப்பு ரூ. 2,350 ஆகும். ஆக ஆண்டு ஒன்றுக்கு ஒரு சங்கத்திற்கு ரூ. 28 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, பாலியஸ் டர் நூல்களில் ஏற்படும் நூல்களின் எடைக் குறைவுக்கான

நஷ்டத்தை கோ–ஆப்டெக்ஸ் அல்லது பெட்ரோ மில்ஸ் உடனடியாக சங்கத்திற்கு வழங்க ஆவன செய்யும்படி மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்,

பிற்பகல் 4–40

பரவலான வீடு கட்டும் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ் சொந்த வீட்டு மனை உள்ள நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு சில நிபந்தனைகளுடன் வீடு கட்டிக் கொள்வதற்காக கடன் மற்றும் மானியம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி நிபந்தனைகளைத் தளர்த்தினால், பெரும் அளவில் உள்ள நெசவாளர்கள் பயன் அடைய இயலும். கடன் பெறும் உறுப்பினர்கள், பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பை, சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிடமே அந்தப் பொறுப்பை நேரடியாக ஏற்கச் செய்தால், கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலையை உருவாக்க இயலும் என்பதைக் கூறிக்கொள்கிறேன். மேலும் எனது தொகுதியிலுள்ள ஆத்தூர் காமராஜர் நீர்த்தேக்கத் திட்டமானது 24 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்த அணை திண்டுக்கல் நகர் மற்றும் சின்னாளப்பட்டி தேர்வு நிலை பேரூராட்சி மற்றும் ஒக்கம்பட்டி, பித்தலப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக கட்டப்பட்ட இந்த அணையில் தற்போது வண்டல் மண் நிரம்பி சுமார் 7 அடி உயரத்திற்கு நிறைந்து விட்டது. இதனால் தண்ணீர் கொள்ளளவு பின்னடைந்த நிலையில் இருக்கிறது. இதனால் திண்டுக்கல் நகர் குடிநீர் திட்டம் குறிப்பாக சின்னாளப்பட்டி பகுதிக்கு குடிநீர் வழங்குவது மிக மிக குறைந்து விட்டது. இதனால் சின்னாளப்பட்டியிலுள்ள மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல். பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சி காலத்தில் இவ்வணையில் தூர் வாருவதற்காக முதலில் ஏற்பாடு செய்து, வேண்டுமென்றே கைவிட்டு விட்டனர். ஆகவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் நிதியை அதிகமாக வழங்கி இப்பகுதி மக்களுக்கு தொடர்ந்து குடிநீர் வசதி கிடைக்க ஏற்பாடு செய்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் ரெட்டியார் சத்திரம் ஊராட்சியின் வடபகுதியிலுள்ள புதுசத்திரம், ஜி. நடுப்பட்டி, குருவாத நாயக்கனூர், கே. புதுக்கோட்டை. முருநல்லிக்கோட்டை, சில்வார்பட்டி, தெப்ப குளத்துப்பட்டி ஆகிய ஊர்களிலுள்ள பொது மக்கள் குடிதண்ணீர் கிடைக்காமல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு தொடர்ந்து குடிதண்ணீர் கிடைக்க மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் உள்ள (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம் முடித்து விடுகிறேன். சோத்தால் நாயக்கன் கோம்பையிலிருந்து கூட்டுறவு குடிதண்ணீர்



திட்டம் வழங்குவதற்கும் ரெட்டியார் சத்திரம் ஒன்றியத்திலுள்ள பொன்மான் துறைக்கு மேற்கே உள்ள தாமரைக்குளம் சுமார் 150 ஏக்கர் நிலப்பரப்புள்ள வேளாண்மை நிலம் கண்மாய் மூலம் பாசனம் பெற்று வந்தது. தற்போது அந்த கண்மாய் மேடாகிவிட்டது. இதனால் பாசனம் பெற முடியாமல் பல ஏக்கர் நிலங்கள் தரிசு நிலமாக மாறி வருகிறது. இப்பகுதியில் தோல் பதனிடும் தொழிற்சாலையும் அமைந்துள்ளதால் வேளாண்மைக்கும் குடிநீருக்கும் நல்ல தண்ணீர் கிடைக்காத நிலையில் உப்பு நீராக மாறி வருகிறது. எனவே அதற்காக தாமரைக் குளத்தில் தூர் வாரிக் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டு மாண்புமிகு டாக்டர் இதய தெய்வம் தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறிக் கொண்டு பேசுவதற்கு அனுமதி அளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திருமதி க. பழனியம்மாள்.

<u>திருமதி க. பழனியம்மாள் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி மற்றும் துணிநூல் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியை உரித்தாக்குகிறேன். தடைக் கற்களையெல்லாம் படிக்கற்களாக மாற்றி இன்றைக்கு தமிழகத்திலே ஒரு நல்ல ஆட்சியை நடத்திக் கொண்டு நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், புத்தாண்டு தினத்திலே—தமிழனை தலை நிமிரச் செய்த நம்முடைய தங்க தலைவி அவர்கள் இந்த புத்தாண்டு தினத்திலே நம்முடைய தமிழகம் முழுவதிலும் உள்ள குழந்தைகளுக்கும் உடல் ஊனம் உற்ற குழந்தைகளுக்கும், ஆதரவு அற்ற குழந்தைகளுக்கும் இனிப்பு வழங்கி தம்முடைய தாய் உள்ளத்தை காட்டியிருக்கின்றார். நம்முடைய புரட்சி தலைவி அவர்கள் ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்களுடைய கற்பகத் தருவாக விளங்குகின்ற நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய நன்றியைக் கூறி இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

இந்த கைத்தறி துறையானது மிகவும் பழமையான துறை. பழைய காலத்திலேயிருந்தே இந்திய நெசவுத் தொழில் உலகம் முழுவதும் மிகவும் புகழ் வாய்ந்ததாக இருந்திருக்கிறது. இந்த கைத்தறியானது மக்களால் அலங்காரத்திற்காகவும் மற்றும் ஒரு கம்பீரத் தோற்றத்திற்காகவும் கைத்தறியை பெரும்பாலான மக்கள் உபயோகிக்கிறார்கள், இந்த கைத்தறி துறை தான் தேசிய பொருளாதாரத்திலே ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. அது மட்டும் அல்லாமல் வேலை வாய்ப்பை அளிக்கின்ற

விதத்திலே வேளாண்மைத் துறைக்கு அடுத்ததாக இருப்பது கைத்தறி துறை என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். இத்தகைய சிறப்பு வாய்ந்த துறையை மேம்படுத்துவதற்காக நம்முடைய தமிழக அரசாங்கமானது பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறது. இந்த துறையை மேம்படுத்துவதோடு மட்டும் அல்லாமல் இந்த துறையிலே ஈடுபட்டிருக்கிற நெசவாளர்களுடைய நிலையை காப்பதற்காகவும் நம்முடைய அரசாங்கம் பல திட்டங்களையெல்லாம் அறிமுகம் செய்திருக்கிறது. இந்த துறையை மேம்படுத்துவதற்காக கொண்டு வருகின்ற திட்டங்களிலே சில முக்கிய திட்டங்களை பார்ப்போமேயானால் இந்த கைத்தறிகளையெல்லாம் கட்டாயம் கூட்டுறவின் கீழ் கொண்டு வர வேண்டும் என்ற குறிக்கோளை நம்முடைய அரசாங்கம் கொண்டிருக்கிறது. இன்றைக்கு தேசிய குறியீட்டை எடுத்துக் கொண்டால் 60 சதவீதம் கைத்தறித் தொழிலை கட்டாயம் கூட்டுறவின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று ஒரு இலக்கு நிர்ணயித்திருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நம்முடைய டாக்டர் புரட்சி தலைவி அவர்களுடைய ஆட்சியிலே நாம் இந்த தேசிய குறியீட்டை எல்லாம் மிஞ்சும் அளவிற்கு 88 சதவீதம் கைத்தறிகளை கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டு வந்து ஒரு சிறப்பான கட்டத்தை எட்டியிருக்கிறோம்.

பிற்பகல் 4-45

அதேபோலத்தான் இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் வொர்க்கிங் கேப்பிடல், அதாவது நடைமுறை மூலதனம் என்பது பெரும் சிக்கலாக இருக்கிறது. அதை சரிசெய்து இந்தச் சங்கங்கள் எல்லாம் நல்ல முறையிலே செயல்பட வேண்டும் என்பதற்காக இன்றைக்கு 9.5 சதவிகிதம் வட்டியிலே இன்றைக்கு இந்த நெசவாளர் சங்கங்களுக்கெல்லாம் வொர்க்கிங் கேப்பிடல் நடைமுறைமூலதனம் கொடுக்கப்படுகிறது. அதுவுமல்லாமல், இந்தச் சங்கங்களுக்கு எல்லாம் நூல் எவ்வாறு கொடுக்கப்படுகிறது என்றால் கோ-ஆப்டெக்ஸ் நூலை மொத்தமாக வாங்கி இந்த கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் 2 சதவிகிதம் மானிய அடிப்படையிலே அந்தச் சங்கங்களுக்கு தேவையான நூலை வாங்கி கொடுத்து வருகிறது. அதுவுமல்லாமல் இந்த நெசவாளர்களுக்கு எல்லாம் வேலை வாய்ப்பு— ஏனென்றால் கிராமப் புறங்களிலே பெரும்பகுதியான மக்கள் இந்த நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஒரு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக கைத்தறியை அதிகம் உற்பத்தி செய்தால்தான் அவர்களுக்கு வேலை கிடைக்கும் என்ற நிலையிலே இன்றைக்கு இந்த தள்ளுபடி மானியத் திட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. ஆண்டுக்கு



100 நாட்கள் தள்ளுபடி கொடுத்து இந்தத் துணி விற்பனையை கைத்தறி விற்பனையை அரசாங்கம் ஊக்குவித்து வருகிறது. அதுவுமல்லாமல் நாம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதோடல்லாமல், அவர்களுடைய பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக கைத்தறியினுடைய உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும், அதே நேரத்தில் துணிகளுடைய தரத்தினையும் உயர்த்த வேண்டும் என்பதற்காக நம்முடைய அரசாங்கம் இன்றைக்கு கைத்தறியை எல்லாம் நவீனமயமாக்க வேண்டும் என்ற ஒரு திட்டத்தை கொண்டு வந்து இருக்கிறது. அந்த வகையிலே ஐந்தாண்டிலே 50,000 கைத்தறிகளை நவீனமாக்க வேண்டும் என்ற ஒரு குறிக்கோளை வைத்து நம்முடைய அரசாங்கம் செயல்பட்டுகொண்டிருக்கிறது. அதுவுமல்லாமல் இந்த நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த ஜனதா துணி உற்பத்தித் திட்டம் என்பதையும் கொண்டு வந்து இருக்கிறது. இப்படி தயாரிக்கப்படுகின்ற துணி வகைகள் எல்லாம் நம்முடைய உள்நாட்டிலேயே விற்காத ஒரு நிலை இருக்கும்போது இந்த நெசவாளர்களுக்கு உதவி செய்யும் வகையிலே அவற்றையெல்லாம் ஏற்றுமதி செய்தாக வேண்டும். அப்படி ஏற்றுமதி செய்வதை ஊக்குவிக்க வேண்டும் என்பதற்காக சிறந்த முறையிலே யார் எல்லாம் இந்த ஏற்றுமதியிலே பங்கேற்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் ஊக்கம் அளிப்பதற்காக இன்றைக்கு அரசாங்கம் பரிசுத் தொகையும் கொடுத்து வருகின்றது. அதுவுமல்லாமல் இந்த கைத்தறிகளை எல்லாம் விசைத் தறிகளாக மாற்றிவிட வேண்டும் என்ற ஒரு திட்டத்தையும் வைத்து அரசாங்கம் செயல்படுகிறது. அந்த வகையிலே வருகின்ற பத்து ஆண்டுகளில், 37.500 கைத்தறிகளை 75,000 விசைத்தறிகளாக மாற்றுகின்ற திட்டத்தையும் இன்றைக்கு நம்முடைய துறை செயல்படுத்தி வருகின்றது. இப்படி கைத்தறித் துறையிலே பல மேன்மையான திட்டங்களை எல்லாம் கொண்டுவந்து அந்தத் துறையை நல்ல முறையிலே இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் செம்மையாக நடைபோடுவதற்கு உதவி செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தத் துறையை மட்டும் அல்லாமல், அந்தத் துறையிலே வேலை செய்கின்ற அலுவலர்களையும் மற்றும் அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற நெசவாளர்களையும், காக்கின்ற திட்டங்களை எல்லாம் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், குடும்ப ஓய்வு ஊதியத் திட்டம், நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் மற்றும் தொழிற்கூடம் கட்டும் திட்டம் இதுபோன்ற பல திட்டங்களை எல்லாம் இன்றைக்கு அரசாங்கம் முன் வைத்து இருக்கிறது. இந்தத் தறிக்கூடம் மட்டும் கட்ட வேண்டும் என்றால் அரசாங்கம் 4,000 ரூபாயை மானியமாகத் தருகின்றது. தறிக்கூடத்துடன் வீடும் கட்ட வேண்டும் என்றால் 14,000 ரூபாயை அரசாங்கம் மானியமாகக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. நான் இங்கு இந்தத் துறையையும்

[ திருமதி க. பழனியம்மாள் ] [ 1993 ஏப்ரல் 26

நம்முடைய புரட்சித் தலைவி அவர்களையும் கேட்டுக் கொள்ள
விரும்புவது, இந்த வீடு கட்டுவதற்காக கொடுக்கப்படுகின்ற
தொகையை இன்னும் சிறிது உயர்த்திக் கொடுத்தால் அவர்
களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதை தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன். இந்த வகையிலே இந்த கைத்தறி
துறையானது பீடு நடை போட்டுக் கொண்டிருக்கும்போது அந்த
நெசவாளர்களுடைய நலனில் நாம் இன்னும் சிறிது அக்கறை
செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இங்கே நான்
ஒன்றை குறிப்பிட விரும்புவது என்னவென்றால் இந்த துணிகள்
எல்லாம் கொள்முதல் செய்யப்படும்போது, இந்தத் துணிகளுக்
கான மானியத் தொகை தள்ளுபடி தொகை இந்தச் சங்கங்களுக்
கெல்லாம் வருவது மிகவும் காலதாமதம் ஆகின்றது. இதனால்
நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்பட வேண்டிய ஒரு நிலைமை
இருக்கிறது. இன்றைக்கு உற்பத்தி செய்கின்ற துணி எல்லாம்
தேங்கி விடுகின்ற நிலையிலே அந்த நெசவாளர்களுக்கு அந்தச்
சங்கங்கள் கூலி கூட கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. நூல்
வாங்க முடியாத நிலை இருக்கிறது. இந்த நிலையை மாற்றிய
யமைக்க கட்டாயம் நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர்
புரட்சித் தலைவி அவர்கள் ஒரு சிறந்த முடிவை எடுக்கவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 4.50

ஏன் என்றால் என்னுடைய ராசிபுரம் தொகுதியில் பட்டு
நெசவு சிறந்த முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது..
இன்றைய தேதியில் ராசிபுரம் தொகுதியில் 3 கோடி ரூபாய்க்கு
மேல் பட்டு சேலை தேங்கியிருக்கிறது. இதனால் அந்தச் சங்கங்
கள் மேற்கொண்டு உற்பத்தி செய்ய முடியாமல் மிகவும் முடக்கப்
பட்ட நிலையில் இருக்கிறார்கள். எனவே, அரசாங்கம் ஒரு
முடிவை எடுத்து அதிகமாக தயாரிக்கின்ற இந்த பட்டுத் துணிகளை
எல்லாம் ஏற்றுமதி செய்வதற்கு ஒரு வழிவகைச் செய்தால் தான்
அந்தச் சங்கங்கள் நல்ல முறையில் முன்னேறும்; நெசவாளர்கள்
பயன்பெறுவார்கள் என்ற கருத்தை நான் சொல்லிக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இன்றைக்குத்
தான் நான் பேசுகிறேன். இந்தத் துணிகளை எல்லாம் கோ-
ஆப்டெக்ஸ் கொள்முதல் செய்யும்போது பட்டு துணிகளுக்கு
9 சதவீதமும், கைத்தறி துணிகளுக்கு 12 சதவீதமும் லாபம்
வைத்து கொள்முதல் செய்கிறார்கள். இதையே சற்று உயர்த்தி
பட்டுத் துணிகளுக்கு 12 சதவீதமாகவும், கைத்தறி துணிகளுக்கு
15 சதவீதமாகவும் மாற்றினால் நெசவாளர்களுக்கு கொஞ்சம்
பயன் தரக்கூடிய வகையில் அது அமையும் என்பதை நான் கூறிக்
கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்போது நம்முடைய அரசு இந்த நெசவாளர்களுக்கு தனி
யாக வீடுகள் கட்ட கடன் கொடுக்கிறார்கள்; மானியம் கொடுக்
கிறார்கள். தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கிறார்கள்.



1993 ஏப்ரல் 26 ] [ திருமதி. க. பழனியம்மாள் ]

ஆனால் சிலயிடங்களில் இந்த வீடுகளை நெசவாளர்கள் விற்று
விடுகின்ற நிலை இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி
இல்லாமல் இனிமேல் இந்த வீடுகளை வழங்கும்போது அந்த
வீடுகள் எல்லாம் மத்திய அரசின் மானியம், நம்முடைய மாநில
அரசின் மானியம் ஆகியவற்றின் மூலம் கட்டப்படுவதால்
அந்த வீடுகளை விற்கக் கூடாது என்று நெசவாளர்களுக்கு
அறிவுறுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் சில சமயங்களில் நம்முடைய மாநிலத்திற்குத்
தேவையான பட்டு நம்முடைய மாநிலத்தில் கிடைக்காத ஒரு
நிலைமை இருக்கிறது. அந்த மாதிரியான சமயங்களில் இந்த
நெசவுத் தொழில் மிகவும் முடக்கிப் போய் விடுகிற நிலையைத்
தவிர்ப்பதற்காக இந்த பட்டு பற்றிய ஒரு ஆராய்ச்சியை நம்
முடைய வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மேற்கொண்டு
நமக்குத் தேவையான பட்டை நாமே தயாரித்துக் கொள்ள
நூல் தயாரிப்பதற்கான ஒரு தன்னிறைவு நிலையை ஏற்படுத்து
வதற்கு இந்தத் துறையை முயற்சி செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் என்பது காஞ்சி
புரத்தில் இருக்கிறது. அது பொது நிறுவனமாக
செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அதனுடைய வேலை,
நம்முடைய நெசவாளர்களுக்கு வேண்டிய ஜரிகையை நல்ல
தரத்தில் செய்து கொடுப்பது. ஆனால், இன்றைக்கு அந்த
ஜரிகை நிறுவனமானது நம்முடைய நெசவாளர்களுடைய
தேவையை 10 சதவீதம் தான் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது.
அதை இன்னும் விஸ்தரித்து இங்கே நெசவாளர்களுக்கு உதவி
புரியும் வகையில் ஜரிகை மிகவும் சுலபமான முறையில் கிடைக்கக்
கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அதுமட்டுமல்லாமல் நம்முடைய தமிழகத்தில் 18 நூற்
பாலைகள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவை
நல்ல முறையில் செயல்பட்டுக் கொண்டு இருந்தாலும், அதை
கவனிப்பதற்கு என்று ஒரு மேல் மட்டக் குழு இருந்தாலும்,
தொழில் நுட்பக் குழுவை அமைத்து இந்தத் தொழிலை செய்
கின்ற நூற்பாலைகளில் நல்ல முறையில் செயலாக்கம் நடந்து
நல்ல முறையில் நெசவாளர்களுக்கு நூல் கிடைக்க உதவி செய்ய
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் கைத்தறி சங்கங்களில் பணியாற்றுகின்ற அலு
வலர்களுக்கு அவர்கள் ஓய்வு பெறும்போது ஒரு கணிசமான
தொகையை மற்ற அரசு ஊழியர்களுக்கு கொடுப்பது போல்
60 ஆயிரம் ரூபாயோ: 1 லட்சம் ரூபாயோ கொடுக்க வேண்டு
மென்று நான் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி

அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது). என்னுடைய தொகுதியைப் பற்றி ஓரிரு கோரிக்கைகளை மட்டும் வைத்து விடைபெறுகிறேன்.

என்னுடைய தொகுதியில் நெசவாளர்கள் நான்கில் ஒரு பங்கு இருக்கிறார்கள். எனவே, என்னுடைய தொகுதியை இந்த இலவச வீடு கட்டும் திட்டம், மற்றும் கைத்தறியை விசைத் தறியாக மாற்றும் திட்டம் ஆகியவற்றில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பொதுவான சில கோரிக்கைகளை வைக்க விரும்புகிறேன். பூலாம்பட்டி--ராசிபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இன்று நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் அது சிறிது மந்தமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ராசிபுரத்தில் எவ்வளவு தண்ணீர் கஷ்டம் இருக்கிறது என்பதைப் பற்றி நான் பலமுறை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்தத் திட்டத்தைக் கொஞ்சம் துரிதப்படுத்தவேண்டும் என்றும், அதுவும் இல்லாமல் அந்த வழியோர கிராமங்கள் விடுபட்டு போயிருக்கின்றன. அந்த மக்கள் எல்லாம் எங்களுக்கு தண்ணீர் இல்லாமல் எங்கள் ஊர் வழியாக எப்படி செல்ல முடியும் என்ற கோரிக்கையை வைக்கிறார்கள். எனவே, அந்த விடுபட்ட கிராமங்களைச் சேர்த்துக்கொள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

அதேபோல் இன்னொரு திட்டமான மோகனூர்-பட்டணம் திட்டமானது விரைவில் செயல்பட்டால்தான் என்னுடைய தொகுதியிலுள்ள தண்ணீர் பிரச்சினை தீரும்.

பிற்பகல் 4-55

அதேபோல, இன்றைக்கு ராசிபுரம் நகரமானது மிகவும் மோசமான நிலைமையிலே இருக்கிறது. எனவே, அதை நகர சீரமைப்புத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்து அதற்கு வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தொழில்பேட்டை துவங்குவதற்காக மனுக்களெல்லாம் மாவட்ட தொழில் மையத்திலே கொடுத்து இன்னும் ஆரம்பிக்கப்படாத நிலை இருக்கிறது. அதை விரைவுபடுத்தி, விரைவிலே அந்தத் தொழிற்பேட்டையை துவங்க உதவ வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, என்னுடைய மாவட்டத்திற்கு ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் வைத்து முடித்துக் கொள்கிறேன். அங்கே ஆராய்ச்சிப் பணியை ஊக்குவிக்கின்ற வகையிலேயும்,



நிர்வாக வசதியைக் கருதியும், எங்களுடைய சேலம் மாவட்டத்திலே ஒரு பல்கலைக்கழகத்தை கட்டாயம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்காக அமைத்துத்தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரிய வாய்ப்பை நல்கிய மாண்புமிகு. பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கா. ப. பட்டாபிராமன்.

*திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஞாலம் அஞ்ச போரிட்டான் ஜூலியர் சீஸர்; விண்ணும் மண்ணும் அதிர வெற்றிகளைக் குவித்தான் நெப்போலியன்; தனது 33ஆவது வயதிலே இந்த பூகோளத்தை உலுக்கியவன் கிரேக்கத்து அலெக்ஸாண்டர்; ரத்த வெள்ளத்தில் ஜலக்கிரீடை செய்தவன் தைமூர்; வானத்து மின்னலை தன் வாள் முனையில் பிரதிபலித்தவன் அனிபால். ஆனால், இவர்களெல்லாம் பலாத்காரத்தை கையிலே கொண்டு உலகத்தை வளைக்க நினைத்தார்கள். மனித நேயம், மானிடப் பரிவு, சமூக நோக்கு என்ற குணநலன்களோடு, பேரறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டை தனது அரிச்சுவடாக்கிக் கொண்டு, புரட்சித் தலைவர் அவர்கள் காட்டிய ஆள்காட்டி விரலை கைப்பிடித்து, அரசியல் வாழ்க்கையிலே, தன்னுடைய 44ஆவது வயதிலே தமிழகத்தை தன் கைக்குள் அடக்கி ஒரு அரிய ஆட்சியினை அமைத்துத் தந்து இருக்கிறார்கள் புரட்சித் தலைவி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்தப் பொன்னான ஆட்சிக் காலத்தில்தான் எத்தனை எத்தனையோ நல்ல திட்டங்கள் எல்லாம் நாட்டிலே இன்றைய தினம் நடைமுறையிலே வந்திருக்கின்றன. வாடியிருந்த நெசவாளர்கள் முகங்களிலெல்லாம் ஆனந்தக் கண்ணீர் வழிகின்ற ஒரு நிலைமையைத் தமிழகத்திலே நாம் பார்க்க முடிகிறது. என்னுடைய தொகுதியான காஞ்சீபுரத்திலேதான் பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக வைத்து, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உலக நாடுகளெல்லாம் வியக்கின்ற அளவுக்கு, பட்டுச் சேலைகளும், பட்டு ஆடைகளும் நெய்து, உலகத்துச் சந்தைகளிலே காஞ்சீபுரத்தினுடைய பெருமை மட்டுமல்ல; தமிழகத்தினுடைய பெருமை மட்டுமல்ல; இந்தியாவினுடைய பெருமையே நிலைநாட்டப்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஃபிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளிலே, காஞ்சீபுரத்திலே நெய்யப்பட்ட பட்டுச் சேலைகளை தங்களுடைய இல்லங்களிலே காட்சிப் பொருளாக வைத்திருக்கிறார்கள், அதனுடைய வேலைப்பாடுகளுக்காக. காஞ்சீபுரத்திலே நெய்யப்படுகின்ற சேலைகள் எல்லாம் பெருமளவுக்கு அவைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற சரிகைகள், குஜராத்திலேயிருந்து... இங்கே

[திரு. கா.ப. பட்டாபிராமன்] [1993 ஏப்ரல் 26

கொண்டு வந்து சூரத் சரிகைகள்தான் காஞ்சீபுரத்திலே பயன் படுத்தப்படுகிறது. பட்டு நெசவுத் தொழிலே, எப்படி சிவகாசி யிலே குடிசைத் தொழில்போல தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் பட்டாசுத் தொழிற்சாலைகளும் இருக்கின்றனவோ அப்படியே சூரத்திலே சரிகைத் தொழில் என்பது குடிசைத் தொழிலாக இருக்கின்றது. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர் களுக்கு நான் மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். சூரத்திலே வாங்கப்படுகின்ற சரிகைகளுக்கு 2 விழுக்காடுகள் அங்கே சேல்ஸ் டேக்ஸ் விற்பனை வரியாகத் தருகிறார்கள். ஆனால், தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே இந்தச் சரிகைகளுக்கு 4 விழுக்காடுகள், சேல்ஸ் டேக்ஸ் இருப்பதனால் காஞ்சீபுரத்திலே இருக்கின்ற சரிகை வியாபாரிகளெல்லாம், இந்த சரிகை வியா பாரத்தை, காஞ்சீபுரத்திலே நிறுத்திவிட்டு, நேரடியாக சூரத் திற்குச் சென்று அங்கே சரிகைகளை வாங்கி 2 விழுக்காடுகள் சேல்ஸ் டேக்ஸ் கொடுத்துவிட்டு, இங்கே, காஞ்சீபுரத்திற்கு அதைத் தருவித்து அந்தச் சரிகைகளைப் பயன்படுத்துகின்ற காரணத்தினாலே இந்த 4 விழுக்காடு சேல்ஸ் டாக்ஸ் தமிழகத் திலே இருப்பதனால் பெருமளவுக்கு தமிழகத்திற்கு வரவேண்டிய விற்பனை வரி குறைந்து விடுகிறது. ஆகவே, 4 விழுக்காடு என்று இருக்கின்ற சேல்ஸ் டேக்ஸை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, இரண்டு விழுக்காடுகளாக மாற்றினால் தமிழகத்திற்கு வரவேண்டிய இந்த சேல்ஸ் டாக்ஸ், (விற்பனை வரி) எந்தவிதத்திலும் குறையாது. காஞ்சீபுரத்தைப் பொறுத்தமட்டிலே ஒரு நாளைக்கு சொசைட்டிகளுக்கு மட்டும் 800-லேயிருந்து 900 மார்க் சரிகைகள் தேவைப்படுகிறது. இது மட்டுமல்லாமல், தனியார்களுக்குத் தேவையான சரிகைகள், குறைந்தது 25 ஆயிரம் மார்க்குகள் தேவைப்படுகிறது. இப்படி, நமக்கு வரவேண்டிய சேல்ஸ் டேக்ஸ் எல்லாம் வராமல் போய் விடுகிறது.

பிற்பகல் 5—00

காஞ்சீபுரம் ஜரிகைகள் வேலையமைந்த பட்டுச் சேலைகளுக்கு மிகப் பெரிய உலகச் சந்தை இருக்கின்றது. ஆனால், நாளடை வில், வரவர அந்த சரிகைகளின் தரம் குறைந்து கொண்டு வருவ தாகப் பொதுவாகவே பேசப்படுகிறது. எனவே, அந்த ஜரிகை யினுடைய தரத்தைக் குறையாமல் இருப்பதற்கு அவர்கள் testing units என்று வைத்திருக்கிறார்கள். அந்த யூனிட்டுகளையெல்லாம் முடுக்கி விட்டு, அந்தத் தரம் குறையாமல் பார்த்துக் கொள்வதற் காக அமைச்சரவர்கள் ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன். கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது என்று சொன்னால், அவர்கள் காட்டேஜ் இண்டஸ்ட்ரீயாக— குடிசைத் தொழிலாகத்தான் இந்தக் கைத்தறியை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு மத்திய அரசு வருமான வரி யைப் போடுவதாக மிகப் பெரிய முயற்சியிலே ஈடுபட்டுக்



1993 ஏப்ரல் 26] [திரு. க. ப. பட்டாபிராமன்]

கொண்டிருக்கிறார்கள். ஒரு நெசவாளி தன்னுடைய இல்லத் திலே நல்லதானாலும், கெட்டதானாலும் கடைசியாக—அந்த வருடக் கடைசியிலே சொசைட்டியிலே அவர்கள் பெறுகின்ற போனஸை வைத்துத்தான் அவர்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்த போனஸை வருமான வரியாக மத்திய அரசு பெற நினைத்தால் நெசவாளர்களுடைய வாழ்வே மங்கி விடும்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள்கூட, 4—3—1993 அன்று புதுடெல்லியிலே நடந்த All India Handloom Ministers Conference-இல் ஒரு நிலைமையை எடுத்துச் சொல்லியிருக் கிறார்கள்.

"..I have made a representation to the Honourable Finance Minister, Government of India, through the Honourable Minister for Textiles for exemption of the Weavers Co-operative Societies in Tamil Nadu from the provisions of the income-tax, treating them as cottage industries. The local income tax authorities are pressurising the handloom co-operatives at Kanchipuram for bringing them into the network of income tax assessment. May I caution the Government of India that the entire efforts of both the Central and the State Governments in the development of handloom co-operatives over a period of 40 years should completely be ruined if they are subjected to income tax assessment..." என்று. இந்த நிலைமையை மாண்புமிகு கைத்தறி அமைச்சரவர்கள் இன்னும் சற்று ஆழமாகவும், அழுத்தமாகவும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, நெசவாளர்களுக்கு இந்த வருமான வரியிலேயிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டும்.

காஞ்சீபுரம் அண்ணா அவர்கள் பிறந்த இடம். அங்கேதான் நெசவாளர்கள், பட்டு நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற நெசவாளர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். காஞ்சீபுரம் பட்டோ அல்லது மற்ற பட்டுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற நெசவாளர்கள் தயார் செய்து வருகின்ற அந்த ஆடைகளோ, புடவைகளோ மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படாமல் இருக் கிறது. தனியார் சிலபேர் ஏற்றுமதி செய்கிறார்கள். அந்தத் தனியாரை விட்டுவிட்டு, காஞ்சீபுரம் போன்ற நல்ல பட்டுச் சேலைகளைத் தயார் செய்கின்ற நகரங்களிலே உருவாகும் பட்டுத் துணிகளையெல்லாம் மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக, அண்ணா பிறந்த காஞ்சியிலே ஒரு பட்டு நெசவாளர்கள் கூட் டுறவுச் சங்கத்தை உருவாக்கி, அதன் மூலமாகக் காஞ்சீபுரத்தி னுடைய பெருமை மட்டுமல்லாமல், தமிழகத்தினுடைய பெரு மையை இந்த நெசவுத் தொழிலின் மூலமாக வெளிநாடுகளின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகத் தனியாக ஒரு Co-operative Society for export purposed உருவாக்கி, அதை

இந்தத் தமிழகத்தினுடைய மாட்சிமை தங்கிய புரட்சித் தலைவி அவர்களுடைய பெயராலே அமைத்து அது காஞ்சிபுரத்திலே அமைய வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வெ. பழனிசாமி.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில், தாழ்ந்து கிடந்த தமிழ்ச் சமுதாயத்தைத் தலை நிமிர வைத்து தன்மான உணர்வு ஊட்டி, தமிழகத்தினுடைய அரசு இயந்திரத்தைப் பழுது படாமல் சுழற்று கிற ஆற்றல் மிக்க எனது தலைவி தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய திசை நோக்கித் தொட்டுக் கும்பிட்டு, இந்தக் கைத்தறி துணி தொழில் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவரவர் களுக்கு நன்றியைத் தெரிவித்து என் உரையைத் தொடங்குகின் றேன்.

பிற்பகல் 5–05

திருப்பூர் நகரத்தினுடைய முக்கியத் தொழிலாக இருக் கின்ற பின்னல் ஆடைத் துறை—பனியன் தொழிற்சாலை. அதைப்போல திருப்பூர் நகரத்தினுடைய முக்கியத் தொழிலாக இருக்கிற டெக்ஸ்டைல் காடா உற்பத்தியிலே திருப்பூர் இன் றைக்கு முன்னணி வகித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, ஜவுளித் துறையோடு, கைத்தறித் துறையோடு இணைந்திருக் கின்ற இந்தத் துறையின் மூலம திருப்பூர் நகரத்தினுடைய கடந்த காலத்திலே பழுதடைந்த பல்வேறு பிரச்சினைகளை இன் றைக்குப் புத்துயிர் கொடுக்கக்கூடிய அளவிற்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் வர்க்கத்திற்காக வேலைவாய்ப்பைத் தந்து, தமிழகத்தில் வாழ வைத்துக் கொண்டிருக்கிற தொழில் நகரமான திருப்பூர் நகரத்திற்கு, பழுதடைந்த ரோடுகள், குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாத சூழ்நிலைகள், தெரு அறியாத விளக்குகள், அடிப்படை வசதிகள் என்பதே எதுவுமே கண்டறியாத திருப்பூர் நகரத்தை, இன்றைக்கு ஒரு மாறுதலான சூழ்நிலையை உருவாக்கி, வருகிற ஜூன் மாதத்திலே கடந்த 10 ஆண்டுகளாக முடிவடையாமல் இருந்த இரண்டாவது குடிநீர்த் திட்டத்தைத் தருகிற வாய்ப்பை உருவாக்கித் தந்த எனது தானைத் தலைவி புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.



அதேபோல், திருப்பூர் நகரத்தில் சாயத் தண்ணீரால் 20 ஆண்டுக் காலம் மிக மோசமான சூழ்நிலை உருவாகி, நிலத்தடி நீர் பாதிக்கப்பட்டு தொழுநோய்க்கு ஆட்பட வேண்டிய ஒரு பேராபத்தான சூழ்நிலை இருந்ததை, 15 கோடி ரூபாய் செலவில், சாய நீர் சுத்திகரிப்பு தொழிற்சாலையை அடுத்த மாதத்திலே தொடங்கி, மிக விரைவாக செய்கிற பணியை உருவாக்கித் தந்த தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு என் தொகுதியின் சார்பில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், திருப்பூர் நகரத்தினுடைய பாதை நெருக்கடியை போக்குதற்காக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுடைய உத்தரவின்பேரில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சருடைய நேரடி முயற்சியில் சுமார் 5½ கோடி ரூபாய் செலவில், ரெயில்வே மேம்பாலத்தை அமைக்கிற நல்ல சூழ்நிலையை உருவாக்கித் தந்த அவர்களுக்கு என் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல், திருப்பூர் நகரத்தில், கைத்தறித் துறை மானியக் கோரிக்கையில் கடந்த ஆண்டு அடிப்படை வசதிகளை தொழிற் சாலை அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின், 'டாசிட்' மூலமாக எதிர் காலத்தில் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்படும் என்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் அறி விப்புத் தந்தார்கள். அதனுடைய அடிப்படையில் இந்த ஓராண்டு காலத்திற்கு அதற்காக திருப்பூர் டெவலப்மென்ட் கமிட்டி என்ற ஒரு கமிட்டியை அமைத்து, 246 கோடி ரூபாய்க்கு திருப்பூர் நகரத்தினுடைய மூன்றாவது குடிநீர்த் திட்டம், அதே போல் பாதாளச் சாக்கடைத் திட்டம், அதே போல் ரிங் ரோடு, ரோடுகள் பராமரிப்பு ஆகிய பணிகளுக்காக 246 கோடி ரூபாய் திட்டத்தைத் தயாரித்து, இன்றைக்கு 'டாசிட்' மூலமாக மத்திய அரசினுடைய பரிந்துரைக்காக அனுப்பி வைத்திருப்ப தாக கொள்கைக் குறிப்பில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதற் காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, மிக விரைவாக அந்தப் பணியை முடித்துத்தர நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 4–3–1993 ஆம் நாளன்று டெல்லியில் நடைபெற்ற பாரதப் பிரதமர் முன்னிலையில் நடைபெற்ற கைத்தறி மாநாட் டிலேகூட மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள், திருப்பூர் நகரத்தினுடைய அடிப்படை வசதிகளை உருவாக்கு வதற்காக அந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டினை தர வேண்டுமென்று கேட்டிருப்பதை, நான் உண்மையிலே உள்ள பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட் டிருக்கிறேன். காரணம், தொழிற்சாலைகளைப் பொறுத்த வரை, பல கோடிக் கணக்கான ரூபாய்களை செலவு செய்து, நாம் தொழிற்சாலைகளை உருவாக்கினோமானால், தொழிற்

சாலைகளுக்கு உண்டான வாய்ப்பு உருவாகிறதா என்பதை கேள்விக்குறியாக இருக்கிற இந்த நேரத்தில், இன்றைக்கு இந்தத் துறையைப் பொறுத்தவரையிலே இன்னும் பல லட்சக் கணக்கான பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கக் கூடிய ஒரு சிறப்புக்குரிய தொழிலை செய்து கொண்டிருக்கிற, பின்னலாடை தொழிலை செய்து கொண்டிருக்கிற அந்த நகரத்திற்கு, அடிப்படை வசதிகளை மேலும் செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வதோடு, இன்றைக்கு திருப்பூரைப் பொறுத்தவரையில் ஆயிரம் கோடி ரூபாயில் அன்னியச் செலவாவணியை ஈட்டித் தருகிற நகரம் மட்டுமல்ல ; இன்றைக்கு டெக்ஸ்டைல்ஸ் காடா துணியை உற்பத்திச் செய்வதில் மிக வேகமாக முன்னேறுகிற ஒரு நகரமாகவும் இருக்கிறது. அதில் சில இடர்ப்பாடுகளை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என் கடமை என்று நான் கருதுகிறேன். இன்றைக்கு, பவர் காடாவைப் பொறுத்தவரையில், திருப்பூர் நகரத்திலே நாள் ஒன்றுக்கு 1½ கோடி ரூபாய்க்கு நாம் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். வருடம் ஒன்றுக்கு 400 கோடி ரூபாய்க்கு நாம் பவர் காடாவை ஏற்றுமதி செய்கிறோம். அதிலே குறிப்பாக நம்முடைய திருப்பூரிலே 5 சதவிகிதம் தான் நமது ஏற்றுமதியை நேரடியாக செய்கிறோம். அதனுடைய மொத்தத் தொகை 60 கோடி ரூபாயை வருடம் ஒன்றுக்கு நாம் ஏற்றுமதி செய்கிறோம். ஆக, 340 கோடி ரூபாயை நாம் மகாராஷ்டிரா மாநிலத்தின் மூலமாக ஏற்றுமதி செய்கிறோம். காரணம், திருப்பூர் நகரத்தினுடைய மூலப் பொருட்களைப் போட்டு, மூலதனத்தைப் போட்டு, தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்பைப் பெருக்கி, துணியை நாம் அங்கே அனுப்பி அங்கே இருந்து ஏற்றுமதி செய்ய வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஏற்றுமதிக்குரிய 'வாய்ப்பு, திருப்பூர் நகரத்தில் இல்லாத, அந்த 'கோட்டா' நம்மிடத்தில் இல்லாத காரணத்தினால், தொடர்ந்து நாம் மகாராஷ்ட்டிரா மாநிலம் மூலமாகத் தான் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, மத்திய அரசோடு, மத்திய இலாக்காவோடு கலந்து, இந்த 'கோட்டா'வை திருப்பூருக்கே பெற்று, நேரடியாக இங்கேயிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பை உருவாக்குவோமேயானால், நாம் நாமாகவே இன்னும் அதிகமாக சுயமாக முன்னேறுகிற ஒரு நல்ல வாய்ப்பு உருவாகும். அதே போலத்தான் திருப்பூர் நகரத்தினுடைய பனியன் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில், இன்றைக்கு அங்குதான் பெரும்பாலும் செயல் பட்டுக் கொண்டிருக்கிறது என்று கருதுகிறேன். அந்தத் திருப்பூரிலே இருக்கிற முதலாளிகள், பனியன் தொழிலுக்குத் தேவையான தொழிலாளர்கள், மெசின்கள், மூலப் பொருட்களான துணிகள் இவைகளையெல்லாம் எடுத்துச் சென்று, மொரிசியா, மலேசியா, அரபு நாடுகளுக்கு எடுத்துச் சென்று அங்கேயே பேக்டரி வைத்து, தயாரித்து, அங்கேயிருந்து அனுப்புகிற சூழ்நிலை



பிற்பகல் 5–10

இன்றைக்கு உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே, வெளி நாடுகளுக்கு ஏற்றுமதியை நேரடியாக நாம் செய்கிற 'கோட்டா' தமிழகத்தைப் பொறுத்தவரை மிகக் குறைவாக இருந்து கொண் டிருக்கிறது. நாம் நேரடியாக ஏற்றுமதி செய்கிற கோட்டா முறையை அதிகரித்துக் கொடுக்கக் கூடிய சூழ்நிலையை வழங் கும்படி மத்திய அரசு உருவாக்கிக் கொடுக்குமேயானால், நாம் நேரடியாக அடுத்த நாடுகளுக்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை.

இந்த அரசைப் பொறுத்தவரை நமது இந்திய நாடும் சரி, தமிழகமும் சரி, அண்டை நாடுகளிலே இருக்கிற முதலாளிகளை அழைத்து வந்து, இங்கே தொழிற்சாலைகளைத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதற்கான முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறோம். ஆனால், நம் நாட்டிலே இருக்கிற முதலாளிகள் வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் செய்து ஏற்றுமதி செய்ய வேண்டிய சூழ்நிலை இந்தத் தொழிலைப் பொறுத்தவரை இன்றைக்கு இருந்து கொண் டிருக்கிறது. ஆகவே அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வருவது, நாமே நேரிடையாக அனைத்து நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை உருவாக்குவோமேயானால் இன்னும் பல இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கிற சூழ்நிலைமை இந்தத் தொழிலைப் பொறுத்தவரை உருவாகும் என்று கருதுகிறேன். ஆகவே, அதற்கு உண்டான முயற்சிகளை மத்திய அரசோடு கலந்து பேசி, இந்தத் துறை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, தொடர்ந்து இந்தச் சூழ்நிலையில் மாறுதல் செய்வதற்கான நிலை உரு வாக்கப்படுமேயானால், 1,000 கோடி ரூபாய்க்கு பனியன் ஏற்று மதியும், 400 கோடி ரூபாய்க்கு டெக்ஸ்டைல் 'காடா' ஏற்று மதியும் செய்கின்ற திருப்பூர் நகரம் எதிர்காலத்திலே. இன்னும் இதைவிட 3 மடங்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நல்ல வாய்ப்பை உருவாக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

ஆகவே, திருப்பூரைப் பொறுத்தவரை இன்றைக்கு பனியன் தொழில் மட்டுமல்ல, இன்றைக்குப் புதிதாக 'உல்லனையும்' தயாரிக்கின்ற வாய்ப்பு உருவாக்கப்பட்டு, அதற்கு உண்டான தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டு வருகிறது. இன்றைக்குப் பஞ்சாப் மாநிலத்தில்தான் 'உல்லன்' தொழில் பரவலாக இருக் கிறது. அந்தத் தொழிலைப் பொறுத்தவரை, திருப்பூரிலே அதிகமாக வருவதற்குண்டான வாய்ப்பு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதற்கும் நேரிடையாக ஏற்றுமதியிலே பல பிரச்சினைகள் இருக்கிற சூழ்நிலையை மாற்றி, 'உல்லனை' யும் நேரிடையாக ஏற்றுமதி செய்யக்கூடிய நல்ல வாய்ப்பை எதிர்காலத்திலே உருவாக்கித்தர வேண்டுமென்று மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்

கிறேன். ஆகவே, அ.இ.அ.தி.மு.க., இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் அரசுக்கு வந்ததற்குப் பிறகுதான் திருப்பூர் நகரத்தினுடைய தொழிலைப் பொறுத்தவரை நீங்கள் சிறப்பான முறையில், வேகமான முறையில் வளர்ச்சி பெறுவதற்கு உண்டான அடிப்படை வசதிகளை மிகச் சிறப்பாகச் செய்துகொண்டிருக்கிறீர்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் மேலும் இதில் தீவிர கவனம் செலுத்தி வளர்ச்சி பெறக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்படுமேயானால் தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு சிறப்பான இடத்திற்கு இந்தத் தொழிலைக் கொண்டுவர முடியும்.

ஏற்றுமதியைப் பொறுத்தவரை, உலக நாடுகளுடைய ஒட்டுமொத்தத் தேவையை 2 சதவீதத்திலிருந்து 5 சதவீதத்திற்குள்தான் திருப்பூரிலிருந்து பூர்த்தி செய்யப்படுகிறது. இன்னும் தேவையான வெளிநாடுகளுடைய ஆர்டர்கள் நமக்கு அதிகம் இருக்கின்ற காரணத்தினால் இதுபோன்ற சின்னச் சின்ன சிரமங்களை நாம் தவிர்க்கப்படும் சூழ்நிலை உருவாக்கப்படுமேயானால், இன்னும் தொழிலை மென்மேலும் முன்னுக்குக் கொண்டு வருவதற்கான வாய்ப்பு உருவாகும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் நான் கடந்த கூட்டத் தொடரிலே பேசியதை மீண்டும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தத் துறையைப் பொறுத்தவரை மத்திய அரசினுடைய ஏற்றுமதிக் கொள்கையிலே ஏற்படுகிற தவறான காரணங்களினால் இந்த நசிவு உண்டாவதற்கான வாய்ப்பு, ஒரு அறிகுறி, அடிக்கடி வந்துகொண்டிருக்கிறது என்பதை இந்த அவைக்கு ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். காரணம், திரு. வி. பி. சிங் அவர்கள் பாரதப் பிரதமராக இருந்த நேரத்தில், அன்றைய துணைப் பிரதமர் திரு. தேவிலால் இருந்தபொழுது அவர் எடுத்த நடவடிக்கையினால், நாம் பஞ்சை ஏற்றுமதி செய்தோம், அதன் விளைவு தமிழகத்திலே தேவையான பஞ்சு நமக்கு இல்லாமல் போய்விட்டது. அதன் காரணமாக நூல் விலை உயர்ந்துபோய் விட்டது. அதை நாம் பலமுறை கண்டித்திருக்கிறோம். கடந்த ஆண்டு 7 இலட்சம் பேல்களை இறக்குமதி செய்திருக்கிறோம். ஆனால் நடைமுறையில் மீண்டும் மத்திய அரசு பஞ்சை ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். அதை நாம் தடுத்து நிறுத்தவில்லை என்று சொன்னால் எதிர்காலத்திலே மீண்டும் நூல் விலை உயர்ந்துவிடும். நூல்விலை அதிகமாக ஆவதன் காரணமாக உலக மார்க்கெட்டிலே போட்டி போடக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் இழந்துவிடுவோம் என்பதை இந்தத் துறைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, முடிந்தவரை நாம் இந்தத் தொழிலைக் காப்பாற்றுவதற்கு, நாம் பஞ்சை ஏற்றுமதி செய்யாத சூழ்நிலையை உருவாக்க வேண்டும். காரணம், இந்த நாட்டிலே வேலைவாய்ப்பு இல்லாமல் ஏழைத்



தொழிலாளர்களாக இருந்து கொண்டிருக்கிற நாடுகளில் இந்தியா இரண்டாவது நாடு. இந்த நாட்டிலே இருந்து மூலப் பொருளான பஞ்சை ஏற்றுமதி செய்ய வேண்டிய அவசியம் நிச்சயமாக நமக்குத் தேவையில்லை. காரணம், துணியாக, பனியனாக, உல்லனாக வாங்குகிற சூழ்நிலை வெளிநாட்டிலே இருக்கிற காரணத்தினால், நாம் வேலை வாய்ப்பைக் கொடுத்து, அந்தத் துணியை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இன்னும் அந்நியச் செலாவணி அதிகமாக வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், மத்திய அரசினுடைய தவறான நடவடிக்கையினால் மூலப் பொருளான பஞ்சை ஏற்றுமதி செய்வது என்பது கண்டிக்கத்தக்கது என்பதை நான் இந்த அவையின் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் நாம் இன்றைக்கு 'சைனா' நாட்டோடு இந்தத் தொழிலில் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறோம். சைனா நாட்டிலே ஒரு ஸ்டாண்டர்டு இருந்து கொண்டிருக்கிறது. 3 வருடம், 4 வருடத்திற்கு ஒருமுறைதான் விலை உயர்வு ஏற்படுகிறது. உலக நாடுகளிலே சைனாவோடு போட்டிப் போடுகிற நேரத்தில் நாம் சில பல காரணங்களினால் இந்த விலையேற்றத்தினால் கடுமையாகப் பாதிக்கப்படுகிறோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நீங்கள் நேரிடையாகக் கவனம் செலுத்தி, இந்தத் தமிழகத்தினுடைய முக்கியத் தொழிலான பின்னலாடைத் தொழில், காடாத் துணி போன்ற தொழில் காப்பாற்றப்பட வேண்டும் என்றால், பஞ்சு ஏற்றுமதியாகாமல் இருப்பதற்கு கவனம் செலுத்தி, மத்திய அரசைக் கண்டிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு நூல் விலையைப் பொறுத்தவரை ஒரே ஸ்டாண்டர்டாக இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை எதிர்காலத்தில் உருவாக்கினால்தான் இந்தத் தொழில் காப்பாற்றப்படும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, மீண்டும் இந்தத் தொழிலைக் பொறுத்தவரை வளர்ச்சி பெறச் செய்வதற்காக மாண்புமிகு இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்கள் கடந்த கூட்டத் தொடரிலே திருப்பூர் நகரத்தினுடைய உயர்தொழிலாக இருக்கிற தொழில் பேட்டைகளை ஜப்பான் நாட்டின் உதவியோடு திருப்பூர் நகரத்திலே உருவாக்குவதற்காகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருந்ததற்காக நான் எனது தொகுதி மக்களின் சார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் ஜப்பானுடைய நிதியுதவி பெறுவது மட்டுமல்ல, ஜப்பானுடைய நவீன இயந்திரங்களை திருப்பூர் நகரத்திற்கு வாங்கி பயன்படுத்துகின்ற நல்ல வாய்ப்பு உருவாக்கப்பட்டதன் மூலம், இந்தத் தொழில் சிறப்பான முறையிலே செயல்படுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தந்ததற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-15

அதே போல ஆதிதிராவிடர் பழங்குடியினர் நலத்துறை சார்பாக கோவை, பெரியார் மாவட்டத்தில் 200 கோடி ரூபாய் செலவில் தொழிற்பேட்டை அமைப்பது கொள்கை குறிப்பிலே

குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலேயும், பனியன், உள்ளாடை தயாரிக்கின்ற தொழிற்பேட்டையாக இருக்கின்ற காரணத்தால், கோவையிலே அமைக்கப்படுகின்ற இந்தத் தொழிற்பேட்டையை, சிறப்புமிகு திருப்பூர் நகரத்தினுடைய முதலைபாளையத்தில் தொழிற்பேட்டையை நிறுவி, அந்தப் பகுதியிலே அந்தத் தொழிற்பேட்டையைத் தரவேண்டும் என்று பேரவைத் துணைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் ஆகவே, வளர்ந்துவரும் இந்த திருப்பூர் நகரத்தினுடைய அடிப்படைத் தேவைகளையும், தொழில் வளர்ச்சிக்கும் மென்மேலும் செய்துகொண்டு, சிறப்பான முறையிலே திருப்பூர் நகரத்தினுடைய வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களையும், நடைமுறை காலத்திலும், எதிர்காலத்திலும், தருவதற்கான வாய்ப்பை உருவாக்கித்தரும், எனது இதயதெய்வம், புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றி தெரிவித்து உரையை முடித்துக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. வ. மு. சுப்பிரமணியம்.

திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கைத்தறி மற்றும் துணி நூல் துறை மானியத்திலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலேயே தெரிவித்து கொள்கிறேன். இந்தக் கைத்தறித் துறையைப் பொறுத்த மட்டில், இந்தியப் பண்பாட்டிலே ஒரு பழமையான துறையைச் சார்ந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மனிதன் தோன்றிய காலத்திலிருந்தே, மனிதன் உணவுக்காக தன்னை அர்பணித்துக் கொண்டு இருந்தக் காலத்திலே உடைக்கும் தேட வேண்டிய நிலைமையிலே, உடைக்காகவும் அவன் பாடுபட வேண்டியிருந்தது. ஆகையினால், விவசாயமும், ஆடையும், துணியும், ஒரு சம காலத்திலே தோன்றி, நாகரிகக் காலக் கட்டத்திலே தோன்றியதாக இன்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். அப்படிப்பட்ட இந்திய அமைப்பிலே, கிராம அமைப்பாகக் கொண்ட, இந்த இந்தியச் சூழ்நிலையிலே கைத்தறி மிகவும் ஒரு உச்சக்கட்டத்திலே இருந்தது. எந்த அளவுக்கு விவசாயத் துறையிலே, பெருவாரியான மக்கள் அதிலே பங்கு கொண்டார்களோ, அந்த அளவுக்கு கைத்தறித் துறையிலே,. இந்த நூல் விற்பதிலே அதிக அளவு மக்கள் அதில் ஈடுபட்டார்கள். இப்பொழுது கூட, அந்த அளவுக்குத்தான் பல இலட்சக் கணக்கான மக்கள் இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கிறார்கள். இதிலே எந்த ஒரு ஜாதி வேறுபாடும் இல்லை. எல்லா ஜாதியினரும் இருக்கிறார்கள். உயர்ந்த ஜாதியாக இருந்தாலும், தாழ்ந்த ஜாதியாக இருந்தாலும், எல்லா ஜாதியினரும் இந்தக் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருப்பது நம்முடைய தொன்மையைக் காட்டுகிறது என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்னொன்று கூட சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழில்



புரட்சி இங்கிலாந்தில் ஏற்பட்டது. அந்தப் புரட்சி ஏற்படுவதற்குக் காரணம் இந்தியாவினுடைய சூழ்நிலைதான். கிழக்கு இந்தியக் கம்பெனி இந்தியாவிலே வர்த்தகம் செய்து ஆட்சியைப் பிடித்து நிர்வாகம் பண்ணிக் கொண்டிருக்கும் போது, இங்கே உள்ள கைத்தறி தொழில் நசுங்குகின்ற அளவுக்கு, பஞ்சு உற்பத்தி எல்லாம் இங்கிலாந்து சென்றது. அங்கே தொழில் புரட்சி ஏற்பட்டதற்கு இந்தியாவினுடைய பஞ்சு உற்பத்தித்தான் காரணம் என்று சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமல்ல, அப்படி பஞ்சு வெளிநாட்டிற்கு செல்லுகின்ற நேரத்திலே, இங்குள்ள கைத்தறித் தொழில், கிராமத் தொழிலாக இருந்த அந்தப் பண்பட்டத் தொழில், தன்னிறைவு பெற்ற அந்தக் கிராமத் தொழில் நசுங்கிப் போய்விட்டது. இதை பண்டிதர் ஜவஹர்லால் நேரு சொல்லியிருக்கிறார். இங்கிலாந்து தொழில் புரட்சிக்குக் காரணம் இங்குள்ள பஞ்சைக் கொண்டு அங்கு பஞ்சாலை ஆரம்பிக்கப்பட்டதுதான். இங்கிலாந்து, ஒரு ஏகபோக ஆதிக்கமாக அல்லது ஒரு உச்சக் கட்டத்திலே வளர்ச்சியின் நாகரிகத்தின் உச்சக் கட்டத்திலே இருக்கிறது என்றால் அது இந்தியாவிலேயிருந்து சுருட்டிக் கொண்ட செல்வங்களால்தான். அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே அரசர் காலத்திலே எந்த அளவுக்கு விவசாயத் துறையிலேஅரசுக்கு வரி வசூலித்தார்களோ, அந்த அளவுக்கு துணி உற்பத்தி முறையில் அதனுடைய வசூலை பெருக்க முடியும். நம்முடைய வரலாற்றை பார்த்தால் தெரியும். கிழக்கு இந்திய கம்பெனி ஆட்சிக்கு வந்த போது கூட அந்த அளவுக்கு துணி உற்பத்தியிலே அதிகமான வரி வசூலை வசூலித்தார்கள். அதனால் தான் இங்கே துணியே முடங்கி விட்டது. அப்படிப்பட்ட ஒரு துறை இன்றும் நீடித்து தன்னுடைய உயிருக்காக போராடிக் கொண்டு இருக்கிறது. இன்னும் சொல்லப் போனால், காங்கிரஸ் இயக்கப் போராட்டக் காலத்திலே சுதேசி என்ற பொருளை, கதருக்கு அதிக ஆக்கம் கொடுத்தார்கள். அதே நேரத்திலே கைத்தறிக்கு அந்த அளவுக்குக் கொடுக்கவில்லை. சுதேசி இயக்கம் என்ற ஒரு நிலை எடுக்கும் போது, கைத்தறியை மறந்து விட்டார்கள். ஏனென்றால், கைத்தறி என்பது தென் நாட்டு கலாச்சாரமாகப் பயன்படுத்தப்பட்டது. கதர் என்பது வடநாட்டு கலாச்சாரம். குறிப்பாக காங்கிரசினுடைய கலாச்சாரமாக அது ஏற்பட்டுவிட்டது. ஆகையினால் திராவிட இயக்கங்கள் தோன்றிய பின்னால், எல்லாத் தலைவர்களும் சொல்லப் போனால், பேரறிஞர் அண்ணா கூட கைத்தறி துணிக்கு எந்த அளவுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்க வேண்டுமோ, அந்த அளவுக்கு கொடுத்தார் என்பது எல்லோருக்குமே நினைவு இருக்கும். அவர் தோளில் சுமந்து சென்று ஊர் ஊராக துணியை எல்லாம் விற்றது எல்லோருக்கும் தெரியும். அந்த அளவுக்கு இந்தத் துறை இந்த மக்களைக் காப்பாற்ற வேண்டும், வறுமைப் பிடியிலிருந்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று, பல இயக்கங்கள் நெடிய நீண்ட ஒரு போராட்டங்களை பண்ணியிருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல பேரறிஞர்

பிற்பகல் 5-20

அண்ணா அவர்களைப் பின்பற்றி புரட்சித் தலைவி அவர்களும் தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகளை என்ன செய்வது என்ற நிலையிலே, ஏழைகளுக்கு இலவசமாகக் கொடுத்தது உங்களுக்கு நினைவு இருக்கும்.

அதை நமது அரசு, புரட்சித் தலைவியினுடைய அரசு தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். சொல்லப் போனால் 60 லட்சம் ஆண்களும் பெண்களும் அந்த இலவச வேஷ்டி சேலை பொங்கலுக்காக கொடுத்ததை ஏழை மக்கள் என்றும் மறக்க மாட்டார்கள். புரட்சித் தலைவர் திட்டத்தை தொடர்ந்துஅவர் ஒரு குறிப்பிட்ட இன்ஷியேட் பண்ணிக் கொடுத்ததைக்கூட இரண்டு மடங்காக புரட்சித் தலைவி அவர்கள் எல்லா ஏழை மக்களுக்குமே கிராமப்புறத்திலே உள்ள எல்லா ஏழை மக்களுக்கும் கொடுத்தது பாராட்டுக்கு உரிய திட்டமாகும். ஆகவே, இந்த கைத்தறி துணியைப் பொறுத்த மட்டிலே இதனுடைய உற்பத்தி பாதுகாக்கப்பட வேண்டியது. இது காலம் காலமாக பிரிட்டீஷ் காலத்திலேயிருந்து நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்னும் அதனுடைய உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால் நவீன மில்கள், பல ஆலைகள் தோன்றிய காரணத்தினாலே போட்டியிட முடியவில்லை. துணியிலே சில நேரங்களிலே தேக்கம் ஏற்படுகின்றது. சொல்லப் போனால், தரமான நூல்கள் கூட கிடைக்காத சூழ்நிலை ஏற்படுகிறது. இந்த நூல் விநியோகத்திலே கூட்டுறவுத் தொழிற் சங்கங்களிலே கொடுக்கின்றது சரியாக வந்து சேருவது இல்லை என்றெல்லாம் புகார் இருப்பது பற்றி சொல்லப்படுகிறது. அது உண்மையானால் தரமான நூல்களை அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரச் செய்ய தக்க நேரத்திலே கொடுத்து அவர்கள் தறிகள் நெய்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே நிறைய திட்டங்கள் எல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஓய்வூதியத் திட்டம், இறந்து போனால், 58 வயதிற்கு முன்னாலே இறந்து விட்டால், 10 ஆண்டுகளுக்கு அவருடைய குடும்பத்திற்கு கிடைக்கின்ற திட்டம் எல்லாம் கொண்டு வந்திருக்கிறார்கள். அது பாராட்டுதலுக்குரிய திட்டம். அதே போல புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலே கைத்தறி விரிவுபடுத்துகின்ற, தொழில் கூடம் அமைக்கின்ற போது, வீடுகளையும் சேர்த்தே அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள்.

என்னுடைய தொகுதியிலே பழனூர் என்ற ஊரிலே புரட்சித் தலைவர் ஆட்சி காலத்திலே முதலிலே இருந்த, 1977-80 ஆம். ஆண்டு காலத்திலே இருந்த, நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலத்திலே, இந்தத் திட்டத்தை பழனூரிலே கொண் வந்தார்கள். அது என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, அந்



அளவுக்கு அபிவிருத்தி அடையவில்லை, அந்த அளவுக்கு முன்னேற்றம் அடையவில்லை. இன்றும் அது தனிக்கட்டிடத்தில், வாடகைக் கட்டிடத்திலேதான் இயங்கிக் கொண்டிருக்கிறதேயொழிய, அது தொழில் கூடமாக இயங்கவில்லை. தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. அது என்ன கராணம் என்று எனக்குத் தெரியவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினையை நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில் என்று ஒரு மில் தனியார் நிறுவனத்தாரால் 1965 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அந்த மில் ஆரம்பித்த காலத்திலே, அதாவது சரியான முறையிலே முறையான முறையிலே உற்பத்தி துவக்கவில்லை. காரணம் அதற்குப் பயன்படுத்தக்கூடிய இயந்திரங்கள் பழமையானது மட்டுமல்ல, பயன்படுத்தப்பட்ட இயந்திரத்தையே பயன் படுத்திய காரணத்தினால் அந்த ஆலை இயங்க முடியாமல் 1976 ஆம் ஆண்டே மூடப்பட்டது. காரணம் உற்பத்தியைக் காட்ட முடியவில்லை. போட்டிப்போட முடியவில்லை. ஆகையினால் அந்த ஆலை ஓராண்டுக் காலமாக மூடப்பட்டு தொழிலாளர்கள் பட்டினியால் வாடிச் சாகின்ற நிலையிலே கிடக்கின்ற போது புரட்சித் தலைவர் அவர்கள் அப்போது வந்து காப்பாற்றினார்கள். அந்த ஆலையைக் கூட என்.டி.சி. கூட எடுத்துக்கொள்வதற்கு பரிந்துரை பண்ணியும் என். டி. சி. ஏற்க மறுத்த காரணத்தினால், அப்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், முதல்வர் அவர்கள் தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக அதை எடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்கள் மக்களுக்கு அந்த நேரம் தொழிலாளர்களுக்கு பால் ஊற்றியது போல் ஆகும். அந்த நேரத்திலே, 1977-லே அந்த நூற்பாலையை எடுத்து இதுநாள் வரையிலே இயந்திரங்கள் இயங்கிக் கொண்டிருந்தாலும் கூட, அந்த ஆலைக்கு வந்த பழுதடைந்த இயந்திரங்களை புதுப்பிக்காத காரணத்தினால் நவீனப்படுத்தாத காரணத்தினால், இன்னும் இழப்பே ஏற்படுகின்றது. அந்த துணி நூல் கழகத்திற்கு இழப்பே இந்த மில்லால் தான் ஏற்படுகிறது. இந்த சோமசுந்தரம் சூப்பர் ஸ்பின்னிங் மில்லுடைய இழப்பு, அங்கே ஏற்படுகின்ற இழப்புத்தான் அந்த கழகத்திற்கு ஏற்படுகிறது. ஆகவே அரசும் எந்த அளவுக்கு இதை முயற்சி எடுத்து செய்தாலும் கூட, அந்த பழமையான இயந்திரத்தை மாற்றாவிட்டால் அது லாபகரமாக இயங்க முடியாது. மேலும் இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். சில நாட்களுக்கு முன்னால் கூட அந்த ஆலை மூடப்பட்டதாகவும், காரணம் பஞ்சு கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக மட்டுமல்ல, பணம் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காகவும்தான்.

நஷ்டத்திலே ஓடுகின்ற அந்த மில்லுக்கு அதை எப்படியாவது ஓட வைக்க வேண்டும் என்று அதிகாரிகள் முயற்சி செய்தும் கூட, நஷ்டத்திலே ஓடுவதால் அரசு அதிலே இன்வெஸ்ட்மெண்ட் பண்ணுவதற்கு, பஞ்சு வாங்குவதற்கு மூலதனத்தை கொடுக்க அரசு தயங்கிக் கொண்டிருக்கின்ற நிலையிலே இருக்கிறது. நாம பார்க்க வேண்டிய முக்கியமான பிரச்சினை என்னவென்றால் அதிலே உள்ள ஆயிரக்கணக்கான தொழிலளர்கள் நலனைப் பார்க்க வேண்டும். ஆகவே அந்த தொழிற்சாலையை, அந்த ஆலையை எப்படியாவது இயங்கச் செய்வதற்கு அரசு முன்வரவேண்டும். அதற்காக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதிலே முன் நின்று சிறப்புக் கவனம் செலுத்தி அந்த ஆலைத் தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் கூட நவீனப்படுத்துவதற்கு ஏதோ முட்டுக்கட்டையாக இருக்கிறது என்ற காரணம் கூட சொல்லப்படுகிறது. எனக்கு அதுபற்றி சரியாகத் தெரியவில்லை. அதன் முன்னாள் உரிமையாளர்கள் அந்த தேசியமயமாக்கப்பட்டதை, அந்த ஆலை 1987 ஆம் ஆண்டு தேசிய மயமாக்கப்பட்டது. அரசுடைமை ஆக்கப்பட்டதற்குப் பிறகு அதனுடைய உரிமையாளர் உயர்நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆகையினால் நவீனபடுத்துவதற்கு முட்டுக்கட்டையாக இருக்கிறது. நவீனப்படுத்தி விட்டால், பிறகு வழக்கு அவர்களுக்குச் சாதகமாகி விட்டால் நாம் என்ன செய்வது என்ற நிலை இருக்கிறது. (குறுக்கீடு)

பிற்பகல் 5-25

அப்படி நினைக்க வேண்டாம். ஏனென்றால் ஆலைத் தொழிலாளர்கள் அல்லல்படுகின்ற நிலையை எண்ணி அந்த நிலையை போக்க நவீனப்படுத்துகின்ற நிலையை தற்காலிகமாக ஏற்படுத்த வேண்டும். மேலும் அந்த ஆலைக்கு வேண்டிய பஞ்சுகளை வழங்குவதில் பணத் தட்டுப்பாடு இல்லாமல் அரசு ஏதாவது உதவி செய்து அந்த ஆலைகளை தொடர்ந்து நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பு தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கு. சிவசுப்பிரமணியன்

திரு. கு. சிவசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்த அவையில் கைத்தறி துணிநூல் துறையின் சார்பாக விவாதிக்கபடுகின்ற மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்ற வாய்ப்பினை அளித்தமைக்காக முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய இதயத் தெய்வம், 6 கோடி தமிழ் மக்களுடைய நிரந்தர முதல்வர்,



டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட
பிறகு, ஒட்டிய வயிறுடனும், வாழ்க்கையில் உத்தரவாதமின்றி
திரிந்த நெசவாளர்களுக்காக வீதி வீதியாக கைத்தறி துணி
விற்றார் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள். அவர்கள்
வழி வந்த இந்த அரசு நெசவாளா துயர் துடைக்க நல்ல திட்டங்
களைத் தீட்ட பாடுபட்ட நம்முடைய புரட்சித் தலைவருடைய
வாரிசான இதய தெய்வம் டாக்டர் புரட்சித தலைவி அவர்கள்
நெசவாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர வேண்டும் என்
பதற்காக தன்னுடைய சீரிய முயற்சியின் காரணமாக நெச
வாளர்களுக்கு நிரந்தர தொழில் கிடைக்க வேண்டுமென்ற மனித
நேய தலைவியாக இன்று நல்ல பல திட்டங்களைத் தீட்டி,
நாட்டிலே அறிவித்து, நாற்காலிகள் வரலாம், போகலாம், நாட்டு
மக்களைக் காப்பது தலையாய கடமை என்றுதான் எங்கள்
புரட்சித் தலைவி அல்லும் பகலும் அயராது பாடுபட்டு வரு
கிறார்கள். இந்த உழைப்பினுடைய உறுதியைக் கண்டவர்கள்,
நேர்மையைக் கண்டவர்கள், தியாகத்தைக் கண்டவர்கள் இன்
றைக்கு வெளியிலே இருந்து கொண்டே இந்த அரசைத் தாக்கிப்
பேசிக் கொண்டிருககிறார்கள். நமக்கு உறுதுணையாக இருந்து
சென்ற தேர்தலிலே வெற்றி பெற்றவர்கள் எல்லாம் இன்றைக்கு
நம்மைப் பார்த்து எள்ளி நகையாடி பேசிக் கொண்டிருக்கிறார
கள். இதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், புரட்சித்
தலைவியினுடைய திட்டங்கள், அவருடைய அயராத பணி
நாட்டு மக்களிடம் அவர் நல்லெண்ணம் பெற்றுள்ள உன்னத
நிலையையும், இன்றைக்கு தாழ்த்தப்பட்ட சமுதாய மக்களாக
இருந்தாலும் சரி, பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களாக இருந்
தாலும் சரி, மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களாக
இருந்தாலும் சரி, ஆதி திராவிட சமுதாய மக்களாக இருந்தாலும்
சரி, விவசாயப் பெருங்குடி மக்களாக இருந்தாலும் சரி, பாட்டாளி
மக்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு எல்லாம் இன்றைக்கு
துயர் துடைக்க புரட்சித் தலைவி அவர்கள் எங்கெங்கு அவர்கள்
குரல் கொடுக்கிறார்களோ அத்திசை நோக்கிச் சென்று ஓடி
அவர்களுக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஒரே
காரணத்திற்காக அவரை இன்றைக்கு ஏளனமாக பேசிக் கொண்டி
ருக்கிறார்கள். இதற்கெல்லாம் முடிவு கட்டுவதற்காகத்தான்
இன்றைக்கு பழனியும், ராணிப்பேட்டையும் நம் முன்னே இருக்
கிறது. இந்த நேரத்தில் நம்முடைய தமிழக வரலாற்றில்
வேளாண்மைக்கு எந்த அளவுக்கு முன்னுரிமை கொடுத்து இங்கே
நம்முடைய அரசும், நம்முடைய இதய தெய்வம் டாக்டர்
புரட்சித் தலைவியினுடைய அரசும் பாடுபட்டுக் கொண்டிருக்
கிறதோ அதே அளவுக்கு கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு
அளிக்கவும், தலைமுறை தலைமுறையாக பேணி பாதுகாக்கப்படும்
குடிசைத் தொழிலான கைத்தறித்தொழில் போற்றப்பட வேண்
டும் என்பதற்காக புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு
மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்
பேற்றுக் கொண்ட பிறகு இன்றைக்கு தமிழகத்திலே இது சிறோ

டும், சிறப்போடும் பொலிவு பெற்றிருக்கிறது, திகழ்கிறது என்
பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.
துணி நூல் தொழில், பஞ்சு விலை ஏற்றம், நூல் தட்டுப்பாடு,
கடந்த ஆண்டுகளில் பல இன்னல்களைத் தந்திருந்தாலும் கூட
இன்றைக்கு 18 நூற்பாலைகள் திறம்பட நெசவாளர்களுடைய
தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது. இது
ஒரு பெருமைப்படத் தக்க விஷயம் என்பதை இந்த நேரத்தில்
நான் குறிப்பிட விரும்புகிறேன்.

விசைத் தறி தொழில் பன்முகப்படுத்தப்பட்டு விசைத் தறி
தொழில் நன்கு செயல்படுத்தப்பட்டு, துணி தேவைகளை ஈடு
செய்து வருகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம்
உற்பத்தியாகும் கைத்தறி மற்றும் விசைத் தறித் துணிகளை விற்
பனை முகவர் மூலமாகவும், மாவட்ட அளவிலே நெசவாளர்
கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் விற்பனை செய்யப்பட்டு
வருகிறது. நெசவாளர் பெருங்குடி மக்களின் சமூகத் தேவை
களை பூர்த்தி செய்வதும், அவர்கள் வாழ்க்கைத் தரத்தை
மேலும் செம்மைப்படுத்தவும் இன்றைக்கு இநத அரசு நல்ல
முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. விற்பனை
மையங்களை நவீனமயமாக்க வேண்டுமென்பதற்காக ரூ. 2.50
கோடி அரசு அனுமதித்துள்ளது. இந்த அரசு கைத்தறித் துணிக
ளை நவீனமயமாக்கும் திட்டத் தின்கீழ் மூன்றில் இரண்டு பங்கு
கடனாகவும், ஒரு பகுதிமானியமாகவும் வழங்கிவருகிறது. இது
சாதா தறிகளுக்கு ரூ. 4000-மும் தாக்காடு தறிக்கு ரூ. 8,000-மும்
தறி உபகரணம் வாங்க ரூ. 2,700—ம் ஆக மொத்தம்
இதன் மூலம் தமிழகத்தில் 54,131 பயனாளிகள் பயனடைந்
துள்ளார்கள் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்பு
கிறேன்.

**பிற்பகல் 5-30**

இந்தத் துறையின் மூலமாக நெசவாளர் இறக்க
நேரிட்டால் வாரிசுக்கு ரூ. 15,000 காப்பீட்டு நிதியாக
வழங்கி வருகிறது. நெசவாளர்கள் கூலி 6 காசாக இருந்
ததை 8 காசாக உயர்த்தியும்
அரசு பங்கு அதில் 3 காசாக இருந்ததை 4 காசாக மாநில
உயர்த்தியும் இன்றைக்கு அவர்களுடைய வாழ்க்கையில்
நல்லதொரு நிலைமையை மாநில அரசு உருவாக்கியிருக்
கிறது என்பதைக் குறிப்பிட்ட விரும்புகிறேன். குடும்ப
ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உறுப்பினராக இருப்பவர்கள்
58 வயதிற்குள் இறக்க நேரிட்டால் வாரிசுக்கு பத்தாண்டு
களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 250 வீதம் குடும்ப
ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருவதை நான் வரவேற்கிறேன்.
நெசவாளர் வீட்டுவசதி மற்றும் தொழில் கூடத்தின்



திட்டத்தின் மூலமாக இன்றைக்கு மற்றுமொரு நல்வாழ்வு
திட்டத்தை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு
அறிவித்து இருக்கிறது. இது மிக மிக முக்கியத்துவம்
வாய்ந்ததாகும். ரூ. 5,000 மானியத்துடன் வீட்டுக்கு ஒரு
தறிக்கூடத்தை நமது மாநில அரசு கட்டித் தந்திருக்கிறது'
என்னுடைய தொகுதி குறிஞ்சிப்பாடியில் 140 வீடுகளில்
தறிகள் இந்த ரூ. 5,000 மானியத்தின் திட்டத்தின் கீழ்
கட்டிக் கொடுக்கப்பட்டு, அண்மையில் எங்கள் மாவட்ட
அமைச்சர் மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை
அமைச்சரும், மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சரும்
அங்கே கலந்து கொண்டு சிறப்பாகத் திறந்து வைத்தார்கள்
என்பதை இந்த நேரத்தில் மிக்க மகிழ்ச்சியோடு குறிப்பிட
விரும்புகிறேன்.

டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் 1989ல் குறிஞ்சிப்
பாடிக்கு தேர்தல் காலத்தில் வந்தபோது அங்கே நெசவா
ளர்களுக்கு தொடர்ந்து 20 சதவீதம் ரிபேட்
வழங்கப்படும் என்று பொதுக்கூட்டத்தில் அறிவித்தார்கள்.
அந்த அடிப்படையில் பார்த்தால் நெசவாளர்களுக்கு
வாய்ப்பு கிடைக்க நியாயமான கூலி கிடைப்பதற்கு
1993-94 நிதி நிலை அறிக்கையில் ரூ. 40.86 லட்சம்
நிதி ஒதுக்கியுள்ளார்கள் என்பதை அறிந்து அதை நான் வர
வேற்கிறேன். நெசவாளர் கள் தற்சமயம் கூட்டுறவுத்
துறையில் சேர்பவர்களுக்கு அரசு பல சலுகைகளைச்
செய்து தந்தாலும், அவர்களை ஒரு . ஆர்கனைஸ்டு செக்
டாரில் கொண்டுவந்து, அவர்களுக்கு ஒரு அமைப்பை
ஏற்படுத்தி நிரந்தர ஆணையம் அமைக்கலாம் என்ற
வேண்டுகோளை வைக்கிறேன். அப்படி அந்தத் திட்டத்தைப்
பரிசீலனை செய்து அமைத்தால் அரசு வழங்கும் பல
கோடி ரூபாய் உதவித் தொகையில் சில கோடி சேமிப்பாக
ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்
கிறேன். நெசவாளர்களை ஆர்கனைஸ்டு செக்டாருக்கு
கொண்டுவர தீவிர பரிசீலனை செய்யும்படி மாண்புமிகு
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நெசவா
ளர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்தாலும் விவசாய
பருவகாலங்களில் அவர்கள் விவசாயத்திலும் ஈடுபடுகிறார்
கள். அதுபோல விவசாயிகளுக்கு அலுவல் இல்லாத
சமயங்களில் நவீனமுறையில் நெசவுப்பயிற்சியை ஏற்படுத்தி
அவர்களுக்கு நெசவுப்பயிற்சி அளிக்க திட்டம் ஒன்றை
அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அதுபோல, விவசாயத் தொழிலாளர்கள் விவசாயத் தொழில்
இல்லாத காலங்களில் அவர்களுக்கும் வேலைவாய்ப்பு
கிடைக்கும். இதன்மூலம் கைத்தறிதுணி உற்பத்தி பெருகும்
என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.
நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதற்கு இங்கே

பல்வேறு நிலைகள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. என்றாலும் நெசவாளர்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது நிரந்தரமான வேலைவாய்ப்பும் நியாயமான கூலியும் கிடைக்கும் என்பதுதான். மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இன்றைக்கு விசைத்தறிகளுக்கு மின்கட்டணம் ஏற்கெனவே ரூ. 1.75 ஆக இருந்ததைக் குறைத்து ரூ. 1 ஆக ஆக்கியிருப்பதற்கு இந்த அரசுக்கு நெசவாளர்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். நெசவாளர் வங்கி வேண்டுமென்று பல்லாண்டுகாலமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் வேண்டுகோளும் ஆலோசனையும் கூறி வந்துள்ளது. இதற்கு நமது அரசு இசைவை அளித்து நெசவாளர் வங்கி அமைக்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கவுள்ளது என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டு அதற்காக புரட்சித் தலைவி அரசையும் கைத்தறி துறை அமைச்சரையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் நமது மாநிலத்தில் மட்டுமே கிடைத்து வருகிறது. இது புரட்சித்தலைவி அவர்களின் அரசின் சாசனமாக அமைந்துள்ளது. சேமிப்பு பாதுகாப்பு திட்டத்திற்கு 3 பைசாவிலிருந்து 4 பைசாவாக உயர்த்தியது எந்த தொழிலாளர்களுக்கும் கிடைக்காத சாதனை. எந்த மாநிலத்திலும் இல்லாத திட்டம் அது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். கைத்தறியைப் படிப்படியாக விசைத்தறியாக மாற்றும் திட்டம் என்பதை மிகத் தீவிரமாக பரிந்துரை செய்யவேண்டும். விசைத்தறிகள் மிகக் கூடுதலான விலையாக உள்ளதால் ஏழை நெசவாளர்கள் கூடுதல் விலையில் விசைத்தறி வாங்கி துணி உற்பத்தியும் மார்க்கெட்டையும் செய்வது என்பது அவ்வளவு ஆரோக்கியமாக இருக்காது என்று இந்த தொழிலில் நீண்டநாள் அனுபவம் பெற்ற நெசவாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் குறிஞ்சிப்பாடி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் 7 சங்கங்கள் இயங்கிவருகின்றன. அவைகள் எல்லாம் லாபத்தில் இயங்கிவருகின்றன. 15 சதவிகிதம் இந்த ஆண்டு அவர்களுக்கு போனஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 5—35

அங்கே கொசுவலைகளும் லுங்கிகளும் தயாரிக்கப்பட்டு தேங்கி இருக்கின்றன நம்முடைய மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்தபோது இதையெல்லாம் அவர்கள் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். ஆகவே அதையெல்லாம் கருத்திற் கொண்டு செய்ய வேண்டும். எங்களுடைய குறிஞ்சிப்பாடி தொகுதியிலுள்ள லுங்கிகளையும், கொசு வலைகளையும் அவர்கள் தயாரித்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவுக்கு நல்ல தரமுள்ளவையாக



இருக்கின்றன. அந்த லுங்கிகள் எல்லாம் சிங்கபுரி டெக்ஸ் என்ற கூட்டுறவுச் சங்கத்தில் தயார் செய்யப்பட்டு தனியார் அவர்களுடைய ட்ரேட் மார்க்கைப் பொறித்து, சிங்கப்பூர் நாட்டிற்கும், மற்ற வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறார்கள். இதைக் கருத்திற்கொண்டு நம்முடைய கைத்தறி அமைச்சர் அவர்களும் நம்முடைய புரட்சித்தலைவி அரசும் சீரிய முறையில் நல்லதொரு திட்டத்தை அறிவித்து, அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிஞ்சிப்பாடியில் 140 வீடுகளைத் திறந்து வைத்த நம்முடைய அரசுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். மேலும் வள்ளலார் மாவட்டத்தை அறிவித்து வள்ளலார் சொல்லிச் சென்ற அந்த பசிப்பிணியைப்போக்குவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துவருவதை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் பகுதியில் இருக்கிற நெசவாளப் பெருங்குடி மக்கள் இன்றைக்கு இந்த அரசை வாழ்த்திக்கொண்டிருக்கிறார்கள். இந்த மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிற அத்தனை நல்ல திட்டங்களையும் வரவேற்று வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. காஞ்சி பன்னீர்செல்வம்.

*திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னை ஆளாக்கிய இதய தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இருக்கிற திசை நோக்கி என்னுடைய நன்றியை அவர் பாதங்களில் சமர்ப்பித்து, கைத்தறி துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி என் உரையைத் தொடங்குகிறேன். இதய தெய்வம் தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் தான் நலிவுற்ற கைத்தறித் துறை இன்றைக்கு பொலிவு பெற்று விளங்குவதை நான் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் நாட்டில் உள்ள அனைத்து கூட்டுறவுச் சங்கங்களையும் தனி அலுவலர்கள் தான் நிர்வகித்து வருகிறார்கள். இவர்களுக்கு உறுதுணையாக ஆலோசனைக் குழு உறுப்பினர்களை நியமித்து மேலும் சிறப்பாக நடைபெற ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெருவாரியாக கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் தொடங்கப்பட்டும், பெருவாரியான நெசவாளர்கள் தனியார் வசம் தான் இருக்கிறார்கள். அவர்கள்

அனைவரையும் கூட்டுறவில் சேர்க்கும் வகையில் மேலும் கூடுத
லாக கூட்டுறவுச் சங்கங்களை தொடங்க ஆவன செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூல
மாக உற்பத்தியாகும் பொருள்களை கோ-ஆப்டெக்ஸ் மூலம்
விற்பனை செய்வதில் தேக்கம் ஏற்படுகிறது. இதனால் நெச
வாளர்கள் மத்தியில் ஒரு சோர்வு ஏற்பட்டு, கூட்டுறவுச் சங்கங்
களிலிருந்து விலகிடும் நிலை இருக்கிறது. இதைப் போக்கிட
கூட்டுறவில் உற்பத்தியாகும் துணிகளை அரசே கொள்முதல்
செய்ய ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் பல்
வேறு நிலைகளில், பல்வேறு காரணங்களால் காலதாமதப்
படுத்தப்படுகிறது. இதை அரசு துரிதப்படுத்தி, வேகமாகச்
செயல்படுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். என்னுடைய தொகுதியில் அய்யம்பேட்டை, ஓரக்காட்
பேட்டை, மானாமதி ஆகிய இடங்களில் நெசவாளர்கள் அதிக
மாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த மூன்று
பகுதிகளிலும் அரசு வீடு கட்டுகிற திட்டத்தை செயல்படுத்தி,
நெசவாளர்களுக்கு வீடு கட்டித்தர வேண்டுமென்று பணிவுடன்
கேட்டுக் கொள்கிறேன்.

விழாக் காலங்களிலும் மற்றும் தலைவர்கள் பிறந்த நாட்
களிலும் வழங்கப்படும் தள்ளுபடி மக்களுக்கு முழுமையாகச்
சென்று சேராத வகையில், சில தனியார்கள் தங்களுடைய சுய
லாபத்திற்காக அதனை பயன்படுத்தி வருகிற நிலை உள்ளது.
இதை அரசு கண்காணித்து, இதன் முழுப் பயனும் மக்களுக்கு
சென்றடைய ஆவன செய்ய வேண்டுகிறேன்.

இப்போது கூட்டுறவுச் சங்கங்களை எப்படி சிறப்பாக
நடத்துகிறதோ, அதைப் போல விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்க
ளையும் சிறப்பாக நடத்த தொழில் நுணுக்கம் தெரிந்தவர்
களின் ஆலோசனைகளை அறிந்து அவை மேன்மையடைய ஆவன
செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டு தோறும் நலிவுற்ற ஏழைகளுக்கு வழங்கப்படும்
வேட்டி, சேலைகள் வழங்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்
றைக்கு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்
களின் அரசு நிர்ணயம் செய்திருக்கிறது. இதன் மூலம் தயாரிக்
கப்படும் துணிகளைப் பெற்று ஏழை எளியவர்களுக்கு வழங்க
லாம். அப்படிச் செய்தால் மேலும் தரமாக துணிகளை
நெய்து, ஏழை நெசவாளர்களின் வாழ்க்கைத் தரம் உயரும்
என்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி
அவர்கள் இந்தத் திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.
ஆகவே, அதை மேலும் வலிவுபடுத்தும் வகையில் விரிவுபடுத்த
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



மாண்புமிகு அரசுக்கொறடா அவர்கள் தெரிவித்ததைப் போல
கூட்டுறவுச் சங்கங்களில் குறிப்பாக காஞ்சிபுரத்தில், அதைச்
சுற்றியிருக்கிற எங்களுடைய தொகுதியில் பல்வேறு பகுதிகளில்
கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். காஞ்சி
புரத்தைப் பொறுத்த வரையில் பட்டு நெசவாளர்கள் இருக்
கிறார்கள். உத்திரமேரூரில் பட்டு நெசவாளர்கள் இருக்கிறார்
கள். தமிழ்நாட்டில் எல்லா பகுதிகளிலும், ஆரணி போன்ற
பல்வேறு இடங்களில் பட்டு — கைத்தறி நெசவாளர்கள் அதிக
மாக இருக்கிறார்கள்.

பிற்பகல் 5-40

அவர்கள் இது வரையில் ஒரு வருடம் எல்லாம் நெய்ததற்குப்
பின்னாலே ஒரு குறிப்பிட்ட 40 ஆயிரம் ரூபாய் அவர்களுக்கு
நெய்கின்ற அந்தத் தன்மை வருகின்ற நேரத்திலே, போனசாக,
பொங்கல் திருநாளில் தருகிறார்கள். அந்த போனசிற்கு இன்
றைக்கு மத்திய அரசு அவர்களுக்கு குறிப்பிட்ட வகையிலே
மட்டுமல்லாமல், அவர்கள் வரி அளிக்க வேண்டும்
என்று சொல்கிறார்கள். வரி விலக்கு அளிக்க வேண்டும்
என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் டெல்லியிலே பேசியிருக்
கிறார்கள். நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இன்
றைக்குக் கூட மத்திய அமைச்சர்கள் எல்லாம் கைத்தறி நெச
வாளர்களுக்கு நாங்கள் எந்த அளவிற்கு கைத்தறியை இலவச
மாகத் தருகிறோம் என்று வாய் அளவிலே பேசிக்கொண்டு இருக்
கிறார்களே தவிர, அதைச் செய்கை அளவிலே செய்கிறார்
களா என்று சொன்னால், இல்லை. ஆகவே, அப்பேர்ப்பட்ட
நெசவாளர்களுக்குக் கொடுக்கின்ற அந்த போனசைத் தடுக்க
வேண்டும் என்ற நோக்கத்தோடு, இன்றைக்கு மத்திய அரசு
செய்கிறது. இதை தம்முடைய இதய தெய்வத்தினுடைய
அரசு தட்டிக் கேட்டு, மேலும் இன்றைக்கு தொடர்ந்து ஒவ்
வொரு வருடத்திலே நெய்கின்ற நெசவாளர்க்கு, அந்த
போனசைத் தடுக்காமல் நிரந்தரமாகக் கொடுப்பதற்கு ஆவன
செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு
கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே நான் குறிப்பிட்டதைப் போல, தனியார் துறை
இன்றைக்கு சில இடங்களிலே பெருமையாகச் சொல்லிக்கொண்டு
இருந்தாலும், கூட்டுறவுச் சங்கங்களிலே எல்லாம் உறுப்பினர்
களாக இருக்கின்ற அவர்களுக்கு, இன்றைக்குப் போக்குவரத்துத்
துறையை எடுத்துக் கொண்டால், அதிலே பணியாற்றுபவர்
களுக்கு அவர்களுடைய குழந்தைகளுக்கு பல்வேறு வசதிகளை
செய்து கொடுத்திருக்கிறார்கள், அவர்களுக்கு என தனியாக
தொழில் கல்லூரிகள் பொறியியல் கல்லூரிகள், மருத்துவக்கல்லூரி
கள் போன்ற கல்லூரிகள் இருக்கின்றன. ஆனால், நெசவாளர்
களின் சங்கங்களின் உறுப்பினர்களாக சேர்ந்து இருக்கின்ற

அந்த உறுப்பினர்களுடைய குழந்தைகளுக்கு, இன்றைக்கு நம்முடைய இதய தெய்வத்தினுடைய அரசு அப்பேர்ப்பட்ட ஒரு நிலையை உருவாக்கி, நெசவாளர்களுக்கு என்று ஏதாவது ஒரு இடத்திலே, நெசவுக்கே பெயர் பெற்ற அண்ணா பிறந்த காஞ்சிபுரத்திலே உருவாக்கினாலும் சரி அல்லது வேறு எந்த நகரத்திலே உருவாக்கினாலும் சரி, இந்த நெசவாளர்களுக்கு அல்லது நெசவாளர்களுடைய குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்காக படிப்பதற்கு மேல் படிப்பு படிப்பதற்கு தொழில் நுட்பக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி போன்ற ஒரு கல்லூரியை, நம்முடைய இதய தெய்வத்தினுடைய அரசு உருவாக்கித் தரவேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொண்டு, எனக்கு பேசுவதற்கு வாய்ப்பு அளித்த இதய தெய்வம் அவர்களுக்கும், நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைச் சொல்லி, விடை பெற்றுக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. என். ஆர். சிவபதி.

திரு. என். ஆர். சிவபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டுக்கான கைத்தறி மற்றும் துணிநூல் மானியத்தில் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு முதலில் நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்ற பொன் மொழிக்கு ஏற்ப, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற படையினை வழிநடத்திச் செல்லுகின்ற எனது இதய தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை பாராட்டுவதற்கு வார்த்தைகள் இல்லை, வாழ்த்துவதற்கு வயதும் இல்லை. நன்றியுடன் வணங்கி மானியக் கோரிக்கையின் மீது காலத்தின் அருமை கருதி, ஒருசில கருத்துக்களைப் பேச விழைகிறேன்.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் என்று ஒரு தனி மனிதனின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படையில், இதய தெய்வம், தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த நிலையில் அடுத்த அடிப்படை வசதியான உடையின் அருமை கருதி, தமிழக மக்களுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் வேட்டி சேலைகளை வழங்கி தமிழக மக்களின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்வதில் இந்த அரசு முனைப்பாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் கடமை எனக் கருதி நினைவுகூர ஆசைப்படுகிறேன்.



அதோடு மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், பல திட்டங்களையும், செயல்களையும், கொள்கைகளையும் அறிவித்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 17 திட்டங்களும் வரவேற்கக்கூடிய ஒன்றாக இருந்தாலும், ஒருசில கருத்துக்களைமட்டும் சொல்வது நல்லது என்று நினைத்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

கூட்டுறவு நூற்பாலைகள் பெரும்பாலும் இன்றைக்கு லாபத்தில் இயங்குவதில்லை. பொதுவாக தனியார் நூற்பாலைகள் லாபத்தில் இயங்குகின்றன. ஆகவே, கூட்டுறவு நூற்பாலைகளும் லாபத்தில் இயங்குவதற்கு அரசு தனிக் கவனம் செலுத்தவேண்டுமென இந்த நல்ல நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-45

அதுமட்டுமல்ல, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் மூலம் நெசவாளர்களுக்கு கடன் வழங்கப்படுகின்றது. ஆனால் மிக அதிகமான நெசவாளர்கள் கடன் பெறும் அளவிற்கு அவர் களுக்கு தகுதி இருக்கவில்லை. ஆகவே வழங்குகிற கடன்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை சொத்து ஜாமீன் கேட்காமல் கடன் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு மட்டும் அல்லாமல் 22 ரகங்களை கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து இத்தீர்ப்பினை அமல்படுத்த தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்ற காஞ்சிபுரம், கரூர், எனது தொட்டியம் தொகுதியில் மணல்மேடு, தாத்தையங்கார் பேட்டை போன்ற இடங்களில் சென்னிமலையில் இருப்பது போன்ற நெசவாளர் காலனி அமைத்துத் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதற்கு முன்னால் ஒரு முக்கியமான கோரிக்கை வைக்க விரும்புகிறேன். ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் போக்குவரத்து துறையில் ஒரு பொறியியல் கல்லூரி அமைத்து அதில் போக்கு வரத்துத் துறையில் பணி புரிகின்ற குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் அந்த பொறியியல் கல்லூரியிலேயும், மருத்துவக் கல்லூரியிலேயும் படித்து பயன் பெறுவது போன்று - மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூட இப்படி ஒரு திட்டத்தை ஏற்படுத்தி ஒரு மருத்துவக் கல்லூரியில் உள்ளாட்சி துறையில் பணி புரிகின்ற குழந்தைகள் சேர்ந்து படிப்பதற்கான வழி வகைகளை செய்திருக்கிறார்கள். அதுபோன்று ஒவ்வொரு துறையிலும் புரட்சி செய்கின்ற நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு இந்த கைத்தறி துறையிலும் ஒரு பாலிடெக்னிக்கை அமைத்து அதில் டெக்ஸ்டைல் டெக்னாலஜி சம்பந்தமாக வகுப்பு ஒன்றினை ஆரம்பித்து அந்த வகுப்பில் நெசவாளர் குடும்பத்தில் உள்ள குழந்தைகள் படித்து பயன்பெறும் வகையில் அவர்களுக்கு

முன் உரிமை வழங்க வேண்டும் என்று இந்தநேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். கைத்தறிக்கு ஒதுக்குகின்ற ரகங்களுக்கு கொள் முதலில் கோவாப்டெக்ஸுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

புதிய ரகம் கண்டு பிடிக்கும் நெசவாளர்களுக்கு ஊக்கத்தையும் தரும்பொருட்டு அரசே அவர்களை கௌரவிக்க வேண்டும் என இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர்களுக்கு பாதுகாப்பு வழங்கி குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளையும் அவர்களுக்கு செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

கைத்தறி நெசவாளர்களுக்கு அவர்களுடைய இன்னலைப் போக்கி நெசவுத் தொழிலில் ஒளிமயமான ஒரு வாழ்வு கிடைக்க இலவச மின்சாரம் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மட்டும் அல்லாமல் எனது தொட்டியம் தொகுதியில் கிட்டத்தட்ட 20 கூட்டுறவு சங்கங்கள் இருக்கின்றன. அந்த கூட்டுறவு நெசவாள சங்கங்கள் தனி அலுவலரின் கீழ் அவருடைய அதிகாரத்தின் கீழ் தான் இயங்கி வருகின்றன. அதற்கு ஆலோசனை கமிட்டி அமைத்து அதனை ஒரு நல்ல லாபகரமான கூட்டுறவு சங்கங்களாக அமைக்க ஆவண செய்ய கேட்டுக் கொள்கிறேன். தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் ஒரு நவீன சாயத் தொழிற்சாலை அமைக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு மட்டும் அல்லாமல் தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் உள்ள நேஷனல் கூட்டுறவு சங்கத்தினை நெசவாளர் கூட்டுறவு சங்கத்துடன் இணைத்து அதை லாபகரமான ஒரு கூட்டுறவு சங்கமாக அமைக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். பெண்களுக்கு என ஒரு தனித் திட்டத்தின் மூலம் ஒரு தொழிற்கூடம் எனது தொட்டியம் ஒன்றியத்தில் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டும் அல்லாமல் கோ—ஆப்டெகஸ் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் அனைத்தையும் வழங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். நான் இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அழிந்து போகும் என்று கருதி அச்சப்பட்டு உருவாக்குவதுதான் சரணாலயம். ஆனால் அழிந்துவிட்டதோ என்று ஏக்கப் பெருமூச்சோடு எழுப்பப் படுவதுதான் நினைவாலயம். முந்தைய அரசு கைத்தறி தொழிலுக்கு ஏற்படுத்தியது நினைவாலயம். ஆனால் இன்றைய இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு இன்றைக்கு ஏற்படுத்தி இருப்பது சரணாலயம் என்று கூறி எனக்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.



பிற்பகல் 5.50

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கைத்தறி மற்றும் நெசவாலைகள் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரை. அமைச்சர் அவர்கள், எவ்வளவு நேரம் வேண்டும் ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : ஒரு மணி நேரம் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணி நேரத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் தனிப்பெரும் தலைமையை எண்ணி தவங்கிடந்த நேரத்தில், ஓராயிரம் ஆண்டுகள் தவமிருந்து பெற்றவராய் வாராது வந்து உதித்த மாமணியாய் (மேசையைத் தட்டும் ஒலி) தவித்துக் கிடந்த தமிழகத்தைக் காக்கும் தாயாய் வந்து தாங்கியவர் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆவார் (மேசையைத் தட்டும் ஒலி)

சின்ன மதி கொண்டோர், குடிலன் குணம் கொண்டோர், ஏற்றிவிட்ட ஏணியை எட்டி உதைத்தவர், நாட்டினிலே கொளுத்திப்போட்ட பூகம்ப வெடிகளெல்லாம் எங்கள் தர்மத் தாயின் கடைக்கண் பார்வையில் புஸ்வாணங்களாகின என்பதை இம் மாமன்றம் நன்கு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி)

களிமண்கோட்டைகளையெல்லாம், கற்கோட்டை ஆக்குகின்ற ஆற்றல் படைத்த சரித்திர நாயகிதான் மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆவார்கள்.

''வன்கண், குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோடு
ஐந்துடன் மாண்டது அமைச்சு''.

அஞ்சாமையும், உயர்ந்த குடிபிறப்பும், இம் மாநில மக்களைக் காக்கும் திறனும், கற்றறிந்த அறிவும், முயற்சியும் கொண்டு வள்ளுவர் ஓர் அமைச்சு எப்படி இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தை வகுத்துத் தந்தாரோ, அதன் வழி நடந்து தமிழகத்தின், 6-ம் காப்பிய இலக்கணமாகத் திகழ்கிறார் நம் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை மகிழ்ச்சியோடு இம் மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு [illegible]

"மதிநுட்பம், நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாஉள முன்நிற்பவை"

என்ற குறளைப் போல, இவர் முன் வருகிற எத்தகைய சூழ்ச்சியாக இருந்தாலும் தவிடு பொடியாகிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இம் மாமன்றம் நன்கு அறியும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆரம்பமே 2, 3 திருக்குறளில் ஆரம்பிக்கின்றீர்கள். ஆகவே ஒரு மணிநேரத்தில் முடிப்பீர்களோ என்னவோ சந்தேகமாகத்தான் இருக்கிறது.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்</u> : அத்தகைய பெருமைக்குரிய நம் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பாத மலர் தொழுது, இவ்வுரையை இம் மாமன்றத்தில் துவக்குகிறேன்.

கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் சார்பில் கொண்டு வரப்பட்ட மான்யக் கோரிக்கையின் மேல் மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்கள் அடங்கிய வெட்டுத் தீர்மானங்களை கொடுத்து இருக்கிறார்கள் ஆனால், முன் மொழிவதற்கு நேரம் இல்லையோ மனம் இல்லையோ, வரவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு சட்ட மன்ற உறுப்பினர்கள் இந்த விவாதத்தில் கலந்து கொண்டு தங்களின் மேலான கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள். இவர்களுக்கு எல்லாம் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையை பற்றி பாராட்டிப் பேசிய உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவிக்கிறேன். இத்தகைய பாராட்டுக்கள் எங்கள் துறைக்கு ஒரு புத்துணர்வை ஊட்டும் என்பதில் சந்தேகம் இல்லை. குறைகளை சுட்டிப் பேசிய, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என் பராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில், எந்த மூலையில் தவறு நடந்தாலும், அதனை உடனுக்குடன் கவனித்து, தக்க நடவடிக்கை எடுத்து இந்தக் கன்னித் தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் நடத்திச் செல்லும், மாண்புமிகு தமிழக முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசுக்கு இத்தகைய குறிப்புக்கள் பேருதவியாக இருக்கும்.

கைத்தறித்துறை ஒரு தொன்மை வாய்ந்த துறையாகும் தமிழகத்தில், விவசாயத்திற்கு அடுத்து அதிகமாக வேலை வாய்ப்பு அளிப்பது கைத்தறிதுறையே ஆகும். இத்துறை நூல் உற்பத்தி துணி உற்பத்தி, விற்பனை ஆகிய



பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. நூல் உற்பத்தி, என்பது தமிழ்நாட்டிலுள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகள் மூலமாக 4.69 இலட்சம் கதிர்களுடன் செயல்பட்டுவருகிறது. இந்த நூற்பாலைகளில் ஏறத்தாழ 12,000 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். இந்த ஆலைகளின் மூலமாக தமிழகத்தில் மாதத்திற்கு சுமார் 16,000 முதல் 18,000 பேல்கள் நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் நூல் கோ-ஆப்டெக்ஸின் மூலமாக தமிழகத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு சலுகை விலையில் வழங்கப்படுகிறது. மீதமுள்ள நூல் தமிழகத்திலும், பிற மாநில சந்தைகளிலும் விற்கப்படுகிறது. தமிழகத்தில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் 12 கூட்டுறவு நூற்பாலைகள் ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன் துவக்கப்பட்டவை. மாண்புமிகு உறுப்பினர் சிவபதி அவர்கள் பேசுகின்றபோது நூற்பாலைகள் நஷ்டத்தில் இயங்குகின்றது என்பதற்கு மூலகாரணம் துவக்கப்பட்டு இப்போது நடைபெற்று கொண்டிருக்கின்ற நூற்பாலைகள் அனைத்தும் 25 ஆண்டு காலத்திற்கு முன்துவக்கப்பட்டவைகள் ஆகும் என்றார். மீதமுள்ள நூற்பாலைகள் 1965-க்குப் பிறகு துவக்கப்பட்டவையாகும். இத்தகைய கூட்டுறவு நூற்பாலைகளில் சிட்ட நூலும் கோன் நூலும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் கைத்தறி துறையின் ஆணையில் இந்தியாவில் உள்ள அனைத்து நூற்பாலைகளும் 50 சதவீதம் சிட்ட நூலை தயாரிக்கும்படி அறிவுத்தப்பட்டது.

பிற்பகல் 5.55

ஆனால், எந்த நூற்பாலையும் சிட்டநூலை 50சதவிகிதம் உற்பத்தி செய்வதில்லை. குறிப்பாக தேசிய பஞ்சாலை கழகத்தின் கீழ் இயங்கும் நூற்பாலைகள் கூட சிட்டநூல் 50 சதவிகிதம் உற்பத்தி செய்வதில்லை. ஆனால் தாயுள்ளத்தின் தலைவியாம் நம் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி (மேசையைத் தட்டும் ஒலி) வறுமையே தங்களின் வாழ்க்கையென வாழ்ந்து கொணடிருக்கிற நெசவாளர்களின் வாட்டத்தை போக்க வேண்டும் என்பதற்காக தமிழகத்திலுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளிலும், 50 சதவிகிதம் சிட்ட நூலை தயாரித்து, சலுகை விலையில் கோ-ஆப்டெக்ஸின் மூலம் நெசவாளர்களுக்கு விநியோகம் செய்யும்படி ஆணையிட்டு உள்ளார்கள்.

இந்த கருத்தை நான் இங்கே மட்டும் சொல்லவில்லை, மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இந்தக்கருதை 4-3-1993 புது டெல்லியில் நடைபெற்ற கைத்தறித்துறை அமைச்சர்களின் மாநாட்டில் எடுத்துரைத்தேன். சிட்ட

நூல் தயாரிப்பதனால் பல்வேறு ஆலைகள் நலிவடைந்துள்ளது. அதனால், அதற்கு மத்திய அரசு நிதி உதவி தரவேண்டும் என்று மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்தேன்.

ஆனால், தாயுள்ளத்தின் தனிபெரும் தலைவி தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் (மேசையைத்தட்டும் ஒலி) தான் ஆட்சியில அமர்ந்தவுடன் தன் முதல் நிதி நிலை அறிக்கையில் நஷ்டத்தில் இயங்கும் கூட்டுறவு பஞ்சாலைகளுக்கு ரூபாய் 7 கோடி ஒதுக்கீடு செய்து தந்து, நலிவடைந்த ஆலைகளை நவீனப்படுத்த உத்திரவிட்டார். ஆனால், முந்தைய காலகட்டங்களில் வாங்கிய கடனுக்கு வட்டியும, அசலில் ஒரு பகுதியும் ஐ. டி. பி. ஐ.—க்கு செலுத்த வேண்டிய கட்டாயம் இருந்தால் அதனைச் செலுத்தி, மீதமுள்ள ரூ. 2.50 கோடியை, ஆலைகளை நவீனப்படுத்துவதற்காக திட்டம் திட்டப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கொண்டு வரும் சட்டமானாலும் சரி, கொண்டு வருகிற எந்த திட்டமானாலும் சரி, முழுமையாக நடைபெற வேண்டும் என்பதில் அக்கறையுடன் ஆட்சியை நடத்திச் செல்லும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நூற்பாலைகளை நவீனப் படுத்துவதில் முழுமை பெற வேண்டும் என்பதற்காக இரண்டாம் கட்டமாக நடப்பு நிதி யாண்டில் (1993-94) மேலும் ரூ. 7.25 கோடி வாரி வழங்கியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆலைகளை நவீனப் படுத்துவதற்காக, இது போன்ற பெரிய தொகையை தமிழக அரசில் வேறு எந்த ஆட்சியிலும் இதுவரை ஒதுக்கீடு செய்தது இல்லை என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதுவே, அவர்களின் வள்ளல் தன்மைக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, துணி உற்பத்தி, தமிழகத்தில் ஏறத்தாழ 1,462 கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் உள்ளன, அவைகளில், சுமார் 3.79 லட்சம் தறிகள் உள்ளன. இவைகளில், மிக அதிக வருவாய் ஈட்டும் பட்டு தறிகள், ஓரளவு வருவாய் தரக் கூடிய பருத்தி ரக பெட்ஷீட்டுகள், தரை விரிப்புகள், அதிக விலையுள்ள பருத்தி சேலைகள் உற்பத்தி செய்யும் தறிகள் மற்றும் குறைந்த வருவாய் ஈட்டக்கூடிய சாதாரக துணி களைத் தயாரிக்கும் தறிகளும் உள்ளன.



கடந்த காலத்தில், தமிழகத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங் களில் சுமார் 500 சங்கங்கள் மட்டுமே இலாபத்தை ஈட்டித் தந்தது. ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும், நஷ்டத்திற்கான காரணத்தை அலசி ஆராய்ந்தார்கள். அதை அறிந்த பின் கைத்தறிகளை நவீனப்படுத்த வேண்டும் என் பதற்காகவும் கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றி யும் நெசவாளர்களின் கூலியை உயர்த்தித் தந்தும், கைத்தறி துறைக்கு ஒரு மாபெரும் வளர்ச்சியினைப் பெற்றுத் தந்தார்.

இந்த சாதனையால், ஏற்கனவே 500 சங்கங்கள் மட்டுமே லாபத்தில் இயங்கி வந்த நிலைமை மாறி, இன்று 876 கூட்டுறவுச் சங்கங்கள் லாபத்தில் இயங்கி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை இப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆற்ற லுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, துணி விற்பனை: கைத்தறியில் உற்பத்தியாகும் துணிகள் தேக்கம் அடையாமல் விரைவில் விற்பனை ஆகும் வகையில்—அதே சமயத்தில் முன்னால் உறுப்பினர்கள் பலர் பேசினார்கள். அதற்கு விளக்கம் இதிலே வருகிறது— ஏற்றுமதிக்கான துணி ரகங்கள் உற்பத்தி செய்யும் வகையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தீவிர வளர்ச்சித் திட்டங்கள் ; (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னாள் உறுப்பினர் கள் யாரும் பேசவில்லை. இன்றைய உறுப்பினர்கள் பேசி யிருக்கிறார்கள். (சிரிப்பு).

பிற்பகல் 6—00

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னதாக எடுத்துரைத்த உறுப்பினர் கள் அதே சமயத்தில் ஏற்றுமதிக்கான துணி ரகங்களையும் உற்பத்தி செய்யும் வகையில், நெசவாளர் கூட்டுறவு சங் கங்கள், தீவிர வளர்ச்சித் திட்டங்கள், நெசவாளர் சேவை மையம், கோ ஆப்டெக்ஸ் மற்றும் துறையின் வடிவமைப்பு நிலையங்கள் இவற்றின் பணிகளை ஒருங்கிணைந்து, புதுப் புது ரகங்களான, விளந்தை சேலைகள், மதுரை சுங்கிடி சேலை கள், காஞ்சி காட்டன், இயற்கை கலர்களில் சாயம் தோய்க் கப்பட்ட லட அன் டை சேலை ரகங்கள் பல அரிய வண்ண வடிவமைப்புகள் பெற்று அவற்றை சங்கங்களில் உற்பத்தி செய்து துணி தேக்கமின்றி பார்த்துக் கொள்ள இத்துறை ஆவன

செய்து வருகிறது. தனியார் சேலை விற்பனை நிலையங்களை வென்றிடும் அளவிற்குச் சேலைகள் மிக அதிகமான அளவில் விற்பனையாகிறது என்பதனை மகிழ்ச்சியுடன் கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வகையில் திட்டங்கள் தீட்டுவதனால் நெசவாளர்களுக்குப் பல்வேறு ஆதாயங்கள் கிடைக்கின்றன. ஆதலால், புரட்சித் தலைவியின் ஆட்சிக் காலம் நெசவாளர்களுடைய வாழ்க்கையில் ஒரு பொற்காலமாகத் திகழ்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## கைத்தறிகளை நவீனப்படுத்துதல்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பின், 60 விழுக்காடுகளுக்கு மேல் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இலாபத்தில் செயலாற்றி வருகின்றன. இதற்கு, மூல காரணம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திட்டங்களால் அரசுக்கு என்ன ஆதாயம் என்று சிந்திக்காமல், திட்டங்களால் நெசவாளர்களுக்கு என்ன ஆதாயம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற பரந்த உள்ளத்தோடுதான் ஆட்சிப் பொறுப்பில் செயலாற்றுகிறார். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன் முதல் நிதி நிலை அறிக்கையில் 50,000 கைத்திறிகளை ரூ. 42.31 கோடி செலவில் ஐந்து ஆண்டுகளில் நவீனப்படுத்த வேண்டும் என்ற தொலை நோக்கு திட்டத்தினை உருவாக்கினார். தொலை நோக்குத் திட்டத்தின் முதல் கட்டமாக, 1991—92 ஆம் ஆண்டில் ரூ. 88 இலட்சம் ஒதுக்கீடு செய்து, அதன் மூலம் 2,169 தறிகளை நவீனப்படுத்தி இருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், 8,169 தறி உபகரணங்களும் வழங்கி உள்ளார்கள். அதே போன்று, 1992—93 ஆம் ஆண்டில ரூ. 99.50 இலட்சம் ஒதுக்கீடு செய்து, 1,535 தறிகளுக்காகவும், 5,496 தறி உப கரணங்களுக்காகவும், 1,551 நெசவாளர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்தும் நெசவாளர்கள் பயன் பெற உதவியுள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மனித நேயத்தின் தலைவியாக இருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேலும் உயர்த்த 1993—94 ஆம் ஆண்டுக்காக இத் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த ஆணையிட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இத் திட்டத்தின் மூலம் மிக அதிக அளவில் தரமான உற்பத்தியும், குறைந்த உடலுழைப்பில் நெசவாளர்களுக்கு மிக அதிகமான வருமானமும் கிடைக்கிறது என்பதனை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இது அவர் நெசவாளர்களின் மேல் வைத்திருக்கிற அன்புக்கு ஒரு மைல் கல்லாகும். (மேசையைத் தட்டும் ஒலி).

## கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றுதல் :

அரசின் திட்டங்கள் மக்களுக்கு நேரடியாக சேரவேண்டும் என்பதையே, குறிக்கோளாகக் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991-92 ஆம் ஆண்டு, நிதிநிலை அறிக்கையில் 37,500 கைத்தறிகளை 75,000 விசைத்தறிகளாக 10 ஆண்டுக் காலத்தில் மாற்றி அமைக்க வேண்டுமென்பதற்காக திட்டத்தைத் தீட்டினார். அந்தந்த மாவட்டத்திலுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு கலந்து ஆலோசித்து, நிதிநிறுவனங்களோடு கலந்து ஆலோசித்து அதற்கான நிதியினைப் பெற்ற பிறகு அந்த ஆக்கப் பணிகளில் இறங்க வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் கட்டளையிட்டார்கள். முதல்கட்டமாக, செங்கை-எம்.ஜி.ஆர்., திருச்சி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மூன்று மாவட்டங்களிலுள்ள நெசவாளர்கள் தேர்வு செய்யப்பட்டு மூன்று சங்கங்களை உருவாக்கி, ஆக்கப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று, நடப்பு ஆண்டில் மாவட்ட ஆட்சித் தலைவர்களோடு கலந்து ஆலோசித்து, 5,000 கைத்தறிகளை, 10,000 விசைத் தறிகளாக மாற்ற திட்டம் தீட்டியுள்ளோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

## நெசவாளர் தறிக்கூடங்கள்-தறிக்கூடங்களோடு இணைக்கப்பட்ட வீடுகள் :

தனி மனிதனின் பொருளாதார மேம்பாட்டிற்கு அயராது பாடுபடும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, நெசவாளர்கட்கு வீடு கொடுப்பது மட்டுமின்றி அவர்கள் உழைத்து உண்பதற்காக நெசவுக் கூடத்துடன் இணைந்த 2,000 வீடுகள் கட்டித்தர கடந்த நிதியாண்டில் திட்டமிட்டார்கள். ஆனால் மத்திய அரசு தன் பங்குத் தொகையை, நிதியினைக் குறைத்துக் கொண்டதால் 600 வீடுகள் மட்டுமே கட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. நடப்பு நிதியாண்டில் 1,500 தறிக் கூடத்துடன் இணைந்த வீடுகள் கட்டித்தர டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் (மேசை

ணியத் தட்டும் ஒலி) இத்துறைக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 6-05

கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம். மாண்புமிகு உறுப்பினர் பழனியம்மாள் அவர்கள் - ராசிபுரம் பழனியம்மாள் அவர்கள் எடுத்துக் கேட்ட கேள்விக்கு இதில் பதில் வருகிறது. தமிழக மக்களின் நெஞ்சங்களில் நீக்கமற நிறைந்துள்ள மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் கருணைப் பார்வை (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர் பெருமக்களின் சொந்த வாழ்க்கை முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டுள்ளதால் நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சேமிப்பை 12 காசுகளில் இருந்து 16 காசாக உயர்த்தியுள்ளார். இதனால் மாதத்திற்கு 500 ரூபாய் வருமானம் பெற்றுவரும் நெசவாளி 50-வது வயதில் ஓய்வு பெறுகிற நேரத்தில் அவருக்குக் கிடைக்கும் தொகை 1,68,000 ரூபாய் வரையிலும் பெறுகிற வாய்ப்புள்ளது என்பதை நான் உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்ல, இத்திட்டத்தை 1— 4— 1993 முதல் அமுல் படுத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருந்தார்கள். ஆனால், கருணை உள்ளத்தின் தலைவியாக இருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இத்திட்டத்தை 1— 4— 92 முதல் நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டுமென்று ஆணையிட்டுள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியம், இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநில அரசும் சாதிக்காத ஒரு மாபெரும் சாதனையைச் சாதித்து, நெசவாளர் குடும்பத்தின் வாழ்க்கைக்கு உத்திரவாதத்தை அளிக்க மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, 58 வயதிற்கு முன் நெசவாளி குடும்பம் இறக்க நேரிட்டால் மாதத்திற்கு 250 ரூபாய் வீதம் 10 ஆண்டு குடும்ப ஓய்வூதியத் திட்டம் வழங்க 1— 1— 1992-ல் உத்தரவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி).

இதன் பிறகு, இதுவரை 37 வாரிசுதாரர்கள் பயன் பெற்றார்கள். மேலும், இத்திட்டத்தின் விதியினை - கூட்டுறவுச் சங்க உறுப்பினர் நெசவாளர் உற்பத்தித் திறனில் 75 சதவிகிதம் பெற்றால் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெற முடியும். இதனால், அதிகமான அளவில் நெசவாளர்கள் பயன்பெற முடியவில்லை



என்பதனை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி நெசவாளர் குடும்பத்தின் நலனை மனத்தில் வைத்து, அவர்களின் உற்பத்தித் திறனில் 50 சதவிகிதம் பெற்றால், இப்பயனைப் பெற வாய்ப்பு உள்ளதா (மேசையைத் தட்டும் ஒலி) என்று ஆராய புரட்சித் தலைவி கட்டளையிட்டார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.— இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இதுவே புரட்சித் தலைவி அவர்களின் மனித நேயத்திற்கு ஒரு எடுத்துக் காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி).

இலவச வேட்டி, சேலை திட்டம். உணவு தரும் விவசாயி, உடை தரும் நெசவாளி இவ்விருவருக்கும் தன் இரு கண்கள் எனப் போற்றும் தர்ம தேவதையாம் நம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நிலமற்ற ஏழை விவசாயப் பெருமக்களுக்குத் தமிழர் திருநாளாம் பொங்கல் அன்று ஒருவருக்கு அல்ல, ஓராயிரம் பேருக்கு அல்ல, 1 கோடியே 20 இலட்சம் பேருக்கு ரூ. 45.00 கோடி செலவில் இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தை அறிவித்து உள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

நடப்பு நிதியாண்டில், 45.00 கோடி ஒதுக்கீடு செய்து, அடுத்த ஆண்டிற்கான இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தைப் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மொத்த அளவையும் உற்பத்தி செய்யும்படி ஆணையிட்டு உள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் விவசாயிகளுக்குத் தங்களுடைய மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஆடை தந்த புரட்சித் தலைவி, நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கிடைப்பதற்கும் வழிவகை செய்திருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தீட்டப்படும் திட்டம் ஒன்றாக இருந்தாலும், அதனால் நெசவாளி, விவசாயி என இரு சாராரும் பயன்பெறும் வழிவகையில் இருவருக்கும் பயன் தந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 6-10

விற்பனை மேம்பாட்டுத் திட்டம். கோ-ஆப்டெக்ஸ் மற்றும் பிரதம நெசவாளர் சங்கங்களின் விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டம் மத்திய அரசின் 50 சதவிகிதம், மாநில அரசு 50 சதவிகிதம் ஒதுக்கப்பட்டது. ஆனால், மத்திய அரசு மானியத் தொகை மொத்தத் தொகையில் 75 விழுக்காடுகள் மட்டுமே தள்ளுபடி மானியம் ஒதுக்கப்பட வேண்டும் என்றும், மீதமுள்ள

25 விழுக்காடுகள் வளர்ச்சித் திட்டத்திற்குப் பயன்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளது. இத்தகைய தள்ளுபடிக்கென்று தனியே மானியத் தொகை குறைப்பினால், கைத்தறியை மட்டுமே நம்பி இருக்கிற சிறிய நெசவாளர் சங்கங்கள் அவை களை நம்பி வாழ்கிற நெசவாளர்கள் பொருளாதார நிலையில் சீர்குலைவார்கள் என்பதை உணர்ந்த கருணைக் கடலான ஏழைகளின் இதயங்களில் எல்லாம் நீக்கமற நிறைந்துள்ள புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி). கைத்தறித் துணி விற்பனை எந்த விதத்திலும், பாதிக்காத வண்ணம் மத்திய அரசு எந்த அளவிற்கு தந்தபோதும், அந்த அளவிற்கு ஈடாகவும், அதற்கு மேலும் 1992-93 ஆம் ஆண்டு 40.86 கோடி ரூபாய் செலவிட்டு, நெசவாளர்களின் குடும் பத்தைக் காத்த பெருமை, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, 1993-94 ஆம் ஆண்டிற்கு ரூ. 40.86 கோடி ஒதுக்கி நெசவாளர்களின் எதிர் காலம் இருட்டாகாமல், அவர்களின் வாழ்வில் ஒளி விளக்காய், புரட்சித் தலைவி அவர்கள், வாழ வழிவகை செய்துள்ளார்கள் என்பதை இம்மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன் (மேசையைத் தட்டும் ஒலி).

எம்மதமும் சம்மதம் என்ற அடிப்படையில், சமத்துவம், சகோதரத்துவம், ஈகை, இரக்கம் ஆகியவற்றைக் கடைபிடித்துச் செயல்பட்டு வருபவர், நமது இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், திருக்குரானில் சுட்டிக்காட்டிய வகையில் வணக்கத்திற்குரியவன் ஆண்டவன் ஒருவன்தான் என்று அஞ்சா மல் நடைபோட்ட அண்ணல் நபிகள் பெருமகனார் சல்லல்லாகு வலேகு வஸல்லம் அவர்களின் பாதையில் இறை நம்பிக்கையோடு அனைத்து மதங்களையும் மதித்தும், இஸ்லாமிய பெருமக்கள் தங்களின் புனித மாதமான ரமலான் மாத நோன்பினைநோம்பிய பிறகு, புத்தாடை உடுத்தி மகிழ்ச்சியோடு ரம்ஸானைக் கொண்டாட வேண்டும் என்பதற்காக, ஒரே நிதியாண்டில் இருமுறை தள்ளுபடி மானியத் தொகை வழங்கி, அவர்கள் இஸ்லாமிய நண்பர்களிடத்திலே வைத்திருக்கிற ஒரு பற்றினை எடுத்துக்காட்டி உள்ளார்கள் என்பதனை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். ஒருநாள், இரண்டு நாள் அல்ல ; 10 நாள், ஒரு நிதியாண்டில் 10 நாள் தள்ளுபடித் தொகையாக சலுகை வழங்கியிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தங் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் சொந்தமாக விற்பனை வளாகம் இல்லாமல், இன்றையதினம் தனியாரோடு போட்டிப்போட முடியாமல், அவர்கள் பல்வேறு இக்கல்களுக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். எனக்குமுன்



பேசிய மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. காஞ்சி பன்னீர்செல்வம் அவர்களே சொன்னார்கள். அதேபோன்று மாண்புமிகு கொறடா திரு. பட்டாபிராமன் அவர்கள் கூட கோடிட்டுக் காட்டினார்கள். காஞ்சிபுரத்திலே இருக்கிற பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதற்கான வசதிகள் இல்லை யென்று. நான் அவர்களுக்கு மிகத் தெளிவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கடந்த நிதியாண்டில் அறிவித்த 6 கோடி ரூபாய் செலவில் பட்டு விற்பனை வளாகத்தை, மிக நல்ல வசதிகளோடு கட்டுவதற்காக காஞ்சிபுரம் திருக்கச்சி நம்பி தெருவில், நிலம் கைவசப்படுத்தப்பட உள்ளது. அந்த இடத்தில், அடுத்த ஆண்டுக்குள்ளாக அதன் திறப்பு விழா நடைபெறும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசை யைத் தட்டும ஒலி).

அதேபோன்று, பருத்திக்காக ஈரோட்டில் 3 கோடி ரூபாய் செலவில் ஒரு வளாகத்தை உருவாக்க இருக்கிறோம் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

எனக்குமுன் பேசிய பலர் கைத்தறி கூட்டுறவுச் சங்கங்கள் நலிவடைந்து இருக்கின்றன ; நிதிக் குறைவு காரணமாக என்று சொன்னார்கள். அவர்களுக்கெல்லாம் நான் மிகத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மிக விரைவில், தாயுள்ளத் தின் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள், நெச வாளர்களுடைய வாட்டத்தைப் போக்க வேண்டும் என்பதற் காகத்தான், நெசவாளர்களுக்கு ஒரு வங்கியை உருவாக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார்கள். அதற்கான ஆக்கப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு வங்கி, நெசவாளர்களுக்கு உருவாக்க வேண்டுமென்றால், 'நாபார்டு' அனுமதி பெறவேண்டும் ; ரிசர்வ் வங்கியிடத்தில் அனுமதி பெறவேண்டும். எனவே, இதற்கான செயற்குறிப்பு களை அரசு பரிசீலித்து வருகிறது ; மிக விரைவில் வங்கி திறந்த வுடன் இந்தத் தமிழகத்தில் இருக்கிற நெசவாளர்களுடைய வறுமை போக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு இந்த மாமன் றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

முன்மாதிரி கைத்தறி கிராமம் - கடந்த ஆண்டு, முன்மாதிரி கிராமம், செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் விளாகம் என்கிற இடத்தில் அமைக்கப்பட்டது. இந்த ஆண்டு, 3 இடங்களில் அதாவது 1993-94 ஆம் ஆண்டில், பெரியார் மாவட்டம கருக்குப் பாளையத்திலும், சம்புரவாயர் மாவட்டத்தில் அம்மாவ பாளையத்திலும், சேலம் மாவட்டத்தில் இடங்கண சாலையிலும் ஆக, 3 இடங்களில் முன்மாதிரி கிராமங்களை உருவாக்க இருக் கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. இ. மதுசூதனன்] [1993 ஏப்ரல் 26

பிற்பகல் 6-15

காஞ்சிபுரத்திலே இருக்கிற பட்டு சொசைட்டிகளுக்கு எல்லாம் மத்திய அரசால் பல்வேறு தொல்லைகள் ஏற்படுகின்றன என்று எனக்கு முன் பேசியவர்கள் எல்லாம் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். இதை ஆராய்ந்த தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிற எங்களை அழைத்து, மத்திய அரசுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்று கட்டளையிட்டார்கள். அதற்கு இணங்கத்தான் 4—3—1993—ல் நடைபெற்ற கைத்தறித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் மிகத் தெளிவாகச் சொன்னேன்.

'Recently I have made a representation to the Honourable Minister for Finance, Government of India, through the Honourable Minister for Textiles for exemption of the Weavers' Co-operative Societies in Tamil Nadu from the provisions of income-tax treating them as cottage industries. The local income-tax authorities are pressurising the handloom co-operatives at Kanchipuram for bringing them into the network of the income-tax assessment. May, I, caution the Government of India that the entire efforts of both the State and Central Governments in the development of Handloom Co-operative Societies over a period of 40 years would completely be ruined if they are subjected to income tax assessment'

இன்கம்டாக்ஸ்' என்பதை நீங்கள் கொண்டு வருவீர்பட்டு யானால், ஒட்டுமொத்தமாக அங்கிருக்கிற கமல நெசவாளர்களுடைய வாட்டத்தைப் போக்குவதற்காக, தாய் உள்ளத்தின் தலைவியாக இருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு திட்டங்களை உருவாக்குகிறார். உருவாக்கியதனால் காஞ்சிபுரத்திலே இருக்கின்ற 29 சொசைட்டிகளிலே 14 சொசைட்டிகள் மட்டுமே இலாபத்தில் இயங்குகின்றன. மீதம் உள்ள சொசைட்டிகள் எல்லாம் நட்டத்தில் இயங்குகின்றன. ஆனால் இலாபத்தில் இயங்குகிற சொசைட்டிகளிடத்தில் இன்கம்டாக்ஸ் தரவேண்டும் என்று, அந்த சாதாரண நெசவாளி, incometax assessee என்று அவர்களிடத்தில் வற்புறுத்துவதனால் அது ஒரு Cottage Industry அவர்களுடைய குடிசைத் தொழிலாகும். குடிசைத் தொழிலான அந்தத் தொழிலுக்கு இன்கம்டாக்ஸ் வசூலிக்க வேண்டுமென்று மத்திய அரசு வற்புறுத்துகிறது என்பதைக் கோடிட்டுக் காட்டினோம். 17-ஆம் தேதி கோடிட்டுக் காட்டியதன் பேரில் 17—4—1993 அன்று Member Board of Direct Taxes, Government of India, Dr. Sivasamy அவர்களே இங்கு வந்து பார்த்து, கைத்தறித் துறை அதிகாரிகளோடு மற்றும் நெசவாளிகளோடு கலந்து பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறது. அவர்



1993 ஏப்ரல் 26] [திரு. இ. மதுசூதனன்]

களுக்கு ஓரளவாவது மனசாட்சி இருக்கும் என்று கருதுகிறேன். இந்த நெசவாளர்களுடைய வாட்டத்தைப் போக்குவதற்கு, வருமானவரி கொண்டுவர மாட்டார்கள் என்று நான் கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பட்டாபிராமன் அவர்கள் பேசுகின்றபோது ஒரு கருத்தைச் சொன்னார்கள். தரமுள்ள ஜரிகை கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். தமிழ்நாடு ஜரிகை. இன்றையதினம் பேரறிஞர் அண்ணா அவர்கள் அவதரித்த காஞ்சியில் துவங்கப்பட்ட இவ்வாலை நெசவாளர்களுக்குத் தேவையான ஜரிகை உற்பத்தி செய்து பட்டு மற்றும் பருத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் ஜரிகையை அளித்து வருகிறது. கடந்த ஆண்டு 20,770 மார்க் ஜரிகையை உற்பத்தி செய்தது. அதில் 20,584 மார்க்கை ரூ. 505.30 இலட்சத்திற்கு விற்றது. அதில் கிடைத்த இலாபம் ரூ. 1,04 இலட்சம். கடந்த ஆண்டு 10 சதவீதம் உற்பத்தி செய்தது. இந்த ஆண்டு 15 சதவீதம் உற்பத்தி செய்தது. அதற்குமேல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காக முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம். தவறுகளைச் சுட்டிக்காட்டுகிறீர்கள். மேலும், சரியாகச் சுட்டிக்காட்டினால் சரிசெய்யப்படும். இன்றைக்கு ஏஜெண்டுகள் மூலமாக சூரத்தில் நேரிடையாகத் தர மறுக்கிறார்கள். நம்முடைய கைத்தறித் துறை இயக்குநர் நேரிடையாக அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறார். அவர்கள் தர மறுக்கிறார்கள். சூரத்திலே இருக்கின்றவர் ஜரிகை வியாபாரிகள் எல்லாம் இதை ஒரு ''காட்டேஜ் இண்டஸ்ட்ரி'' போலச் செய்கிறார்கள். அவர்கள் நேரிடையாக வந்தும் இங்கே தர மறுக்கிறார்கள். அவர்கள் நேரே இங்கே வந்து தர ஆரம்பித்தால் நமக்குப் போடப்படும் இன்கம்டாக்ஸ் போன்று அவர்களுக்கும் வந்துவிடும் என்பதற்காகவே, சூரத்தில் இருப்பவர்கள் நேரிடையாகத் தருவதற்கு மறுக்கிறார்கள். ஆனால், அதிலே இருக்கிற தவறுகள் எந்த எந்த ஏஜெண்டுகள் தவறாகத் தருகிறார்கள் என்பதை இன்றைக்குக் கலந்து ஆலோசித்து அதற்கு நல்ல முடிவை மிக விரைவிலே எடுப்போம். புரட்சித் தலைவி அவர்களைக் கலந்து, ஆலோசித்து ஏஜெண்டுகளை ஒழிப்பதற்கு என்ன வழி அல்லது இதை மாற்றி ஏதாவது அரசு தரப்பிலே ஏஜெண்டுக்களை நியமிக்கலாமா என்பதற்காக அலசி ஆராயப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பட்டாபிராமன் அவர்களுக்கும், திரு. காஞ்சி பன்னீர்செல்வம் அவர்களுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பிற்பகல் 6-20

தமிழ்நாடு துணி நூல் கழகம், கோயம்புத்தூர்.

தமிழ்நாடு துணி நூல் கழகம் நலிவடைந்த நூற்பாலைகளை நடத்துகிறது. மாண்புமிகு உறுப்பினர் வி. எம். சுப்பிரமணியம் எடுத்து ஒன்றைச் சொன்னார்கள். சோமசுந்தரம் கூப்பர்

மில்லை ஏற்றுக் கொள்ள வேண்டும். இது நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பொழுது தொழிலாளர் நலனைக் கருதிதான், இந்தச் சோம சுந்தரம் சூப்பர் மில்லை நடத்துவதனால்தான், தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் கழகத்திற்கு நஷ்டமே ஏற்படுகிறது. ஆனால், 1992—93ஆம் ஆண்டு இந்தக் கழகம் 22 கோடி ரூபாய்க்கு காடா துணி விற்பனை செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோ-ஆப்டெக்ஸ். கைத்தறித் துணி விற்பனைப் பிரிவு கோ-ஆப்டெக்ஸ். துணி விற்பனை கடந்த ஆண்டு கோ-ஆப்டெக்ஸின் மூலமாக 172 கோடி ரூபாய் விற்பனை நடந்தது. 1991—92-ல் 172 கோடி ரூபாய் மட்டுமே விற்பனை செய்தது. இந்த ஆண்டு அதற்கு மேல் 21 கோடி ரூபாய் அதிகமாக 193 கோடி விற்பனை செய்து ஒரு மாபெரும் சாதனை செய்திருக்கிறது என்பதை தங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே போன்று கடந்த ஆண்டு 34 கோடி மட்டுமே பொங்கல் விற்பனையாக நடத்திய கோ-ஆப்டெக்ஸ் இந்த ஆண்டு 55 கோடி விற்பனை செய்து, 21 கோடி ரூபாய் அதிகமாக செய்து ஒரு சாதனை படைத்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). இதுவே புரட்சித் தலைவி தொட்டது துலங்கும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். (மேசையைத் தட்டும் ஒலி) கோ-ஆப்டெக்ஸ் 1992—93ஆம் ஆண்டில் 40 கோடி ரூபாய் பட்டு விற்பனை செய்து மாபெரும் சாதனை செய்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அன்னை சந்தியா கூட்டுறவு நூற்பாலை—அன்னை சந்தியா கூட்டுறவு நூற்பாலை முதன் முதலில் அறிவிக்கப்பட்ட ஒன்றாகும். அதற்கான நிலத்தை கையகப்படுத்தியிருக்கிறோம். இரண்டாம் கட்ட வேலையாக தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகத்தின் வாயிலாக நிதி உதவி பெறுவதற்காக நானே நேரிடையாக டெல்லிக்கு சென்று மத்திய அமைச்சரோடு பேசி மிக விரைவில் போர்க்கால நடவடிக்கை எடுத்து, இந்த ஆலை துவக்கப்படும் என்று மகிழ்ச்சிகரமானச் செய்தியைத்தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

குறிஞ்சிப்பாடியைப் பற்றி சட்டமன்ற உறுப்பினர் திரு. சிவசுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். குறிஞ்சிப்பாடியில் 29 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அதில் 10,177 நெசவாளர்கள் ஒரு ஆண்டுக்கு 5.86 கோடி மதிப்புள்ள லுங்கிகளை உற்பத்தி செய்கிறார்கள். லுங்கிகள் மட்டுமல்ல



சர்டிங் கிளாத்துகள், ஹாண்ட்லூம் லுங்கிகள் எல்லாம் உற்பத்தி செய்கிறார்கள். தரமுள்ள லுங்கிகளை அந்தப் பகுதியில் உற்பத்தி செய்கிறார்கள். அந்த உற்பத்தி செய்கிற லுங்கிகள் தனியாரால் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. தனியார் ஏற்றுமதி செய்தாலும், நெசவாளர்கள் இலாபமடைந்து ஈட்டுகிறார்கள். அங்கிருந்த நெசவாளர்களுக்கு 30 ரூபாய் தான் கூலி கிடைத்துக்கொண்டிருக்கிறது. தீவிர கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 32 இலட்சம் ரூபாய் நமக்கு நட்டம் ஏற்படுகிறது. நட்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை, ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் ஒரு நாளைக்கு 30 ரூபாய் மட்டுமே கூலி வாங்கிக்கொண்டிருக்கிற நெசவாளர்கள் இன்றைக்கு ஒரு நாளைக்கு 40 ரூபாய் வரையிலும் கூலி பெறுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதே போன்று, குடியாத்தம். குடியாத்தத்தில் 23 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அதில் 9,068 கைத்தறி நெசவாளர்கள், இருக்கிறார்கள். இவர்களுக்காக பல்வேறு சலுகைகள், குறைந்த விலையில் நூலைத் தருகிறோம். தரமான லுங்கிகளை குடியாத்தம் பகுதியில் தயாரிக்கிறார்கள். குடியாத்தத்தைப் பற்றி அடிக்கடி இங்கே காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. தண்டாயுதபாணி கேட்பார். ஆனால், அவர் இல்லை. அவர் இன்று மானியத்திலே நான் பேசுகிறேன் என்று சொன்னார். நான் கூட எதிர்பார்த்தேன் அவர் வருவார் ஏதாவது அறிவிக்கலாம் என்று. ஏறத்தாழ 9,068 கைத்தறி நெசவாளர்கள் அங்கே இருக்கிறார்கள். 9,068 கைத்தறி நெசவாளர்கள் சங்கத்தின் அங்கத்தினர்கள். ஒரு நெசவாளி என்றால் குடும்பத்தோடு பணியாற்றுகிறார். குறைந்தது அந்தக் குடும்பத்தில் 4 பேராவது அந்த நெசவுத் தொழிலில் பாவு தோய்தல் மற்ற பணிகளில் ஈடுபட்டு, 4 பேராவது பணியாற்றி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் 36 பேருடைய அனுதாபத்தை இழந்துவிட்டார். அவர் இங்கே உட்கார்ந்து, அதைப்பற்றி பேசியிருந்தால் சாலச்சிறந்ததாக இருக்கும். நல்ல கருத்துகளை சொல்லியிருக்கலாம் என்னவோ வரவில்லை அவர். வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார் என்று கருதுகிறேன், ஆனால் வரவில்லை. அது முக்கியமானப் பகுதி. கைத்தறித் துறையின் சார்பில் மிக விரைவில் கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்வதற்காக கடந்த நிதியாண்டில் நமது ஒப்பற்ற தலைவி, புரட்சித் தலைவி அவர்கள் ஒரு ஆணையை பிறப்பித்தார்கள், ஒரு எக்ஸ்போர்ட் செல்லை உருவாக்க வேண்டுமென்று.

பிற்பகல் 6-25

மிக விரைவில் கைத்தறி துறையின் சார்பில் இயக்குநர் அலுவலகத்தில் ஒரு எக்ஸ்போர்ட் செல் உருவாக்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்குப்

[திரு. இ. மதுசூதனன்] [1993 ஏப்ரல் 26

பிறகு தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துஏற்றுமதிகளும் கைத்தறி
துறையின் சார்பிலே செய்யப்படும் என்பதை நான் மகிழ்ச்சி
யோடு உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. அதே போன்று ஒரு புறத்தில் கோ-ஆப்
டெக்ஸ் மூலமாகவும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. கோ-ஆப்
டெக்ஸ் மூலமாக தனிப்பட்ட முறையில் ஒரு ஏற்றுமதி மையம்
இருக்கிறது. அதன் மூலமாக அவர்களும் ஐந்தாண்டுத் திட்டம்
ஒன்றை உருவாக்கி, ஐந்தாண்டுகளில் 12 கோடி ரூபாய் மதிப்
பிற்கு ஏற்றுமதி செய்வதற்காக ஒரு புறத்தில் கோ-ஆப்டெக்ஸ்
முயற்சி செய்துகொண்டிருக்கிறது. இப்போது மிக விரைவில்
நெசவாளர்கள் வாட்டம் போக்கப்படும். அதற்குத்தான் நெச
வாளர்களுக்கு தமிழக முதல்வர் புரட்சித் தலைவியினுடைய
ஆட்சிக் காலம் பொற்காலம் என்று சொன்னேன. (மேசையைத்
தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு முன்
பல்வேறு உறுப்பினர்கள் தமிழகம் என்றாலே பட்டு என்று மிகச்
சிறப்பாக எடுத்து உரைத்தார்கள். இன்றையதினம் பட்டு
ஊக்குவிக்கப்படுகிறது. பட்டுத் தொழில் மாண்புமிகு இதய
தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் பெயரில் புதிய நெச
வாளர் பட்டு கூட்டுறவுச் சங்கம் ஒன்றை அமைத்திருக்கிறோம்.
நெசவாளர்களின் சிறப்பிற்கும், வளமான வாழ்க்கைக்கும் வித்
திட்டவர் நம்முடைய ஒப்பற்ற தலைவி புரட்சித் தலைவி
ஆவார்கள். அவர்கள் அண்ணாவினுடைய லட்சியங்களை வழி
நடத்த வேண்டும் என்பதற்காக அண்ணா எப்படி தாயுள்ளத்
தோடு இருப்பார்களோ, அப்படி அந்த தாயுள்ளத்தோடு பாசத்
தோடு இன்றையதினம் தொண்டர்களை மட்டுமல்லாமல்
மக்களையும் கைத்தறி நெசவாளர்களையும் கருணையோடு
பார்க்கின்ற நமது கருணைக்கடலாக இருக்கின்ற புரட்சித்
தலைவியின் பெயரில் அண்ணா பிறந்த மண்ணான காஞ்சியில்
இந்த சங்கம் துவக்க இருக்கிறது என்பதைத் தங்களுக்கு மகிழ்ச்சி
யோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இச்சங்கத்தின் பெரும்பான்மையானவர்கள் பெண்களாகவே
இருப்பார்கள். இச்சங்கத்தில் தயாரிக்கப்படுகிற பட்டு தரமான
பட்டாகவும் இருக்கும். வெறும் ஏற்றுமதிக்காகவே பயன்படுத்
தப்படும் என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியாகவே தெரிவித்துக்
கொள்கிறேன். (குறுக்கீடு) சென்ட் பெர்சென்ட் எக்ஸ்போர்ட்
தான்.

கூட்டுறவு நூற்பாலைகளில் இருக்கின்ற அதிகாரிகளுக்கு
வீடு, கூட்டுறவு நூற்பாலைகளில் , ஆலைகளில் இருக்கின்ற
எம்.டி., மேனேஜர் மற்றும் சூப்பர்வைசர் ஸ்டாப் போன்றவர்



1993 ஏப்ரல் 26] [திரு. இ. மதுசூதனன்]

களுக்கு உள்ள பிரச்சினைகளைத் தீர்க்கவும், ஆலைகளில் ஏற்
படுகின்ற குறைபாடுகளை தீர்க்கவும் ஹட்கோ நிதி உதவியுடன்
அவர்களுக்கு குடியிருப்பு வசதிகளை செய்து தரவேண்டும்
என்று நம்முடைய தாயுள்ளத்தின் தலைவியாக இருக்கிற, மனித
இனத்தின் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி
அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

நெசவாளர்களுக்கு அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்
யும் நம்முடைய கருணைக் கடலான புரட்சித் தலைவி, நெசவ
வாளர்கள் குடியிருக்கின்ற பகுதிகளில் 64 குழாய்க் கிணறுகளை
ரூ. 24.40 இலட்சத்தில் உருவாக்க இருக்கிறார்கள் என்பதை
நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

காற்றாலை மூலம் மின்சார உற்பத்தி செய்தல். எல்லா
துறைகளிலுமே முன்னேற்றத்தைக் காணும் நம் ஒப்பற்றத்
தலைவி, புரட்சித் தலைவி தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழக நிதி
உதவியுடன் கன்னியாகுமரியில் 3 கோடி ரூபாய் செலவில் 4 காற்
றாலைகளை அமைத்து அதன் மூலம் 32 இலட்சம் யூனிட் மின்
சாரத்தை தயாரிப்பதற்காக வழிவகைகளை செய்துள்ளார்கள்
என்பதை நான் மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்
கிறேன்.

நெசவாளர் சங்கங்களுக்கு சாயத் சாலைகள் அமைத்தல்
மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபதி அவர்கள் கூறியபடி, நெச
வாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு உற்பத்தியாகும் துணிகளை தருவ
தில் உயர்த்தி நடப்பாண்டில் 3 நெசவாளர் கூட்டுறவு சங்கங்
களில் 3 புதிய சாயச் சாலைகளை அமைக்க புரட்சித் தலைவி
அவர்கள் அனுமதி தந்துள்ளார்கள் என்பதை தங்களுக்கு மகிழ்ச்சி
யோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி).

சாயம் தோய்க்கும் தொழிலாளர்களுக்கு அப்ரூல்ட்
டையர்ஸ்—இடத்தில் நாம் தருகிறோம். சாயம் சரியாக இருப்ப
தில்லை என்று சொல்கிறார்கள். இவர்களுக்கு பயிற்சி
தருவதற்காக தேசிய கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக
புதிய யுக்திகளை, நெசவாளர்கள் அதிகமாக பரவியுள்ள
மாவட்டம் தோறும் பயிற்சிமுகாம்களை அமைத்து அவர்களுக்குப்
பயிற்சி தர புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்
ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 6.30

கம்ப்யூட்டர் வடிவமைப்புகள் அமைத்தல், விற்பனைபோட்டி
யின்றி தனியார்களோடு விற்பனையில் போட்டியிடுவதற்காக,
கைத்தறித் துறையில் மாறிவரும் நாகரீகத்தை பயன்படுத்தி
தேவையான நவீன துணிகளை தயாரிக்கும் பொருட்டு ரூ. 30

இலட்சம் செலவில் கம்ப்யூட்டர் வடிவமைப்புமையத்தை அமைக்க புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கைத்தறி துணி உற்பத்தியில் 22 ரக துணி ஒதுக்கீடு.. கைத்தறி துணி உற்பத்தியில் மத்திய அரசு ஒதுக்கீடு செய்த 22 ரக துணிகளின் மீதான ஆணையை, உச்ச நீதிமன்றம் ரத்து செய்திருக்கிறது. தமிழக அரசு—புரட்சித்தலைவி அவர்கள் அரசு ஆணையிட்டிருக்கிறது. ஏற்கனவே, கைத்தறிக்கும், விசைத் தறிக்கும் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பது எப்படி என்பதை அலசி ஆராய்வதற்காக புரட்சித் தலைவி அவர்கள் ஒரு வல்லுநர் குழுவை அமைக்க வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கிறார்கள். வல்லுநர் குழு மூலமாக இதனை வேகமாக நிறைவேற்றுவது எப்படி என்பதற்காக, ஒரு வல்லுநர் குழுவை அமைக்க புரட்சித் தலைவி அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார் என்பதை உங்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் என்றாலே பின்னல் ஆடைக்கு பெயர் போனஒன்றாகும். திருப்பூர் ரூ. 1000 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. அந்நியச் செலாவணியை ஈட்டித் தருவதற்காக பல்வேறு சலுகைகளை செய்ய வேண்டும் என்பதற்காக புரட்சித் தலைவியைப் பொறுத்த வரையில் அனைத்து பணிகளையும் நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், டெல்லியைப் பொறுத்த வரையில் அவர்கள் செய்ய வேண்டிய பணிகளை செய்ய மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஏனோ தெரியவில்லை. ஆனால் தாய் உள்ளத்தின் தலைவியாக இருக்கின்ற புரட்சித் தலைவி ஹோசியரி நூலை உற்பத்தி செய்வதற்காக இந்த ஆண்டு பெரியார், திருச்சி, மதுரை ஆகிய 3 மாவட்டங்களில் இருக்கிற கூட்டுறவு நூற்பாலைகளில் 10,000, 10,000, 5,000 கதிர்கள் ஒதுக்கப்பட வேண்டும் என்று கட்டளை பிறப்பித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆதலால் திருப்பூரில் இருக்கிற பின்னல் ஆடை தொழிலுக்கு ஹோசியரி நூல் கொடுப்பதற்கு ஓரளவாவது வழிவகை செய்திருக்கிறோம் என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நபர் குழு—கோஆப்டெக்ஸ்- கோ-ஆப்டெக்ஸ் என்பது 58 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட ஒன்று ஆகும். இதனுடைய பணி சேலையை விற்பது, வேட்டி விற்பது போன்ற பணிகள். 423 கிளைகள் உள்ளன. இதனுடைய டர்ன்-ஓவர் 180 கோடி ரூபாயை தாண்டிவிட்டது. இப்போழுது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற பணியிலும் இது ஈடுபட்டிருக்கிறது.



எனவே, இந்நிறுவனத்தின் செயல்பாட்டினை சீரமைக்கவும் இந்த நிறுவனத்தின் பணிகளை எப்படி செய்யலாம், அங்கு இருக்கிற தொழிலாளர்களுக்கு எப்படி சம்பள உயர்வு தரலாம் என்பதை மாற்றியமைப்பதற்காக ஒரு நபர் குழுவை அமைக்கும்படி மாண்புமிகு தாயுள்ளத்தின்தலைவி புரட்சித் தலைவி அவர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தங்களுக்குமகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

1947 ஆம் ஆண்டு இந்தியா விடுதலை பெற்றது. ஆகஸ்ட் 15. இந்தியா விடுதலை பெற்ற பிறகு தமிழ் மாநிலத்தில் பல்வேறு முதலமைச்சர்கள் தமிழகத்தை ஆண்டு இருக்கிறார்கள். ஒன்றை நீங்கள் சிந்திக்கவேண்டும். இதுவரையிலும் எந்த முதலமைச்சரும் சிந்திக்காத ஒரு சிந்தனையை இன்றையதினம் கைத்தறித் துறையில் புரட்சித் தலைவி அவர்கள் சிந்தித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) கைத்தறியில், ஒரு மனிதனுடைய மானத்தைக் காப்பது ஆடை ஆகும். அந்த ஆடையை உற்பத்தி செய்கிறவர்கள் கைத்தறி மூலமும், விசைத் தறி மூலமும், மில்ஸ் மூலமும் மூன்று கோணங்களில் செய்கிறார்கள். அவர்களுக்கு என்று கொள்கையே இல்லை. அவர்களுக்கு என்று கொள்கையை உருவாக்க வேண்டும் என்பதற்காக அதை அறிவித்துள்ளவர் புரட்சித் தலைவிதான், நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்கு உள்ள தலைவியாக, ஒரு டெக்ஸ்டைல் பாலிசியை உருவாக்க வேண்டும் என்று யாருமே சிந்திக்கவில்லை

பிற்பகல் 6.35

பல்வேறு முதலமைச்சர்கள் இந்த நாட்டை ஆண்டார்கள். இதைச் செய்தேன், அதைச் செய்தேன் என்று வாயால் வரலாறு பேசுவார்கள். ஆனால் எதைச் சாதித்தார்கள்' (குறுக்கீடு) அண்ணா அவர்கள் தோளில் கைத்தறித் துணியைப் போட்டுக் கொண்டு அதைச் சுமந்துகொண்டு வீதிவீதியாகப்போனார் என்று பேசலாம். ஆனால் அப்படி வீதிவீதியாகப் போகாமலேயே உட்கார்ந்த இடத்திலேயே, அவர்களது வாட்டத்தைப் போக்குவது எப்படி என்றும் அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்கு எப்படி வழிவகுக்க வேண்டும் என்பதற்காகவும் இன்றையதினம் சிந்தித்து. புரட்சித் தலைவி அவர்கள் ஒரு உயர்மட்டக் குழுவை உருவாக்கி, அதில் பல்வேறு நிபுணர்களை, கைத்தறியைச் சேர்ந்தவர்கள், விசைத்தறியைச் சேர்ந்தவர்கள், ஆலைகளைச் சேர்ந்தவர்கள், தொழிலாளர்கள், தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மற்றவர்களையெல்லாம் போட்டு, அவர்களுடைய ஆலோசனைகளை எல்லாம் கேட்டு அந்த ஆலோசனைகள் மூலமாக ஒரு பாலிசியை உருவாக்கவேண்டுமென்று புரட்சித் தலைவி

அவர்கள் செய்தார்கள். இதுவரை யாருமே சிந்திக்காத ஒன்றை சிந்தித்துச் செயலாற்றிக் கொண்டிருக்கிற ஆற்றல் படைத்த தலைவிதான் மனித நேயம் மிக்க புரட்சித் தலைவி என்பதை மனச்சாட்சியுள்ள அனைவரும் ஏற்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மனச்சாட்சியுள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

அடுத்ததாக, இந்தியக் கைத்தறித் தொழில் நுட்பக் கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கு புரட்சித் தலைவி பெயரால் பரிசு வழங்கும் திட்டம். சேலத்தில் உள்ள இந்தியக் கைத்தறித் தொழில் நுட்பக் கழகத்தில் பயிலுவதற்காக ஆண்டுதோறும் 16 பேரைத் தமிழக அரசு தேர்ந்தெடுத்து அனுப்புகிறது. அதில் சிறந்த மாணவர்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் மூலமாக 5,000 ரூபாய் பரிசு வழங்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பரிசைப் பெற இருக்கிறவர்கள் கூட வந்திருகிறார்கள் என்று கருதுகிறேன். இப்போது புரட்சித் தலைவி அவர்கள், அவருக்குப் பரிசு வழங்க இருக்கிறார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு (குறுக்கீடு) வெளியிலே தான், அந்த உதவித்தொகையோடு சான்றிதழும் வழங்க இருக்கிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை, தங்களது மேலான கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்துத் தெரிவித்தார்கள் அந்தக் கருத்துக்களுக்கு எல்லாம் நான் விளக்கங்களை தந்திருக்கிறேன். வெட்டுத்தீர்மானங்கள் தந்தவர்களுக்கு பதிலளிக்கும் வகையில் தயாரான நிலையில்தான் வந்திருந்தேன். ஆனால் ஏனோ அவர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களை முன்மொழிய வரவில்லை. இருந்தாலும் அவர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களுக்குத் தக்க நடவடிக்கைகள் இந்த அரசைப் பொறுத்தவரையில் எடுக்கப்படும், எடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். நன்றி.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

<u>டாக்டர் ச. ஆரோக்கியசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புகழ் பெற்ற திருச்சி உறையூர் சேலைகளை மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய மாண்புமிகு அமைச்சர் ஏற்பாடு செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.



<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் 'எக்ஸ்போர்ட் செல்' அமைத்தவுடன் இதற்கான ஆக்கப்பணிகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி</u> க. பழனியம்மாள்.

<u>திருமதி க. பழனியம்மாள் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ராசிபுரம் தொகுதியில் கடந்த 6 மாதங்களாக 3 கோடி ரூபாய் மதிப்புள்ள பட்டுச்சேலைகள் தேங்கிக் கிடப்பதால், அங்குள்ள நெசவாளர்கள் கூலி கூட பெறமுடியாத நிலை இருக்கிறது. ஆகவே அந்தச் சேலைகளைக் கொள்முதல் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? உடனடியாக அவர்களுடைய கவலையைப் போக்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்காமலேயே கொடுக்கிற தலைவிதான் நம்முடைய கருணைக்கடலான புரட்சித்தலைவி என்பதை மறந்துவிடக் கூடாது. அந்தத் தலைவி தமிழகத்தில் வாழ்கிறார். அவர்களுடைய வாட்டத்தைப் போக்குவதற்காகத்தான், புரட்சித்தலைவி திட்டங்களை உருவாக்குகிறார். ஆதலால் அதற்காக ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. வெ. பழனிசாமி.

<u>திரு. வெ. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் உள்ள பின்னல் ஆடைகளைப் பொறுத்தவரை ஏற்றுமதிக்கான கோட்டா அதிகமாகக் கிடைக்காத காரணத்தால் பல கோடி ரூபாய் மதிப்புள்ள ஆடைகள் தேங்கியுள்ளன. இதனால் மொரிஷியஸ், மாலத்திவு, இலங்கை போன்ற நாடுகளுக்கு திருப்பூரில் உள்ள வியாபாரிகள் சென்று அங்கே ஆர்டர் பெற்று தயாரித்து அனுப்புகிறார்கள். ஆகவே மத்திய அரசோடு கலந்து பேசி, அந்த ஏற்றுமதிக்கான கோட்டாவை அதிகப்படுத்தி, அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முயற்சி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 6-10.

<u>மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்கள் [illegible] கருத்துக்களை எடுத்துரைத்

இருக்கிறார்கள். அது குறித்து அதிகாரிகளோடு அரசு ஆராய்ந்து புரட்சித்தலைவி அவர்களுடைய அனுமதியைப்பெற்ற பிறகு. புரட்சித்தலைவி அவர்களிடத்தில் ஆலோசனைகளை கேட்டு, நேரிடையாக டெல்லிக்கு சென்று அந்த அமைச்சர் களோடு கலந்தாலோசித்து தக்க முடிவு எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்.

டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரத்தில் தொடங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதைப் போல, எங்களுடைய இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பெயரால totally export oriented silk society ஒன்றைப் பட்டுத் தொழிலுக்கு பெயர் பெற்ற ஆரணி மாநகரில் தொடங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா? அதேநேரத்தில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நெசவாளர்களுக்கு என்று இன்ஷூரன்ஸ் திட்டம் ஒன்று இருந்தது. அதன்படி மாதம் 10 ரூபாய் ஒரு நெசவாளி கட்டினால், அந்த நெசவாளி திடீரென காலமானால் அவர் குடும்பத்திற்கு 10,000 ரூபாய் அரசு வழங்கி வந்தது. அந்தத் திட்டத்தை தி.மு.க. அரசு அதனுடைய ஆட்சியில் நிறுத்தி வைத்தது. இப்போது ஏதாவது தொகை 20 ரூபாய் அல்லது அதற்கு அதிகமாகப் பிடித்து, அப்படி நெசவாளி மரணம் அடைகிறபோது அதற்கு புரபோர்ஷனேட்டாக காம்பன்சேஷன் மவுண்ட் வழங்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜெய்சன் ஜேக்கப் அவர்கள் கோடிட்டு காட்டினார்கள். முதல் கட்டமாக பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த பூமி. கைத்தறிக்காக பாடுபட்டவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த அண்ணா அவர்கள் பிறந்த பூமியில் முதலில் ஆரம்பிக்கப்படுகிறது. கைத் தறித் துறை இன்றைய தினம் வளர்ந்து இருக்கிறது என்றால் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சரான பிறகு தான் வளர்ந்து இருக்கிறது. இதை மனசாட்சி உள்ள அனைவரும் ஒப்புகொள்வார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). கைத்தறித் தொழில் என்றவுடன் ஒட்டிய வயிறோடும், குழி விழுந்த கண்களோடும் இருக்கிறவர்கள் தான் நெசவாளர்கள் என்று கோடிட்டு காட்டுவார்கள். அந்த நிலை மாறி இன்றைய தினம் நெசவாளர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்து இருக்கிறது. காஞ்சிபுரத்தில் அண்ணா அவர்கள் பிறந்தார்.



முதல் கட்டமாக அவர் பிறந்த பூமியில் தொடங்கியதற்குப் பிறகு, இரண்டாவது கட்டமாக அடுத்த ஆண்டில் ஆரணி பரிசீலிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி).

ஏற்கனவே உள்ள இன்ஷூரன்ஸ் ஸ்கீம் கீழ் 12 பைசாவி லிருந்து 16 பைசாவாக உயர்த்தி, ஒரு நெசவாளர் 58 வயதிற்குள் ஓய்வு பெறுகிறபோது ஒரு லட்சதது 68 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை, இதுவரையில் நெசவாளர்கள் கனவில்கூட எதிர்பார்க்காத ஒன்றை, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராம. இராம நாதன்.

திரு. இராம. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித நேயத்தின் தலைவியாகவும், பெண்குலத்தின் ஒப்பற்ற தலைவியாகவும், விளங்கிக்கொண் டிருக்கிற எங்களுடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய இந்த நல்லாட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரத்தில் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரால் மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை நெச வாளர்களுக்கு அமைப்பதாகச் சொன்னார்கள். அதைப்போல எங்களுடைய கும்பகோணம் பகுதியில் அனைத்து இடங்களிலும் நெசவாளர்கள் நிரம்பி வழிகிறார்கள். அந்தப் பகுதியில் திருபுவனம் கூட்டுறவு சொஸைட்டி, பேரறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சொஸைட்டி போன்ற பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் அங்கே பட்டு சொஸைட்டிகளாக இருக்கின்றன. இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர். அவர்கள் வாழ்ந்த அந்த பூமிக்கு இரண்டாவது முன்னுரிமையைக் கொடுத்து, அந்த இடத்தில் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் பெயரால் இந்தச் சங்கத்தைத் தொடங்குவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையினுடைய நோக்கமே நெசவாளர்களை உயர்த்துவது தான். மாண்புமிகு உறுப்பினர் இராம. இராமநாதன் அவர்கள் காஞ்சி, கும்பகோணம் போன்ற இடங்களைக் கோடிட்டு காட்டினார்கள். அப்படிப்பட்ட நெச வாளர்கள் அதிகமாக இருக்கிற இடங்களில் எல்லாம் புரட்சித் தலைவி அவர்கள் பெயரால் சங்கங்களை உருவாக்க வேண்டும்

என்பது தான் என்னுடைய எண்ணம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் உருவாக்கப்படுகிற அந்த சொசைட்டிகள் என்பது காலத்தால் அழிக்கமுடியாதவைகளாக, (மேசையைத் தட்டும் ஒலி) எப்போதும், எந்த நூற்றாண்டிலும் புரட்சித் தலைவி அவர்களுடைய புகழ் பரப்பி சாஸ்வதமாக இருக்கவேண்டும். அது மட்டுமல்ல, அனைத்து சொசைட்டிகளும் லாபத்தை ஈட்டித் தரக்கூடியவைகளாக இருக்கவேண்டும். அது நெசவாளர்களுடைய நலனைக் கருதி, திட்டமிட்டு, அரசு அதிகாரிகளோடு கலந்தாலோசித்து, உண்மையான நெசவாளர்கள், பெண் நெசவாளர்களாக வைத்து அனைத்து இடங்களிலும் ஆரம்பிக்கப் படும். அது எப்போதும் லாபத்தை ஈட்டக் கூடிய வகையில் வழிவகைகளைச் செய்த பிறகு தான் ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

பிற்பகல் 6-45:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. ப. பட்டாபி ராமன்.

*திரு. கா. ப. பட்டாபிராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டிலே எல்லா மாநிலங் களையும் விட தமிழகத்தை முதல் மாநிலமாகக் கொண்டு வர வேண்டுமென்று, ஆரம்பக்காலத்திலிருந்து அதற்காக உழைத்து அந்த நிலையை இன்றைய தினம் உருவாக்கியிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சியில் மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பெயரால், பெண்களை உள்ளடக்கிய ஒரு கூட்டுறவு பட்டு சொசைட்டியை உருவாக்கி, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய ஆடைகளை உற்பத்தி செய்து தருகின்ற சொசைட்டியை காஞ்சியிலே அமைத்தமைக்காக, டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு காஞ்சித் தொகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றியறிதலை தங்களுடைய திருப்பாதங்களிலே வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதில் உரையில் வார்த்தைக்கு வார்த்தை ரொம்ப அழுத்தம் கொடுத்து, சிறப்பாக உங்களுக்கு வழங்கி இருக்கிறார்கள். அதுவே எல்லோருக்கும் புரிந்து இருக்கும் என்று நினைக்கிறேன்.

விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



(ஆ) கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 25—கைத்தறியும் துணித் தொழிலும். வெட்டுத் தீர்மானங்கள் ஏதும் முன்மொழியப்படவில்லை.

கைத்தறியும் துணித் தொழிலும் பற்றிய 25ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 106,79,24,000-க்கு மேற் படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும் என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப் பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (27—4—1993) காலை 10.00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 6.46 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

192. சேலம் ஜோலி கிராஸ் புறநகர் வளர்ச்சி நிலையத்தி னால் உபயோகப்படுத்துவதற்காக வாங்கப்பட்ட ஆம்புலன்ஸ் வாகனத்திற்கு வரி விதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 12—11—1992-ஆம் நாளிட்ட 397-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

[1993 ஏப்ரல் 26

193. ஈரோடு, திரு. கே. வாசுதேவனின் மகனாகிய திரு. செந்தில்குமார் என்பவரால் வாங்கப்பட்ட உடல் ஊனமுற்ற நபரால் உபயோகப்படுத்தப்படுகின்ற சிறப்பு வடிவமைப்புடன் கூடிய மாருதி காருக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிக வரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11—12—1992-ஆம் நாளிட்ட 431ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1990ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

194. நிருவாளர்கள் கோவை நகர்ப்புற தொழுநோய் ஒழிப்புத் திட்டம் நிறுவனத்தின் உபயோகத்திற்காக வாங்கப்பட்ட டெம்போ டிராவலர் வாகனத்திற்கு வரிவிதிப்பிலிருந்து விலக்களித்தல் குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 11—12—1992-ஆம் நாளிட்ட 1645ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை (1990ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின் மீதான வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

195. 1991-92ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை 1971ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது. (ஆங்கிலம்).

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

222. கோரிக்கை எண் 25—கைத்தறி மற்றும் துணி நூல் துறையின் கொள்கையும், திட்டங்களும், 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

223. கோரிக்கை எண் 29—சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

224. கைத்தறி மற்றும் துணி நூல் பற்றிய சாதனைத் திட்டம், 1993-94 (தமிழ், ஆங்கிலம்).

225. தமிழ்நாட்டில் மகளிர் மேம்பாட்டு திட்டங்கள் பற்றிய சிறு புத்தகம் (தமிழ்).

226. மதிப்பீட்டுக் குழுவின் ஒன்பதாவது அறிக்கை, 1992-93.



1993 ஏப்ரல் 26]

227. மதிப்பீட்டுக் குழுவின் பத்தாவது அறிக்கை, 1992-93.

228. மதிப்பீட்டுக் குழுவின் பதினொன்றாவது அறிக்கை, 1992-93.

229. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தாறாவது அறிக்கை, 1992–93.

230. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை, 1992-93.

231. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை, 1992–93.

232. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை, 1992–93.

233. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பதாவது அறிக்கை, 1992–93

234 பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை, 1992–93.

235. சமையல் செய்முறை விளக்கம் பற்றிய சிறு புத்தகம் (தமிழ்).

236. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்-2 ஒரு கண்ணோட்டம் பற்றிய சிறு புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

237. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இருபத்தைந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

238. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இருபத்தாறாவது பட்டியல்)(வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

239. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இருபத்தேழாவது பட்டியல்) (வரிசை எண் 1 முதல் 50 வரை).

240. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல் (இருபத்தெட்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

[1993 ஏப்ரல் 26

## இணைப்பு—1.

(பக்கம் 721—ல் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கோரிக்கை எண் 29

### சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1993—94

### அத்தியாயம் 1.

### முன்னுரை

கோரிக்கை எண் 29—ன் கீழ் 1993—94 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 4,40,46,19 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.1. நமது நாட்டின் வளர்ச்சி பெண்கள், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோரின் நலத்தையும், முன்னேற்றத்தையுமே பெரிதும் சார்ந்துள்ளது என்ற உண்மையை முழுமையாக உணர்ந்துள்ள காரணத்தால், அவர்களின் நலன், மேம்பாட்டிற்கான நடவடிக்கைகளை நாங்கள் அதிகரித்துள்ளோம்.

1.2. மேற்குறிப்பிட்ட மூன்று பிரிவினருக்கும் ஒல்லும் வகையெல்லாம் உதவி செய்வது என மாண்புமிகு முதல்வர் அவர்கள் உறுதி பூண்டுள்ளதால், நீண்ட காலம் பயன் தரக்கூடிய சில புதிய திட்டங்கள் 1992—93 ஆம் ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்டன. நமது மாநிலத்தின் சில பகுதிகளில் காணப்படுகின்ற பெண் குழந்தைகளை கொல்லும் கொடிய பழக்கத்தை ஓராண்டு காலத்திற்குள் அறவே ஒழித்துக் கட்ட நாங்கள் உறுதி பூண்டுள்ளோம். கவனிப்பாரற்ற பெண் குழந்தைகளை அரசு ஏற்படுத்தி உள்ள தொட்டில்களில் சேர்க்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களே பொது மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள். இவ்வாறு மீட்கப்படும் குழந்தைகளுக்கு முன்னணியிலுள்ள தொண்டு நிறுவனங்கள் மூலம் போதுமான கவனிப்பும், அக்கறையும் காட்டப்படுகின்றது. இந்தக் கொடுமையான பழக்கத்தை எதிர்த்து தீவிரப் பிரச்சாரம் நடத்தப்படுவதுடன், பெண்களுக்கான பல பொருளாதார உதவி திட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.



1993 ஏப்ரல் 26]

1.3. இம் மாநிலத்திலுள்ள பெண் குழந்தைகளின் நலனுக்காக இந்த அரசு தொடங்கியுள்ள "புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்பு திட்டம்" ஒரு புதுமையான திட்டமாகும். சில நிபந்தனைகளுக்குட்பட்டு நாங்கள் பெண் குழந்தைகளின் பெயரில் ரூ. 2,000 ஐ முதலீடு செய்கிறோம். இதிலிருந்து அவர்களுடைய கல்விக்காக, அவ்வப்போது தொகைகள் வழங்கப்படுவதுடன், அவர்களுடைய திருமணச் செலவிற்காக அல்லது மேற் படிப்பை தொடர்வதற்காக இறுதியாக ரூ. 10,000—ம் வழங்க இருக்கிறோம். இந்தியாவிலேயே இந்த வகையில் இதுவே முதல் திட்டமாகும். 20,000 பேர் பயனடையும் வகையில் இத்திட்டத்திற்காக உடனடியாக ரூபாய் 4 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது.

1.4. உடல் ஊனமுற்றோருக்குத் தேவையான சாதனங்கள், உபகரணங்களை வழங்குவதுடன் அவர்களுக்கு கல்வியும் பயிற்சியும் அளிப்பதில் தனிக்கவனம் செலுத்தி அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கச் செய்வதற்காக தனித்துறை ஒன்று உருவாக்கப்படுமென மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். ஒன்றுபட்ட சமூக நலத்துறையிலிருந்து பிரித்து ஊனமுற்றோர் மறுவாழ்வு இயக்ககம் என்ற பெயரில் புதியதொரு துறை 10—7—1992 முதற் கொண்டு செயல்படத் தொடங்கி விட்டது என்று அறிவிப்பதில் நான் பெருமை அடைகிறேன். இத்துறை தனக்கு அளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை செவ்வனே நிறைவேற்றும் என நான் நம்புகிறேன்.

1.5. உடல் ஊனமுற்றோருக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பு வழங்கிய தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ஒவ்வொரு குடியரசு தினத்தன்றும் பரிசு வழங்குவதற்கென "மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா சிறப்பு விருது" ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதனை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

## அத்தியாயம் 2.

### மகளிர் நலம்.

மகளிர் நலனுக்காக கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு பல்வேறு நலத் திட்டங்களை இத்துறை நிறைவேற்றி வருகின்றது.

### பொருளாதார திட்டங்கள்

2.1. பெண்களுக்கென்று தனியாக சீருடை, காலணி, இணை உணவு. எழுதுபொருள், சாக்குக்கட்டி, திரவ சோப்பு, கயிறு பொருள், சவ்வரிசி பொருட்கள் போன்றவை தயாரிக்க பல்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் இத்துறை மூலம் ஏற்படுத்தித் தரப்பட்டுள்ளன. இத்தகைய கூட்டுறவுச் சங்கங்கள் மொத்தம் 173 உள்ளன. இவற்றின் மூலம் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் 27,000 க்கும் மேற்பட்ட பெண்கள் பயனடைகின்றனர்.

2.2. பெண்கள் தம் வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒரு இலட்சம் பெண்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்கச் செய்ய மாநில அரசு அவர்களை பல குழுக்களாக அமைத்து, ஒருங்கிணைந்த மகளிர் வளர்ச்சித் திட்டத்தை 3—3—1992 ஆம் நாளன்று தொடங்கியதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருக்கலாம். பெண்களைக் குழுக்களாக அமைத்தல், நிதி உதவிக்கு உறுதியளிக்கும் பொருளாதார நடவடிக்கைகளைக் கண்டறிவதில் வசதி, விற்பனை வசதிக்கான கடன், ஏனைய வசதிகள் ஆகியவற்றில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் ஆகியவற்றைச் சேர்ந்த களப் பணியாளர்களின் உதவியைப் பயன்படுத்தி முதற் கட்டமாக தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் இத்திட்டத்தைச் செயற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இத்திட்டம் பன்னாட்டு நிதி நிறுவன கடன் உதவியுடன் தருமபுரி, சேலம், தென் ஆற்காடு, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்ற தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தை ஒத்துள்ளதுடன், அதனுடன் நெருங்கிய தொடர்புடையதாகவும் இருக்கிறது.

2.3. இத்துறை பெண்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சியளிப்பதுடன், வறுமைக்கோட்டிற்கும் கீழேயுள்ள பெண்களுக்கு இலவசமாக தையல் இயந்திரங்களை வழங்குகின்றது. வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், ஆதரவற்ற பெண்கள்,



உடல் ஊனமுற்ற ஆண்கள், பெண்கள் ஆகியோருக்கு ஆண்டு தோறும் 1,000 தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இவர்கள் சுயவேலை வாய்ப்பாக தையல் பணிகளை மேற்கொண்டு அவர்களுடைய வருவாயைப் பெருக்கிக் கொள்கின்றனர்.

2.4. இத்துறை 57 உற்பத்தி—பயிற்சி மையங்களில் தொழில் பயிற்சி அளிப்பது உட்பட பல்வேறு பயிற்சித் திட்டங்களை மேற்கொள்கிறது. இங்கு பயிற்சித் அளிக்கப்படும் தொழில்களில் தையல், பனை ஓலை கைவினைப் பொருட்கள், நெசவு, ஆயத்த ஆடைகள் தயாரித்தல், விளையாட்டுப் பொருட்கள் செய்தல், தட்டச்சு, சுருக்கெழுத்து, கணிப்பொறி பயிற்சி மற்றும் பல் நோக்கு சுகாதாரப்பணிகள் ஆகியவையும் அடங்கும்.

2.5. கணவனை இழந்த பெண்களின் குழந்தைகளுக்கு இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கப்படுகின்றன.

### நிதியுதவி அளிக்கும் திட்டங்கள் :

2.6. இத்துறை செயல்படுத்தும் முக்கியமான திட்டங்களில் ஒன்று, ஏழை குடும்பங்களை சேர்ந்த பெண்களின் திருமணத்திற்காக ரூபாய் 5,000 நிதி உதவி அளிக்கும் திட்டமாகும். வழக்கமான திட்டங்களின் கீழ் நிதி உதவி அளிப்பதன் மூலம் விதவை மறுமணம், கலப்புத்திருமணம், ஆதரவற்ற பெண்களைத் திருமணம் செய்தல், ஆகியவை ஊக்குவிக்கப்படுகின்றன. கருவுற்ற பெண்கள், சத்தான உணவை உட்கொள்ளவும் உடல் நலனை நன்கு கவனித்துக் கொள்ளவும் மகப்பேற்றுக்கு முன்னர் இரு திங்களுக்கும், மகப்பேற்றுக்குப் பின்னர் இரு திங்களுக்கும் மாதம் ரூ. 75 வீதம் ரூபாய் 300 நிதி உதவி வழங்கப்படுகின்றது.

### பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் நிதி நிறுவன ஆதரவு.

2.7. கைவிடப்பட்ட பெண்கள், ஏழை விதவைகள், ஆதரவற்றோர் ஆகியோர் பாதுகாக்கப்பட வேண்டும். அவர்களுக்குத் தேவையான சமூகப் பாதுகாப்பும், உரிய தகுதியும் நிச்சயமாக கிடைக்கும்படி செய்ய வேண்டும். அவ்வாறு கிடைக்கச்செய்ய அரசும், அரசின் ஆதரவோடு அரசு சார்பற்ற அமைப்புகளும் பல நிறுவனங்களை நடத்தி வருகின்றன. அவற்றில் அரசு நடத்தி வரும் ஒரு ஆசிரியர் பயிற்சி நிலையம், ஆறு சேவை இல்லங்கள், எட்டு பணிபுரியும் மகளிர் விடுதிகள் ஆகியவை அடங்கும். இந்த அரசு நிறுவனங்களுடன், அரசு சார்பற்ற பல அமைப்புகள் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன், அதே போன்ற மகளிர் விடுதிகளையும், பாதுகாப்பு இல்லங்களையும் நடத்தி வருகின்றன.

2.8. இத்துறை சமுதாய வளர்ச்சியில் பெண்களை ஈடுபடுத்தும் வகையில் இம் மாநிலத்தில் 11,500-க்கும் மேற்பட்ட மகளிர் மன்றங்களுக்கு நிதியுதவி அளிக்கிறது. பெண்கள் அரசிடமிருந்து பல்வேறு நிதியுதவி, சட்ட உதவி, சட்ட ஆலோசனை பெறுவதற்கு இயலும் வகையில், மாவட்டத்திற்கு ஒரு வழி காட்டும் மையமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

2.9. புத்தகங்கள் வாங்கிக் கொடுத்து ஒவ்வொரு ஆதரவற்றோர் சேவை இல்லத்திலும் ஒரு சிறு நூலகம் அமைத்தல்; அங்கு தங்கியிருப்பவர்களுக்கு யோகா பயிற்சி அளித்தல்; அவர்களுக்குரிய உணவுக் கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30 உயர்த்திக்கொடுத்தல் ஆகியவை பெண்களின் நல வளர்ச்சிக்காக கடந்த ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டங்களில் சிலவாகும்.

## தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் :

2.10. 1983 ஆம் ஆண்டு டிசம்பரில் பதிவு செய்யப்பட்ட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் பல பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை தயாரித்துள்ளது. பன்னாட்டு வளர்ச்சிக்கான நார்வே நாட்டு நிறுவனம், வேலை வாய்ப்பு ஆதரவுத் திட்டம், சிறப்பு மத்திய நிதியுதவி, சிறப்புத் திட்டப்பணி நிதிகள் போன்ற நிதி ஆதாரங்களை திரட்டியுள்ளது.

2.11. இக்கழகம் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் 40,500 பெண்கள் பயனடையும் வகையில், 7 ஆண்டு காலத்திற்கு மொத்தம் ரூபாய் 4,592 இலட்சம் செலவில் வேளாண்மை வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியிலிருந்து பெறப்படுகிற நிதியுதவியைக் கொண்டு, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளது.

2.12. இத்திட்டம், தருமபுரி, சேலம், தென் ஆற்காடு ஆகிய மூன்று மாவட்டங்களில் செயல் படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி மூன்று மாவட்டங்களிலும், வறுமைக் கோட்டிற்கும் கீழ் வாழும் 19,190 கிராம மகளிருக்கு 1993–94 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபாய் 1,278.22 இலட்சம் செலவில் நிதியுதவி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2.13. மாநில அரசு அளிக்கும் தொடக்க நிதியுதவியைக் கொண்டு இத்திட்டம், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டு வருகிறது. இக்கழகம் வாழ்க்கைத் தொழில் கல்வி மற்றும் விற்பனை வசதி அளிப்பதிலும் தனது பணிகளை நிறைவேற்றி வருகிறது.



# அத்தியாயம் 3.

## குழந்தைகள் நலம்.

3.1. குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் அவர்களின் நலன் ஆகியவற்றை உறுதி செய்ய மூன்று ஊட்டச்சத்து திட்டங்களை தமிழகத்தில் செயல்படுத்தி வருகிறோம். அவையாவன : 2 முதல் 4 வயது வரையுடைய குழந்தைகளுக்கும், 5 முதல் 15 வயது வரையுடைய பள்ளி மாணவர்களுக்கும் சத்துணவு வழங்கப்படும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் ; நான்கு மாவட்டங்களிலும் வேறு சில தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளிலும் மத்திய அரசின் நிதி உதவியுடன் நடத்தப்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் ; மற்றும் உலக வங்கி நிதியுதவியின் கீழ் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் – 2, செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்திலுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் சுவீடன் நாட்டின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. சுவீடன் நாட்டு நிதியுதவியைக் கொண்டு நீலகிரி, புதுக்கோட்டை மாவட்டங்களுக்கும் இத்திட்டத்தை விரிவு படுத்துவது குறித்து தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் :

3.2. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் நிர்வாக அமைப்பில் பயனுள்ள பல மாற்றங்கள் செய்யப்பட்டு உள்ளன. சமூக நலத்துறை இயக்குநர் சத்துணவு திட்டத்தின் துறைத் தலைவராக்கப்பட்டுள்ளார். ஊரக வளர்ச்சி ஆணையாளரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த ஊரக பகுதிகளிலுள்ள பள்ளிகளின் சத்துணவு மையங்கள, சமூகநலத்துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

3.3. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் பணிபுரியும் அமைப்பாளர்களின் மதிப்பூதியம் கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது. சமையலர்கள், உதவியாளர்களின் மதிப்பூதியம் உயர்த்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு பொங்கல் பரிசாக ரூபாய் 500-ம் வழங்கப்பட்டுள்ளது.

3.4. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் செயற் படுத்துவதைக் கண்காணிக்க, முதலமைச்சரை தலைவராகக் கொண்ட உயர்மட்டக் குழுவினை அரசு மீண்டும் அமைத்துள்ளது. பொது மக்களின் நன்கொடை உதவியுடன் சத்துணவு மையக் கட்டிடங்களை சீரமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

3.5. மாற்று ஏற்பாடுகள் செய்வதன் மூலம், சத்துணவு அமைப்பாளர்களுக்கு சனிக்கிழமைகள் மற்றும் ஞாயிற்றுக் கிழமைகள் விடுமுறை நாட்களாக அரசு அறிவித்துள்ளது. உணவில் கூடுதலாக சோயா மொச்சை மாவை சேர்த்துக் கொண்டமை ; எண்ணெய் அளவு அதிகரித்தமை ; புகையற்ற அடுப்புகளை அறிமுகப்படுத்தியமை ; பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நம் மதிப்பிற்குரிய முதலமைச்சர் ஆகியோரின் பிறந்த நாள் விழாக்களின் போது இனிப்புப் பொங்கல் வழங்குதல் போன்ற புதிய நடவடிக்கைகள் இப்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

3.6. ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை கல்வி பயின்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் பயன் பெறும் சிறார்களுக்கு ஆண்டுக்கு ஒரு செட் சீருடையும், இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை ஒரு சோடி காலணியும் வழங்கப்படுகிறது.

## தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2.

3.7. கிராம அளவில் மகப்பேறு வசதி, குழந்தை நலம், சத்துணவு, பாலர் பள்ளி வசதிகள் ஆகியவற்றிற்கு வழி வகுக்கும் வகையில், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்-2 1991-ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 1992-93-ல் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இதன் செயல்பாடு, தருமபுரி, தென் ஆற்காடு மாவட்டங்கள் உள்பட ஒன்பது மாவட்டங்களுக்கு குறுகிய காலத்தில் நீட்டிக்கப்பட்டிருப்பது அருஞ் சாதனையாகும். இந்த மாவட்டங்கள் அனைத்திலும் இரண்டு முதல் ஐந்து வயதுடைய சிறார்களுக்கான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் இயங்கும் குழந்தை நல மையங்கள், தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வரப்பட்டன. இவற்றிற்கு சுகாதாரம், சத்துணவு, பாலர் பள்ளி நடவடிக்கைகள் போன்றவற்றிற்கு தேவையான பொருள்களை வழங்குவதன் மூலம் இவை முழு அளவில் வசதிகள் பெற்று அமைந்த பாலர் பள்ளி மையங்களாக மாற்றப்பட்டன.

1993-94 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம்-2 மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஆகியவை இதுவரை செயல்படுத்தப்படாத புதிய இரண்டு மாவட்டங்களை தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்-2ன் கீழ் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டுள்ளது.





3.8. ஆதரவற்ற குழந்தைகளுக்கான அரசு இல்லங்களில் யோகா பயிற்சியை அறிமுகப்படுத்தியமை; உணவு கட்டணங்களை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 30 அதிகப்படுத்துதல் ; இல்லங்களில் சிறு நூலகங்களை ஏற்படுத்துதல் ஆகியவை கடந்த ஆண்டு வழங்கப்பட்ட புதிய நன்மைகள் ஆகும். 18 வயது நிரம்பிய பிறகும் கூட, ஆதரவற்ற பெண்களை இல்லங்களிலேயே தங்கி இருக்க அனுமதித்து கவனித்துக் கொள்வதற்கான திட்டம் ஒன்றை மாண்புமிகு முதல்வர் ஆணைப்படி அரசு வகுத்து வருகிறது. அவர்கள் வேலை வாய்ப்பு பெறவும், அவர்களின் திருமணத்திற்காகவும் சில வகையில் உதவி அளிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

3.9. 1992–93-ல் ஆதரவற்ற குழந்தைகளுக்கான இல்லங்கள் மற்றும் தன்னிச்சை நிறுவன சட்டத்தின் கீழ் நல வாரியம் அமைக்கப்பட்டு செயல்படத் தொடங்கியுள்ளது.

## அத்தியாயம் 4.

### ஊனமுற்றோர் நலம்.

4.1. ஊனமுற்றோர் நலத்திற்கான ஒதுக்கீடு 1991-92-ல் ரூ. 542.12 இலட்சம் என்பதிலிருந்து 1992-93 ஆம் ஆண்டு ரூ. 762.32 இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 1992-93 ஆம் ஆண்டு செயல்படுத்துவதற்கு பதினொரு புதிய திட்டங்களை நாங்கள் கொண்டு வந்துள்ளோம். இம் மாநிலத்திலுள்ள உடல் ஊனமுற்றோரின் நலனைக் கவனித்து அவர்களுக்கு புது வாழ்வு அளிப்பதற்காக தனித்துறை ஒன்றையும் இந்த அரசு ஏற்படுத்தியுள்ளது.

4.2. பார்வையற்றோருக்கும், காது கேளாதோருக்கும், கை, கால் ஊனமுற்றோருக்கும், மனநிலை பாதிக்கப்பட்டோருக்கும் அரசு நடத்தும் 25 சிறப்புப் பள்ளிகள் வாயிலாகவும், அரசு சாராத தனியார் அமைப்புகள் மூலம் நடத்தப்படுகின்ற 53 சிறப்புப் பள்ளிகள் மூலமும் இவர்களுக்குச் சிறப்புக் கல்வி புகட்டப்படுகிறது. இக்கல்வி நிறுவனங்களின் மூலம் 7,200-க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள்.

4.3. முதல் வகுப்பிலிருந்து எட்டாவது வகுப்பு வரையில் படிக்கின்ற உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு, ஒவ்வோராண்டும் நோட்டுப் புத்தகங்கள் வாங்குவதற்கும், இலவசமாக இரு சோடி சீருடைகள் வாங்குவதற்கும், இம்மாநில அரசு உதவித் தொகை வழங்குகின்றது. உடல் ஊனமுற்ற மாணவர்கள் ஒன்பதாம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வியைத் தொடர அல்லது தொழில் நுட்பக் கல்வியைத் தொடர மாதமொன்றுக்கு ரூ. 85-லிருந்து ரூ. 240 வரையில் மத்திய அரசு படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இவர்களுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுத் தருவதற்கு, பூவிருந்தவல்லியிலுள்ள பார்வையற்றோர்களுக்கான அரசு தொழில் பயிற்சி மையத்தின் வாயிலாகவும், அரசு தொழில் பயிற்சி நிலையங்கள் வாயிலாகவும், பொருத்துபவர் மற்றும் அடிப்படை எந்திரமியக்குபவர், புத்தகம் கட்டுபவர், மின் கம்பி சுற்றுபவர் போன்ற பல்வேறு பயிற்சித் திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

4.4. உடல் ஊனமுற்றவர்களுக்கு தனியார் துறையில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுவதை ஊக்குவிப்பதற்கு "மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்கள் சிறப்பு விருது" வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.



மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கும் 52 தேசிய விருதுகளில் தமிழ்நாடு, ஒவ்வோராண்டும் (அதாவது சென்ற 5 ஆண்டுகளில் 10-க்கும் அதிகமான விருதுகளை பெற்றுள்ளது. இந்த அளவிற்கு எந்த மாநில அரசும் விருதுகளை பெற்றதில்லை. 1992-93 ஆம் ஆண்டில் மட்டும் மொத்தம் 52 விருதுகளில் 18) விருதுகளை நாம் பெற்றுள்ளோம். இது இதற்கு முன்னர் பெறறிராத உயர்ந்த அளவாகும்.

ஊனமுற்றோர் நலனுக்காக மத்திய அரசு ஏற்படுத்தியுள்ள புதிய கண்டுபிடிப்புகள், புதுமைகள் குறித்த தொழில் நுட்ப விருது, தொடர்ந்து தமிழ்நாட்டினருக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது.

4.5. உடல் ஊனமுற்றோரின் பயனுக்குத் தேவைப்படும் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், பெட்டிக் கடைகள் போன்றவை செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம் முட்டுக்காட்டில் அமைந்திருக்கும் நவீன தொழிற் பயிற்சி உற்பத்திக் கூடத்திலேயே தயாரிக்கப்படுகின்றன. பல்வகைப்பட்ட ஊனமுற்றோர் பயனடையும் வகையில் இப்பணிக் கூடத்தை தேசிய நிறுவனமாக தரம் உயர்த்துமாறு, மத்திய சமூகநலத்துறை அமைச்சகத்திடம் கோரப்பட்டு வருகிறது.

4.6. மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், காது கேட்கும் கருவிகள், கறுப்புக் கண்ணாடிகள், மடித்து வைக்கும் வசதி கொண்ட ஊன்று கோல்கள் ஆகியவை ஒவ்வோராண்டும் உடல் ஊனமுற்றோருக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. இது வரை செய்து முடிக்காமல் எஞ்சியுள்ள பணிகளைச் செய்து முடிக்கவும், இத்தகைய கருவிகள் தேவைப்படுகின்ற ஊனமுற்ற அனைவருக்கும் கருவிகள்/சாதனங்களை வழங்கவும் 1992-93 ஆம் ஆண்டு ரூபாய் 36.23 இலட்சம் கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்பட்டது.

4.7. 1992-93 ஆம் ஆண்டில் 91.00 இலட்சம் ரூபாய் செலவில் 51 வளர்ச்சி வட்டாரங்களிலும், தருமபுரி மாவட்டம் முழுவதிலும் இளம்பிள்ளைவாத நோய் தடுப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டது.

4.8. மேலும், கடுமையாக ஊனமுற்ற 630 பேருக்குப் பராமரிப்புப்படி வழங்குதல்; ஊனமுற்ற சிறுவர்களுக்கான பராமரிப்பு மானியத்தை ரூபாய் 60 உயர்த்தி வழங்குதல்; வேலைவாய்ப்பற்ற பார்வையற்றோருக்கான படியை கூடுதலாக ரூபாய் 50 உயர்த்தியிருப்பது; அரசு சிறப்புப் பள்ளிகளுக்கு தொலைக்காட்சி பெட்டி, டேப் ரெக்கார்டர் ஆகியவற்றுக்கு வகை செய்தல் ஆகியவை 1992-93 ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட புதிய திட்டங்களில் சிலவாகும்.

## அத்தியாயம் 5.

## தமிழ்நாடு சமூக நல வாரியம்.

5.1. 1992 ஏப்ரல் முதல் 1993 ஜனவரி வரை 885 தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவியளிக்கப்பட்டது. மொத்தம் ரூபாய் 200.88 இலட்சம் வழங்கப்பட்டது.

5.2. மகளிர், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் ஆகியோருக்கு பணியாற்றுவதில் தொண்டு நிறுவனங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. குறிப்பாக போதைப் பொருள், மது ஆகியவற்றுக்கு அடிமையாவதைத் தடுப்பதற்கு தொண்டு நிறுவனங்களுக்கும் அரசு துறைகளுக்குமிடையே அதிக ஒத்துழைப்பு ஏற்படுத்துவதில் இவ்வாரியம் முக்கிய பங்கு வகிக்கிறது.

## அத்தியாயம் 6.

## சமூகப் பாதுகாப்பு.

6.1. 1986 ஆம் ஆண்டின் இளங் குற்றவாளிகள் நீதிச் சட்டம் 1956 ஆம் ஆண்டின் பரத்தமை தடுப்புச் சட்டம் ஆகியவற்றின் விதிமுறைகளின் கீழ் ஏற்படுத்தப்பட்ட நிறுவனங்கள் சமூகப் பாதுகாப்புத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படுகின்றன.





6.2. பயிற்சி மற்றும் நடத்தையை வழிப்படுத்துவதின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் நலப்பணிகளை அளிக்கும் கண்காணிப்பு இல்லங்கள் இளங் குற்றவாளிகள் இல்லங்கள், தனி இல்லங்கள் ஆகியவற்றிலுள்ள சிறார்களுக்கு நன்னெறிக் கல்வியிலும், பயனுள்ள வாழ்க்கைத் தொழில் கல்வியிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. வீதிகளில் திரியும் குழந்தைகளின் பிரச்சினைகள் குறித்து தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. வீதிகளில் திரியும் குழந்தைகளுக்கு இரவு நேர உறைவிடங்கள், வாழ்க்கை தொழில் பயிற்சி ஆகியவற்றை அளிப்பதற்கான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்தகைய திட்டங்களை மேற்கொள்வதற்கு அரசு சார்பற்ற புகழ்பெற்ற நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

6.3. தச்சு வேலை, புத்தகம் கட்டுதல், எந்திர தச்சு வேலை, கட்டிட வேலை, தையல் வேலை, பூத்தையல், செருப்பு தயாரித்தல், தோட்ட வேலை, விவசாயம், நெசவு நெய்தல், பாண்டு வாத்திய இசை, பாய் முடைதல், பால் பண்ணை, கருமார் வேலை, உலோக வேலை முதலியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

6.4. இளம்பிள்ளைகள் பிச்சை எடுப்பதை ஒழிப்பதற்காக, இத்துறை புதிய திட்டமொன்றை தொடங்கியுள்ளது. இத்திட்டம் மூன்று நிலைகளில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அவையாவன :—

(அ) பிச்சை எடுக்கும் குழந்தைகள் குறித்து ஆய்வு நடத்தி, கணக்கெடுத்தல் ;

(ஆ) வழிகாட்டி அமைப்புகளையும், அறிவுரை மையங்களையும் தொடங்குதல்/அவற்றின் எண்ணிக்கையை அதிகரித்தல் ;

(இ) அரசு சார்பற்ற அமைப்புகள் மூலம் குழந்தைகள் காப்பகங்கள், பாலர் பள்ளிகள், பள்ளிச்சாரா கல்வி/ஆதாரக் கல்வி/கல்வி/வாழ்க்கைத் தொழில் பயிற்சி, பொழுதுபோக்கு வசதிகள் போன்ற வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல்.

6.5. குழந்தைகள் பாதுகாப்பு நிறுவனங்கள், இளங் குற்றவாளிகள் நீதிச் சட்டத்தின் செயல்வரம்பின் கீழ் வரும் நிறுவனங்கள் ஆகியவற்றின் செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காகவும் ; இந்த நிறுவனங்களில் அளிக்கப்படும் பணியில் குறைந்த அளவு தரங்களைப் பேணுவதை உறுதி செய்யவும்; 'யூனிசெப்' நிறுவனத்தின் 100 சதவீத நிதியுதவியுடன் சமூகப் பாதுகாப்பு இயக்ககத்தில், திட்ட மேம்பாடு கண்காணிப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

[1993 ஏப்ரல் 26

## தொகுப்புரை.

நமது பேரன்பிற்குரிய முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்களின் தலைமையில் தான் நம்முடைய மாநிலம் குழந்தைகள், மகளிர், ஊனமுற்றோர் ஆகியோர் நலனில் முன்னணியில் உள்ளது என்பதை நீங்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

அகில இந்திய அளவில் 18 தேசிய விருதுகளை நாம் பெற்றிருப்பதன் வாயிலாக ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதில் நாட்டின் சிறந்த மாநிலமாக நமது மாநிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதை பெருமையோடு குறிப்பிட விழைகிறேன். ''அன்பு காட்ட வேண்டும்; அதுவும் இப்போதே காட்ட வேண்டும், காலம் கடத்துவது வீண் என்பதை மறக்கக் கூடாது''. எனவேதான் நாம்,

> ''அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
>
> என்பும் உரியர் பிறர்க்கு.''

என்ற கொள்கையில் நம்பிக்கையுடையவர்களாகத் திகழ்கிறோம். துன்பத்தில் உழல்வோருக்கும், துயரத்தில் வாடுவோருக்கும் விரைந்து உதவி செய்ய வேண்டும். என்ற தலையாய உணர்வுடனேயே இத்துறை பணியாற்றி வருகிறது..

> ''கருணை இல்லாத மனிதன் உயிரில்லாத
>
> நடைப்பிணம் போன்றவன் ஆவான்''

என்று மகான் அரவிந்தர் கூறியுள்ளார்.

மக்கள் மிகவும் விழிப்புணர்வு உள்ளவர்களாகத் தற்போது உள்ளனர். அவர்கள் தக்க வகையில் வழி காட்டப்பட்டும் வருகின்றனர். மக்களிடையே அருள் உணர்வு எழுச்சியூட்டப் பட்டுள்ளதன் விளைவாக ஏழைகளுக்கும் நலிந்தவர்களுக்கும் அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கி உதவி செய்ய முன் வந்துள்ளனர்.



1993 ஏப்ரல் 26]

> ''துன்பம் தோய்ந்த சிந்தனைகளின்
>
> வெளிப்பாடாகத் திகழும் கையறு நிலை
>
> பாக்களே சிறந்த பாடல்கள்''

என்று ஆங்கில கவிஞன் ஷெல்லி வானம்பாடியிடம் கூறி,

> ''உன் இதயம் முழுவதையும் பிழிந்து பாடு''

என்று அதனிடம் வேண்டுகோள் விடுக்கிறார். துன்பப்பட்டோர் மீதும் துயருற்றோர் மீதும் அன்பும் கருணையும் அளப்பரிய அளவிற்கு செலுத்தும் முதலமைச்சர் அவர்களை நாம் இன்று பெற்றுள்ளோம். அவர்களால் இம்மாநிலம் பெரும் சாதனைகளை எய்த வேண்டுமென்று நாம் விழைகிறோம்.

## இணைப்பு—1.

### 1993-94-ம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகள்.

| வரிசை எண். (1) | திட்டப் பணிகளின் விவரம். (2) | திட்ட ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்). (3) |
|---|---|---|
| | **மகளிர் நலம்.** | |
| 1. | சேவை இல்லங்களிலும் அரசு அனாதை இல்லங்களிலும் தங்கியிருப்பவர்கள் மேல் படிப்பை தொடர வகை செய்தல் .. | 0.95 |
| 2. | அனாதை இல்லத்தில் தங்கியுள்ள 10 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க பல்லாவரத்திலுள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் எண்ணிக்கையை அதிகரித்தல் .. | 0.38 |
| 3. | முதியோர்களுக்கான இல்லங்கள் நடத்த தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவி வழங்குதல் .. .. .. .. | 10.00 |
| 4. | தனியார் துறையில் மகளிருக்கும் உடல் ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதை ஊக்குவிக்க வெகுமதி .. .. .. | 0.10 |
| | **குழந்தைகள் நலம்** | |
| 1. | பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்படும் தாய்மார்களின் குழந்தைகளுக்கு குழந்தைகள் காப்பகம் தொடங்குதல் .. .. .. | 3.82 |
| 2. | பெண் சிசுக் கொலைப் பழக்கத்தை ஒழிப்பதற்காக, புதிதாகப் பிறந்த பெண் குழந்தைகளை அரசு தத்து எடுத்துக்கொண்டு வளர்க்க வரவேற்பு மையம் அமைத்தல் .. .. | 1.60 |
| 3. | நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டம், சிக்கலில் அனாதை இல்லம் ஒன்றை புதிதாக நிறுவுதல் .. .. .. .. | 3.90 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| | **ஊனமுற்றோர் நலம்.** | |
| 1. | கடுமையாக கை, கால் ஊனமுற்ற குழந்தைகளுக்காக சென்னையில் பள்ளி ஒன்று தொடங்குதல் .. .. .. .. | 3.65 |
| 2. | தாம்பரம் அரசினர் காது கேளாதோர் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல் .. .. | 8.00 |
| 3. | தஞ்சாவூர் அரசு பார்வை இழந்தோர் மற்றும் காது கேளாதோர் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல் .. .. .. .. | 2.40 |
| 4. | காது கேளாதோர்களுக்கு மத்திய பல்தொழில் பயிலகத்தில் கட்டிடக் கலை, கணினி அறிவியல் உள் அலங்காரம் ஆகிய பட்டயப் படிப்புகளில் 5 இடங்கள் ஒதுக்கீடு செய்தல் .. .. | 0.15 |
| 5. | சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் காது கேட்புக் கருவிகளை தயாரிக்கும் பிரிவுகளை நிறுவுதல் .. .. | 0.30 |
| 6. | பார்வை இழந்த 10 நபர்களுக்கு இலவசமாகத் தட்டச்சு எந்திரங்கள் மற்றும் சுருக்கெழுத்துச் சாதனங்கள் வழங்குதல் .... | 1.10 |
| 7. | வட ஆற்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் காது கேளாதோருக்கான பள்ளி ஒன்று தொடங்குதல் .. .. .. .. | 3.57 |
| 8. | மாவட்டங்களில் மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், தாங்குகோல், 'காலிப்பர்கள்' ஆகியவற்றை வைத்துக்கொள்வதற்கான வசதிகள் செய்து கொடுத்தல் .. | 0.66 |
| 9. | மன நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவும் மறுவாழ்வு கொடுக்கவும் தனியார் அமைப்பு ஒன்றுக்கு உதவி செய்தல் .. .. | 0.88 |
| 10. | 13 இடைநிலை ஆசிரியர்கள் பதவிகளைத் தலைமையாசிரியர் பதவிகளாக நிலை உயர்த்துதல் .. .. .. .. | 1.51 |
| 11. | அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவன பள்ளிகளில் 10 இடைநிலை ஆசிரியர் பதவிகளை அனுமதித்தல் .. .. | 3.10 |

## இணைப்பு—1.

### 1993-94-ம் ஆண்டுக்கான புதிய திட்டப் பணிகள்.

| வரிசை எண். (1) | திட்டப் பணிகளின் விவரம். (2) | திட்ட ஒதுக்கீடு (ரூபாய் இலட்சத்தில்). (3) |
|---|---|---|
| | **மகளிர் நலம்.** | |
| 1. | சேவை இல்லங்களிலும் அரசு அனாதை இல்லங்களிலும் தங்கியிருப்பவர்கள் மேல் படிப்பை தொடர வகை செய்தல் .. | 0.95 |
| 2. | அனாதை இல்லத்தில் தங்கியுள்ள 10 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க பல்லாவரத்திலுள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தின் ஆசிரியர் எண்ணிக்கையை அதிகரித்தல் .. | 0.38 |
| 3. | முதியோர்களுக்கான இல்லங்கள் நடத்த தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவி வழங்குதல் .. .. .. .. | 10.00 |
| 4. | தனியார் துறையில் மகளிருக்கும் உடல் ஊனமுற்றோருக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதை ஊக்குவிக்க வெகுமதி .. .. .. | 0.16 |
| | **குழந்தைகள் நலம்** | |
| 1. | பணிபுரியும் மற்றும் நோய்வாய்ப்படும் தாய்மார்களின் குழந்தைகளுக்கு குழந்தைகள் காப்பகம் தொடங்குதல் .. .. .. | 3.82 |
| 2. | பெண் சிசுக் கொலைப் பழக்கத்தை ஒழிப்பதற்காக, புதிதாகப் பிறந்த பெண் குழந்தைகளை அரசு தத்து எடுத்துக்கொண்டு வளர்க்க வரவேற்பு மையம் அமைத்தல் .. .. | 1.60 |
| 3. | நாகப்பட்டினம் - காயிதேமில்லத் மாவட்டம், சிக்கலில் அனாதை இல்லம் ஒன்றை புதிதாக நிறுவுதல் .. .. .. .. | 3.90 |





### 16. பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்:

16.01. 1 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் மதிய உணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் பள்ளிச் சிறார்களுக்கு ஒருசெட் இலவச சீருடை வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் 1985—1986 முதல் துவங்கப்பட்டது. இத்திட்டம் கைத்தறி மற்றும் துணி நூல் துறை, கல்வித்துறை மற்றும் சமூக நலத்துறை ஆகியவைகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்காக வழங்கப்படும் சீருடைத் துணிகளை கைத்தறி துறை வழங்குகிறது. அளவு மற்றும் அதற்கான செலவினத்தை கணக்கிடும் பணியை கல்வித்துறை ஏற்கின்றது. வழங்கப்படும் துணி ரகங்களை சீருடையாக தைத்து வழங்கும் பணியை சமூக நலத்துறை ஏற்று திட்டம் செயல்பட்டு வருகின்றது. துணிகள் வழங்குவதற்கு பொறுப்பு அதிகாரியாக கைத்தறி மற்றும் துணி நூல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். 1992-93-ம் ஆண்டிற்கு 121.92 லட்சம் மீட்டர் துணி ரகங்கள் ரூ. 21.82 கோடி மதிப்புக்கு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டது.

### 17. டாக்டர் எம். ஜி. ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை.

17.01. 1986ஆம் ஆண்டு கோ-ஆப்டெக்சின் பொன் விழாக் கொண்டாட்டத்தின்போது, கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்விற்காக எம். ஜி. ஆர். கைத்தறி நெசவாளர்கள் நல்வாழ்வு அறக்கட்டளை ஒன்று அமைக்கப்பட்டது. கோ-ஆப்டெக்ஸ் மற்றும் இதர பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இந்த அறக் கட்டளையை நிறுவ பொதுநிதி மற்றும் பொதுநல நிதியிலிருந்து கணிசமான தொகையைக் கொடுத்துதவியுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட தொகை கீழ்க்கண்டவாறு சேமிப்பு கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், சென்னை, (கால இட்டுவைப்பு) | 11.16 |
| 2. | தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் சேமிப்புக் கணக்கு (22-2-1993) | 1.84 |
| | | 13.60 |

17.02. நெசவாளர்களின் வாரிசுகளுக்கு மேல்படிப்பிற்காக இந்த அறக்கட்டளை உதவித் தொகைகளை ஆண்டுதோறும்

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 19. | வாழ்க்கைத் தொழில் பயிற்சி பெற ஏழை மகளிருக்கு நிதியுதவி .. .. .. | 2.47 |
| 20. | ஏழை விதவையரின் பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு நிதியுதவி .. .. .. | 2.04 |
| 21. | ஆதரவற்ற பெண்களுக்கு திருமண உதவி .. | 1.44 |

குழந்தைகள் நலம்.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 1. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் .. .. .. .. | 22666.92 |
| 2. | தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்து திட்டம் .. .. .. .. | 6,709.17 |
| 3. | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் .. .. .. .. | 3,093.95 |
| 4. | பெண் குழந்தைகள் நலனுக்கான தலைவி டாக்டர் ஜெயலலிதா புரட்சித் திட்டத்திற்கு நிதியுதவி .. .. .. .. | 400.00 |
| 5. | ஆதரவற்ற குழந்தைகள் காப்பு திட்டத்தில் தனியார் நிறுவனங்களுக்கு நிதியுதவி .. | 313.69 |
| 6. | ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள் தொடங்குதல் .. .. .. .. | 10.76 |
| 7. | கிராமப்புற பணிகளுக்காக சமூக நல நிறுவனங்களுக்கு உதவுவதற்காக சமூக நல வாரியத்திற்கு மானியம் .. .. .. | 10.00 |

ஊனமுற்றோர் நலம்.

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 1. | ஊனமுற்றோர் பள்ளிகளுக்கு நிதியுதவி .. | 165.77 |
| 2. | பார்வையற்றோர் பள்ளி .. .. .. | 93.98 |
| 3. | இளம்பிள்ளை வாத நோய் ஒழிப்பு ஒருங்கிணைந்த திட்டம் .. .. .. .. | 85.15 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 4. | ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு திட்டம் .. | 68.64 |
| 5. | காது கேளாதோருக்கான பள்ளிகள் .. | 67.00 |
| 6. | மண்டல மறுவாழ்வு மையம் .. .. | 42.78 |
| 7. | செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், முட்டுக்காட்டில் உள்ள நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி மையத்தை நடத்துதல் .. .. .. | 36.72 |
| 8. | உடல் ஊனமுற்ற மாணவர்களுக்குப் படிப்புதவி தொகைகள் .. .. .. | 28.00 |
| 9. | வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்திருக்கும் வேலையற்ற பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பின்மைப்படி .. .. .. | 25.87 |
| 10. | காது கேளாதோருக்கான பாலர் பள்ளி .. | 22.54 |
| 11. | பார்வையற்றோருக்கான மறுவாழ்வு .. | 18.58 |
| 12. | கடுமையாக உடல் ஊனமுற்றோருக்கான பராமரிப்புப்படிகள் .. .. .. | 12.36 |
| 13. | உடல் ஊனமுற்ற பள்ளி மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகைகள் .. .. .. | 12.00 |
| 14. | செங்கல்பட்டு - எம்.ஜி.ஆர். மாவட்டம் உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வுப் பணிகளுக்கான முன்னோடி திட்டம் செயல்படுத்துதல் | 10.84 |
| 15. | பார்வையற்ற வயது வந்தோருக்கான சிறுரகப் பொறியியல் கல்வித் திட்டம் .. | 10.41 |
| 16. | காது கேளாதவர்களுக்காகப் புதிய பள்ளிகளையும் மேல்நிலைப் பள்ளிகளையும் தொடங்குதல் .. .. .. .. | 9.30 |
| 17. | கடுமையாகக் கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளி .. .. .. .. | 8.82 |
| 18. | உடல் ஊனமுற்றவர்களுக்கான சுய வேலை வாய்ப்பு .. .. .. .. | 8.00 |
| 19. | மன வளர்ச்சிக் குன்றியோருக்கான நிலையம் தொடங்குதல் .. .. | 6.62 |

| (4) | (2) | (3) |
|---|---|---|
| 20. | இளம்பிள்ளை வாதம், மூளை, மன வளர்ச்சியின்மையால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற பிள்ளைகளை பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு நிதியுதவி | 6.15 |
| 21. | பார்வையற்றோரின் ஆசிரியர்களுக்கான மண்டல பயிற்சி மையங்கள் | 4.86 |
| 22. | உடல் ஊனமுற்றோர் நல மாநில வாரியம் | 4.57 |
| 23. | பார்வையற்றோருக்காகப் புதிய பள்ளிகளையும் மேல்நிலை வகுப்புகளையும் தொடங்குதல் | 4.54 |
| 24. | காது கேளாதோருக்கு கல்வி கற்பிப்பதில் பயிற்சி அளிக்க தொண்டு நிறுவனங்களுக்கு நிதி உதவி | 2.40 |
| 25. | காது கேளாதவர்களுக்கான பயிற்சி மையங்கள் | 2.25 |
| 26. | உடல் ஊனமுற்றோருக்கான சாக்குக்கட்டி தயாரிப்பு சங்கங்களை ஏற்படுத்துதல் | 1.93 |
| 27. | மன வளர்ச்சி அடையாத குழந்தைகளுக்கான அரசு சாரா நிறுவனங்களுக்கு நிதியுதவி | 1.63 |
| 28. | பார்வையற்றோரைத் திருமணம் செய்யும் குறைபாடற்றவர்களுக்குச் சலுகைகள் | 1.44 |
| 29. | கிண்டி, அரசு தொழில் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்ற பார்வையற்றவர்களுக்கும், காது கேளாதோருக்கும் அரசு தொழில் நிறுவனங்களில் தொழில் பழகுநராக சேர்த்துப் பணிப் பயிற்சி அளித்தல் | 1.00 |

## சமூகப் பாதுகாப்பு

| | | |
|---|---|---|
| 1. | சீர்திருத்தப் பள்ளிகள் | 372.85 |
| 2. | இளங்குற்றவாளிகளை நல்வழிப்படுத்தும் பிரிவு | 1.53 |
| 3. | மகளிருக்கான பிற்காப்பு இல்லம் | 6.55 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 4. | சிறுவர்களுக்கான பிற்காப்பு இல்லம் | 11.45 |
| 5. | விழிப்புப்பணி நிறுவனங்கள் | 49.81 |
| 6. | மகளிருக்கான பிற்காப்பு இல்லத்துடன் இணைந்த தொழிற் கூடங்கள் | 6.60 |
| 7. | தொழிற் பயிற்சித் திட்டங்கள் | 6.29 |

## தமிழ்நாடு சமூக நல வாரியம்

| | | |
|---|---|---|
| 1. | மகிலா மண்டல திட்டம் | 1.12 |
| 2. | சத்துணவுத் திட்டம் | 6.28 |
| 3. | குழந்தைகள் காப்பகத் திட்டம் | 94.72 |
| 4. | விடுமுறை முகாம் | 3.99 |
| 5. | பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி | 2.63 |
| 6. | விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் திட்டம் | 1.50 |
| 7. | குடும்ப நல அறிவுரை நிலையம் | 24.63 |
| 8. | குறுகிய காலக் கல்விப் பயிற்சி (1 வருடம், 2 வருடம்). | 9.41 |
| 9. | வாழ்க்கைத் தொழிற் பயிற்சி | 31.15 |
| 10. | சமூகப் பொருளாதார திட்டம் | 11.10 |
| 11. | இதர மானியங்கள் | 14.35 |

[1993 ஏப்ரல் 26

## இணைப்பு-2.

(பக்கம் 783....ல் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கைத்தறி மற்றும் துணி நூல் துறைக்கான 1993-94ஆம் ஆண்டிற்கான கொள்கையும் திட்டங்களும்.

1. முன்னுரை :

1.01. தமிழகத்தின் வரலாற்றில் கைத்தறி தொழிலுக்கு மிக
சிறப்பானதும், முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆன ஓர் இடமுண்டு.
வேளாண் தொழிலுக்கு அடுத்தபடியாக அதிகமான அளவில் கிரா
மப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதில் இக்குடிசைத்
தொழில் பெரும் பங்கு வகிக்கின்றது. பாரம்பரியமிக்க,
தலைமுறை தலைமுறையாக பேணிக்காப்பாற்றப்பட்டு வரும் ஒரு
கலை என்ற முறையில் இத் தொழில் பெருமை வாய்ந்து விளங்கு
கின்றது. கண்கவர் வண்ணங்களில், பெண்களின் ஆடை அலங்
காரத்திலும், கம்பீரமான தோற்றம் அளிக்கும் ஆடவர்களின்
உடைகளிலும் கைத்தறி ஆடை மிக முக்கியத்துவம் வாய்ந்து
வருகின்றது. இக்குடும்பத் தொழில் குறைந்த நிதி முதலீட்டில்
செயல்படுத்தக்கூடிய தொழில் ஆகும்.

1.02. இக்குடிசைத் தொழிலின் முன்னேற்றத்திற்கென
தமிழக அரசு பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை வகுத்து, அத்
திட்டங்கள் அனைத்தும் உண்மையிலேயே இத்தொழிலை நம்பி
வாழுகின்ற நெசவாளப் பெருமக்களுக்கு சென்றடையும் வகை
யில் செயல்படுத்தி வருகின்றது. அத்துடன் மத்திய அரசின்
இதுபோன்ற கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் கைத்தறி
நெசவாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுத் திட்டங்
கள் ஆகியவற்றை தகுந்த முன்னுரிமை அளித்து செயல்படுத்து
வதிலும் இந்த அரசு ஏனைய மாநில அரசுகளுக்கு முன்னோடி
யாகத் திகழ்கிறது.

1.03. மூலப் பொருட்கள் ஒருபோதும் தட்டுப்பாடு ஏற்படா
மல் இருக்கக் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு உற்பத்தித் திறனை
அதிகரிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்
றன. அதுமட்டுமின்றி தேவையான அளவு நூல் ஒதுக்கீடு செய்
யுமாறு மைய அரசு கோரப்பட்டுள்ளது.

1.04. நாட்டின் மிகப்பழமையான தொழிலான துணி நூல்
தொழில் பஞ்சு விலை ஏற்றத்தினாலும், நூல் தட்டுப்பாட்டி
னாலும் கடந்த ஆண்டுகளில் பல இன்னல்களை சந்தித்துள்ளது.
பல இடர்பாடுகளுக்கிடையிலும் 18 நூற்பாலைகள் முழுமை
யாக உற்பத்தி செய்து நெசவாளர்களின் நூல் தேவையைப்
பூர்த்தி செய்துள்ளன.



1993 ஏப்ரல் 26]

1.05. மாநிலம் மற்றும் வெளியிடங்களின் துணித்தேவையை
பூர்த்தி செய்வதில் விசைத்தறித் தொழில் முக்கிய பங்கு வகிக்
கிறது. பன்முகப்படுத்தப்பட்ட விசைத்தறித் தொழில் நன்கு
செயல்பட்டு நாட்டின் கூடுதல் துணித் தேவைகளை ஈடுகட்டு
கிறது.

1.06. நெச்வாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உற்பத்தியாகும
கைத்தறி மற்றும் விசைத்தறி துணிகளை அவ்வப்போது அவற்
றின் சொந்தக் கிளைகள் மற்றும் விற்பனை முகவர்கள் வாயிலாக
விற்பனை செய்வதற்கும், இம் மாநிலத்திலும், பிற மாநிலங்
களிலும் உள்ள மாவட்ட நெசவாளர் கூட்டுறவு சங்கத்தின்
விற்பனை நிலையங்களின் வாயிலாக விற்பனை செய்யவும் இத்
துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

1.07. அத்துடன் இந்த நெசவாளப் பெருங்குடி மக்களின்
சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், அவர்களின் வாழ்க்
கைத் தரத்தை மேம்படுத்தவும் தறிக்கூடத்துடன் இணைந்த
வீட்டு வசதித் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்,
நெசவாளர் ஒய்வூதியத் திட்டம் போன்ற நல்வாழ்வுத் திட்டங்
களையும் தமிழக அரசு முனைந்து செயல்படுத்தி வருகிறது.

2. கைத்தறிகளைக் [illegible] கீழ் கொணருதல் :

2.01. கைத்தறிகளை அதிக அளவில் கூட்டுறவு அமைப்பின்
கீழ் கொண்டு வருதல் அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாகும்.
கூடுதலான தறிகளை கூட்டுறவு அமைப்பின் கீழ் கொணரும்
பொருட்டும் அவர்கள் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்
களில் பங்கு முதலீடு செய்யும் பொருட்டும், அவர்களுக்கு அரசு
நிதி உதவியை கடன் வடிவில் வழங்குகின்றது. அதிக பட்சமாக
பருத்தித் தறிக்கு ரூ. 180-ம் பட்டு மற்றும் கம்பள தறிக்கு
ரூ. 315-ம் பாலியஸ்டர் தறிக்கு ரூ. 900-ம் நிதியுதவியாக
வழங்கப்படுகிறது. இக்கடன் தொகையானது மாநில மற்றும்
மத்திய அரசால் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.
1987-ஆம் வருட கைத்தறி கணக்கெடுப்பின்படி தமிழகத்தில்
உள்ள 4.27 இலட்சம் கைத்தறிகளில், 31—1—1993 தேதியில்
3.79 இலட்சம் தறிகள் 1,462 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில்
கொணரப்பட்டுள்ளன. இதன் மூலம் தேசியக் குறியீடான
60 விழுக்காட்டிற்கும் மேலாக நமது மாநிலத்தில் 88 விழுக்காடு
எய்தப்பட்டுள்ளது. பங்குத் தொகை கடனைத் தவிர விற்பனை
மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசு நெசவாளர் கூட்டுறவுச் சங்
கங்களுக்கு பங்கு மூலதன உதவி அளிக்கிறது.

2.02. 1992-93ஆம் ஆண்டில் 12,000 நெசவாளர்களை
கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர வேண்டும் என்று இலக்கு
[illegible]

[illegible]

[1993 ஏப்ரல் 26

## 3. பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் :

3.01. தற்போது தமிழகத்தில் 1,462 பிரதம நெசவாளர்
கூட்டுறவுச் சங்கங்கள் 3.79 இலட்சம் தறிகளைக் கொண்டு
இயங்கி வருகின்றன. இந்நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக உள்ள கிராமப்புற மற்றும்
நகரப் பகுதிகளில் இயங்கி வருகின்றன. இக் கூட்டுறவுச்
சங்கங்கள் ஆண்டுதோறும் சராசரி ரூ. 333 கோடி மதிப்புள்ள
1,245 இலட்சம் மீட்டர் துணிகளை உற்பத்தி செய்கின்றன.
இவற்றின் விற்பனை மதிப்பு ஆண்டொன்றுக்கு ரூ. 345 கோடி
ஆகும். இக்கூட்டுறவுச் சங்கங்களின் 1991-92ஆம் ஆண்டில்
செயல்பாட்டிலிருந்து சுமார் 60 விழுக்காடு அளவிலானச் சங்கங்
கள் இலாபத்தில் இயங்கி வருவது தெரிய வருகிறது. மாநில
அரசு, கைத்தறி அபிவிருத்தி மற்றும் நெசவாளர்கள் நலனுக்
காக வகுத்துள்ள அனைத்து திட்டங்களும் பிரதம நெசவாளர்
கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக நெசவாளர்களை
அடைகின்றன.

## 4. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை அடிப்படையில் நடைமுறை மூலதனம் அளித்தல் :

4.01. அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்
மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
ஆகியன மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் மாநில தலைமைக்
கூட்டுறவு வங்கியின் வாயிலாக தேசிய விவசாய மற்றும் கிராமப்
புற வளர்ச்சி வங்கியினால் வங்கி வட்டி விகிதத்திலிருந்து சலுகை
அடிப்படையில் 9.5 விழுக்காடு வட்டி விகிதத்தில் நடைமுறை
மூலதனம் பெற்று வருகின்றன. தேசிய விவசாய மற்றும் கூட்
டுறவு வங்கிகள் கிராமப்புற வளர்ச்சி வங்கியினால் அளிக்கப்படும்
நிதி உதவியினை சலுகை அடிப்படையில் வழங்குவதற்கு ஏது
வாக தமிழக அரசு, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி அளிக்கும்
கடன் தொகைக்கு 1 சதவீத வட்டி உதவித் தொகையும், மத்திய
வங்கிகள் அளிக்கும் கடன் தொகைக்கு 3 சதவிகித மாறுபட்ட
வட்டி விகிதத் தொகையும் மான்யமாக வழங்கி வருகின்றது.
இத்திட்டத்திற்கென அரசு 1992-93ஆம் ஆண்டில் ரூ. 3.40
கோடி வழங்கியுள்ளது. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்
கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்
ஆகியவற்றிற்கு 1992-93ஆம் ஆண்டில் நடைமுறை மூலதனமாக
ரூ. 263.58 கோடி தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி
வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. தற்போதைய தேவைக்
கேற்ப தறிக்கடனை மாற்றியமைத்தல் தொடர்பான கைத்தறி
மற்றும் துணிநூல் துறையின் பரிந்துரையினை நபார்டு வங்கி
சமீபத்தில் ஏற்றுக்கொண்டது. பிரதம மற்றும் மாநில கைத்தறி
நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 1993-94ஆம் ஆண்டில்
ரூ. 307.15 கோடி [illegible] வரம்பாக [illegible]
[illegible]



1993 ஏப்ரல் 26]

## 5. சங்கங்களுக்கு ஏற்படும் நட்டத்தை ஈடுசெய்யும் திட்டம் :

5.01. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படும்
நடைமுறை மூலதனம் வசூலிக்காததினால் ஏற்படும் இழப்பில்
90 சதவீதம் அரசினால் ஈடுசெய்யப்படுகிறது: எஞ்சிய 10
சதவீதம் சம்பந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளே
ஏற்கின்றன.

## 6. கைத்தறி நெசவாளர்களுக்கு ஆலை விலைக்கு குறைந்த விலையில் நூல் வழங்கும் திட்டம் :

6.01. கைத்தறி நெசவாளர்களுக்கு ஆலை விலைக்குக்
குறைந்த விலையில் நூல் வழங்கும் திட்டத்தின்கீழ் தேசிய
கைத்தறி வளர்ச்சிக் கழகத்தினை "பிரத்தியேக முகவராக"
(Nodal Agency) மத்திய அரசு நியமித்துள்ளது. இத்திட்டத்
தின் மூலம், தகுதியுடைய மாநில கைத்தறி முகவர்களுக்கும்,
மாவட்ட அளவிலான உற்பத்தி மையங்களுக்கும், தேசிய கைத்
தறி வளர்ச்சிக் கழகம் நூல் வழங்குவதால் ஏற்படும்
போக்குவரத்து மற்றும் அலுவலகச் செலவினங்களுக்காக இரண்டு
விழுக்காடு தொகையினை கழித்து சலுகை விலையில் நூல்வழங்கி
வருகின்றது.

6.02. கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து தேவையளவிற்கு
நூல் கொள்முதல் செய்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச்
சங்கங்களுக்கு 2 விழுக்காடு சலுகை விலையில் தேசிய கைத்தறி
வளர்ச்சிக் கழகம் மூலம் ஏற்படும் நடைமுறை தாமதத்தினை
தவிர்க்கும் பொருட்டு, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கோ-
ஆப்டெக்ஸ் மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்த புது தில்லியி
லுள்ள கைத்தறி வளர்ச்சி ஆணையருக்கு பிரேரணை அ[illegible]ப்பப்
பட்டுள்ளது.

6.03. மேலும், கோ-ஆப்டெக்ஸ் தற்பொழு[illegible] கூட்டுறவு
நூற்பாலைகளிலிருந்து நூலினை கொள்முதல் செய்து த[illegible]ழ்
நாட்டில் உள்ள அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்க[illegible]ன்
தேவையினை பூர்த்தி செய்து வருவதால் த[illegible]ழ்நாட்டில் [illegible]ரத்தி
யேக முகவராக (Nodal Agency) கோ-ஆப்டெக்[illegible] நிய
மித்து நூல் விநியோகத்திலுள்ள பிரதம [illegible]கைத்தற[illegible] [illegible]நசவாளர்
கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கவும் இதன் மூலம் [illegible] [illegible]சவாளர்கள்
பயனடையவும் கைத்தறி வளர்ச்சி ஆ[illegible]யர் அ[illegible]ர்கள் கேட்டுக்
கொள்ளப்பட்டுள்ளார்.

## 7. விற்பனை மேம்பாட்டு [illegible] (தள்ளுபடி மான்ய திட்டம்) :

7.01. கைத்தறி தொழில், வளர்ந்து வரும் ஆலைகள் மற்றும்
விசைத் [illegible] தறிகளினால் ஏற்படும் போட்டியிடையே தனது

இயக்க நிலையை தடையின்றி சுழற்சியில் இயங்கும் வகையில்
நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கைத்தறித் துணி விற்பனை
மீது கிட்டத்தட்ட 38 ஆண்டுகளாக தள்ளுபடி மான்யம் வழங்கும்
திட்டத்தைத் தொடர்வது அவசியமாகிறது. அரசினால் வழங்
கப்படும் தள்ளுபடி மான்ய திட்டம் ஏழை கைத்தறி நெச
வாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பினைப் பெறவும் அவர்
களது வருவாயை மேம்படுத்தவும் உதவுகிறது.

7.02. 31—3—1989 வரை கைத்தறி துணி விற்பனையின்
மீது அளிக்கப்படும் தள்ளுபடி மான்ய செலவினத்தை மத்திய
மற்றும் மாநில அரசுகள் 50 : 50 என்ற விகிதாசாரத்தில் பகிர்ந்து
கொண்டு வந்தன. 1—4—1989 முதல் மத்திய அரசு விற்பனை
மேம்பாட்டு உதவி திட்டம் என்று அழைக்கப்படும் புதிய
திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இதன் மூலம் 50 விழுக்காடு
மைய அரசிடம் இருந்து உதவியாகக் கிடைக்கும். தள்ளுபடி
மான்யத்திற்கு ஒரு வரையரையை நிர்ணயித்தது. மேம்பாட்டு
உதவித் திட்டத்தின் கீழ், ஓராண்டிற்கு பெறப்படும் உதவித்
தொகையைப்பெறுவதற்கு அடிப்படை ஆண்டாக 1988–89 நிர்ண
யிக்கப்பட்டது. அந்த உதவித் தொகை (தள்ளுபடி மான்யம்)
1988–89 ஆம்ஆண்டில் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்
கங்கள் மற்றும் தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
(கோ-ஆப்டெக்ஸ்) பெற்ற/பெற வேண்டிய தள்ளுபடி மான்யம்
மற்றும் அரசு பங்கு மூலதனம் (கூடுதலாக பிரதம நெசவாளர்
கூட்டுறவுச் சங்கத்தைப் பொருத்தவரை மேலாண்மை மான்யம்)
இவற்றிற்கு சமமான தொகையாகும் என நிர்ணயிக்கப்பட்
டுள்ளது.

7.03. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின் கீழ் உள்ள
மான்யத்தினை செலவிடுவதில், தள்ளுபடி மான்யத்திற்கு 75
விழுக்காடும், எஞ்சிய 25 விழுக்காட்டை பலதரப்பட்ட கைத்
தறி மேம்பாட்டு யுக்திகளுக்கும் செலவிட்டு, விற்பனையினை
அதிகரிக்க வேண்டுமென்றும் மத்திய அரசு இத்திட்டத்திற்காக
வழங்கியுள்ள பின்பற்றத்தக்க வழிமுறைகளில் தெரிவித்துள்ளது.

7.04. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டத்தின் கீழ் மத்
திய அரசின் பங்கு 1989ஆம் ஆண்டிலிருந்து நிலையான அளவில்
இருப்பினும், மேற்கொண்டு ஆகும் செலவினத்தை மாநில அரசே
தனது நிதியிலிருந்து ஏற்றுவருகிறது.

7.05. வளர்ந்து வரும் ஆலைகள் மற்றும் விசைத்தறித்துறை
களிலிருந்து ஏற்பட்டுவரும் பலத்த போட்டியின் நிமித்தம் கைத்
தறித் துணி விற்பனைக்கு ஏற்படக்கூடிய பாதிப்பினைத் தடுக்கும்
வகையில் மாநில அரசு ஆண்டொன்றுக்கு 100 [illegible]
கைத்தறி துணி விற்பனையில் சிறப்புத் தள்ளுபடி வழங்குவதை
தனது கொள்கையாகக் கொண்டுள்ளது. சென்ற ஆண்டு
அளித்த உறுதிமொழிக்கேற்ப நமது மாண்புமிகு முதலமைச்சரின்
பிறந்த நாளை முன்னிட்டு 7 நாட்களுக்கு (மொத்த தள்ளுபடி





நாட்கள் 100க்குட்பட்டு) இத்தகைய சிறப்புத் தள்ளுபடி வழங்கப்
படுகிறது. 1993–94ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்திற்காக
ரூ. 40.86 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

## 8. விற்பனை மேம்பாட்டு உதவித் திட்டம் :

(விற்பனை நிலையங்களை நவீனமயமாக்குதல்)

8.01. இத்திட்டத்தின்கீழ் வளமான வாடிக்கையாளர்களை
கவரும் வண்ணம் நிலையான விற்பனையை மேம்படுத்தவும்
விற்பனை மையங்களை நவீனப்படுத்தும் நோக்குடன் நிதி உதவ
அளிக்கப்படுகிறது. (அதாவது விற்பனை மையங்களை நவீ
முறையில் புதுப்பித்தல், அழகுபடுத்துதல் மற்றும் குளிர்சாதன
வசதி செய்தல் போன்ற மேம்பாட்டுப் பணிக்காக) 1992–93இல்
விற்பனை மையங்களை நவீனப்படுத்துவதற்காக நெசவாளர் கூட்
டுறவுச் சங்கங்களுக்கு ரூ. 2.50 கோடிக்கு அரசு அனுமதி வழங்கி
யுள்ளது.

## 9. கைத்தறிகளை நவீனமயமாக்கும் திட்டம் :

9.01. கைத்தறித் துறையின் கீழ் கைத்தறியின் உற்பத்தித்
திறன் மற்றும் தரம் ஆகியவற்றை உயர்த்தும் நோக்குடனும்
நெசவாளர்களின் சோர்வை குறைக்கும் வகையிலும் கூட்டுற
வின் கீழ் இயங்கும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க
உறுப்பினர்களுக்கு தறிகளை நவீனப்படுத்தும் திட்டம் 1980–81
முதல் அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. மத்திய அரசும் மாநில
அரசும் 50 : 50 என்ற விகிதாச்சார அடிப்படையில் நிதியுதவி
அளிக்கின்றன. இதில் 3இல் 2 பகுதி கடனாகவும் மீதி 1 பகுதி
மான்யமாகவும் வழங்கப்பட்டு வருகிறது.

1. சாதா தறிகள் வாங்க தறி ஒன்றுக்கு ரூ. 4,000.
2. ஜாக்கார்டு தறிகள் வாங்க தறி ஒன்றுக்கு ரூ. 8,000.
3. தறி உபகரணங்கள் வாங்க ரூ. 2,500.

இத்திட்டத்தின் மூலம் இதுவரை 54,131 தறிகள் பயன்
பெற்றுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் ஏற்றுமதி உற்பத்தியை ஊக்குவிப்பதற்
காக 110" அகலத் தறிகளுக்கும் புதியதாக நிதியுதவியினை அதி
கரித்து வழங்க மைய அரசுக்கு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்
ளது. இது குறித்து மைய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டு
வருகிறது. மேலும், ரூ. 42.81 கோடி செலவில் ஐந்து ஆண்டு
களில் 50,000 கைத்தறிகளை நவீனமயமாக்கும் ஒரு பெரும் திட்
டத்தினை அரசு அமல்படுத்தவிருக்கிறது. இதற்காக 1992–93
ஆம் ஆண்டிற்கு 8,583 கைத்தறிகளை ரூ. 99.50 இலட்சம் மதிப்
பீட்டில் நவீனமயமாக்கவும் அரசு நிதியுதவி விடுவித்துள்ளது.

## 10. ஜனதா துணி திட்டம் :

10.1. ஜனதா துணி உற்பத்தித் திட்டமானது கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து தொழில் கொடுக்கவும், கிராமப்புற மக்களுக்கு வாங்கத் தகுந்த விலையில் துணிகள் வழங்கவும், கைத்தறி துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு இத்திட்டத்தின்கீழ் கணிசமான தொகையினை மானியமாக வழங்குகிறது. 1992–93ஆம் ஆண்டில் மட்டும் மத்திய அரசு ரூபாய் 6.59 கோடி ஜனதா துணி மானியத் தொகை வழங்கியுள்ளது. ஜனதா துணிகள்கோ ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் வாயிலாகவும் தற்போது விற்பனை செய்யப்படுகிறது.

10-2. 31–3–1993 வரை சுமார் 36.56 மில்லியன் சதுர மீட்டர் ஜனதா துணிகள் விநியோகம் செய்யப்பட்டது. ஜனதா துணிகள் கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் இனை விற்பனை நிலையங்கள் வாயிலாக விற்பனை செய்யப்படுகிறது.

## 11. சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் :

11.1. தமிழக அரசு கைத்தறி துணி ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டும், தமிழகத்தில் உற்பத்தியாகும் கைத்தறி துணிகளின், ஏற்றுமதியை வெளிநாட்டுச் சந்தையில் அதிகரிக்கும் பொருட்டும் சிறந்த ஏற்றுமதியாளர்களுக்கு அரசு ஆண்டுதோறும் பரிசு வழங்கும் திட்டத்தை 1975-ம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகின்றது.

11.2. இத்திட்டத்தின்கீழ், திறமையான ஏற்றுமதியாளர்களுக்கு பரிசு வழங்க ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 22,500 வீதம் செலவிடப்பட்டு வருகிறது.

## 12. கைத்தறிகளை விசைத்தறிகளாக மாற்றும் திட்டம் :

12-01. கைத்தறி தொழில் நேரத்திற்கு தகுந்தவாறு பெரு வாரியான மக்களுக்கு குறிப்பாக கிராமப்பகுதியில் உள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு நல்கி வருகிறது. கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை கண்டறிய நடத்தப்பட்ட பலவகையான ஆய்வுகளில் நெசவாளர்களின் ஒரு பகுதியினர் ''அடிப்படை தேவைக்கான கூலியை'' கூட பெறும் நிலையில் இல்லை என தெரிய வந்துள்ளது. எனவே, நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் முகத்தான் தொழில்நுட்பத்துடன் இணைந்த திட்டமான 37,500 கைத்தறிகளை 75,000 விசைத் தறிகளாக வரும் பத்தாண்டுகளில் செயல்படுத்த 1991–92-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.







12-02. இதன் முதற்கட்டமாக மூன்று விசைத் தறி விசைத்தறிகளுடன். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் 526 கன்னியாகுமரி செங்கல்பட்டு எம். ஜி. ஆர். திருச்சி மற்றும் தொடங்கி மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டு செயல்பட யுள்ளன.

## 13. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் :

13-01. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் கைத்தறி நெசவாளர் நலன்களுக்காக தமிழக அரசினால் நடை முறைப்படுத்தப்படும் பல்வேறு நல்வாழ்வு திட்டங்களில் இத்திட்டமும் ஒன்றாகும். இத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நெசவாளரும் தான் பெறும் கூலியில் ரூபாய்க்கு 6 பைசா வீதம் செலுத்தி வருகின்றனர். நெசவாளர்கள் பெறும் ஊதியத்தில் ரூபாய்க்கு 3 பைசா வீதம் அரசும் கொடுக்கிறது. நிதியின் கூடுதல் தொகைக்கு அரசு மேலும் 7 சதவிகிதம் வட்டி அளிக்கிறது. நெசவாளரின் ஆயுள் காப்பு செய்யப்பட்டு, ஆயுள்காப்பீட்டு கழகத்திற்கு இத்திட்டத்தின் கீழ் வரும் நெசவாளர் கழுக்காக முனைமத் தொகையை அரசு செலுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் நெசவாளர்கள் இறக்க நேரிட்டால் அவரது வாரிசுதாரர்களுக்கு ரூபாய் 15,000 காப்பீட்டு நிதியாக வழங்கப்படுகிறது. இத்துடன் திட்டகணக்கிலுள்ள தொகையையும் பெறுவார்கள். 1992–93-ல் 1,11,318 நெசவாளர்கள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். அரசு இத்திட்டத்தின் முனைமத் தொகைக்காக 1992-93-ம் வருடத்திற்கு ரூபாய் 83.49 லட்சம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு • செலுத்தியுள்ளது. மைய அரசு இத்திட்டத்தினை தற்போது திருத்தியமைத்துள்ளது. அதன் படி நெசவாளர்கள் கூலியில் செலுத்தப்பட உள்ள தொகை ரூபாய் 0.06 லிருந்து ரூபாய் 0.08 ஆக உயர்த்தப்பட்டு மைய மாநில அரசுகள் பங்கும் ரூபாய் 0.03 லிருந்து ரூபாய் 0.04 ஆக 1991–92-ம் வருடம் முதல் உற்பத்தியுள்ளது. 1991–92-ம் ஆண்டு முதல் மாநில அரசின் பங்கான 0:03 பைசாவிலிருந்து 0.04 பைசாவாக உயர்த்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மாநில அரசு இத்திட்டத்தை 0.03 பைசாவிலிருந்து 0.04 பைசாவாக 1–4–1992 லிருந்து உயர்த்திக் கொடுப்பதற்கு முடிவு செய்துள்ளது; நெசவாளர் கூலியில் ரூபாய்க்கு 0.03 பைசாவிலிருந்து 0.04 பைசாவாக மாநில அரசு தன் பங்காக வழங்கும்.

## 14. குடும்ப ஓய்வூதியத் திட்டம் :

14-01. தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதிய திட்டம் கடந்த 1–1–1993 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன்படி இத்திட்டத்தின் [illegible]

உறுப்பினராக உள்ள கைத்தறி நெசவாளர் 58 வயதுக்கு
முன் இறக்க நேரிட்டால் அவரது வாரிசுதாரர்கள் 10 ஆண்டு
களுக்கு மாதம் ரூபாய் 250 வீதம் குடும்ப ஓய்வூதியமாக
பெறுவார்கள். அரசு சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்
திலுள்ள மொத்த தொகைக்கு மேலும் கூடுதலாக 5 சத
வீதம் வட்டி அளித்து இந்த ஓய்வூதிய திட்டத்தை நிறை
வேற்றுவதற்காக திரட்டு ஓய்வூதிய நிதியை ஏற்படுத்தியுள்ளது.
இத்திட்டத்திலுள்ள நெசவாளர்கள் பிரதி மாதம் ரூபாய்
2 செலுத்தி வருகின்றனர்.

## 15. நெசவாளர் வீட்டு வசதி மற்றும் தொழிற்கூடத் திட்டம்:

15.01. நெசவாளர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தவும்
அதிக வருமானத்தை ஈட்டவும் வீட்டு வசதி மற்றும் தொழிற்
கூடத் திட்டம் மற்றொரு நல்வாழ்வுத் திட்டமாகும். இந்நலத்
திட்டத்திற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. அதற்
காக தேவையான நிதி வசதிகளை கடந்த ஆண்டுகளில்
செய்து கொடுத்துள்ளது. மொத்தமாக நிலங்கள் கிடைப்பதில்
சிரமங்கள் உள்ளதால் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு
நெசவாளர்களுக்கு தனித்தனி வீடுகள் கட்டும் திட்டத்தின்
கீழ் 1991-92 முதல் நெசவாளர்கள் சொந்தமாக வீட்டு
மனைகள் பெற்றிருந்தால் அவர்களும் இந்த திட்டத்தின்
மூலம் பயன்பெறுவதற்கு உதவப்படுகின்றது. மாநில அரசு
ஒரு வீட்டிற்கு (தறிக்கூடம் இணைந்த வீடு) ரூ. 5,000 என
மான்யம் இப்போது வழங்குகிறது. மைய அரசு 1990–91
வரை ரூ. 2,500 மான்யம் வழங்கியுள்ளது. இம்மான்யத்தை
ரூ. 2,500 லிருந்து ரூ. 5,000 க்கு உயர்த்தி வழங்க மைய
அரசுக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டு ஒப்புதலை எதிர்
நோக்கி மாநில அரசு 31–3–1992 வரை மைய அரசின்
பங்கினையும் அளித்து வந்துள்ளது.

15.02. 1991–92-ம் ஆண்டிலிருந்து திருத்திய திட்டத்தை
மைய அரசு உருவாக்கியுள்ளது. அதன்படி தறிக்கூடம் கட்டு
வதற்கான மான்யம் ரூ. 4,000 ஆகவும் தறிக்கூடத்துடன்
கூடிய வீடுகள் கட்டுவதற்கான மான்யம் ரூ. 14,000 ஆகவும்
கூடுதலாக்கப்பட்டுள்ளது. இந்த அரசு தறிக்கூடத்துடன்
கூடிய வீடுகளை மட்டுமே கட்டுவதால் 1992–93-ல் 1,500
வீடுகள் (தறிக்கூடம் கூடிய வீடுகள்) கட்டுவதற்கு ரூ. 2.19
கோடி ஒப்பளிப்பு செய்ய மைய அரசு கேட்டுக்கொள்ளப்
பட்டது. மத்திய அரசு தறிக்கூடத்துடன் கூடிய 600 வீடுகள்
கட்டுவதற்கு நிதியுதவி அளித்துள்ளது. மாநில அரசு 1992–93
ஆம் ஆண்டில் 600 வீடுகள் (தறிக்கூடம் கூடிய வீடுகள்) கட்டு
வதற்காக தறிக்கூடம் கூடிய வீடு ஒன்றுக்கு ரூ. 5,000 மான்ய
மாக மொத்தம் ரூ. 30 இலட்சம் வழங்கியுள்ளது.





## 16. பள்ளி சிறார்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம்:

16.01. 1 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் மதிய உணவு
திட்டத்தின் கீழ் பயன்பெறும் பள்ளிச் சிறார்களுக்கு ஒருசெட்
இலவச சீருடை வழங்கும் திட்டம் தமிழ்நாடு அரசினால் 1985–
1986 முதல் துவங்கப்பட்டது. இத்திட்டம் கைத்தறி மற்றும்
துணி நூல் துறை, கல்வித்துறை மற்றும் சமூக நலத்துறை
ஆகியவைகளின் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்
திற்காக வழங்கப்படும் சீருடைத் துணிகளை கைத்தறி
துறை வழங்குகிறது. அளவு மற்றும் அதற்கான செலவினத்தை
கணக்கிடும் பணியை கல்வித்துறை ஏற்கின்றது. வழங்கப்படும்
துணி ரகங்களை சீருடையாக தைத்து வழங்கும் பணியை
சமூக நலத்துறை ஏற்று திட்டம் செயல்பட்டு வருகின்றது.
துணிகள் வழங்குவதற்கு பொறுப்பு அதிகாரியாக கைத்தறி
மற்றும் துணி நூல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
1992–93-ம் ஆண்டிற்கு 121.92 லட்சம் மீட்டர் துணி ரகங்கள்
ரூ. 21.82 கோடி மதிப்புக்கு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்
பட்டது.

## 17. டாக்டர் எம். ஜி. ஆர். கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை.

17.01. 1986ஆம் ஆண்டு கோ-ஆப்டெக்சின் பொன்
விழாக் கொண்டாட்டத்தின்போது, கைத்தறி நெசவாளர்களின்
நல்வாழ்விற்காக எம். ஜி. ஆர். கைத்தறி நெசவாளர்கள்
நல்வாழ்வு அறக்கட்டளை ஒன்று அமைக்கப்பட்டது. கோ-
ஆப்டெக்ஸ் மற்றும் இதர பிரதம நெசவாளர் கூட்டுறவுச்
சங்கங்கள் இந்த அறக் கட்டளையை நிறுவ பொதுநிதி
மற்றும் பொதுநல நிதியிலிருந்து கணிசமான தொகையைக்
கொடுத்துதவியுள்ளன. இவ்வாறு பெறப்பட்ட தொகை
கீழ்க்கண்டவாறு சேமிப்பு கணக்கில் வைக்கப்பட்டுள்ளது.

| | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| 1. தமிழ்நாடு போக்குவரத்துக் கழகம், சென்னை, (கால இட்டுவைப்பு) | 11.16 |
| 2. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் சேமிப்புக் கணக்கு (22–2–1993) | 1.84 |
| | 13.60 |

17.02. நெசவாளர்களின் வாரிசுகளுக்கு மேல்படிப்பிற்காக
இந்த அறக்கட்டளை உதவித் தொகைகளை ஆண்டுதோறும்

வழங்குகிறது. 1986-ல் கொண்டுவரப்பட்ட இத்திட்டத்தின் கீழ் மருத்துவம், பொறியியல், விஞ்ஞானம், பட்டயக்கணக்கு, பத்தாம வகுப்பு மற்றும் —2 வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ மாணவியருக்கும் உதவித் தொகை பரிசு வழங்கப்படுகிறது. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களின் வாரிசுகள் 63 பேர் இதுவரை இத்திட்டத்தின் கீழ் பயன் அடைந்துள்ளனர்.

## 18. தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம்:

18.01. பல நெசவாளர்கள் சொந்தமாக தறியில்லாத காரணத்தால் கூலிக்காக வேலை செய்கிறார்கள். இவர்களது இந்த நிலையை மாற்ற அரசு தொழிற்கூட அமைப்பில் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை தொடங்கியது. இத்தகைய சங்கங்களில் தறி மற்றும் நெய்வதற்கு நூல் ஆகியவை நெசவாளர்களுக்கு வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டிலுள்ள, 190 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தற்போது 150 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 29 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பிரத்யேகமாக ஆதிதிராவிடர்களுக்காகவும், 11 சங்கங்கள் பெண்களுக்காகவும் ஏற்படுத்தப்பட்டவையாகும். மேற்படி 190 சங்கங்களில் தோராயமாக 19,000 தறிகள் உள்ளன.

18.02. கிராமப்புறங்களிலுள்ள மகளிருக்கு வேலைவாய்ப்பு அதிகபட்சமாக வழங்க மாநில அரசின் கொள்கைப்படி 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மகளிருக்காக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு கழக நோராட் நிதியுதவி திட்டத்தின் கீழ் மான்யமாக பெறப்பட்டு, இத்திட்டத்தின் கீழ், கீழ்க்கண்டவாறு செயல்படுத்தப்பட்டு வருகின்றது:—

| | | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. நிலம் கொள்முதல் செய்ய | | 0.50 |
| 2. கட்டிடம் கட்ட | .. | 5.50 |
| 3. தறி மற்றும் உபகரணங்கள் | .. | 2.50 |
| 4. பயிற்சி | .. | 1.50 |
| மொத்தம் | .. | 10.00 |

இந்த தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் 1,000 பெண் நெசவாளர்கள் பயனடைந்துள்ளனர்.



## 19. ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம், குடியாத்தம்:

19.01. குடியாத்தம் பகுதியில் உள்ள 23 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தியாகும். தரம் மற்றும் உயர்ந்த ரக லுங்கிகள் உள்நாட்டில் மட்டுமின்றி வெளி நாட்டு சந்தைகளிலும் நல்ல புகழ்பெற்று விளங்குகிறது. அதனால் ஒருங்கிணைந்த பகுதி வளர்ச்சி திட்டத்தின் அடிப்படையில் 23 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்படும் துணிகளில் தொழில்நுட்பத்தை புகுத்தி விதன் தரத்தை உயர்த்தவும், பழங்காலங்களில் பயன்படுத்தப்பட்ட கரிய நிறங்களை அகற்றி இயற்கை முறையில் தயாரிக்கப்படும். சாயங்களை பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுளளன் தரம் வாய்ந்த ஏற்றுமதி உற்பத்தியை உறுதி செய்யும் நோக்கத்துடன் கைத்தறி ஏற்றுமதி கழகம் மற்றும் நெசவாளர் சேவா மையமும் தொடர்ந்து பல கூட்டுக்கூட்டங்களை நடத்தி பல அறிவுரைகளையும் நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கிய ஐ. எஸ். ஓ. 9000த்தின் விதிமுறைகளின்படி உற்பத்தி செய்யும்படி கேட்டுக் கொண்டது. மேலும் லுங்கிகளை வெளிநாடுகளுக்கு கைத்தறி ஏற்றுமதி கழகத்தின் மூலம் ஏற்றுமதி தொடங்கப்பட உள்ளது.

## 20. ஒருங்கிணைந்த கைத்தறி கிராம அபிவிருத்தி திட்டம்:

20.01. கிராமத்தில் உள்ளார்ந்த அமைப்பினை நிதியுதவி நல்கி உருவாக்கவும், அதன்மூலம் கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதை நோக்கமாக கொண்டு ஒருங்கிணைந்த கைத்தறி கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ரூ. 37.97 இலட்சம் செலவில் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் உள்ள 'வீளாகம்' எனும் கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1992–93 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயலாக்குவதற்கு மத்திய அரசு ரூ. 25 இலட்சம் வழங்க முன்வந்துள்ளது. அவற்றில் ரூ. 10 இலட்சம் மான்யமாக வழங்கியுள்ளது. மத்திய அரசின் பங்கு ரூ. 10 இலட்சம் மற்றும் மாநில அரசின் பங்கு ரூ. 1.42 இலட்சம் ஆக ரூ. 11.42 இலட்சம் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

20.02. இதே போன்று தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள புதுப்பேட்டை கிராமத்தில் ரூ. 62.52 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் பெரியார் மாவட்டத்தில் கருக்குபாளையம், திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டத்தில் அம்மாப்பாளையம் மற்றும் சேலம் மாவட்டத்தில் இடங்கணசாலை என்ற மூன்று கிராமங்களை தத்தெடுத்து இத்திட்டத்தினை செயல்படுத்தும் முகத்தான் பிரேரணைகள் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு அனுமதி எதிர்நோக்கப்படுகிறது.

[1993 ஏப்ரல் 26

## 21. இலவச வேட்டி-சேலை வழங்கும் திட்டம்:

21.01. தமிழ்நாடு அரசு 1992-93ல் நிலமற்ற ஏழை விவ சாயிகள் மற்றும் நகர்ப்புற ஏழை எளிய மக்களுக்கு, பொங்கல் 1993 திருநாளை ஒட்டி இலவச சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்க ஆணை பிறப்பித்தது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 60 இலட்சம் பெண்கள் மற்றும் 60 இலட்சம் ஆண்கள் இலம் கண்டு பயனடைவோர்களாக கணக்கிடப்பட்டது. இத் திட்டத்தின் கீழ் தேவையான துணிகள் அனைத்தும் வழங்கும் பொறுப்பை கோ-ஆப்டெக்ஸ் மற்றும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பொங்கல் 1993க்கு தேவைப் பட்ட சேலைகள் மற்றுக் வேட்டிகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் சப்ளை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கும் நகர்ப்புற ஏழை மக்களுக்கும் கிடைக்கும் பலனை கருத்தில்கொண்டு கோ-ஆப் டெக்ஸ் வாயிலாக துணிகளின் சப்ளையை மேற்கொண்டு இத் திட்டம் பொங்கல் 1994லும் அமுல் படுத்தப்படவுள்ளது. இத் திட்டத்திற்காக 1993-94 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூ. 45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 22. காஞ்சிபுரம் மற்றும் ஈரோட்டில் கைத்தறி விற்பனைக் கூடங்கள் கட்டுதல்:

22.01. சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதி நிலை அறிக்கையில் செய்துள்ள அறிவிப்பைத் தொடர்ந்து பட்டு மற்றும் பருத்தி ஆடைகளை விற்பனை செய்வதற்காக காஞ்சிபுரத்திலும் ஈரோட்டிலும் முறையே இரு விற்பனைக் கூடங்கள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஈரோடு விற்பனைக் கூடத்தில் சுமார் 52 பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங் களுக்கு விற்பனை நிலையங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் வெவ்வேறு மாவட்டங்களில் உற்பத்தியாகும் கைத்தறி இரகங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் விற்பனை செய்யப்படவுள்ளதால் பலதரப்பட்ட நுகர்வோரின் தேவை களை ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய இயலும். இதேபோன்று காஞ்சிபுரம் விற்பனைக் கூடத்தில் அனைத்து பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் விற்பனை நிலையங்கள் கொடுக்கப்பட உள்ளது. மேலும் இக்கூடங்களில் விற்பனைக்குத் தேவையான அனைத்து வசதிகளும் செய்து தரப்படும். இத்திட்டத்தின் முதற்கட்ட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 23. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் லிட்:

23.01. ''கோ-ஆப்டெக்ஸ்'' என பொதுவாக அழைக்கப்படும் ''தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்'' அனைத்து பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலைமைச்சங்கம்



1993 ஏப்ரல் 26]

ஆகும். பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவை யான மூலப் பொருட்களை கொள்முதல் செய்து விநியோகிப்ப துடன் அவைகள் உற்பத்தி செய்யும் பெரும்பாலான கைத்தறி துணிகளை விற்பனை செய்கிறது.

23.02. தமிழகத்தில் உள்ள 279 விற்பனை நிலையங்கள் மூலமாகவும், வெளி மாநிலங்களில் உள்ள 168 விற்பனை நிலையங்கள் மூலமாகவும், கோ-ஆப்டெக்ஸ் கைத்தறி துணி களை விற்பனை செய்கின்றது. கடந்த மூன்றாண்டு காலங் களில் கோ-ஆப்டெக்ஸ் செய்துள்ள கொள்முதல் மற்றும் விற்பனை விபரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு. | கொள்முதல். | விற்பனை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் கோடியில்) |
| 1990–91 | 111.30 | 137.72 |
| 1991–92 | 130.60 | 172.28 |
| 1992–93 | 85.70 | 121.05 |

(டிசம்பர் 1992 வரை)

23.03. தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவு சங்கம் பட்டுத் துணிகளை பெருமளவில் விற்பதற்கான வாய்ப்பு உள்ள இடங்களில் பிரத்தியேகமாக பட்டு விற்பனை கூடங்களை துவக்க உத்தேசித்துள்ளது.

23.04. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது 1992-93-ல் ரூ. 241 இலட்சம் கைத்தறி துணிகளை ஏற்றுமதி செய்துள்ளது. 1991–92-ம் ஆண்டில் இத்தகைய ஏற்றுமதி ரூ. 118 இலட்சம் ஆகும். 1993–94-ம் ஆண்டிற்கு ரூ. 300 இலட்சம் இலக்கினை அடைய திட்டம் தீட்டியுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு கைத்தறி துணிகளை மேலை நாடுகளுக்கு விற்பனை செய்வதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது.

23.05. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமானது துணிகளின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு நடப்பாண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்திடமிருந்து நிதியுதவி பெற்று 55 கிளை விற்பனை நிலையங்களை நவீனமயமாக்கியுள்ளது.

23.06. மலிவு விலையில் துணிகளை ஏழை-எளிய மக்களுக்கு வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பு, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. (ஜனதா துணி உற்பத்தி திட்டம்) தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக சேலைகள், வேட்டிகள் மற்றும் லுங்கிகள் போன்ற பலதரப்பட்ட ஜனதா துணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஜனதா துணிகள் பெரும்பாலும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது கிளை விற்பனை நிலையங்கள் வாயிலாக தமிழ்நாட்டிலும் இதர மாநிலங்களிலும் விற்பனை செய்து வருகிறது. 1992–93 ஆம் ஆண்டிற்கு இதுநாள் வரை மைய அரசிடமிருந்து ரூ. 6.59 கோடி மான்யமாக பெறப்பட்டுள்ளது.

## 24. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் :

24.01. கைத்தறி தொழிலை பொதுவாக மேம்படுத்தவும் கூட்டுறவில் அல்லாத கைத்தறி நெசவாளர்களுக்கு உதவுவதற்கும் அவர்கள் வளர்ச்சிக்குத் துணைபுரியும் பொருட்டும் தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் 1964 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்தின் தற்போதைய பங்கு மூலதனம் ரூ. 407.56 இலட்சம் ஆகும். அதில் அரசின் பங்கு ரூ. 267.00 லட்சம் ஆகும். தற்போது இக்கழகத்தில் 10,800 கைத்தறி நெசவாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். 1992-93-ம் ஆண்டில் கடன் வழங்குவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கான ரூ. 450 லட்சத்தில் மேற்படி கழகம் ரூ. 215.99 லட்சங்கள் (31–1–1993 வரை) தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு கடனாக அனுமதித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இக்கழகம் ஈட்டியுள்ள லாபம்/நட்டம் கீழ்வருமாறு :—

| வருடம். | லாபம்/நட்டம். (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| (1) | (2) |
| 1990–91 | +2.42 |
| 1991–92 | —4.79 |
| ஜனவரி 1993 வரையில் | +0.93 |

1993–94-ல் இக்கழகம் ரூ. 450 லட்சம் கடனாக வழங்க உத்தேசித்துள்ளது.

## 25. தீவிர கைத்தறி வளர்ச்சி மற்றும் ஏற்றுமதி உற்பத்தி திட்டங்கள்:

25.01. மத்திய மற்றும் மாநில அரசுகளின் நிதியுதவியுடன் தறி முதலாளிகளின் பிடியில் சிக்குண்டு கஷ்டப்பட்டு வரும் பின் தங்கியுள்ள நெசவாளர்களை விடுவிக்கும் நோக்கத்துடன் ஆறு



கூட்டுறவு கைத்தறி திட்டங்கள் நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டன. அவைகளில் கரூர் மற்றும் குறிஞ்சிப்பாடியில் உள்ளவைகள் ஏற்றுமதி உற்பத்தி திட்டமா கும். மற்ற நான்கு திட்டங்கள் காஞ்சிபுரம், ஈரோடு, சேலம் மற்றும் மதுரை ஆகியன தீவிர கைத்தறி வளர்ச்சி திட்டங்களா கும். அனைத்து திட்டங்களும் 15,818 கைத்தறி நெசவாளர் களுக்கு வாழ்வளிக்கின்றன. மேற்படி திட்டங்களின் புதிய வடிவமைப்பு ரகங்கள் திட்டங்களின் ஏற்றுமதி விற்பனை திறனை அதிகரிப்பதுடன் திட்டத்தின் தேவையினையும் பூர்த்தி செய் கின்றன. திட்டங்களின் லாப/நட்ட விபரங்கள் கீழ்வருமாறு:—

| வரிசை எண் மற்றும் திட்டத்தின் பெயர் | தறிகளின் எண்ணிக்கை (ஜனவரி 1993 வரை) | உற்பத்தி. | | விற்பனை. | |
|---|---|---|---|---|---|
| | | மீட்டர். | மதிப்பு. | மீட்டர். | மதிப்பு. |
| | | (இலட்சங்களில்) | | | |
| 1 காஞ்சிபுரம் | 4,684 | 10.29 | 149.87 | 14.82 | 213.91 |
| 2 ஈரோடு | 1,379 | 6.27 | 148.58 | 5.30 | 178.44 |
| 3 சேலம் | 3,900 | 8.19 | 119.38 | 8.21 | 119.58 |
| 4 மதுரை | 3,084 | 10.59 | 162.39 | 8.30 | 172.03 |
| 5 கரூர் | 1,262 | 4.10 | 105.49 | 3.43 | 106.08 |
| 6 குறிஞ்சிபாடி | 1,509 | 4.61 | 115.67 | 3.25 | 95.50 |
| மொத்தம் | 15,818 | 44.05 | 801.38 | 43.31 | 885.54 |

## 26. கூட்டுறவு நூற்பாலைகள் :

26.01. பொதுவாக தமிழகத்திலுள்ள கைத்தறி நெசவா ளர்கள் மற்றும் குறிப்பாக கூட்டுறவு நிழலில் இருக்கும் நெச வாளர்களுக்கு நியாயமான விலையில் தரமான நூல் வழங்கும் பொருட்டு 1958-லிருந்து 1984 வரை 18 கூட்டுறவு நூற்பாலை கள் நிறுவப்பட்டன. இக் கூட்டுறவு நூற்பாலைகள் 4.69 இலட்சம் கதிர்களுடன் இயங்கி வருகின்றன. இக் கூட்டுறவு நூற்பாலைகளால் மாதம் ஒன்றுக்கு ஏறக்குறைய 18.62 இலட் சம் கிலோ (சிட்டம் மற்றும் கோன்) நூலை உற்பத்தி செய்ய இயலும். இக்கூட்டுறவு நூற்பாலைகளில் 12,699 தொழிலாளர் கள் பணிபுரிந்து வருகின்றனர்.

[1993 ஏப்ரல் 26

26.02. 1992–93 ஆம் ஆண்டு (ஜனவரி 1993 முடிய) கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு :—

1992-93 ஆம் ஆண்டில் சராசரி கதிர் உபயோகிப்புத் திறன் 87.21 விழுக்காடாகும். ஆனால் சென்ற 1991– 92 ஆம் ஆண்டில் இதே காலத்தில் கதிர் உபயோகிப்புத் திறன் 81.08 விழுக்காடு மட்டுமே. ஏப்ரல் 1992 முதல் ஜனவரி 1993 முடிய ஆலைகளின் சராசரி கதிர் உற்பத்தி 75.14 கிராம். இக் கூட் டுறவு நூற்பாலைகள் மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ. 17.35 கோடி மதிப்புள்ள 26.76 இலட்சம் கிலோ நூலை (40-ம் எண் ணிற்கு மாற்றியது) உற்பத்தி செய்துள்ளது. ஆனால் 1991– 92 ஆம் ஆண்டில் இதே காலத்தில் மேற்படி நூற்பாலைகள் ரூ. 14.98 கோடி மதிப்புள்ள 25.47 இலட்சம் கிலோ நூலை மட்டுமே உற்பத்தி செய்துள்ளன.

26.03. 1992– 93 ஆம் ஆண்டில் கச்சாப் பொருள் (பருத்தி) விலை கடந்த நிதி ஆண்டில் நிலவிய பருத்தி விலையைக் காட்டிலும் 50 சதவிகிதம் கூடுதலாகும். எதிர்பாராத பருத்தி விலை ஏற்றம் பருத்தி விலை ஏற்றத்திற்கிணையான நூல் விலை யேற்றம் இன்மை வாங்கிய கடனுக்கு அதிக வட்டி விகிதம், மந்தமான நூல் விற்பனை பஞ்சப்படி உயர்வு மற்றும் நெச வாளர்களுக்கு நியாயமான குறைந்த விலையில் நூல் விநியோகம் செய்தல் போன்ற காரணங்களினால் இக் கூட்டுறவு நூற்பாலை களால் இலாபம் ஈட்ட இயலவில்லை.

## 27. கூட்டுறவு நூற்பாலைகள் நவீனப்படுத்துதல் :

27.01. தமிழக அரசு, நெசவாளர்களுக்கு, கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள நெசவாளர்களுக்கு, குறிப்பாக முழுவதும் தொடர்ந்து எவ்விதத் தட்டுப்பாடுமின்றி, ஆண்டு நூலை, நியாயமான விலையில் வழங்குவதற்கு 18 தரமான நூற்பாலைகளை அமைத்தது. 1958 மற்றும் 1962 ஆம் கூட்டுறவு களுக்கிடையில், 4 கூட்டுறவு நூற்பாலைகளும், 1965-ம் ஆண்டு 8 கூட்டுறவு நூற்பாலைகளும், 1970 ஆம் ஆண்டில் கூட்டுறவு நூற்பாலையும், 1980 மற்றும் 1984 ஆம் ஆண்டில் ஒரு களுக்கிடைப்பட்ட காலத்தில் 5 கூட்டுறவு ஆண்டு அரசால் அமைக்கப்பட்டன. நூற்பாலைகளும்

27.02. 1980-1984 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளைத் தவிர்த்து, அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளும், தொழிலில் ஏற்பட்ட பல நடைமுறைத் தடையில் 25 ஆண்டுகளுக்கு மேலாக கைத்தறி நெசவாளர்களுக்கு சேவை செய்து வருகின்றன.



1993 ஏப்ரல் 26]

27.03. சந்தையில், சிட்ட நூலுக்கு விலை சாதகமாக ஆதாரமாக இல்லையென்பதையும் பொருட்படுத்தாமல், தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் மட்டுமே சிட்ட நூல் உற்பத்தியை பூர்த்தி செய்து வருவது குறிப்பிடத்தக்க ஒன்று. ஆனால் தனியார் மற்றும் அரசுத் துறையில் உள்ள மற்ற நூற்பு ஆலைகள் தேவையான அளவு சிட்ட நூல் உற்பத்தி செய்வ தில்லை. இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வரும் இக்கூட்டுறவு நூற்பாலைகளை தரமான நூல் உற்பத்திக்கும் இவ்வாலைகளின் நிதி நிலைமையை சீர்படுத்தவும், நவீனப்படுத்தும் திட்டம் தவிர்க்க முடியாததெனினும் போதிய நிதி இல்லாத காரணத்தால் இக்கூட்டுறவு நூற் பாலைகளை தக்க தருணத்தில் நவீனப்படுத்த இயலவில்லை. ஆயினும், அரசு 1992-93 ஆம் ஆண்டில், நலிவடைந்த நிலையில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூர், மதுரை, தென்னாற்காடு, வடஆற் காடு, காஞ்சிபுரம் மற்றும் தஞ்சாவூர் கூட்டுறவு நூற்பாலைகளை முதற்கட்டமாக சிறிய அளவில் நவீனப்படுத்த ரூ. 2.50 கோடி வழங்கியுள்ளது.

27.04. சிறிய அளவல் நவீனப்படுத்தும் திட்டத்தினை செயல்படுத்துதல் மற்றும் உற்பத்தி செலவை குறைத்து உற்பத்தித்திறனை அதிகரிப்பதால் ஏற்படும் பயன்களைப் பெற மேற்குறிப்பிட்ட 6 கூட்டுறவு நூற்பாலைகளை இரண்டாவது கட்டமாக நவீனப்படுத்துதல் அவசியமாகும். இது தவிர, நவீனமயமாக்கப்பட்ட மற்ற நூற்பாலைகளுடன் ஒப்பிடுகையில் அதிக உற்பத்திச் செலவு மற்றும் மந்தமான நூல் விற்பனை போன்ற காரணங்களினால் திருச்சி மற்றும் திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலைக்ளின் தற்போதுள்ள பண இழப்பினை தடுத்து நிறுத்த இவ்வாலைகளை நவீனப் படுத்தும் திட்டத்தினை செயல்படுத்துவது அவசியமாகும். சிறிய அளவில் நவீனப்படுத்தும் திட்டத்தினை செயல்படுத்து வதற்காக 8 நலிவடைந்த கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அரசு ரூபாய் 7.25 கோடி வழங்கியுள்ளது.

## 28. பர்கூர் கூட்டுறவு நூற்பாலை, தருமபுரி மாவட்டம்:

28.01. அரசு, தர்மபுரி மாவட்டம், பர்கூரில் பெண்களுக் கெனத் தனியே பருத்தி உற்பத்தியாளர்கள் கூட்டுறவு நூற் பாலை ஒன்றினை ரூபாய் 24 கோடி செலவில் அமைக்க தீர்மானித்து, முன் இயங்கு செலவினத்திற்காக ரூபாய் 50 இலட்சம் ஒதுக்கியது. மேற்படி கூட்டுறவு நூற்பாலை பதிவு செய்யப்பட்டு, திட்ட வேலைகளை விரைவில் செயல்படுத்த ஓர் இடைக்கால குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆலை கட்டு வதற்கு தேவையான நிலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தேசிய கூட்டுறவு அபிவிருத்திக் கழகம் அல்லது ஏதாவதொரு நிதி நிறுவனத்திலிருந்து கடனுதவி பெறப்பட்டு அவ்வாறு நிதி கிடைக்கப்பெற்றவுடன் கட்டுமான வேலைகள் தொடங் கப்படும்.

58-144—42

## 29. தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை. ஈரோடு.

29.01. 1973 ஆம் ஆண்டு கூட்டுறவு அமைப்பின்கீழ் ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆலை கைத்தறி நெசவாளர்கள், விசைத்தறி நெசவாளர்கள், தனியார் நெசவாளர்கள் காதி மற்றும் கிராமத்தொழில் வாரியம், தமிழ்நாடு துணி நூல் கழகம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் போன்ற அரசு சார்புடைய நிறுவனங்களுக்கும் அரசிற்கும் நூல் சாயமிடல் மற்றும் துணி நூல் பதனிடுதல் போன்ற பணிகளை செய்து வருகின்றது.

29.02. இவ்வாலை வெளுத்தல், சாயமிடுதல், அச்சிடுதல் மற்றும் நூல் சாயமிடுதல் போன்ற பல்வேறு பதனிடும் வேலைகளை பருத்தி மற்றும் செயற்கை இழை துணிகளில் மேற்கொண்டு வருகிறது. இந்த ஆலை புதிய தொழில் நுட்ப கருவிகளை கொண்டு இயங்கி வருகிறது. இந்த ஆலையுடன் சோதனைச்சாலையும் நூல் மற்றும் துணிகளின் சாயத் தரத்தை அறிந்து கொள்ள இணைந்து செயல்படுகிறது.

29.03. சென்னிமலை, ஈரோடு, சேலம், ஸ்ரீவில்லிபுத்தூர், திருநெல்வேலி, திருச்சி மற்றும் வேலூர் ஆகிய 7 இடங்களில் உள்ள நவீன சாயச்சாலைகளின் பணிகளை மேற்படி ஆலை கவனித்து வருகின்றது.

## 30. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம் :

30.01. தமிழ்நாடு சரிகை, நிறுவனம், காஞ்சிபுரம், பொதுத்துறை நிறுவனமாக 6-12-1971-ல் பதிவு செய்யப்பட்டது. இந்த தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் முக்கிய குறிக்கோள் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தரமான சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விநியோகிப்பதும் ஆகும். இந் நிறுவனம் தற்போது கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தேவையில் 10 விழுக்காடு மட்டுமே பூர்த்தி செய்கிறது. இந்நிறுவனம் தனது விரிவாக்கத் திட்டப்பணியினை செயலாக்கி வருகிறது. இதன் மூலம் இந்நிறுவனத்தின் உற்பத்தித் திறன் மேலும் 40 விழுக்காடு அதிகரிக்கும்.

30.02. 1992-93-ல் (பிப்ரவரி 93 முடிய) தமிழ்நாடு சரிகை நிறுவனம் 20,770 மார்க்குகள் சரிகை உற்பத்தி செய்துள்ளது. மற்றும் 20,584 மார்க்குகள் விற்பனை செய்துள்ளது, இதன் மதிப்பீடு ரூபாய் 585.30 இலட்சமாகும். இந்நிறுவனம் 1992-93-ம் ஆண்டில் ரூபாய் 1.04 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.



## 31. தமிழ்நாட்டிலுள்ள துணி நூற்பு ஆலைகளின் செயல்பாடுகள்.

31.01. தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்குத் துணி நூல் உற்பத்தித்துறை ஒரு முன்னோடியாக விளங்குகின்றது. தமிழ்நாட்டில் துணி நூல் தொழிலில் உள்ள தனித்தன்மையான சிறப்பியல்பு நூற்பு சார்ந்த தொழிலின் ஆதிக்கமே ஆகும். அதிலும் பருத்தி நூற்பே ஆகும். தமிழ்நாட்டில் மட்டுமே 726 ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. ஏறக்குறைய 7.93 மில்லியன் கதிர்களுடன் இவ்வாலைகள் செயல்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 2.29 இலட்சம் தொழிலாளர்கள் நூற்பாலைகளில் பணிபுரிகின்றனர். துணி நூல் தொழில் தனியார் துறையில் இருந்து வந்தபோதிலும், தொழில் துறையில் இம்மாநிலத்தின் வேலை வாய்ப்பு, பொருளாதார மற்றும் வணிக நடவடிக்கைகளில் முக்கிய பங்கினை வகித்து வருகிறது. மேலும் மத்திய மற்றும் மாநில அரசு இத்தொழிலின் மூலம் வருவாய் ஈட்டவும், ஏற்றுமதியின் மூலம் அன்னிய செலாவணியினை ஈட்டவும் உறுதுணையாக உள்ளது.

## 32. தனியார் துறையிலுள்ள மூடப்பட்ட நூற்பாலைகளை மீண்டும் திறந்து நடத்தல்.

32.01. தமிழக அரசு மூடப்பட்ட நூற்பாலைகள் அனைத்தையும் மீண்டும் திறந்து நடத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அதற்காக பல்வேறு சலுகைகளை தமிழக அரசு அளித்து வந்தபோதிலும், இன்னும் சில நூற்பாலைகள் தொழிலாளர் பிரச்சினைகள், நிதி நெருக்கடி, நிர்வாகத் திறமை குறைவு போன்ற பல்வேறு காரணங்களினால் மூடப்பட்டுள்ளன. தற்போது உள்ள நலிவுற்ற நூற்பாலைகள், எதிர்காலத்தில் வலுவான நிலையில் இயங்கும் எனும் அடிப்படையிலும் மற்றும் அத்தலிகய நூற்பாலை நிர்வாகங்கள் ஆலையை மீண்டும் திறந்து நடத்த முன்வரும் நிலையில் தமிழக அரசு (அ) மின்வெட்டிலிருந்து விலக்கு, (ஆ) விற்பனை வரி செலுத்துவதை தள்ளி வைத்தல் போன்ற சலுகைகளை அளித்து வருகிறது. மேலும் நிதி நிறுவனங்களும், அரசு சலுகை பெற்ற நூற்பாலைகளுக்கு நடைமுறை மூலதனம் போன்ற வசதிகளை அளிக்கின்றன.

32.02. பின்வரும் நூற்பாலைகள், 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு துயர் துடைப்பு சட்டம் (சிறப்பு விதிகள்)-ன் கீழ் நிவாரணம் பெறும் நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளன.

1. மகாலட்சுமி நூற்பாலை லிமிடெட், மதுரை.
2. மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட், மேட்டூர்
3. ருக்மணி மில்ஸ் லிமிடெட் சிலைமான், மதுரை மாவட்டம்.

[1993 ஏப்ரல் 26

4. ஸ்ரீ ஹரி மில்ஸ் (பி) லிமிடெட் கோவை.

32.03. தமிழ்நாட்டிலுள்ள 11 நூற்பாலைகளுக்கு மின்
வெட்டிலிருந்து விலக்கு மற்றும் விற்பனை வரித் தொகை செலுத்
துவதை மூன்று ஆண்டுகளுக்கு தள்ளி வைத்தல் ஆகிய சலுகை
களை தமிழக அரசு வழங்கி உள்ளது.

32.04. தமிழக அரசும், ஆலை உரிமையாளர்களும் செய்து
கொண்ட ஐந்தாண்டு உடன்படிக்கையின் விளைவாக பின்வரும்
தனியார் நூற்பாலைகள் கூட்டு நிர்வாகத்தின் அடிப்படையில்
மீண்டும் திறக்கப்பட்டன.

(1) மகாலட்சுமி நூற்பாலை, மதுரை.

மகாலட்சுமி நூற்பாலையில் அனைத்து தொழிலாளர்களுக்
கும் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு ஆலை திருப்திகரமாக
இயங்கி வருகிறது.

(2) மேட்டூர் துணி நூல் நூற்பாலை, மேட்டூர் :

இந்நூற்பாலையினை மீண்டும் வலிவுடன் செயல்பட தேவை
யான வழிவகைகளை அரசு பரிசீலித்து வருகிறது. சில தொழில்
முனைவர்கள் இந் நூற்பாலையினை ஏற்க முன்வந்துள்ளனர்.
அவர்களின் முயற்சிகள் பலனளிக்கும் பட்சத்தில் நூற்பாலை
வலுவுடன் செயல்பட தேவையான சலுகைகளை வழங்க அரசு
முன்வரும்.

## 33. திருப்பூர் பின்னலாடைத் தொழில் :

33.01. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள திருப்பூர்
நகரம், பின்னலாடைத் தொழிலில் புகழ் பெற்று விளங்குகின்
றது. பின்னலாடைத் துணி வகைகளின் ஏற்றுமதி மூலம் சுமார்
ரூ. 1,000 கோடி ரூபாயளவில் நமது நாட்டிற்கு அன்னிய செலா
வணி பெறப்படுகின்றது. திருப்பூரிலும், இந்நகரினைச் சுற்றி
சுமார் 3,000 சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தொழிற்
கூடங்களில் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு
பெற்றுள்ளனர். மேலும், இங்கு அமைந்துள்ள 350 வெளுத்தல்
மற்றும் சாயமிடும் நிலையங்களில் 50,000 தொழிலாளர்கள்
வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். திருப்பூர் நகரம் நாட்டிற்கு
அன்னிய செலாவணியை ஈட்டித் தருவதில் சிறந்து விளங்கு
கின்றது. திருப்பூர் நகருக்கு தேவைப்படும் உள்ளமைப்பு வசதி
களை செய்து கொடுக்கும் ஒரு விரிவான திட்டம் தீட்டப்பட்டு
மத்திய திட்டக்குழுவின் திட்டத்தில் சேர்ப்பதற்காக மத்திய
வர்தகத்துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதே
நேரத்தில் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம் இரண்
டாவது கட்ட பவானி குடிநீர் மற்றும் வடிகால் திட்டத்தை
இந்நகரத்தில் முனைப்புடன் செயல்படுத்த உள்ளது.



1993 ஏப்ரல் 26]

## 34. விசைத்தறிகள் :

34.01. 1986-ம் வருடத்திய துணி நூல் கட்டுப்பாடு ஆணை
யின்படி விசைத்தறிகளை நிறுவுவதற்கு உரிமக் கட்டணமாக
ஒரு விசைத்தறிக்கு ரூ. 250 வசூலிக்கப்பட்டு வந்தது.

34.02. தற்போது மத்திய அரசானது 7-12-1992
நாளிட்ட அரசிதழில் 1986-ம் வருடத்திய துணிநூல் கட்டுப்பாடு
ஆணையினை ரத்து செய்து புதிய நெறிமுறைகளை வகுத்துள்
ளது. அதனடிப்படையில் தறி நிறுவிய 30 நாட்களுக்குள்
ரூ. 1,000 கேட்பு காசோலை எடுத்து மத்திய அரசு வரையறுத்
துள்ள படிவத்தில் தகவல் குறிப்பு ஒன்றினை கைத்தறி மற்றும்
துணி நூல் ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க
வேண்டும். அதற்கான ஒப்புதலை தகவல் குறிப்பு பெற்ற 30
நாட்களுக்குள் விசைத்தறியாளர்களுக்கு இயக்ககம் அனுப்ப
வேண்டும்.

## 35. கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம் :

35.01. 22 ரகங்களை 'கைத்தறியில் மட்டுமே உற்பத்தி
செய்யப்பட வேண்டும் என்ற கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம்
தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் அநேக வழக்குகள் பதிவாகி
நிலுவையில் இருந்தன. தற்போது உச்சநீதிமன்றமானது மேற்
கான் சட்டம் செல்லுமென தீர்ப்பினை கூறியுள்ளது. தீர்ப்பின்
நகல் பெறப்பட்டுள்ளது.

35.02. மத்திய அரசானது கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்
தினை நல்ல முறையில் செயல்படுத்த ஒரு செயலாக்கத் தொகுதி
யினை புகுத்த ஆலோசித்துள்ளது.

35.03. கூட்டுறவின் கீழ் உள்ள விசைத்தறிகளின் உற்பத்தி
யைக் கண்காணிக்க கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும்
செயலர்/தனி அலுவலர் கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டத்தினை
கண்டிப்பாக கடைபிடிப்பதை கண்காணிக்க வழிவகைகள்
உள்ளன.

## 36. தமிழ்நாட்டில் விசைத்தறி பணி மையங்கள் அமைத்தல் :

36.01. விசைத்தறி தொழிலில் ஈடுபட்டுள்ள நெசவாளர்
களுக்கு பயிற்சி அளிக்கவும், விசைத்தறிகளின் செயல் நுட்பம்
விசைத்தறிகள் பராமரிப்பு, நூலின் தரத்தை மதிப்பீடு செய்தல்,
துணிகளில் ஏற்படும் குறைபாட்டினை தவிர்த்தல், துணிகளின்
தரத்தினை மேம்படச் செய்தல் போன்றவற்றிற்காக தமிழ்நாடு
அரசு ரூ. 28.22 இலட்சத்தை திருநெல்வேலி-கட்டபொம்மன்
மாவட்டத்தில் சங்கரன்கோவிலிலும்; கோவை மாவட்டத்தில்
கண்ணம்பாளையத்திலும் இரு விசைத்தறி பணி மையங்களை

நிறுவ முறையே ரூ. 14.11 லட்சம் வீதம் நிதியுதவி அளித்துள்ளது. இத்திட்ட வேலைகளை கண்காணித்து விரைவாக செயல்படுத்த தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் தொடர்பு நிறுவனமாக (Nodel Agency) ஆக நியமிக்கப்பட்டுள்ளது.

36.02. மேலும் தமிழ்நாட்டில் விசைத்தறிகள் அதிகமாக செயல்பட்டு வரும் சேலம் மற்றும் மதுரையிலும் இரு விசைத்தறி பணி மையங்கள் நிறுவ அரசு உத்தேசித்துள்ளது. இதன் மொத்த மதிப்பு ரூ. 44.24 இலட்சமாகும். (ஒரு மையத்திற்கு ரூ. 22.12 இலட்சம் வீதம்) மேற்படி மையங்களுக்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

## 37. தமிழ்நாடு துணி நூல் கழகம், கோவை :

37.01. தமிழ்நாடு துணிநூல் கழகம், 1969-ல் தோற்றுவிக்கப்பட்டது. இக்கழகம் நலிவுற்ற நூற்பாலைகளை நிர்வகித்தல், விசைத்தறிக் கூடங்கள் அமைத்தல், அனைத்து கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் அரசால் ஏற்கப்பட்ட நூற்பாலைகளுக்கும் தொழில் நுட்ப உதவி அளித்தல், விசைத்தறி ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட விசைத்தறி துணிகளை விற்பனை செய்தல் ஆகிய நோக்கங்களை பூர்த்தி செய்து வருகிறது. தமிழ்நாடு துணி நூல் கழகம், அருப்புக்கோட்டை, சிவகிரி, ஜெயம்கொண்டம் ஆகிய மூன்று இடங்களில் சொந்தமாக விசைத்தறிக் கூடங்களை நிறுவியுள்ளது. இக்கழகத்தில் மொத்தம் 638 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். பசும்பொன் தேவர் மாவட்டம் முத்தானந்தலில் உள்ள சோமசுந்தரம் நூற்பாலை, தமிழ்நாடு துணிநூல் கழக நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு துணி நூல் கழகத்தின் மூன்று விசைத்தறி கூடங்கள் 1991-92-ல் 197.12 இலட்சம் மீட்டரும், 1992-93-ல் 250 இலட்சமும் துணி உற்பத்தி செய்யப்பட்டு, 1991-92-ல் ரூ. 1863.74 இலட்சமும், 1992-93-ல் ரூ. 2,200 இலட்சமும் துணி விற்பனை செய்யப்பட்டுள்ளது. துணி உற்பத்தியும், துணி விற்பனையும் கூடியுள்ள போதிலும், தமிழ்நாடு துணிநூல் கழகம் 1992-93-ம் ஆண்டில் (பிப்ரவரி 93 முடிய) ரூ. 52 இலட்சம் நட்டத்தினை (உத்தேசமாக) அடைந்துள்ளது. இந்த நட்டம் முக்கியமாக சோமசுந்தரம் நூற்பாலையில் பழமையான இயந்திரங்கள் இயங்குவதால் ஏற்பட்டுள்ளதாகும்.



இணைப்பு.

**கைத்தறி மற்றும் துணிநூல் துறை முன்னேற்றம் பற்றிய அறிக்கை.**

| (1) | 1990-91. (2) | 1991-92. (3) | 1992-93 (31-1-1993 வரை 10 மாதங்கள்). (4) |
|---|---|---|---|
| 1. பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்— | | | |
| 1. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை — | 1.503 | 1,467 | 1,462 |
| 2. தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) — | 3.25 | 3.27 | 3.79 |
| 3. உற்பத்தி— | | | |
| (அ) மீட்டர் (இலட்சத்தில்) .. | 1,294.40 | 1,330.30 | 1,036.40 |
| (ஆ) மதிப்பு (ரூபாய் கோடியில்) ... | 218.92 | 278.10 | 275.07 |
| 4. விற்பனை (ரூபாய் கோடியில்) — | 246.65 | 313.23 | 285.97 |
| 5. நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்) | 110.45 | 132.08 | 172.08 |
| 2. கோ-ஆப்டெக்ஸ்— | | | |
| 1. கொள்முதல் (ரூபாய் கோடியில்) | 111.30 | 130.53 | 99.86 |
| 2. விற்பனை (ரூபாய் கோடியில்) ... | 137.72 | 172.22 | 172.75 |
| 3. நடைமுறை மூலதனம் (ரூபாய் கோடியில்) ... | 85.00 | 90.00 | 91.50 |

892
166774
V(211,3).N93
N93.41.2

| (1) | | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| 3. கூட்டுறவு நூற்பாலை— | | | | |
| 1. கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | | 4.69 | 4.69 | 4.69 |
| 2. உற்பத்தி (ரூபாய் லட்சத்தில்) | .. | 6163.53 | 8435.60 | 17,348.40 |
| 3. விற்பனை (ரூபாய் இலட்சத்தில்) | .. | 5776.91 | 8091.90 | 16626.12 |
| 4. நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) | | 2448.00 | 2777.50 | 3235.46 |
| 4. தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலை, ஈரோடு— | | | | |
| 1. நூல் வெளுத்தலும், சாயமிடுதலும் (இலட்சம் மீட்டரில்) | .. | 19.03 | 18.45 | 5,81 |
| 5. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகம்— | | | | |
| 1. கடன்களின் எண்ணிக்கை | .. | 2,761 | 2,337 | 1,527 |
| 2. அனுமதிக்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்) | .. | 354.72 | 323.42 | 215.99 |
| 6. தமிழ்நாடு சரிகை ஆலை, காஞ்சிபுரம்— | | | | |
| 1. சரிகை உற்பத்தி (மார்க்குகளில்) | .. | 16,002 | 17,666 | 18 649 |
| 2. விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | .. | 341.62 | 445.00 | 454.81 |